# குமிழி

நாவல்

ரவி

2020

*

கதைக் களம் : ஈழம், தமிழகம்

காலம் : 1984-1985

*

விடியல் பதிப்பகம்

கோவை - 641015

குமிழி (நாவல்)
-ரவி (சுவிஸ்)
முதற்பதிப்பு : ஆவணி 2020
வெளியீடு : விடியல் பதிப்பகம்
23/5 ஏ.கே.ஜி நகர், 3வது தெரு
உப்பிலிப்பாளையம் அஞ்சல், கோயம்புத்தூர் 641 015
தொலைபேசி : 0422-2576772, 9443468758
மின்னஞ்சல் : vidiyal@vidiyalpathippagam.org
அட்டை வடிவமைப்பு : ஆரதி
அட்டை புகைப்படம் : நிறமி
உட்பக்க வடிவமைப்பு : ரவி
அச்சாக்கம் : ஜோதி என்டர்ப்பிரைசஸ், சென்னை
விலை : 180.-

ISBN 978-81-89867-24-5

Kumizhi (Novel)
-Ravi (swiss)
copy right : Ravindran Pa
First Edition : August 2020
Published by : Vidiyal Pathippagam
23/5 A.K.G Nagar, 3rd street
Uppilipalayam, Coimbatore
Phone : 0422-2576772, 9443468758
email : vidiyal@vidiyalpathippagam.org
Cover design : Arathy Ravindran
Cover Photo : Niramy Ravindran
Layout : Ravindran Pa
Printed by : Jothi Enterprises, Chennai
Price : 180.-

## நன்றிக்குரியவர்கள் :

- *எழுதுவதற்கான சூழலை ஏற்படுத்தித் தந்த றஞ்சி, அட்டையை வடிவமைத்த ஆரதி, அதற்கான புகைப்படத்தை எடுத்த நிறமி.*
- *பிரதியை பலமுறை படித்து சரிபார்த்தும், ஆலோசனை வழங்கியும் ஆதரவு தந்த பால்யகால நண்பன் மோகன்.*
- *எழுதும்படி வலியுறுத்திக்கொண்டிருந்த நட்புகள்.*
- *தகவல்களை சரிபார்க்க, பரிமாற உதவிய முன்னாள் தோழர்கள் ரவிசங்கர், ரகுமான் ஜான், விஜயன், கரன், ஜீவன்.*
- *பிரதியை வாசித்து அபிப்பிராயம் சொன்ன லக்ஷ்மி.*
- *இலக்கியக் களமாக இருந்து வாசிப்பை ஊக்கப்படுத்தும் ''வாசிப்பும் உரையாடலும் -சூரிச்''*
- *வெளியிட முன்வந்த ''விடியல் பதிப்பகம்''*

*

*சமர்ப்பணம் :*

*அம்மாவுக்கு !*

# பதிப்புரை

*போர்கள் என்பன அவை நடக்கும் களங்களில் உள்ள மக்களை சொல்லொணாத் துயர்களுக்குள் தள்ளிவிடுவது என்பது இயல்பானது. இப்படியான துயர்கள் உலக வரலாற்றில் போதிய அளவு பதியப்பட்டுள்ளது. இந்தப் பாடுகளுக்கு முகம் கொடுத்த மக்களின் வாழ்க்கையானது சிறுகதை, புதினம், கவிதை, கட்டுரை, ஓவியம் போன்ற பல வடிவங்களில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இன்று உலகில் புகழ்பெற்ற புராண, இதிகாச, காவியங்கள், கவிதைகள் எல்லாம் இப்படி எழுந்தவைகளே. தமிழுள்ளும் 3000 ஆண்டுகளுக்கும் முற் பட்ட புற நானூற்று பாடல்களில் இருந்தே இந்த வரலாறு தொடங்குகிறது.*

*சென்ற நூற்றாண்டில் நடைபெற்ற உலகப் போர்கள் எண்ணற்ற இலக்கியங்களை தந்துள்ளன. இரண்டாம் உலகப் போருக்கு பின் உலகில் ஏற்பட்ட உழைக்கும் மக்களின் பெரும் எழுச்சிகள், ஒடுக்கப்பட்ட அல்லது அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளின் எழுச்சிகள், தமது விடுதலைக்காக அவை*

நடத்திய போர்கள், இயக்கங்கள் என்பன எண்ணற்ற இலக்கியங்களைத் தந்துள்ளன. இந்த வகையில் ரஷ்யாவின் போர் இலக்கியங்கள் புகழ்பெற்றவை. போர் இலக்கியங்கள் மக்களின் அடிப்படை உரிமைகள், அவர்களுக்குள் நிலவும் ஏற்ற தாழ்வுகள், பல்வேறுபட்ட ஒடுக்குமுறைகள், அந்நியச் சதிகள், பொருளாதாரத் தடைகள், அதன்வழி மக்களின் வாழ்வாதாரங்களை இழக்கச் செய்தல், போதிய அரசியல் பார்வை இல்லாததால் எந்த மக்களின் நலத்திற்கு என்று அமைப்புகள் அமைக்கப்பட்டனவோ அவை அந்த மக்களையே அழித்தல், சகபோராளிகளை ஈவிரக்கமின்றி வதைத்தல், கொல்லுதல், பண்பாடுகளை, பண்பாட்டுச் சின்னங்களை திட்டமிட்டு அழித்தல், பழிவாங்கல்கள் போன்ற பலதையும் பேசுபவை.

ஈழத்து போர் இலக்கியங்களும் இவற்றைப் பேசுகின்றன. இன்றும் படைக்கப்பட்டு வருகின்றன. இலங்கையின் தமிழ் மக்கள் ஒரு சிறுபான்மை தேசிய இனம். அங்கே அவர்களுக்கு 2500 ஆண்டு கால வரலாறு உண்டு. தமிழ் அரசுகள் பல்வேறு காலங்களில் இருந்துள்ளன. ஆனால் இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதற் கொண்டே இவர்கள் பல்வேறு வகையான ஒடுக்குமுறைகளை சந்தித்து வருகிறார்கள். யாழ்ப்பாணமும், யாழ்ப்பாணத் தமிழர்களும் தமிழர் மத்தியில் தொடர்ந்து ஆதிக்க நிலையில் இருந்துள்ளனர். யாழ்ப்பாணம் போதிய அளவு வேளாண்மைக்கான நிலங்களைக் கொண்டிருக்கவில்லை. கல்வியும் அதனால் அவர்களுக்குக் கிடைக்கும் வேலைவாய்ப்பு களும் காலனிய ஆட்சிக் காலங்களில் இருந்தே தொடர்கின்றன. அதனால் யாழ்ப்பாணப் பொருளாதாரம் ‘மணியார்டர் பொரு ளாதாரம்’ என்று சொல்லப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணத் தமிழர்களின் இந்த வாழ்க்கையை சிங்களப் பெரும்பான்மை மக்களால் சகித்துக் கொள்ள இயலவில்லை. கல்வி கற்ற சிங்களவரும் தங்கள் வாழ்வாதாரங்களை தமிழர்கள் பறித்துக் கொண்டதாகக் கருதினர். சிங்கள தேர்தல் அரசியல் கட்சிகள் தங்கள் வெற்றிக்கு தமிழர் மீதான வெறுப்புகளை போட்டிபோட்டுக் கொண்டு கொட்டினர். இதனால் விடுதலை பெற்ற 10 ஆண்டுகளில் தமிழர்க் கெதிரான முதல் இனக் கலவரம் வெடித்தது. இதைப் பேசும், முதலில் வந்த முக்கிய ஆவணங்களில் ஒன்றாக EMERGENCY 58 : THE STORY OF THE CEYLON RACE RIOTS என்ற நூலைக் குறிப்பிடலாம். இதை எழுதியவர் TARZIE VITTACHI. இலண்டன் பதிப்பகம் ஒன்று இதை வெளியிட்டது.

இதன் பின்பு ஈழமக்களின் உரிமைகளுக்கான போராட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்தாலும் தமிழ் இளை ஞர்களின் கல்வி உரிமையை பறிக்கும் இனரீதியான தரப்படுத்தல் சட்டங்கள் (1967,1971,1979) கல்விக்காக வெளிநாடு செல்லவேண்டிய கட்டாயத்தை பல இளைஞர்களுக்கு ஏற்படுத் தியது. இலங்கையின் பாரம்பரிய இடதுசாரி அரசியல் கட்சிகள் இந்த சட்டங்களுக்கு துணைபோனது. இனவெறுப்பு அரசியல் இப்படி நீண்டுகொண்டு வந்தது. தமிழர்களின் நியாயமான உரிமைகளுக்கு குரல் கொடுத்துவந்த சிங்கள இடதுசாரி எழுத்தாளர்கள், தேர்தல் அரசியலைப் புறக்கணிதவர்கள் உட்பட பலரும் மௌனித்துப் போனார்கள். சிலர் சிங்கள அரசுக்கு துணை போனார்கள்.

1970 களில் கல்விகற்க வெளிநாடுகள் சென்ற இளைஞர்கள் பலர் உலகெங்கும் நடைபெற்று வந்த புரட்சி இயக்கங்களால் கவரப்பட்டார்கள். நாடுதிரும்பியவர்கள் அமைப்புகள் சில வற்றைக் கட்டினார்கள். ஆனால் ஈழத்திலும் புலத்திலும் நடைபெற்ற நிகழ்வுகள் அவர்களில் ஆகப் பெரும்பாலோருக்கு சரியான அரசியல் பார்வை இல்லாது இருந்தது என்பதைக் காட்டுவதாகவே இருக்கிறது. இதே காலத்தில் ஈழத்தின் வட்டுக்கோட்டை மாநாட்டில், "தமிழர் விடுதலைக் கூட்டணி" நடத்திய மாநாட்டில் 1976 மே 14 இல் நிறைவேற்றப்பட்ட "தனித் தமிழீழம்" அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் தமிழ் மக்களிடம் பெரும் ஆதரவைப் பெற்றது. இந்த தீர்மானத்தை முன்வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி 1977 பொதுத் தேர்தலை சந்தித்தது. தமிழ் பகுதிகளில் உள்ள அனைத்து தொகுதிகளையும் அது கைப்பற்றி, இலங்கையின் நாடாளுமன்றத்தில் முதன்மையான எதிர்க்கட்சியானது. அமிர்தலிங்கம் நாடாளுமன்ற எதிர்கட்சி தலைவர் ஆனார். ஈழவர் பிரச்சனையை உலகில் பரவலாக்கினார். இதை சிங்கள இனவெறி அரசியல்வாதிகளால் சகித்துக் கொள்ள முடியவில்லை. பௌத்த துறவிகள் பலரும், அவர்களின் அமைப்புகள் பெரும்பாலானவையும் இதற்குத் துணைபோயினர். இலங்கையில் இன ஒற்றுமை கனவாகவே நீடித்தது, நீடிக்கிறது.

புலத்தில் பல்வேறு காரணக்களுக்காக தமிழ்ப் போராட்ட அமைப்புகளுக்குக் கிடைத்த ஆதரவு, ஈழ இளைஞர்கள் மத்தி யில் இயக்கங்களை புற்றீசல் போல் உருவாக்கின, உருவாக் கப்பட்டன.

*பல இயக்கங்கள் அரசியல் காரணங்களுக்காக காணாமல் போக்கப்பட்டன. இதுகுறித்தவை பல ஆவண வடிவிலும், தூண்டறிக்கைகளாகவும் வெளிவந்தன*

*1970 களின் மத்தியில் உருவான ஈழத்திற்கான ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் 2009 மே மாதம் முடிந்து போனது. 9.11.2001 இல் அமெரிக்காவில் நடைபெற்ற இரட்டைக் கோபுர தகர்ப்புக்குப் பின்னால் உலக அரசியல் வெகுவாக மாறியதையோ, புவிசார் அரசியலையோ, பெரும்பாலான ஈழ அமைப்புகளும் அவர்களின் ஆதரவாளர்களும் கண்டுகொள்ள வில்லை. மாறாக தமிழ்நாட்டின் தேர்தல் அரசியல் கட்சியான தி.மு.க. வையும் அதன் தலைவரையும் ஈழ பின்னடைவுக்கு காரணமாக காட்டுவதில் கூடுதல் கவனம் செலுத்தினர். போராளி கள் அறிவித்தபடி அவர்களின் துவக்குகள் மௌனித்துப் போயின. நீண்ட காலம் நீடித்து வந்த போர் இது.*

*இப் போர் தொடர்பாக நிறைய படைப்புகளை சொல்ல முடியும். அந்தவகையில் 1978 இல் வெளிவந்த அருளரின் லங்காராணி'' ஒரு நல்ல படைப்பு. இதன் பின் வந்த ''மரணத்துள் வாழ்வோம்'' ''இரண்டாவது சூரிய உதயம்'' ''ஊரடங்கு வாழ்வு'' போன்றவை பரவலாகப் பேசப்பட்டன. போர்முடிந்த பின் ஒருசில பழைய தலைமுறையினர் உட்பட, புதிய தலைமுறையினர் சிலரும், இயக்கத்தைச் சார்ந்தவர்களும் போரிலக்கியங்களை தந்துள்ளனர். இது தவிர அகத்தில், புலத்தில், பாக்குநீரணையில், வங்கக் கடலில், இந்துமாக் கடலில் புதைந்து போனவர்கள் ஆவணமாக்கப் பட்டார்களா என்பது தெரியவில்லை.*

*போர்க்காலத்தில் (1985) வெளிவந்து பரவலாகப் பேசப்பட்ட புதினம் கோவிந்தனின் ''புதியதோர் உலகம்''. இந் நாவல் ஓர் இயக்கத்தில் நடந்த நிகழ்வுகளை மையமாகக் கொண்டிருந்தாலும் இவை அனைத்து இயக்கங்களிலும் கூடவோ குறையவோ நடைபெற்றதாகவே கொள்ள முடியும். இந்த நூலாசிரியர் ரவி அவர்களின் இந்த ''குமிழி'' நாவல் ஒரு வகையில் அந்த வரிசையில் வருகிற ஒன்று. வாசகர்கள் படித்துப் பயன் பெற விடியல் விரும்புகிறது.*

*- விடியல் பதிப்பகம் (2019 யூன்)*

# என் குறிப்பு

*வாழ்வு மகத்தானதோ இல்லையோ மனிதஜீவி உட்பட ஒவ்வொரு உயிரியும் தனது இருத்தலுக்காக போராடிக் கொண்டே இருக்கும். அதற்காக அந்த மனிதஜீவி தனது சுயநலனையோ, தன்னிலைவாதத்தையோ, பண்பாட்டால் கட்டமைக்கப்பட்ட நியதிகளையோ, உறவுநிலைகளையோ, அதன்வழியான உணர்ச்சி வாதங்களையோ, தனது பொருளாயத சேமிப்புகளையோ, தனது இருப்பிடத்தையோ, ஏன் தனது உடலின் கடைசித் துணியையோ எதையுமே தற்காலிகமாகவேனும் பலிகொடுக்கத் தயங்காது. அந்தளவுக்கு தனது இருத்தல் மீதான பிடிப்பு இருக்கும். அதன்மூலம் வாழ்வு நிறைய நேரம்சங்களை உள்ளடக்கியதாகவே இருக்கிறது என்ற செய்தியை அது அறிவித்தபடியே இருக்கிறது.*

*

*தான் உருவாக்கியோ அல்லது புறநிலையால் நிர்ப்பந்திக்கப் பட்டோ ஒருவர் பல பாத்திரங்களை ஆற்றுகிறார். பொதுவில் நாம் ஒருபடித்தானதாகக் காண்கிற -ஒருவரின்- பாத்திரமானது, பன்மைகளின் சிக்கல் நிறைந்த தொகுப்பு என நான் காண்கிறேன். அதாவது, ஒத்திசைவானதும் முரண்கள் கொண்டதுமான வெவ்வேறான பாத்திரங்களின் ஒரு சேர்க்கை.*

*

*நியதியாகக் கையளிக்கப்பட்ட வாழ்வின் பொது ஓட்டத்தை முறித்துக் கொள்கிறபோது, அல்லது புறநிலைகள் அதற்கு நிர்ப்பந்திக்கிறபோது, ஏற்படுகிற அனுபவங்கள் சிறிதும் முன் அனுமானிக்கத் தக்கவையாக இருப்பதில்லை. அது ஏற்படுத்தி விடுகிற சுவடுகள் இலகுவில் அழியாதவை. இங்கும் அது நிகழ்ந்தது. 70 களின் பிற்பகுதியில் ஈழ விடுதலை இயக்கங்களின் தோற்றங்கள் நிகழ்ந்தாலும், 80களின் முற்பகுதியிலேயே அவற்றின் வீச்சமும் வீக்கமும் நிகழ்ந்தன. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்ற அமைப்பும் ஊதிப்பெருத்து ஒரு குமிழியாக அழகு காட்டியது. அதற்குள் அகப்பட்ட ஓர் இளவயது வாழ்க்கையின் அலைக்கழிவை இந் நாவல் பதிவுசெய்கிறது.*

*-ரவி (2020 ஆனி)*

## வாசகர்களுக்கான தரவுகள் :

- *புளொட் PLOTE : தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (வேறு பெயர் - கழகம்)*
- *அதன் தலைவர் அல்லது செயலதிபர் : உமா மகேஸ்வரன் (வேறு பெயர்கள் - பெரிசு, பெரியவர், பெரியையா)*
- *தளம் : ஈழம்*
- *பின்தளம் : தமிழ்நாடு (இந்தியா)*
- *வண்டி : வள்ளம்*
- *பெயர்கள் : பெரும்பாலும் இயக்கப் பெயர்களை பாவித்திருக்கிறேன். (அதனால் பாண்டி என்ற பெயர் மூன்று வேறுவேறான தோழர்களுக்கு வருகிறது). பெண் தோழர்களின் பெயர்களும், இன்னும் ஒருசில தோழர்களின் பெயர்களும் -அவர்களுடன் தொடர்புகொண்டு அனுமதி பெறமுடியாமல் போனதால்- மாற்றிப் பாவித்திருக்கிறேன்.*

# 0

இருள் மூட்டமாய்க் கவிந்திருந்தது. மங்கிய மஞ்சள் தெருவிளக்கால் இருள் கீறப்பட்டு ஒளி வழிந்து கொண்டிருந்தது. பனித்திரள் வெண்பஞ்சாய்க் கொட்டிக் கொண்டிருந்தது. அமைதி பேரமைதியாக மாறியிருந்தது. நான் மட்டுமே அசைவது போல் நினைப்பு எழுந்தது. நடக்கிறேன். வீட்டுக் கதவை திறக்க, குளிரில் விறைத்துப்போயிருந்த விரல்களை பொக்கற்றினுள் விட்டு சாவியைத் தேடி துளாவிக் கொண்டிருந்த போது, மெல்ல அசுகை கேட்டு திரும்பிப் பார்க்கிறேன். முகம் சிதைந்த பிரமாண்டமான நிழல் உருவம் எனை அதிர்ச்சியால் அறைந்தது. சவுக்கம் கொட்டன் போன்ற ஒன்றை எனது பிடரியின் மீது அந்த உருவம் ஓங்குகிறது. அது பிடரியில் இறங்கிக்கொண்டிருந்த மைக்ரோ கணத்தில் கத்தினேன். எனது குரல் நாராய்க் கிழிபட்டு அறையெங்கும் தொங்கின. ஏதோவொரு வருடலிலும் உசுப்பலிலும் நான் கட்டிலுக்கு இறங்கிக் கொண்டிருந்தபோது உடலை வியர்வை நனைந்திருந்தது. மனைவி தூக்கம் கலைந்து எழுந்திருந்தாள். மகள் தலையை வருடிக்கொண்டிருந்தாள்.

"இண்டைக்கும் அதே கனவா, அப்பா?"

அறையின் மூலையில் வளரும் வேப்பங்கன்று அசையாது நின்றது.

# 1

இன்று சித்திரைப் புத்தாண்டு. ஒவ்வொரு சித்திரைப் புத்தாண்டும் வருகிறபோது, அந்த மந்திரக்கிழவி வந்து வாசலில் மௌனமாக நின்றுவிடுவாள். ஒரு குழந்தை சிறு பூனைக் குட்டி யோடு விளையாடுகிறது. அது ஒரு மான் போலவும் சிறுத்தை போலவும் மாறி, பின் தானேயாகி அந்த குழந்தையோடு விளையாடுகிறது. ஓர் அழகிய அலரிப்பூவை றோசா செடியில் நெய்துவிட்டு சிலந்தி தன் வீடேகிறது. கண்விழித்தபோதும் காற்றில் அலையும் வேர்களுடன் அவள் சற்று நிலத்திலிருந்து மேலெழுந்து நின்றாள். அவளுக்குள் நான் நுழைந்துவிடுகிறேன். அது துயரமான உணர்வுகளை அலைக் கழிப்புகளை தந்தது. சிலவேளை ஒரு அமைதியையும் மகிழ்ச்சியையும்கூட தந்திருக்க லாம். சொல்லத் தெரியவில்லை.

நான் இப்போ என்னவாக இருக்கிறேன், யாராக இருக்கிறேன் என்று கேட்டபடி இருப்பாள் அவள். எனது கதையை கிழிந்து தொங்கும் சிலந்தி வலையாய் அவளே விரித்துப் போட்டுவிட்டு சென்றுவிட்டாள். ஒருவேளை என் தலைக்குள் புகுந்துமிருக்கலாம். ஒரு வைன் குவளையின் நிழலில் நான் வீழ்ந்து கிடந்தேன்.

படிப்பு, குடும்பச் சுமை என ஒரு காய்ந்துபோன வரப்பில் சிறு ஓடையாக ஓடிக்கொண்டிருந்த என் பால்ய கால வாழ்வை மடைமாற்றி புதிய பாதையில் திறந்துவிட்டேன். துணிச்சலா, அப்பாவித்தனமா, விடுதலை வேட்கையா எதுவோ தெரியாது. புலனாகாத அந்த பாதையில் முழு நம்பிக்கையுடன் பரவினேன் என்பது மட்டும் உண்மை. உண்மையிலும் உண்மை.

இந்த நம்பிக்கைகளையெல்லாம் பின்தளம் கிழிசலாக்கியது. உயிர்தப்பி ஊர் வந்து சேர்தலே வாழ்வின் மிகப் பெரும் பாக்கியமாய்ப் போனது. இலட்சியமாகவும் தேய்ந்திருக்கலாம். எப்படியோ ஊர்திரும்பும் சந்தர்ப்பம் கிடைத்தது. பின்னர் எனது நாட்டை விட்டும் வெளியேறினேன். அகதியாய் இங்கு வந்து சேர்ந்தேன்.

எல்லாம் பொய்த்துப்போன துக்கமும், மக்களுக்கு ஏமாற்றம் தரப் போகிற போராட்டத்துக்கு அதன் பங்காளியாய் இருந்த குற்றவுணர்வும், முகாமில் காணாமல் போன எனது தோழனின்

துயரும், தப்பியோடி கேரளாவில் ஒளித்திருந்த எனது ஆறு தோழர்களின் மீதான ஏக்கமும், 'சந்ததியார் கோஷ்டி' என கண்காணிப்புக்குள் அகப்பட்டு தொடர்பற்றுப்போன பெண் தோழர்களும் என நான் கலவரமடைந்த மனநிலையில் இருந்தேன்.

மலையுச்சியொன்றில் சுற்றுலா விடுதியில் முதல் வேலை கிடைத்தது. வேலையும் அறையும் எனது உலகமாகியது. தனிமையில் இருந்தேன். அப்படியென்றும் இல்லை. அறையில் ஒரு பாடல் என்னுடன் சகவாசம் செய்தது. அப்போதெல்லாம் சி.டி இல்லாத காலம். கசற் இல் இரண்டு பக்கமும் இந்த ஒரே பாடலை திரும்பத்திரும்ப ஒலிப்பதிவு செய்து வைத்திருந்தேன். அதன் ஒலியை உதறிவிடுகிறபோது, "தோல்வி நிலையென நினைந்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா..." என்று அது பாடலாகிக் கொண்டிருக்கும். அதைக் கேட்டுக் கொண்டிருந்த படியே நான் உறங்கிப்போன நாட்கள் பல. இன்றும்கூட அந்தப் பாடலைக் கேட்டால் நான் பழசாகிவிடுகிறேன்.

மும்முனை என்று (நேரடி மொழிபெயர்ப்பில்) அழைக்கப் படுகிற அந்த முடிவில் ஒரு பெரிய பாறைக் கல் இருக்கிறது. உலகம் முடிகிற இடமாக அது தோற்றவில்லை. உலகம் உனக்காக விரிந்தே இருகின்றது என்பதாக அது பசுமை மேவிய இளங்காற்றை உயிர்ச் சுவாசத்திடம் தூதுவிட்டு வருடிக்கொண்டிருக்கும். அதில் நான் குந்தியிருக்கிறபோது காலடியின் கீழ் பெரும் பள்ளமாக பதிந்திருக்கிற சரிவு ஓர் பச்சை ஏணைபோல குழிவாகி மறுமுனை மலையுச்சியில் முடிந்திருக்கும். அந்த ஏணைக்குள் ஓர் நீல ஏரி உறங்கிக் கொண்டிருக்கும். சுற்றிவர மலைகளதும் அது விரித்துப் போட்டிருக்கும் மலையடிவார மடிப்புகளினதும் பிடிக்குள் மரக்கூட்டங்களிடையே அழித்தழித்து நிறங்களால் வரையும் முகில்களைக் கண்டு இரசிக்கிற குழந்தையாய்ப் போவேன்.

எல்லா காலநிலைகளுக்குமான அந்த மலையின் கோலமும் வர்ணங்களும் என்னை அழுத்திய துயரையும் விரக்தியையும் மெல்ல மெல்ல கரைத்துக்கொண்டது. எனது தனிமைக்கு அது அர்த்தத்தை வழங்கிக்கொண்டே இருந்தது. பனித்திரளில் சிற்பங்கள் தெரியும். சூரியன் உதிக்கிற நாட்களில் கதிர்கள் படையெடுத்து வந்து பனிக்காலத்தை ஒரு சிற்பக்கூடம் போல

ஆக்கிவிடும். இலையுதிர் காலத்து ஓவியர்கள் மரங்களை யெல்லாம் நிறங்கள் பூத்த ஓவியமாக மாற்றிவிடுவர். வெயில் காலம் பசுமையைப் பொழிந்துவிட்டிருக்கும். கழுத்தில் கட்டிய பெரும் மணிகள் எழுப்பும் ஓசையின் இலயத்தில் மாடுகள் மேய்ச்சலில் ஈடுபட்டிருக்கும். இலைதளிர் காலத்தில் நிறம் பூசி அலையும் முகில் கூட்டங்களின் தூரிகையிலிருந்து நிறங்கள் சொட்டும். சூரியக் கதிர்களால் மாலைவேளையில் துண்டாடப்பட்டுக் கிடக்கும் மலைத்துண்டுகள் மஞ்சள் வெயிலை பரிசளிக்கும். இளங்குளிர் காற்று எனதுடலை நீவிக்கொண்டிருக்கும். அவற்றை இரசித்தபடி பாறையில் தனிமையில் குந்தியிருப்பேன். அந்தக் கிராமத்துக்கு ஒரு கறுப்பனாக, ஒரேயொரு தமிழனாக நான் அறிமுகமானேன். என்னை அந்த மக்களின் உணர்வுகள் அரவணைத்ததோ இல்லையோ என்ற கேள்வியை எனக்கு வேண்டியிருந்த தனிமை எழவிடாமலே வைத்திருந்தது. ஆனாலும் அந்தக் கிராமம் ஒரு நிறவெறியரைக்கூட எனக்கு அறிமுகமாக்கியிருக்கவில்லை

என்னை என்னிடமே மீட்டுத்தந்த அந்த சூழலை நான் அண்மை யில் தரிசிக்கச் சென்றபோது பழைய நினைவுகள் சூழ்ந்தன.

நான் வேலைசெய்த அந்த சுற்றுலா விடுதி கைவிடப்பட்ட நிலையில் காட்சியளித்தது. அதற்குள் ஏக வேண்டும்போல் இருந்தது. மூளைக்குள் குந்தியிருந்த ஒழுங்குவிதிகள் தடுத்தன. அதற்குள் ஒருவரது நடமாட்டமும் தெரியவில்லை. மும்முனை யில் முடிந்து போய்விடுகிற அந்த பாதையோரமாய் அந்த விடுதியின் கார்த் தரிப்பிடத்தில் நின்றேன். இந்த இடத்தில் பனிக்காலங்களில் விடுதியில் தங்கியிருப்பவர்களின் கார்கள் சிலவேளைகளில் ஓர் இரவிலேயே பனியால் முழுவதுமாக மூடப்பட்டு, அலை உறைந்த ஒரு பனிவனம் போல் காலையில் இருக்கும். அதை இரசித்தபடியே நான் அவதானமாக பனித் திரளை அகற்றத் தொடங்குவேன். இளமையான என் உடலுக்கு அந்த கடின வேலை ஒரு பொருட்டாகவே இருந்ததில்லை.

இப்போ இலைதளிர் காலத்தின் ஒரு பகலில் அங்கு நிற்கிறேன். மீண்டும் மீண்டுமாய் அந்த கட்டடத்தை பார்த்துக் கொண்டு நின்றேன். அது ஒரு நினைவுத் துயரை என்னுள் இறக்கிக் கொண்டிருந்தது. அதற்கு எதிர்த்தாற்போல் அந்த வீடு இப்போதும் அப்படியே இருந்தது.

‘மம்மா’ என்று நான் ஆசையோடு அழைத்த அவள் கிழவியாகி விட்டிருந்தாள். கண்பார்வை வேறு மங்கியிருந்தது. தனிமையில் இருந்தாள். அவளது பூந்தோட்டமும் சோபை இழந்திருந்தது. 27 வருடங்களுக்குப் பிறகு அங்கு வந்து நிற்கிறேன். அதே வீடு. அசுமாத்தம் எதுவுமில்லை. அவள் இப்போதும் இருக்கிறாளா இல்லையா என்ற சிறு சந்தேகம் வேறு துருத்தியது. வீட்டு அழைப்பு மணியை மென்விரலால் அழுத்தியபோது அவள் மெல்லக் கதவைத் திறந்தாள். கலவரமடைந்தேன். உடலைக் கிளர்த்திய இன்ப அதிர்ச்சி புன்னகையாய்ப் பிரகாசிக்க வணக்கம் சொல்லிவிட்டு, “என்னைத் தெரிகிறதா?“ எனக் கேட்டேன். சற்று புதிரான பார்வையோடு “இல்லை” என்றாள். அந்த இடைவெளி சில கணங்கள்தான் தாக்குப்பிடித்தது. எனது பெயரைச் சொன்ன துமே முகத்திலிருந்து புன்னகையும் ஆச்சரியமும் வெடித்துப் பரவ, அவள் கணநேரத் தயக்கமின்றி வாரியணைத்துக் கொண்டாள். அவளும் காலத்தை பின்னுக்குத் தள்ளிவிட்டு தாயானாள் என்று நிச்சயம் சொல்வேன். எனது மணிக்கட்டில் பிடித்து இழுத்துச் சென்றாள்.

“அடுத்தமுறை வருமுன்னர் தொலைபேசிவிட்டு வா” என்றாள்.

“நான் உங்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சியை கொடுப்பதற்காகவே சொல்லாமல் வந்தேன். இனி சொல்லிவிட்டுத்தான் வருவேன்” என்றேன்.

“மறக்காமல் பிள்ளைகளை அழைத்துவா. அவர்களை நான் பார்க்க வேண்டும்” என்று அவாப்பட்டாள். தான் முகவலங்காரம் செய்யாமல் (மேக்கப் போடாமல்) இருந்ததை அவள் ஒரு குறை யாக உணர்ந்ததாகப் பட்டது. புகைப்பட அல்பத்தை விரித்துப் போட்டாள். அவளது நடுத்தர வயதுத் தோற்றமும் மலர்த் தோட்டமும் 80 களின் பிற்பகுதியை படம்பிடித்திருந்தது. ஒருசில படங்களில் கனத்த முடியுடனும் மீசையுடனும் இருந்த எனது இளமைக்கால தோற்றத்தை விரலால் அழுத்திக் காட்டியபடி என்னைத் திரும்பிப் பார்த்த அவள், எனது முகத்தை வாசித்தாள். மீண்டுமோர் அல்பத்தை விரித்தாள். அவள் தாய்லாந்தில் நின்று கையசைத்தாள். இலங்கை கடற்கரையில் நின்று கையசைத் தாள். இலங்கைக்கும் தாய்லாந்துக்குமாக தனது வாழ்காலத்தில் பலமுறை சுற்றுலாப் பயணங்களை அவள் மேற்கொண்டது பற்றி யும், எப்போதுமே வியாபிக்கும் புன்னகையுடன் வரவேற்கும்

அந்த மக்களின் இயல்பு குறித்தும் அவள் முன்னர் திரும்பத் திரும்ப மீட்டிய சொற்கள் அந்த அல்பத்தின் மொழியாக இருந்தது. அதை இப்போ திரும்பவும் வாசித்தேன். எல்லா நினைவுகளையும் இழுத்துவந்து அவள் பேசிக்கொண்டிருந்தாள். 27 வருடங்களும் பனியாய்க் கரைந்தன. அவள் முதுமையில் இந்த உலகத்தை கறுப்பு வெள்ளையாகப் பார்க்க சபிக்கப்பட்டிருந்தாள். பார்வை நிறங்களை மறுத்துவிட்டிருந்தது. மூளையில் பதிந்திருந்த நிறங்களை கோர்த்து அவள் மலர்களையும் இந்த உலகத்தையும் பிசகாமல் வண்ணமயமாக வரைந்துகொண்டே இருப்பாள் எனத் தோன்றியது.

எனது கார் வரை வந்து வழியனுப்ப அவளுக்கு முடியாமலிருந்தது என்றே நினைக்கிறேன். கைவிடப்பட்ட விடுதியை பார்த்தபடி நின்றேன். சிறகாய் அதன் பல்வேறு கூரைகளும் பதிந்திருக்கும். முளைத்தெழும்பும் ஒரு மலைக்கன்று போல் அதன் வெளித் தோற்றம் அமைந்திருக்கும். அதன் கட்டடக் கலையை வெகுவாக நான் இரசிப்பேன். அந்த விடுதியின் முன்னைநாள் பொறுப்பாளரும் அவரது மனைவியும் இலங்கைக்கு சுற்றுலா பயணிகளாக நான்கு முறை போய்வந்திருக்கிறார்கள். அவளை நான் ‘சுவிஸ் மம்மி’ என்றே அழைப்பேன். அவள் அதை ரொம்பவும் விரும்பினாள். மிகுந்த அரவணைப்புடன் எனது அகநிலையை அவள் புரிந்துகொண்டு நடந்தாள். ஊரிலிருந்து வரும் வான் அஞ்சல் தபாலுறையை அவள் என்னிடம் நீட்டும்போதுகூட எனது முகத்தை வாசிப்பாள்.

வேலை தேடி நான் மலையேறும் முதல் அனுபவத்தில் தயக்கமே அதிகமும் இருந்தது. வேலை பற்றிய விளக்கங்களை விடுதியின் பொறுப்பாளர் விலாவாரியாக தந்தபின் எனது முடிவுக்காக விட்டிருந்தார். வேலைக்கு வருவதா விடுவதா என்ற முடிவை நான் யோசித்துவிட்டு பிறகு சொல்வதாகத்தான் திரும்பியிருந்தேன். வெகுதூரமல்ல. 200 மீற்றர் தூரத்துக்கு அப்பாலான அந்த பஸ் தரிப்பிடம் வரைதான். அந்த கிராமத்தின் அமைதியும் இயற்கையின் அழகும் இந்த இடத்தை தவறவிட்டுவிடாதே, இது உனக்கானது, உனது ஆன்மாவுக்கானது என கணநேர முடிவை எடுக்க வைத்தது. உடனேயே திரும்பிச் சென்று “நான் வேலைக்கு சேர்ந்து கொள்கிறேன்” என்றேன். ஒளிவுமறைவின்றி இதே காரணத்தைச் சொன்னேன். அவர்களது புன்னகையை நான் இரசித்தேன்.

இப்போ அவளும் கிழவியாகி நோய்வாய்ப்பட்டு இறந்து போயிருந்தாள். சுவிசின் இன்னொரு அழகிய மலைப் பகுதியான டாவோஸ் இல் அவர்கள் இறுதிக் காலத்தில் வசித்து வந்தார்கள். தொலைபேசித் தொடர்பில் இருந்தேன். நத்தாருக்கும் புதுவருடத் துக்கும், எனது ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் மறக்காமல் வாழ்த்து மடல் அனுப்புவார்கள். தாம் வீட்டில் செய்கிற சுவிஸ் சொக்லேட்டையும் சிறு பார்சலாக அனுப்பி வைப்பர். பதிலுக்கு நன்றி சொல்லி நான் தொலைபேசியில் கதைப்பேன். அவள் நினைவுகளை இழந்துபோய் விட்டிருந்த, நோயுற்ற காலத்தில் நான் அவளைப் போய்ப் பார்த்திருக்க வேண்டும். பார்க்கவில்லை. ஏன் அப்படி இருந்தேன் என்று தெரியவில்லை. அவளது இறுதி நிகழ்வுக்கு நான் சென்றிருந்தபோது அவளது மகள், மகன்மார் எல்லோரும் கட்டியணைத்தார்கள். நீண்டகாலமாக அவர்களை நான் பார்த்திராத கால இடை வெளியை இறுக அணைத்து உதிர்த் துக் கொட்டினர். ஒரு ரோசா மலரினை அவளது புதைகுழியில் வைத்தபோது அதுவரை கட்டுப்படுத்தியிருந்த கண்ணீர்த்துளிகள் எட்டிப் பார்த்தன. உயிரோடு நோய்வாய்ப்பட்டு இருந்தபோது அவளை பார்க்க வராத குற்றவுணர்வில் நான் துவண்டுபோனேன். வௌவால்களைக் காணாத விருட்சமாக வேப்பமரத்தின் குடும்பம் போல் வளர்ந்திருந்த அந்த மரத்தின் நிழலொளியின் கீழ் அவளது புதைகுழியின் காலடியில் மண்டியிட்டேன்.

கைவிடப்பட்ட இந்த விடுதியும் அவளது மரணமும் என்னை என்னிடமே மீட்டுத் தந்த இடத்தையும் மனிதரையும் இழந்த துயரமாக வடிந்தது. மலையிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்த போது, நான் இப்போதைய நானாக மாறிக்கொண்டிருந்தேன்.

## 2

1983 யூலை கடைசிப் பகுதி. இலங்கை மீண்டும் ஓர் இனக் கலவரத்தில் சிக்கித் தவித்தது. இரத்மலானை விமான நிலையம் அகதிமுகாமாக உருமாறியிருந்தது. ஆயிரக்கணக்கான அகதிகள். நாம் 55 பேரும் ஓரிடத்தில் குழுவாகியிருந்தோம். படுக்கை, இருப்பு எல்லாம் அந்த இடத்துண்டை எமது பிரதேசமாக ஆக்கியிருந்தது. அனைவரும் மொரட்டுவ பல்கலைக் கழகத்திலிருந்து பத்திரமாக கொண்டுவரப் பட்டிருந்தோம்.

எம்மாலான உதவிப் பணிகளில் நாம் அநேகமாக ஓய்வற்றி ருந்தோம். ஒரு கொலைக் கண்டத்தை கடந்து வந்ததான நினைப்பு எல்லாக் களைப்பையும் வெற்றிகொண்டது.

யூலை 24ம் தேதியென நினைக்கிறேன். எனது இரண்டாம் வருட பரீட்சை அன்றுதான் முடிவுற்றிருந்தது. நாம் வீடு கிளம்பும் ஆர்வத்தையெல்லாம் வாரியள்ளி தீயில் கொட்டியபடி புகை மண்டலம் எழுந்தது, தொலைவில்! பயம், சந்தேகம், பதட்டம் எல்லாமுமாய் தோய்ந்த அந்த மாலைநேரத்தில் அநேகமாக எல்லா சிங்கள மாணவர்களும் வளாகத்தை விட்டுப் போய்விட்டிருந்தனர். நாம் தனித்துவிடப்பட்டதாய் உணர்ந்த அந்தப் பொழுதில் சில சக சிங்கள மாணவர்கள் வந்தனர். ரோகண விஜயவீராவை தலைவராகக் கொண்டியங்கிய ஜேவிபியினர். அவர்கள் எம்மை அரவணைத்தனர். வளாகத்துள் இருந்த தங்குமிட கட்டடத்துள் (Hostel) நாம் தங்கியிருந்தோம். பின்னால் இருந்த காடு உருத்திரண்டு கிடந்தது. அவர்கள் சாப்பாட்டுப் பார்சல்களுடன் வந்தனர். ‘‘எம்மாலியன்றவரை உங்களை பாதுகாப்போம்’’ என்றனர். தம்மால் முடியாதநிலை வந்தால் பின்வழியால் காட்டுக்குள் ஓடி விடும்படி சொல்லிவைத்தனர். அருகில் இருந்தாலும் அந்நியமான காடு அது. ஒரு நாள்கூட அதன் விளிம்பைத்தன்னும் தொட்டுப் பார்த்த அனுபவம் இல்லை. அது பாதுகாப்பின் சாத்தியத்தை மட்டுமல்ல பயத்தையும் கூடவே ஒளித்துவைத்திருந்தது. இரவு அரக்கிக்கொண்டிருந்தது. நாம் மின்விளக்குகளை அணைத்துவிட்டு யன்னலோரமாய் பார்த்துக் கொண்டேயிருந்தோம். ஒவ்வொரு அறையினுள்ளும் பலர் கூட்டாக நின்றோம். அன்றைய இரவு தூக்கம் என்ற சொல்லை தொலைத்திருந்தது. விடியும்வரை அந்த சக மாணவர்கள் கையில் பொல்லுகளுடன் காவல் காத்தனர்.

மறுநாள் அவர்கள் மீண்டும் பார்சலுடன் வந்தனர். ‘‘இனி உங்களை எம்மால் பாதுகாப்பது முடியாத காரியம்போல் தெரிகிறது. வீதிநிறைந்த சனம். கையில் கொலைக் கருவிகளுடன் நின்று கத்துகின்றனர். நாம் வளாக தலைவருடன் கதைத்திருக் கிறோம். பொலிசார் வருவர். அவர்கள் உங்களை இரத்மலானை விமாநிலையத்துக்கு அழைத்துச் செல்வர்’’ என்றனர். இப்படி அவர்கள் சொன்னபோது வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் நிற்பதாக உணர்ந்தோம். பொலிஸ் ஜீப், வான் என ஐந்தாறு வாகனங்களினுள் நாம் நெரிசலாக அடைக்கப்பட்டோம். வளாக

வாயிலினூடு நழுவிக்கொண்டிருந்தன பொலிஸ் வாகனங்கள். வீதி முழுவதும் பொல்லுகளும் கத்திகளும் காட்டுக் கத்தல்களோடு உயர்ந்து உயர்ந்து பதிந்துகொண்டிருந்தன. அதை பொலிஸ் வாகனங்கள் நிச்சயமற்ற தன்மையுடன் தாண்டிக் கொண்டிருந்தன.

இப்போ நாம் இரத்மலானை விமான நிலையத்தில் நிற்கிறோம். வெறுமை எமைத் தொற்றியது. நினைவு வளாக வகுப்பறையுள் ஓடியது. கட்டடக்கலை கற்கைநெறியின் கடைசிவருட மாணவன் குரு. அவன் பாலச்சந்தரின் படத்தில் கொசுறுத் தத்துவங்களோடு அலைபவனைப் போன்ற தோற்றம் கொண்டவன். நான்கு பக்க சுவர்களிலும் அவனது மாடிக் கட்டடத்தின் படைப்பாக்க விளக்க வரைபடங்கள் (designs) சுவரில் பொருத்தப்பட்டிருந்தன. அவனது பரீட்சைக்கான முறை அது. நிமால் என்ற விரிவுரையாளர் வரிக் கோடுகளாலான அந்த படைப்பினுள்ளே புகுந்து கேள்விகளை அள்ளிக்கொண்டு வந்து கொட்டிக்கொண்டிருந்தார். எல்லாவற்றுக்கும் சரியாகப் பதிலளிக்க வேண்டும். ஒரு கட்டடக்கலைஞனாக உருவாகும் ‘தவம்’ கலையாமல் இருக்க போராடிக்கொண்டிருந்தான் குரு. இடைநடுவில் சற்று தடுமாற்றமடைந்தபோது, “ஏன் நீயெல்லாம் ஒரு ஆக்கிரெக்ரா வர யோசித்தாய்? பேசாமல் போய் குண்டு வைக்கிறதைப் பற்றி யோசி” என்றார் நிமால். சுற்றியிருந்த சிங்கள மாணவர்கள் வெடித்துச் சிரித்தனர். நாம் மவுனமாயிருந்தோம். எமது வகுப்பில் செனிவரட்ன ஒரு கலகலப்பானவன். அதே நேரம் எப்பவுமே ஒரு சிங்கள (வெறி) அடையாளம் அவனது குத்தல் பேச்சில் இருக்கும். ஒருநாள் பேணியொன்றுக்குள் சில கற்களை போட்டு அட்டகாசமாக குலுக்கியபடி எம்மருகே வந்தான். நாம் தமிழில் கதைத்துக்கொண்டிருந்தோம். “என்னடா செய்கிறாய்” என்று -சிங்களத்தில்- கேட்டதற்கு, “நானும் உங்களோடு தமிழ் கதைக்கிறேன்” என்றான்.

எமைத் தைத்திருந்த நினைவுகளை இரைமீட்டியபடி இரத்மலானையில் மூடுண்டு நகர்ந்தது காலம். சில வாரங்களின் பின் செஞ்சிலுவைச் சங்கம் படிப்படியாக கப்பல் மூலமாக அகதிகளை காங்கேசன்துறைக்கு கொண்டுசெல்லும் பணியில் ஈடுபட்டது. நாம் கடைசிக் கப்பலில் பயணித்தோம். வேல்முருகனையும் இன்னும் மூன்று சக மாணவர்களையும் தொலைத்துவிட்டு புறப்பட்டிருந்தோம்.

வேல்முருகன் எனது அயல் கிராமம். தந்தை சோமசுந்தரம் பாடசாலை அதிபர். வேல்முருகன் பொறியியல் பீட கடைசி வருடத்தின் பரீட்சையையும் முடித்திருந்தான். “கலவரம் அடங்கிவிட்டது, இப்போ கொழும்பிலை பிரச்சினை எதுவுமில்லையாம்” என்ற பேச்சொழுக்கில் நனைந்த ஓர் நாளில், எம்முடனேயே இரத்மலானையில் இருந்த வேல்முருகனும் இன்னும் மூவருமாக ஒரு வாடகைக் கார் (ரக்சி) பிடித்து வெள்ளவத்தைக்கு தமது உறவினர் நிலையறிய சென்றிருந்தனர். நாம் தடுத்தோம். நிச்சயமற்ற தன்மையில் போகவேண்டாம் என்றோம். அவர்கள் போனார்கள்.

டெகிவல தேவாலயத்துக்கு முன்னால் வைத்து அவர்கள் நால்வரின் உயிரும் பறிக்கப்பட்ட செய்தியை நான் சோமசுந்தரத் தாரிடம் எப்படிச் சொல்வது. “அவன் வருவான். இன்னமும் கொஞ்சப் பேர் வர இருக்கு” என்ற சொல், அவர் என்னை அடிக்கடி வீடுதேடி வந்த பொழுதுகளால் தேய்ந்து நாராகிப் போகத் தொடங்கியிருந்தது. பின்னர் அவர் வருவதில்லை. இப்போ அவரை வீதியில் கண்டால் நான் சைக்கிளை திருப்பி தப்பியோடும் படலம் ஆரம்பமாகியது. அவர் மனநிலை பாதிக்கப்பட்டவராக ஆகியிருந்தார். புசத்தியபடி திரிந்தார். என்னைக் கண்டால் “என்ரை பிள்ளை எங்கையடா? நீயெல்லாம் உயிரோடைதானே வந்திட்டாய். எங்கையடா என்ரை பிள்ளை?” என கத்தத் தொடங்குவார். “ங்கள்” எல்லாம் “டா” என மாறியிருந்தது. அவரது நிலைமையை, தோற்றத்தை பார்க்க எனக்கு வலு இருப்பதில்லை. வேல்முருகன் வாட்டசாட்டமான உயரம். சிரித்தபடியே பதுமையாக நடந்துசெல்லும் ‘செல்லப்பிள்ளை’. சோமசுந்தரத்தார் ‘தவமிருந்து’ 16 வருடங்களின்பின் பிறந்தவன். அவர் இடிந்துவிழாமல் என்ன செய்வார். சைக்கிளில் செல்லும் போதெல்லாம் வீதியில் அவர் தென்படுகிறாரா என்ற கவனிப்பை நான் தொலைத்து விடுவதில்லை. அவரை முகங்கொடுக்க முடியாமல் இருந்தது.

இனி ஒருபோதும் மொரட்டுவ வளாகத்துக்கு திரும்பிப் போவதில்லை என்ற முடிவை நான் அடைகாத்தேன். கடைசிநாள் வளாகத்தில் எமது புத்தகக் கட்டுகளையும் வரைபடங்களையும் பெயர் எழுதி கட்டி வைத்த அந்த அறையும் எரிந்து போனதாக பின்னர் அறிந்தேன். உண்மையில் அதை நான் கட்டி வைக்க வில்லை. கட்டி வீசினேன். இனி இங்கு மீண்டும் வருவதில்லை

என எனக்குள் இருந்தவன் சபதமெடுத்திருந்தான். பின்னரான காலங்களில் நான் சென்றடைந்த இயக்கத்தின் அரவணைப்பில் எனது அவன் வளர்ந்து போராளியாகி விட்டிருந்தான்.

## 3

எனது பெயர் வேம்பு. வானத்துக்கும் தரைக்கும் இடையில் நான் தோகை விரித்திருந்தேன். என்னை ஒருவர் தனது இரு கைகளாலும் கட்டிப்பிடித்துவிட முடியாது. எனது வாழ்காலத்தை நீங்களே ஊகித்துவிடுங்கள். இந்த வீடு ஒரு மனிதவனம் போல இருக்கும். ஆசிரியர்கள் வருவர். மாணவர்கள் வருவர். நோயுற்றவர்கள் சுகமடைய ஆயுர்வேத மருத்துவத்தை நாடி வருவர். மாங்கன்றுகளை இலவசமாகவே ஒட்டுக் கன்றுகளாக அதுவும் ஒரே மரத்தில் இரண்டு மூன்று வகை மாங்காய்கள் காய்க்க வைக்கும் கன்றுகளாக உருவாக்க வருவர். சாத்திரம் பார்க்க வருவர். நிதியுதவி கேட்டு வருவர். இப்படியே வேறுபட்ட மனிதர்களின் நடமாட்டத்தை அவதானித்துக் கொண்டிருப்பேன்.

எனது பூக்கள் வடகமாகும். பழத்தின் விதைகள் ஆயுர்வேத எண்ணையாகும். இலைகள் பட்டைகள் நுளம்புக்கடிக்கு மட்டுமல்ல பாம்புக் கடிக்கு மூட்டுகிற மூலிகைப் புகைக்குள் அகப்படும். குருத்து ஆயுர்வேத குளிகைகளுக்குள் சாறாகி பின் உலர்ந்திருக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு பெரு விருட்சத்தின் நிழலாக முற்றத்தில் நான் நின்றேன். சிறுவயதில் என் அடியில் கல்லால் குத்தி பிசின் வடியச் செய்வான் அவன். பாடப்புத்தகங்களின் கிழிசல்களை ஒட்டுதற்கும் பட்டம் ஒட்டுதற்கும் அவன் கல்லால் குத்திய காயங்கள் இப்போதும் உண்டு. நான் உதிர்த்துவிடும் பழங்களை பொறுக்கியெடுத்து உண்பான். விதையை பூச்செடிகளுக்குள் புதைப்பான். விதையின் முளைப்பை எதிர்பார்த்தோ, முளைத்த விதையின் குருத்துவிரி கோலத்தை இரசித்தபடியோ நிற்பான். எனது கிளையை அவன் எட்டமுடியாததால், அருகிலுள்ள இளவேம்பின் கிளையை முறித்து பல்துலக்கியபடி மலர்ச் செடிகளையும் விதைகளின் முளைப்புகளையும் ஒருசேர பார்த்துக் கொண்டிருப்பான். “மூளையை எங்கையோ விட்டிட்டு நிக்கிறான்” என அதை தாய் மொழிபெயர்ப்பாள். பிடிவாதக்காரனாக தகப்பனாலும்

கட்டுப்படுத்த முடியாதவனாக அவன் வளர்ந்தான். அதேநேரம் தகப்பன் அவனது மனிதாபிமானத்துக்கும், பொதுநல முனைப்புக்கும், படிப்பில் அவன் காட்டிய தீவிரத்துக்கும் கட்டுப் பட்டுப் போயிருந்தார். நிலவிய கல்வியூட்டல் முறைகளுக்கு வெளியே அவனது தந்தை ஓர் ஆசிரியனாக இருந்தார். பிள்ளை களுக்கு அடிப்பதை அவர் வெறுத்தார். எழுத்துக் கற்பிக்கும் முறையில் புதிய உத்திகளை கையாண்டார். பிள்ளைகள் முதலில் எழுதப் பழகிற எழுத்து எழுத்து «ட» ஆக இருக்கும் பின்னர் ப.. ம.. என அது இலகுத்தன்மையிலிருந்து பயணிக்கத் தொடங்கும். வகுப்பறையின் எல்லைகளை அவர் குறுகலாக உணர்ந்தார். எப்போதும் பாடசாலை வளவின் மரத்தின் கீழ் அவரது வகுப்புகள் நடக்கும். வாய்ப்பாடுகூட ஆடிப்பாடலுடன்தான் மனனமாகும். பிள்ளைகள் நல்ல புள்ளிகள் வாங்கிவிட்டால் அவர்கள் விரும்பும் உருவத்தை ஓவியமாக அவர் சிலேற்றில் சோக்கட்டியினால் வரைந்துவிடுவார். அது அழிபடாமல் சிலேற்றின் பின்புறம் வைத்துப் பாதுகாப்பதில் குழந்தைகள் கவனமாக இருப்பர். அதில் சிங்கமோ புலியோ மலர்களோ அம்மாக்களோ இருப்பர்.

சிறுபிள்ளைகள் சட்டையுடன் சிறுநீர் கழித்தாலோ, ஏன் மலம் கழித்தாலோகூட அந்தப் பிள்ளையை பாடசாலைக் கிணற்றில் கழுவிவிடுவதும், அந்த உடைகளை தோய்ப்பதும், மாற்று உடைகளைக் கொடுப்பதுமாக ஒரு தகப்பனாக அவர் மாறிவிடுவார். சோர்வாய் பிள்ளைகள் இருப்பதை கவனித்தால் அதை கேட்டறிவார். பசியால் என்று தெரிந்தால் தனது மகனை வெளியில் உள்ள 'ஊமையன் கடைக்கு' அனுப்பி இடியப்பமோ தோசையோ பணிஸோ வாங்கிவிர அனுப்புவார். சுகவீனம் எனத் தெரிந்தால் அருகிலுள்ள தனது ஆயுர்வேத மருந்துக் கடைக்கு அவனை அனுப்பி மருந்துகளை கொணரச் செய்வார். சிலவேளைகளில் அந்தப் பெரிய திறப்பால் கடையைத் திறப்பதிலும் பூட்டுவதிலும் அவன் சிரமப்படும்போது பக்கத்துக் கடைக்கார வேலுப்பிள்ளை மாமா உதவிசெய்வார்.

தந்தை எப்போதுமே இயங்கியபடிதான் இருப்பார். பாடசாலை நேரம் போக அவர் மூலிகைச்செடி வளர்ப்பு, மருத்துவம், சாஸ்திரம் போன்ற துறைகளில் ஈடுபட்டார். ஆயுர்வேத மருந்துகளைத் தயாரிப்பது, மருந்துக் கடையை நடத்துவது, சைக்கிளில் வீடுகளுக்குச் சென்றுகூட வைத்தியம் பார்ப்பது என

அவரது மருத்துவப் பணி தொடர்ந்தது. தனது வைத்திய வாகடக் குறிப்புகளை ஏட்டில் எழுத்தாணியால் எழுதுவதையும் அவர் செய்தார். ஏடுகளிலிருந்து கடதாசித் தாள்களில் எழுதுவதையும் தனது இறுதிக் காலங்களில் செய்தார். இதன்போதெல்லாம் அவருக்கு ஒத்தாசையாக வாசிப்பு வேலையை அவன் செய்தான். அவனுக்கு வயதை மீறிய ஆயுர்வேத அறிவை ஊட்டினார். கடுமையான வார்த்தைகளைக் கொண்ட ஆயுர்வேதப் பாடல்களை மனனஞ் செய்யக் கொடுத்து மற்றவர்களுக்கு முன் பாடிக்காட்டுவதில் பெருமையடைந்தார். அவர் குடும்பத்துக்கு வெளியில் இயங்குவதில்தான் அதிக கவனம் செலுத்திக் கொண்டிருந்தார். 1970 இல் தந்தையின் மரணத்தின்பின் 'சிறீமா கால' பஞ்சத்தோடு போராடுவதே இந்தக் குடும்பத்தின் வாழ்க்கையானது. அவனது அக்காமார் எவருமே அப்போது மணம்முடித்து இருக்கவில்லை. மோசமான சீதனமுறை நிலவும் யாழ்ப்பாண சமூக முறைமையில் அக்காமாரை 'கரைசேர்ப்பது' பற்றிய கவலை தாயை பெரிதும் ஆழ்த்தியிருந்தது. வாழ்வுக்கான எல்லாப் போராட்டங்களினூடும் அவர்களின் பயணம் தொடர்ந்தது. அவன் படித்து பட்டம் பெற்று உயர்ந்து இந்தக் குடும்பத்தை தாங்கிப் பிடிக்க வேண்டும் என அவள் கனவை வளர்த்தாள். காத்திருந்தாள்.

நான் ஏன் இதையெல்லாம் நினைவுகூர்கிறேன். அவன் ஒருவகையில் எனது குழந்தை. அவன் எப்போதுமே என்னை இரசிப்பவன். நிலா ஒளியில் வௌவால்கள் நிழல்கிழிசல்கள் போல் பறந்து திரிவதை நோட்டமிட முற்றத்தில் வாங்கின்மேல் நிமிர்ந்தபடி கிடப்பான். வானம், முகில், நிலா, வௌவால்கள் என எல்லாவற்றையும் என் விருட்சத்தோடு இணைத்து உலகைக் காண்பான். காற்றில் கலக்கும் எனது இலையோசையை உலகத்தின் இயக்கமாக உணர்வான். வௌவால்களின் சிறகொலியைக்கூட அவன் எட்டியிருத்தல் கூடும். இயற்கை மீதான நேசிப்பை எனது மடியில் கிடந்துதான் கற்றுக் கொண்டான் என நான் நினைக்கிறேன். அவன் என் குழந்தை.

எனது காலடியில் வளர்ந்த அவன் வழமையாக என்மேல் சாத்திவைக்கிற சைக்கிளை இன்று காணவில்லை. அவனையும் காணவில்லை. அம்மா அழுகிறாள். அவனது ஆறு சகோதரங்களும் இடிந்துபோய் இருக்கிறார்கள். கவலையும் பயமும் அவர்களின் மவுனத்திலும் கண்ணீரிலும் ஒட்டிக்

கொண்டிருக்கிறது. நேற்று வெளிவிறாந்தையில் அவனது அம்மா கால்நீட்டியபடி சோர்ந்து போய் இருந்தாள். மதியம் அவன் என்மீது சாத்தியிருந்த சைக்கிளை எடுத்தபோது, அம்மா "எங்கை மோனை போறாய்?" என கேட்டாள். அவனோ "நான் ரவுணுக்கு ஒருக்கால் போட்டு வாறன்" என்றான்.

"சாப்பிடவில்லையா? "

"இல்லை, நான் பிறகு வந்து சாப்பிடுறன்"

"அப்ப தண்ணியாவது குடிச்சிட்டுப் போ"

தயக்கத்துடன் மீண்டும் சைக்கிளை என்மேல் சாத்தினான். சைக்கிள் கரியரில் ஒரு சிறு "சொப்பிங்" பை (shopping bag) பொதி இருந்ததை தாய் கண்டாளில்லை. கடைசி அக்கா தேசிக்காய்த் தண்ணீரை கொணர்ந்து கொடுக்கிறாள். அவன் ஒரே மூச்சில் அதை குடித்து விடுகிறான். முகம் மெலிதாய் குலைந்திருந்தது. வெயில் என் இலைக்கூந்தல் உச்சியை பிளக்கிற வெறியோடு எறித்தது. அவன் போய்விட்டான். போகும்போது வழமைக்கு மாறாக சந்தியில் காலூன்றி நின்று வீட்டை ஒருமுறை திரும்பிப் பார்த்தான். அதன்பின் அவன் திரும்பவேயில்லை. அவனது அத்தான் வேலைசெய்த கடையில் அவன் இன்னொருவன் மூலம் கொடுத்து விட்ட கடிதத்தை அவர் அரக்கப்பரக்க கொண்டு வந்திருந்தார். அதற்குள் பிரளயம் குடிகொண்டிருந்ததை அப்போது தான் கண்டேன். அவனது தாயும் சகோதரங்களும் அதன் தாக்கத்தில் இடிந்து போய்விட்டனர். அவன் அவர்களைப் பிரிந்து இயக்கத்துக்குப் போய்விட்டான்.

இதற்கு முதல் கிழமை "உன்ரை மகனும் இயக்கத்துக்குப் போறானாம்" என்ற செய்தி எப்படியோ தாய்க்கு எட்டிவிட்டது. அந்த எதிர்பாராத செய்திகேட்டு சுவாமிப் படத்தின் முன்னால் அழுதுகொண்டிருந்தாள் அவள். கைகள் கும்பிட்டபடி துவண்டு போயிருந்தாள். அன்று முழுதாய் எங்கெல்லாமோ அலைந்து திரிந்துவிட்டு வந்திருந்தான் அவன். கொஞ்ச காலமாக அவன் இப்படியேதான் அலைகிறான். மவுனத்தை ஒரு மொழிபோல் பேசியபடி நடமாடுவதை நான் அவதானித்திருந்தேன்.

"நீயும் இயக்கத்துக்குப் போறியாம் மோனை. எல்லாரும் கதைக்குதுகள். வீட்டிலை எவ்வளவு பொறுப்பு இருக்கடா.

எங்களை நடுத்தெருவிலை விட்டிட்டுப் போயிடாதை மோனை. உன்னை ஒரு தூண் போல நம்பித்தான் இந்த குடும்பம் இருக்குது....''. வார்த்தைகள் கண்ணீரில் மிதந்து வந்தன. அம்மாவின் அழுகை கட்டுப்படுத்த முடியாதளவுக்குப் போய் விட்டது. அது அவனை சங்கடப்படுத்தியிருக்க வேண்டும். அவன் தனது மவுனவெளியுள் இப்போதும் நின்றான். பிறகு வாய்திறந்தான்.

''நான் போகயில்லை. ஆர் சொன்னது? சும்மா ஆக்களின்ரை கதையளைக் கேட்டு ஏன் அழுகிறாய்? ''

தாயைச் சமாளிக்க அவனால் முடியவில்லை.

''அப்பிடியெண்டு நீ எனக்கு மேலை சத்தியம் பண்ணு'' என அவள் கேட்கிறாள்.

அவன் சாதுரியமாகப் பேசினான்.

''நீ பெத்த பிள்ளையிலை நம்பிக்கை இல்லையெண்டால் சொல்லு. நான் சத்தியம் பண்ணுறன்''

தாய் கையைக் கீழிறக்கினாள். பொருமி அழுதாள்.

அதன்பிறகு அம்மாவின் பார்வை நூலிழைகளால் நெய்யப்பட்டதுபோல் ஆனது. அது அவனை, அவனது முகத்தை சுற்றத் தொடங்கும். பிடிவாதக்காரனான அவனை தான் இழந்துவிடுவேனா என்ற அச்சத்தில் பலமற்ற இழைகளால் மேலும் மேலும் தன் பார்வையை பின்னத் தொடங்கியிருந்தாள். இப்போ எல்லாமும் அறுந்து தொங்கியது. அவள் துவண்டு போயிருக்கிறாள். எங்காவது அவன் பற்றிய செய்தியை கேள்வியுற்றால் வந்து சொல்லுங்கள். கொஞ்சம் ஒத்தடமாக இருக்கும்.

## 4

அமைதியான சூழல். நீர்வருடும் குளிர்காற்று எனது உடலை மெல்லென உரசிக்கொண்டிருந்தது. அதுதான் கடல் பயணத்தின் முதல் அனுபவம் எனக்கு. காற்று என்னை ஊதிக்கொண்டது. மிதப்பதுபோன்ற பிரமை. எதிர்காலத்தை கற்பனையுள் தன்னும் வார்த்துக் கொள்ளமுடியாத அந்தரநிலை. எனது குடும்பத்துள்

மட்டும் புதைந்திருந்த வேர்களை புரட்டி இந்த சமூகத்துள் ஊன்றி விட்டதான நினைப்பில் மனம் ஒருநிலையில் நிலைகொள்ளாமல் தவித்தது. அல்லது காரணமற்ற காரணங்களின், அதன் கனவுகளின் மயக்கமும் எனக்கு விலகாதிருந்திருக்கலாம். வண்டி என்னையும் இன்னும் 18 பேரையும் காவிச்சென்று கொண்டிருந்தது. எனது தாய், சகோதரங்கள் எல்லோரையும் அந்தரத்தில் விட்டுச் செல்வதால் எழும் உணர்வை இந்த மண்ணுக்காய் உழைக்கச் செல்வது பற்றிய நினைப்பு தட்டிக்கழித்துக் கொண்டது என நீங்கள் நினைக்கக் கூடும். சொல்லத் தெரியவில்லை.

நான் ஒரு கட்டடக் கலைஞனாகி பின் எனது உழைப்பில் இந்தக் குடும்பத்தைத் தாங்குவது, எனது சகோதரிகளுக்கான சீதனத்தால் அவர்களை 'மீட்பது' போன்றவற்றுக்கான சாத்தி யத்தை விட ஒரு சுதந்திர சோசலிச தமிழீழம் உருவாகினால் எம்போன்றே எல்லோருக்கும் மீட்சி கிடைக்கும் என நம்பியதும் பொய்யில்லை. எனது "என்ஜினியர்" கனவை பழிவாங்கிய அரசுக்கு எதிராக கோபம் கொண்டதும் பொய்யில்லை. கொலை யுண்ட சக மாணவர்களில் என்னைக் கண்டதும் பொய்யில்லை. மண்ணுக்காய் மரித்தவர்களின் சாம்பலிலிருந்து தமிழன் என்ற அடையாளத்துடன் நான் எழுந்ததும் பொய்யில்லை. வண்ணை ஆனந்தனின் 'வௌவால்கள்' எனக்கு திசைகாட்டியதும் பொய் யில்லை. எல்லா பொய்களையும் நம்பியதும்கூட பொய்யில்லை.

வாழ்க்கையில் 'றிஸ்க்' எடுப்பது ஒரு மாற்றத்தின் பாய்ச்சல் அல்லது முறிவு என நினைக்கிறேன். அது ஆச்சரியங்களை தர வல்லது. வேறு உலகத்தை அதன் மாந்தர்களை அறிமுகப்படுத்த வும் கூடியது. இவை ஒன்றுமேயில்லாமல் வாழ்க்கையை சப்பி துப்பிவிடவும் வல்லது. முன்னனுமானிக்க முடியாத இந்த பாதை எனக்கு மர்மமாகவே இருந்தது. அங்கு போய்வந்து யாரும் அனுபவங்களைச் சொன்னாரில்லை. அவர்கள் சொல்லியிருந் தாலும் நான் கேட்டிருப்பேனா என்றும் தெரியாது.

"என்ன யோசிக்கிறாய்? "

"ஒண்டுமில்லை"

புன்சிரிப்போடு என்னை நோக்கிக் கொண்டிருந்தான் யோகன். நாம் இருவரும் படிக்கும் காலத்தில் பழகிக் கொண்டவர்கள். பின்னர் ஒரே இயக்கத்தில் எம்மை இணைத்துக் கொண்டிருந்தோம். இயக்கத்தில் அவனது உழைப்பு தொழில்

நுட்பக் கல்லூரியிலிருந்த போது ஆரம்பமாகியிருந்தது. நாம் இருவருமே ஒரு புரட்சியின் கடைநிலை சிற்பிகள் போல் எம்மை நாமே பாவனை செய்து, கடைசிக் காலங்களில் ஓடித்திரிந்து இயக்கத்தில் வேலைசெய்தோம். இந்த உழைப்பு எம் இருவரையும் இறுக்கமாகப் பிணைத்திருந்தது.

நேரம் இரவு பன்னிரண்டு மணியை தாண்டிக் கொண்டிருந்தது. எல்லையற்றுத் தெரிந்தது வானம். நட்சத்திரங்கள் எல்லாம் ஏதோ அர்த்தங்களை எழுதிக்கொண்டிருக்க, கடலின் அலைகள் மெல்லியதாய் மூச்சுவிட்டுக் கொண்டிருந்தன. எமது வண்டியின் இரகசிய இரைச்சலைத் தவிர வேறெந்த இரைச்சலையும் அந்த நீர்வெளியில் அவதானிக்க முடிவில்லை. வண்டி 20 பேரையும் தூக்கிக் கொண்டு அலைகளற்ற நீர்ப்பரப்பை மெல்ல நீவிச் சென்றது. வேகமில்லை.

“இந்தச் சனியன் பிடிச்சது. வேலைகாட்டப் போகுது” என ஓட்டியின் துணையாள் சினந்து கொண்டான். அவன் சொல்லி வாய்மூடுவதற்குள் வள்ளத்தின் ஓர் இயந்திரம் இரைச்சலை நிறுத்திக் கொண்டது. மற்றைய இரு இயந்திரங்களும் இயங்கிக் கொண்டிருந்தன. வண்டியில் இருந்த 19 பேரையும் அச்சம் மெல்லியதாய்க் கவ்வியது.

“இரண்டு மோட்டர் வேலைசெய்யுது. பிரச்சினையில்லை. தம்பிமார் நீங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். உங்களை என்ரை உயிரைக் குடுத்தெண்டாலும் கொண்டுபோய்ச் சேர்ப்பன்” என்று சொல்லியவாறு தனது கையிலிருந்த சாராயத்தை வாயில் ஊற்றிக் கொண்டிருந்தான் ஓட்டி.

“நான் அந்தநேரம் குட்டிமணி, தங்கத்துரை ஆக்களோடை ஓட்டியாயிருந்தனான். போன கிழமையும் 40 இயக்கப் பெடியளை கொண்டுபோய்ச் சேர்த்தனான். தம்பியவை ஒருத்தரும் யோசிக்க வேண்டாம் என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்துவிட்டு, மீண்டும் ஒருதடவை வாயில் ஊற்றிக் கொண்டான். எல்லோருக்கும் ஒரு சிறு நம்பிக்கையை அவனது பிரசங்கம் கொடுக்கத் தவறவில்லை. ஓட்டியின் துணையாளாய் வந்த இளைஞன் அந்தக் கடற்பரப்பினூடு கண்ணிமைக்காமல் கூர்மையாகப் பார்வையைச் செலுத்தியவாறு கரும்புள்ளி (கடற்படைக் கப்பல்) தென்படுகிறதா என கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தான். இருளை நம்பினோம். இருளை கண்காணிக்கவும் செய்தோம்.

உயிர்மீது என்றுமில்லாத வேட்கை எங்கிருந்து கிளம்பியதோ தெரியவில்லை. எனது வீடு, முற்றத்து வேப்ப மரம், வாசிகசாலை, பள்ளிக்கூடம், பல்கலைக் கழகம் என எல்லாவற்றையும் சிலந்தி யிடம் ஒப்படைத்துவிட்டேன். தனது இழைகளை அது அன்று ஒரு தேர்ந்த நுட்பத்துடன் வடிவமைத்ததாகத் தெரியவில்லை. குழப்பி யடித்துக் கொண்டிருந்தது. தூரம் அதிகரிக்க அதிகரிக்க அதற்குள் சிலந்தி சிறைப்பட்டுப் போயிருந்தது தெரிந்தது.

எமது அரச மரத்தடித் தோழர்களின் வழியனுப்பலோடான அன்றைய மாலைப்பொழுது சாகசம் நிறைந்த அதேநேரம் மனச் சஞ்சலம் நிறைந்ததாய்க் கழிந்திருந்தது. சிறு 'சொப்பிங்' பை உடன் வல்லைவெளி தாண்டிய பஸ் பிரயாணம் இந்த மண்ணைப் பிரிவது போன்ற உணர்வை வழங்கியிருந்தது. பார்வைப் பரப்பையெல்லாம் வெளியாய் விரித்துக் காட்டிய வல்லைவெளியிலிருந்து ஒரு சிறு வீட்டின் முன்மண்டபத்துள், சிறு வெளியுள் அடைபட்டோம். மாலையாகிவிட்டிருந்தது. வெளியாருக்கு எம் அசுகை தெரிந்துவிடக்கூடாது என்பதற்காக வும், ஆழ் இரவுவரையான காத்திருப்புக்காகவும் இந்த ஒழுங்கு செய்திருந்தார்கள். நாளை சித்திரைப் புத்தாண்டு. இன்று இரவு கடலில் கண்காணிப்பு குறைவாக இருக்கும் என கணித்து, இன்றைய நாளை கடல் கடக்க தேர்வுசெய்திருந்தார்கள். இரவு நாம் கிளம்பினோம். தோட்டத்து வரம்புகளில் ஒருவர் பின் ஒருவராக எச்சரிக்கை அறிவுறுத்தல்களுடன் ஓட்டமும் நடையும் பதுங்கலுமாக நாம் வரிசையில் வழிநடத்தப்பட்டுக் கொண்டி ருந்தோம். இறுதியில் ஒரு பனங்காணியை நாம் வந்தடைந்தோம். பற்றைகளின் பின்னால் நாம் படுத்தபடி இருக்க பணிக்கப் பட்டோம். சுமார் ஒரு மணித்தியாலங்கள் இப்படி ஊசலாட்டமாக விடப்பட்டோம். பின்னர் முன்னுக்கு ஒருவர் வழிகாட்டி ஓடிப் போக அவரைத் தொடர்ந்து நாம் பதினெட்டுப் பேரும் பற்றைகள் கற்குவியல்கள் சிறு மதிலென்று எல்லாம் பாய்ந்து இருளோடு இருளாக வள்ளத்தை வந்தடைந்தோம்.

கடலின் கரையைக் கிழித்து தண்ணீருக்குள் நாங்கள் இப்போ அணிவகுத்தோம். அவர்கள் லாம்புவெளிச்சத்தில் மோட்டர்களை ஏதோ செய்துகொண்டிருந்தார்கள். தாமதிக்கும் ஒவ்வொரு நிமிட மும் ஆபத்தானதாகவே இருந்தது. கடற்கரையோடு ஒட்டியதாய் இருக்கும் வீதியின் மீதே எங்கள் கண்கள் நீண்டுவிரிந்தன. தண்ணீரால் எமது கால்கள் விலங்கிடப்பட்டிருந்ததால், இப்போ

இராணுவம் ரோந்து வந்தால் நிலைமை என்ன என்ற பயம் இதயத்தைப் பிடித்து உலுக்கிக்கொண்டிருந்தது. பதிலேதுமற்று இதயம் வேகமாக அடித்துக்கொண்டிருந்தது. எம்மை இந்தக் கடல்நீருக்குள் நிற்கவைத்து அவர்கள் மோட்டர்களை தயார்ப் படுத்திக் கொண்டிருந்தார்கள். சுமார் அரைமணித்தியாலங்களை இப்படி நாம் கடந்தோம். பின்னர் வண்டி எம்மை பொறுப் பெடுத்து கரையிலிருந்து கடல்வெளிக்கு காவிச் சென்றது.

வண்டி நகர்ந்துகொண்டிருந்தது. சம்பாசணைகளில் இடையி டையே பாலனும் பங்கேற்றுக் கொண்டான். அவனது வயதை அவனது முகம் பதினைந்து என்பதை காட்டிக்கொடுத்துவிடும். வண்டியிலிருந்தவர்களில் அவன் ஒருவன்தான் தனது வீட்டாரின் அனுமதியுடன் புறப்பட்டவன். "சென்றுவா மகனே" என போர்க்களம் அனுப்பிய வீரத்தாய் என்றெல்லாம் சரித்திரங்களில் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அதை அன்றுதான் நான் நேரில் பார்த்தேன். மகனைப் பிரியும் மனக்களைப்பில் சோர்ந்து போனாலும் அதை மறைத்தபடி அவனது தாயார் நிற்க, அவனது தங்கைமார் சொம்பில் பூக்களுடன் படலைக்கு வெளியில் நின்று வழியனுப்பி வைத்தார்கள். நான் இதை எதிர்பார்க்கவில்லை. அதிர்ந்துபோனேன். இவர்கள் இந்தப் பிரிவை எப்படி தாங்கிக் கொள்கிறார்கள் என்ற கேள்வி என்மீது ஊர்ந்தது. அவனது அப்பா அன்று உடன் இல்லை. அவர் ஒரு பழைய மார்க்சியவாதி. ஆங்கிலத்தில் புலமைபெற்றவர். விவசாயி. லெனின் புத்தகங் களையெல்லாம் ஆங்கிலத்தில் வாசிப்பார். நிறைய வாசிப்புப் பழக்கம் கொண்டவர். அவருக்கு தனது மகனின் பிரிதல் தெரிந்தது தான். அதைப் பார்த்து சகித்துக் கொள்ளும் நிலையில் அவர் இல்லையோ தெரியவில்லை. அவர் அங்கு நிற்கவில்லை.

வண்டி மெதுவாகவே ஊர்ந்து கொண்டிருந்தது. வண்டியின் இரு கண்களாக முன்பக்கத்தில் நிற்கும் இளைஞனின் பார்வை சலிப்படையாமலே அந்த இருளினூடு எதையே தேடிக் கொண்டி ருந்தது. அந்த இரு கண்களும் அயர்ந்துவிட்டால் எல்லாமே முடிந்துவிடும் என்று எண்ணத் தோன்றியது. அவ்வளவு பொறுப்பையும் அந்த இளைஞன் தன்னால் இயன்றவரை ஒரு கணமும் அசட்டை செய்யவில்லை.

"தம்பியவை எங்கையெண்டாலும் கரும்புள்ளி தெரியுதா எண்டு எல்லாரும் எல்லாப் பக்கமும் வடிவா பார்த்துக் கொண்டி

ருங்கோ'' என்றான் ஓட்டி. எல்லோருமே எல்லாப் பக்கமும் பார்த்துக் கொண்டிருந்தோம். கரும்புள்ளி கண்களில் புலப்படுவது என்பது சாதாரணமான விடயமல்ல. அது கடல் பயணத்துக்கு புதிதானவர்களுக்கு அதுவும் புதிதுதான்.

''கரும்புள்ளி தெரியுதெண்டு நினைச்சுக் கொண்டு பார்த்தால் அது தெரியுது. இல்லை எண்டு நினைச்சுக்கொண்டு பார்த்தால் அது தெரியேல்லை''. சொல்லிச் சிரித்தோம். வண்டி பயத்தை விலக்கியபடி இரண்டு மோட்டர்களில் போய்க்கொண்டிருந்தது. மூன்றாவதை இப்போதும் பழுதுபார்த்துக் கொண்டிருந்தார்கள். கடல் அமைதியாயிருந்தது. அலைகள் இல்லை. கடலை மொய்த்திருந்த இருளை நாம் மெல்ல ஊடறுத்துச் சென்று கொண்டிருந்தோம். இரண்டு மோட்டர்களில் மட்டும் ஆடி யசைந்து கொண்டிருந்த வண்டியின் மற்றைய மோட்டரும் முரண்டுபிடிக்கத் தொடங்கியது. ஆட்களை பயம் அசைத்துக் கொண்டிருந்தது. பாதுகாப்பாய் இருந்த இருள் அச்சம் தரத் தொடங்கியது. ஆங்காங்கே சிலர் முணுமுணுத்துக் கொண்டி ருந்தனர்.

''இயக்கத்தின்ரை வண்டியெண்டால் இப்பிடி நடக்குமா? வாடகைக்குப் பிடிச்ச வண்டியிலை வந்ததாலைதான் இந்தச் சீரழிவு'' என தாழ்ந்த குரலில் சொல்லிக் கொண்டிருந்தான் யோகன்.

இளைஞனும் ஓட்டியும் மோட்டருடன் படாத பாடு பட்டுக் கொண்டிருந்தனர். ஓய்ந்துபோன மோட்டர்களை இயங்க வைப்பதில் வேகத்தோடும் பதட்டத்தோடும் போராடிக்கொண்டி ருந்தனர். எவருக்குமே என்ன செய்வதென்று தெரியவில்லை. இளைஞன் ஓட்டிமீது சீறிவிழுந்தான், ''நாங்கள்தான் போனாலும் பரவாயில்லை. இந்த இருபது உருப்படியளையும், அதுவும் இயக்கப் பெடியளை வைச்சுக்கொண்டு விளையாடேலாது'' என்றான்.

''வண்டியை கே.கே.எஸ் (காங்கேசன்துறை) க்குத் திருப்பு. அங்கை கனகன்ரை மோட்டரை வேண்டி மாத்திப்போட்டு வெளிக்கிடுவம்'' என்றான் இளைஞன். ஓட்டியும் என்ன முடிவை எடுப்பதென்று தெரியாமல் குழம்பிக்கொண்டிருந்தான். வள்ளம் கடலில் எஞ்சிய ஒரு மோட்டருடன் சேடமிழுத்துக் கொண்டி

ருந்தது. ஓட்டி யோகனை நெருங்கி அபிப்பிராயம் கேட்டான். யோகனையும் என்னையும் வடமராட்சிப் பொறுப்பாளர் அந்த வண்டியில் உள்ளவர்களுக்கு -எல்லோரும் உரிய இடத்தில் போய்ச்சேரும்வரை- பொறுப்பாளராக நியமித்திருந்தான். அது என்ன பொறுப்பு என எமக்கும் தெரிந்திருக்கவில்லை. நாம் இருவரும் இப்படியான கடல் பயண அனுபவம் அற்றவர்களாக இருந்ததால் சரியான முடிவை எடுக்க முடியாமல் குழம்பிப் போயிருந்தோம்.

“இப்ப நாங்கள் எவ்வளவு தூரத்திலை இருக்கிறம். நடுக் கடலுக்கு வந்திட்டமோ?”

“இல்லை தம்பியவை. நாங்கள் இன்னும் நடுக்கடலுக்கு வரயில்லை. நேவி திரியிற இடத்திலைதான் நிற்கிறம்”

இந்த வார்த்தைகள் முடிவைத் துரிதப்படுத்தின.

“கே.கே.எஸ் க்கே திருப்புங்க”

நேவி திரியிற இடம் என்ற ஓட்டியின் வார்த்தை எல்லோரையும் பயத்துக்கு உள்ளாக்கியிருந்தது. வண்டி கே.கே.எஸ் நோக்கி திருப்பப் பட்டுவிட்டது. நாம் ஆபத்தை நோக்கி போகிறோமா என்றிருந்தது. கரைப்பகுதி இலங்கை படையினரின் ரோந்து போதலில் தேய்ந்திருந்தது. மீண்டும் குழப்பம். வண்டி திரும்ப அக்கரை (இந்தியக் கரை) நோக்கித் திருப்பப்பட்டது. இப்படியே சில ஆபத்தான நிமிடங்கள் ஊசலாடிக் கொண்டிருந்தன. வண்டி ஊர்ந்துகொண்டிருந்தது. ஓட்டியும் மோட்டர்களை இயக்கிய இளைஞனும் மிக அங்கலாய்ப்புடன் மோட்டர்களை பழுது பார்த்துக் கொண்டிருந்தனர். அதில் அவர்கள் வெற்றியும் கண்டு கொண்டனர். ஒவ்வொன்றாக விரைவாக இரு மோட்டர்களும் உயிர்பெற்றன. எங்கும் ஒரே மகிழ்ச்சி, ஒரே உற்சாகம்.

ஓட்டி போத்தலை கையில் எடுத்துக் கொண்டான். மீண்டும் ஒரு குட்டிப் பிரசங்கம்.

“இனி பயப்படவே தேவையில்லை. நேவி பிடிக்கில் பிடிச்சுப் பார்க்கட்டும்”. மீண்டும் வாயில் ஊற்றி காலியாக்கினான். வண்டி இப்போ இக்கரையை விட்டு மறைந்துகொண்டிருந்தது.

சரியாக ஆறு மாதங்களுக்கு முன்னர் நான் மேற்கொண்டிருக்க

வேண்டிய பயணம் இது. இறுதிமுடிவுக்காக எனது பல்கலைக் கழக நண்பன் குமார் எனது வீட்டுக்கு வந்திருந்தான். எனது மூன்றாவது அக்காவுக்கு திருமணம் ஒன்றை பெரும் முயற்சி எடுத்து சாத்தியமாக்கியிருந்த நேரம் அது. அதுவும் நான் படித்து முடித்து, உழைத்து, வீடு கட்டித் தருவதாக ஒரு நம்பிக்கைப் பாலத்தில் வைத்து உடன்பாடாகிய கல்யாணம். இதுகுறித்து அவனுடன் உரையாடினேன். எனது குடும்பநிலை அறிந்தவன் அவன். "நான் இப்ப போறன். நீ பிறகு வா. கலியாணத்தை குழப்பிப்போடாதை" என சொல்லிச் சென்றான். பின்னரான காலத்தில் அவன் பலஸ்தீன பயிற்சிக்குப் போயிருந்தான் என்பதை பிறகு நீங்கள் அறிந்துகொள்வீர்கள். அவனை சந்திக்கும் சாத்தியம் வாய்க்க வேண்டும் என வளர்ந்த என் அவாவுடன் தொலைந்து கொண்டிருந்தேன்.

திடீரென ஓட்டி கத்தினான். "டேய் அந்தா ஒரு கரும்புள்ளி யடா. அடியடா எஞ்சினை". ஓட்டி சொன்னதால் எல்லோருமே அதை நம்பினோம். நரம்புகளில் விறுவிறுப்பு புகுந்து கொண் டது. இப்போ எல்லோருக்கும் கரும்புள்ளி ஒரு பிசாசுபோல் துரத்துவதாய் பிரமை ஊட்டியது. பிரமை உண்மையாய் உரு வெடுத்தது. நெருப்புப் பந்துகளாய் வண்டியை அண்மித்து செல்கள் விழுந்தன. இரண்டு மீற்றர் தூரம் தள்ளி ஒன்று விழுந்த போது நாம் மரணத்தை நெருங்கியிருப்பதாக உணர்ந்தோம். எல்லாம் முடிந்துவிட்டது என நான் நினைத்தேன். மூன்று எஞ்சின்களும் தமது முழு வலுவையும் காட்டத் தொடங்கின. வண்டி வெறிபிடித்த குழுமாடுபோல் ஓடியது. நீர்ப்பரப்பை பிளந்து கொண்டு விரைந்தது. இடையிடையே நீர்ப் பரப்பை விட்டு மேலெழுவதும் பொத்தென விழுவதுமாய் அது துள்ளிக் குதித்தது. அதன் கீழ்ச் சட்டங்களை கொம்பில் பிடிப்பது போல் நாம் பிடித்திருந்தோம். இடறுப்படாமல் குந்தியிருந்து பற்றினோம். எமை எத்தி எத்தி போட்டு அடித்து வலியூட்டியது. சிலர் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தார்கள். எதையும் சட்டை செய்யும் நிலையில் நாம் இல்லை. வண்டி பாய்ந்து ஓடிக் கொண்டிருந்தது. தீப்பந்துகள் இப்போ எமது வண்டிக்கு சற்றுத் தொலைவில் விழுந்தன. பிறகு அவை தூரத்தில் விழுந்தன. பின்னர் மறைந்துகொண்டிருந்தன. நாம் நடுக்கடலை இப்போ தாண்டிவிட்டிருந்ததை ஊகிக்க முடிந்தது. வண்டி இப்போ தனது கலகத்தை நிறுத்தியது. எஞ்சின்களின் வேகம் குறைக்கப்பட்டது. சிறைப்பட்டிருந்த மூச்சுக்காற்று வெளியே வந்து எட்டிப் பார்த்தது.

"இனி பயமில்லை. புள்ளி மறைஞ்சு போய்ச்சு. நாங்கள் இப்ப அக்கரை எல்லைக்குள்ளை வந்திட்டம்... பார்த்தியளா இப்ப காங்கேசன்துறை வெளிச்சவீடு மறைஞ்சு இப்ப அக்கரை வெளிச்சம் தெரியுது..." என்றெல்லாம் பிரசங்கம் செய்து கொண்டிருந்தான் ஓட்டி. எல்லோர் மனதிலும் இப்போ நிம்மதி குடிகொண்டது. உடல் வலிக்கத் தொடங்கியது. நாம் ஏறக்குறைய முற்றாக நனைந்திருந்தோம். கடல் வேலையின் ஆபத்தை நாம் உணர்ந்தோம். தரையில் எதிரிகளை எதிர்கொள்ளும்போது தப்பிப் போதலுக்கான சாத்தியத்தின் அளவு கடல்வேலையின்போது இருப்பதில்லை. வானிலிருந்து தொங்கவிடப்பட்ட நீர் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கும் ஆபத்தான விளையாட்டு இது. இந்தக் களம் அவர்களை போராளிகளாக்கிக் கொண்டிருக்கிறது நாமோ இனித்தான் பயிற்சி எடுத்து போராளியாவதற்கு போய்க் கொண்டிருந்தோம். கழக ஓட்டிகள் இவ்வாறே போராடிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் பாண்டி என்ற தோழர் அயராது இந்தக் களத்தில் வேலைசெய்து கொண்டிருந்தான். அவனுடைய பெயர் தெரியாத கழகத்தவர்களே கிடையாது என்று சொல்லலாம்.

நாம் வந்த இந்த வண்டி ஒரு மேலதிக ஏற்பாடுதான். வாடகைக்கு அமர்த்தப்பட்ட வண்டி. இருந்தாலும் ஒருவித அர்ப்பணிப்பு மனப்பான்மையின்றி இதுவும் சாத்தியமில்லை. அந்தளவில் அவர்களிடம் ஒருவித மதிப்பு இருந்தது. வண்டி இப்போ அக்கரையை அண்மித்துக் கொண்டிருந்தது. கடல் அலைகள் கரையை வாசித்துக் கொண்டிருந்தன. மௌனமாய் வழிந்தழிந்தன. பயம் முற்றாக அகன்ற நிலை. வண்டி கரையைத் தொட்டுக் கொண்டது. நெஞ்சளவு நீருக்குள் இறங்கினோம். எமது சொப்பிங் பை உடமை நனையாமல் காப்பாற்றிக்கொள்ள சரணடையும் கையுயர் கோலத்துடன் கரைசேர்ந்தோம்.

நாம் வந்து இறங்கும் கரை ஒரு இரகசியமான ஆள்நடமாட்ட மில்லாததாக இருக்கும் என்றுதான் நினைத்திருந்தேன். ஆனால் இது ஒரு சிறு துறைமுகம்போல் இயங்கியது. ஒரே சன நடமாட்டம். மீன்பிடி வள்ளங்கள் கடலோரத்தில் ஓய்வெடுத்தன. காற்று மீன் வாடையை முகர்ந்து சற்று போதையுற்றிருந்தது. எனது நாசிகளில் அது தன் போதையை ஊதியது. எனது உடற்களைப்பை அது மோகித்துக்கொண்ட போது முற்றிலும் புதிதான ஒரு சூழலினுள் நாம் நின்றோம். அப்படி உணர்ந்தேன். எதையும்விட தமிழ்ப் பேச்சுகள் புதுசாயிருந்தன. இயல்பாய்

விளங்கிக்கொள்ளும் நிலையில் நான் இல்லை. ''விடுதலைப் புலிங்க வந்திருக்கிறாங்க..'' என்றபடி எம்மைச் சுற்றி சிறுகூட்டம் கூடியது, எல்லா இயக்கத்தையுமே விடுதலைப் புலி என்றுதான் அவர்கள் சொல்வது வழக்கம் என்று நான் அதுவரை தெரிந்து வைத்திருக்கவில்லை. நாம் ஐயருடன் நடந்துகொண்டிருந்தோம். அவர்தான் கரையில் பொறுப்பாக இருக்கிற கழகத் தோழர். ''ஒருத்தரும் ஒருத்தருக்கும் சொந்தப் பெயரோ சொந்த இடமோ சொல்லக்கூடாது'' என்கிறார் அவர்.

கடற்கரைக் குடிசையொன்றை அடைகிறோம். நான்கு அடி உயர படலை. குனிந்தபடி உள்ளே செல்கிறோம். பசி எம்மை துன்புறுத்தியது என்றுகூட சொல்லலாம். ஐயர் அது பற்றி ஒன்றும் பேசுவதாயில்லை. யாரும் வாய் திறப்பதாயு மில்லை. பெரும்பாலும் ஒருவரையொருவர் தெரியாது. அதைவிட ''விடுதலைக்கு போராட வந்திட்டாங்கள்... ஒரு வேளைக்கு பசிகிடக்க மாட்டாங்களோ'' என்று ஐயரோ அல்லது வந்தவர்களில் யாராவதோ சொல்லி விடவும் கூடும் என்ற பயத்தில் நாம் அப்படி இருந்தோம் என்றும் எடுத்துக் கொள்ளலாம். எடுத்ததிற்கெல்லாம் இந்த ''விடுதலைக்கு வந்தால்..'' என்ற ஆயுதம் ஏற்கனவே கழகத்தில் பயன்படுத்தப் பட்டு வருவது வழக்கம். அந்த மொட்டை அரிவாளை காணும் அவா எனக்கு இருக்கவில்லை.

''எல்லாரும் அங்கை சாப்பிட்டுட்டுத்தானே வந்திருப்பியள்'' என்றார் ஐயர்.

பிறகென்ன, படுத்துறங்குவதுதான் மிச்சமாயிருந்தது. குடிசை யின் மூலையில் இருந்த மண் பானைக்கு உள்ளிருந்து நீரை அள்ளிப் பருகினேன். இதமாக இருந்தது. ஓய்வுக்காகவும் உறக்கத் துக்காகவும் என் உடல் மன்றாடியது. நாம் பாயின் கிழிசல்களை மறைத்தபடி கிடந்தோம். பூமி அதிர்ந்திருந்ததோ இல்லையோ, யானை ஏறி மிதித்ததோ இல்லையோ என்பது தெரியாது. வண்டி எம்மைப் பிடித்து உலுப்பிய உலுப்பலில் எலும்புகள் இடம்மாறியதுபோல் உடல் வலித்தது. தூக்கத்துள் அமிழ்ந்தோம். அதிகாலை ஆகியிருக்க வேண்டும். ஐயர் எமது தூக்கத்தை உடைத்தெறிந்தார்.

''எல்லாரும் எழும்புங்கோ, எழும்புங்கோ..
பஸ் பிடிக்கோணும்''

அடுத்தது என்ன. தெரியாது. ஐயருடன் நடந்தோம். ரீக்கடையில் எமக்கு ரீ தரப்பட்டது. பஸ் வந்ததும் ஏறிக்கொண்டோம்.

"என்னா சார்... பசங்க வந்திருக்கிறாப்ல... ஒரத்தநாடு தானுங்களே..." என்றார் பஸ் நடத்துனர் (கண்டெக்ரர்). ஐயர் அளவாகத் தலையசைத்தார்.

பஸ்ஸின் இருபக்கமும் கண்ணாடி இல்லாத திறந்த ஜன்னல் களினூடு காற்று சுகவாசம் செய்தது. உயிரில் இன்னமும் இளமை வளர்ந்தது. இப்போ வயற்பரப்பினூடு பயணப்பட்டுக் கொண்டி ருந்தோம். அந்தமில்லாத வயல்வெளி. சோர்ந்திருந்த உடல் பசுமையின் குளிர்ச்சியில் செழுமைபெற்றது.

நேரம் பத்து மணியைத் தாண்டியிருந்தது. நாம் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டதாக சைகை தரப்பட்டது. அது ஒரு சிறு நகரம் போல் காட்சிதந்தது. தெருவின் இரு கரைகளும் கடைகளால் வரப்பிடப்பட்டிருந்தன. மக்களின் வீதிக் குறுக் கறுப்புகளைக் காண சற்று ஆச்சரியமாகவே இருந்தது. அது ஒரு தெரு என்ற நினைப்பு அவர்களுக்கு இம்மியும் இருப்பதாகத் தெரியவில்லை. தாறுமாறாக நடந்து கொண்டிருந்தார்கள். கோபத்தில் அலறுவது போன்று வாகனங்களின் ஒலியெழுப்பி (கோர்ண்) காற்றை உலுக்கிக்கொண்டிருந்தது. எல்லாமே அமைதியை விரட்டி நின்றன. நாம் வீதியைக் கடந்து எதிரேயுள்ள ஒழுங்கையினுள் இறங்கினோம். அந்தக் கட்டடத்தை (மொட்டை மாடியை) அடைய அதிக நேரம் பிடிக்கவில்லை. ஒரு பெட்டிவீடுபோல் அழகுணர்ச்சியற்று குந்தியிருந்தது அது.

வாசலில் ஓர் இளைஞன் நாற்காலி ஒன்றில் உட்கார்ந்திருந்தான். கையில் ஒரு கொப்பி, தலையில் ஒரு தொப்பியுடன் அவன் இருந்தான். மொட்டை மாடியில் நின்றவர்கள் தமக்குத் தெரிந்த யாராவது வந்திருக்கிறார்களா என்ற ஆவலில் முந்தியடித்துக் கொண்டிருந்ததாக எனக்குப் பட்டது. சுமார் இருபது பேர்வரை நின்றார்கள். நானும் தெரிந்த முகங்களை வாஞ்சையுடன் தேடி னேன். யாரும் இல்லை. வாசலில் ஒரு மோட்டார் சைக்கிள் நீல 'பிளாஸ்ரிக்' விரிப்பினால் மூடியபடி கிடந்தது. அந்தக் கட்டடத் தின் கீழ்வாயில் திறந்திருந்தாலும் சற்று இருள்மூடிக் கிடந்தது. நாம் பத்தொன்பது பேரும் வரிசையாக நின்றோம். வாசலில் நின்ற இளைஞனின் கையிலிருந்த கொப்பியை வாங்கியபடி சிரிப்பு மறந்த முகத்துடன் ஒரு மெலிந்த உருவம் எம்மிடம் வந்தது.

“எல்லாரும் உங்கடை சொந்தப் பெயரைச் சொல்ல வேண் டாம். உங்களுக்கு ஒரு கழகப் பெயரைச் சொல்லுங்கோ. இனி உங்களுக்கு இந்தப் பெயர்தான். மறந்தும் உங்கடை சொந்தப் பெயரை ஒருத்தருக்கும் சொல்லக்கூடாது. சரிதானே..!” இந்த அறிமுக உரையுடன் புனைபெயர்களை கேட்டு எழுதத் தொடங்கினார். வரிசையில் யோகனுக்குப் பின் நான் நின்றேன். எனக்குப் பின் பாலன் நின்றான். நாம் மூவரும் சேர்ந்தே இருந்தோம். திரிந்தோம். அந்த தாடி வளர்த்த இளைஞன் எமது சக பயணியாக வந்திருப்பதை சரியாக அப்போதான் கவனித்தேன். கஸ்ரோ என அவன் தனது பெயரை மாற்றிக் கொண்டான்.

முடிந்தால், எனது முற்றத்து வேம்பிடம் என்னை இங்கு கண்டதாக போய்ச் சொல்லிவிடுங்கள். இரு கைகளாலும் கட்டிப் பிடிக்க முடியாத அடியை கொண்டது அந்த மரம். இயற்கையின் மீதான காதலை அது எனக்கு ஊட்டியது. எத்தனை சந்ததிகளைக் கண்டிருக்கும். எத்தனை கதைகளை அது கேட்டிருக்கும். இப்போ எனது பிரிவை தனது வெளவால் கூட்டத்திடம் அது சொல்லி வாடிப்போயிருத்தல் கூடும்.

## 5

ஆனந்தன், ரகு, கரன் மூவரும் வரிசையாய் வெளிப்புறத்தில் சுவரை ஒட்டியபடி இருந்த படிக்கட்டினூடு கட்டடத்தின் மொட்டை மாடியை அடைந்தார்கள். மொட்டைமாடி என்ற கட்டட அமைப்புமுறை ஈழத்து வீடமைப்பு முறையில் புதிதான விடயம் என்பதால், இந்தக் கட்டட முழுமைக்கும் எம்மவர்கள் மொட்டைமாடி என்று பெயரிட்டிருக்கலாம். கட்டடத்தின் மொட்டை மாடிமேல் கிடுகுப் பந்தல் போடப்பட்டிருந்தது. ஒரு மூலையில் 2,3 பேர் தையல் வேலை செய்துகொண்டிருந்தார்கள். அவர்களின் அருகில் கமாண்டோ சீருடைக்கான துணி அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அவர்கள் அதை சீருடையாக தைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் அந்தத் துணியில் ஒரு ‘சேர்ட்’ தைத்துப் போட்டிருந்தான். தலையில் தொப்பி. அதுவும் அதே துணியில்தான். காதில் பென்சில் ஒன்றைச் சொருகியபடி இருந்த அவன் ஏதோ அவசர பணியில் இருப்பதுபோல் நடந்து கொண்டான். புதிதாக வந்திருப்பவர்களை அவன் சட்டை செய்த தாகத் தெரியவில்லை, அல்லது அப்படி நடித்தான்.

கொட்டிலில் விரிக்கப்பட்டிருந்த புற்பாய்களில் புதியவர்கள் குந்தினார்கள்.

"தளத்திலை அரசியல் வகுப்புகளின்போது சனத்துக்கெல்லாம் 5000 தொடக்கம் 6000 பேர்வரையிலை றெயினிங் எடுக்கிறாங்கள் எண்டு பிரச்சாரம் செய்தம். எங்கடை நம்பரைப் பார்த்தால் யோசனையாயிருக்கு. இவ்வளவு சனம்தான் கழகத்திலை றெயினிங் எடுத்திருக்கா".

ரகுவின் நம்பர் 1548. இதுகூட 400 இலிருந்துதான் ஆரம்பித்திருந்த ரகசியம் அப்போது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. கழகத்தில் ஆரம்பத்தில் இணைந்தவர்களுக்கு இலக்கம் கொடுக்கப்படாமல் இருந்ததால் அவர்கள் பெயரில் முதல் 400 இலக்கங்களும் குத்துமதிப்பாக ஒதுக்கப்பட்டிருந்தன என்பது அவர்களது 'ஞாயமாக' இருந்ததை ரகு பின்னர் அறிந்துகொண்டான்.

மொட்டைமாடியின் கீழ்ப்புற அறைகளில் ஒன்று "அனைத்து முகாம் பொறுப்பாளர்" என்ற பெயர்ப் பலகையைத் தாங்கி நின்றது. மற்றைய ஓரிரு அறைகள் மற்றும் முன்கூடம் எல்லாமே முகாம்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களினால் நிரம்பி வழிந்தது. சங்கக்கடை வாடை அடித்தது.

வெளிவாசலின் உட்புறத்தில் மூடப்பட்டிருந்த மோட்டார்ச் சைக்கிள் யமகா400- வகையைச் சேர்ந்தது. அது பழுதுபட்டு நின்றது. இது "ரெலா" (TELA) இயக்கம் இலங்கையில் கடத்திய வாகனம். இப்போ இவர்களிடம் இருந்தது. அதற்கு அருகில் ஒரு நீலநிற ஹொண்டா மோட்டார் சைக்கிள் ஒன்று நின்றது. அதைத் துடைக்கவில்லை என ஓர் இளைஞன்மீது சினந்து விழுந்தான் ஒருவன். கொலிவூட் படங்களில் வருவதுபோன்று தலையில் ஒரு கவ்போய் தொப்பி. இடுப்பில் ஒரு பட்டை. கரகரத்த குரல். இளைஞன் முழந்தாளால் நடந்தானா என்பதை ரகு சரியாகக் கவனித்திருக்கவில்லை. இப்போ வியர்க்க விறுக்க துடைத்துக் கொண்டிருந்தான் இளைஞன். இந்த கவ்போய் தமிழரசுக் கட்சியின் தலைவர் செல்வநாயகத்திற்கு கார்ச் சாரதியாக இருந்தவர் என்றளவில், அவரைப் பற்றி ரகு வைத்திருந்த பிம்பம் பிழைத்துப் போனது. வங்கிக் கொள்ளையொன்றில் ஈடுபட்டு தப்பிக் கொண்டவர். மலையகத்தில் வைத்துப் பிடிபட்டவர். பின் மட்டக்களப்புச் சிறையுடைப்பில் தப்பிவந்தவர் என்றெல்லாம்

அவரைப் பற்றிய ஒரு பரபரப்பான அறிமுகம் ரகுவிடம் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருந்தது.

யாரோடு எதைப் பேசலாம், எதைப் பேசக்கூடாது என்றெல்லாம் ரகுவை எதுவோ பயமுறுத்திக் கொண்டிருந்தது. எல்லாவற்றையும் வார்த்தைகள் கழன்ற மௌனத்தால் எதிர்கொண்டிருந்தான் அவன். நீ இப்போ யாராக இருக்கிறாய் என அவனது மனம் அவனை வினவிக்கொண்டிருந்தது. வெறுமையான பாதங்களோடு மொட்டைமாடி படியேறிய ரகு மற்றவர்களுடன் இப்போ இராணுவ சப்பாத்து அணிந்த பாதங்களோடு கீழிறங்கிக் கொண்டிருந்தான். கஸ்ரோ தனது ஒவ்வொரு அடியையும் பார்த்துப் பார்த்து இறங்கி வந்து கொண்டிருந்தான்.

மொட்டை மாடி கட்டடத்துக்கு அருகில் வீடுகள் இருந்தன. இளமையான வேப்பமரமொன்றின் நிழல் கேற்றின் மீது விழுந்து கொண்டிருந்தது. அதன் அடியில் குப்பைகள் வீசப்பட்டிருந்தன. கன்றுப்பருவ மாடு ஒன்று அந்த குப்பையை கிளறி கிடைப்பதை மென்றுகொண்டிருந்தது. சிவப்பு மண் ஒழுங்கை கிழடுதட்டிப் போயிருந்தது. ஒரு சிறுமழையே அதை வெற்றிகொண்டுவிடும் போலிருந்தது.

இரவுப்பொழுதில் அவர்கள் தயாரானார்கள். எல்ப் ரக ட்றக் வண்டியில் அவர்கள் ஏறிக்கொண்டனர். சாரதி கவ்போய்தான். அந்தச் சாமப் பொழுதின் பேயமைதியை இழுத்தெறிந்தபடி வெறிச்சோடியிருந்த வீதியை உரசியடி வாகனம் பறந்தது. ஒரு தாக்குதலின் பின்னான தப்பியோடலில் ஏற்படும் விறுவிறுப்பை அநாவசியமாக வாகனம் எடுத்திருந்தது. கவ்போய் எதிர்பார்த்தது போலவே அவரது சாரதித்துவ சாகசம் ரகுவின் மனதின் ஆழம்வரை இறங்கித்தான் போயிற்று.

இருளில் கைவிடப்பட்ட நகரத்துள் அவர்களின் வாகனம் திசையறியாமல் ஓடுவது போல் ரகு உணர்ந்தான். மெயின் றோட்டிலிருந்து திரும்பி குறுக்கு வீதி, பின்னர் மணல்பாதை காட்டினூடான ஒற்றையடிப் பாதை என தனிமையான இயற்கைப் படுக்கையினுள் வாகனம் அமைதியடைந்து மெதுவாகச் சென்றது. முகாமை நெருங்குவதாக ரகு கற்பனை பண்ணிய கணங்களில் அவனது எண்ணங்களும் தாறுமாறாக பிரிவதும் சேர்வதுமாக இயங்கின. குழந்தைத்தனமான சிந்தனையாகவும் அது இருக்க

லாம். "முகாமிலை வெடிச் சத்தம் கேட்கும்... மிருகங்கள் இருக்கிற பெரிய காடாகத்தான் இருக்கும்..." என்றெல்லாம் அவை ஓடித்திரிந்தன. சிறு வெளியொன்றைத் தாண்டி மீண்டும் மரக்கூட்டங்களினூடு வாகனம் சென்றதும் அது தனது வேகத்தை மிகவும் குறைத்துக் கொண்டது. முகாம் நெருங்குகிறது என்பதை ஊகித்துக் கொண்டான் ரகு. திடீரென உரத்த சத்தமொன்று கேட்டது.

"ஹோல்ற்! ஹோல்ற்!"

ட்றக்கின் லைற் வெளிச்சம் நின்றது. நடுநிசியின் ஆழ்ந்த தூக்கத்தை பிய்த்தெறிந்து திடுதிடுப்பென எழுந்தது சப்பாத்துச் சத்தம். திடீரென இருவர் ட்றக்கின் இரு பக்கங்களிலும் தோன்றி னார்கள். தலையில் தொப்பி. கட்டைக் காற்சட்டை. பெனியன். இவைகளைவிட அவர்களின் கையில் ஏதோவொன்று தெரிந்தது. அந்த இருட்டில் அதை ரகுவால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. எஸ்.எம்.ஜி யாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணினான் அவன். அவர்கள் இருவரும் ட்றக்கினுள் -புதிர்களுள் விடப்பட்டிருந்த- புதியவர்களை நோட்டம் விட்டுவிட்டு கவ்போயுடன் ஏதோ தாழ்ந்த குரலில் பேசினர். கடவை (பரியர்) திறந்துகொண்டது. ரகுவின் பார்வை கட்டறுத்து ஓடியது. நிமிர்ந்து பார்த்தான். வாசலிலிருந்த உயரமான பரணில் ஒருவர் அந்த ஏதோவொன்றை நீட்டியபடி 'அலேட் பொசிசனில்' நின்றார். வாகனம் முகாமினுள் ஊர்ந்து சென்றது.

சுமார் பத்து கொட்டில்கள்வரை சுற்றிவர தனித்தனியாக எல்லாப் பக்கமும் இருந்தன. நடுவில் ஒரு பெரிய வெளி. அதன் மத்தியில் உயரமான கம்பமொன்று அடியில் இயக்கக் கொடியை சுற்றி வைத்தபடி பட்டமரம்போல் நின்றது. சுற்றிவர அடர்ந்த மரங்களின் நடுவே முகாம் தனித்துக் கிடந்தது. புதியவர்கள் இறங்கி கூட்டாக நின்றார்கள். புதிரொன்றை அவிழ்க்கத் தொடங்குவதுபோல் ரகு நிலையற்று தவித்தான். கொட்டில்களினுள்ளிருந்து முணுமுணுப்புகள் அதிகரித்துக் கொண்டிருந்தன. மெல்லமெல்ல வெளியே வந்த அவர்கள் புதியவர்களை நோக்கி வர முயற்சிப்பதும் அதை கடமையில் (டியூற்றியில்) நிற்கும் சிலர் தடுக்க முனைவதுமாக இருந்தது. புதியவர்கள் அனைவரும் நடுமுற்றத்தில் நின்ற கம்பத்தின் அருகே வரிசையில் நிற்கவைக்கப் பட்டார்கள். தற்காலிகமான லைற் வெளிச்சத்தில் அவர்கள் நின்றார்கள். சுற்றிவர தமக்குத்

*தெரிந்தவர்களைத் தேடி முகாம்வாசிகள் சிறு அடிகள் முன்வைத்து முண்டியடித்தது ரகுவுக்குத் தெரிந்தது.*

*"அடேய் எங்கடை ரவியண்ணை, பாலன் ஆக்களும் வந்திருக்கிறாங்கள்" என்ற குரல் கேட்டது. தோழர் ரகுவும் தோழர் கரனும் வந்திருக்கிறாங்கள் என அந்தக் குரலை முகாம் நாளை திருத்தி சொல்லிக்கொடுக்கும் என்பதை நீங்கள் சரியாகவே ஊகித்திருக்கவும் கூடும். அந்தரித்த ரகுவின் ஆசைக்கு கொழுகொம்பாக அந்த அறிமுகக் குரல் கிடைத்தது. "யாராக இருக்கும்?... நான் அனுப்பிய ஊர்ப் பெடியளாகத்தான் இருக்கும்" என ரகு சரியாகவே ஊகித்துக் கொண்டான்.*

*தொங்கிக்கொண்டிருந்த லைற் இன் கீழ் இரு இளைஞர்கள் நின்றனர். இவர்களில் ஒருவன் கையில் ஒரு குறிப்பெழுதும் கொப்பியுடன் நின்றான். இவன்தான் மொட்டைமாடியில் வைத்து புதியவர்களுக்கான கழகப் பெயர்களை எழுதியவன். மற்ற இளைஞன் மெல்லிய உருவம். சரிவாக வாரிவிடப்பட்ட கட்டையான தலைமயிர். சிரித்த முகம். மெல்லியதாக மீசை அரும்பு விட்டிருந்தது. எல்லோருடனும் சிரித்தபடி அன்பாகக் கதைத்தான். இருவருமே ஏதோ பொறுப்பிலுள்ளவர்களாகத்தான் இருக்கும் என ரகு ஊகித்தான். புதியவர்கள் வீட்டிலிருந்து அப்பாவித்தனமாக செலவுக்குக் கொண்டுவந்த காசுகள், உடுப்புகள் போன்ற கொசுறுச் சொத்துகளின் விபரம் பதியப் பட்டன. ஒரு சரம் (லுங்கி), ஒரு சேர்ட் மற்றும் பென்ரர்கள் என்பன மட்டுமே வைத்திருக்க அனுமதிக்கப்பட்டது. அதைவிட மொட்டைமாடியில் தந்த சாப்பாட்டுக் கோப்பை, அலுமினிய டம்ளர், கொப்பி, பேனை என்பன அங்கீகரிக்கப்பட்ட சொத்தாக அவர்களிடம் இருந்தன.*

*"இந்த உடுப்புகள் எல்லாம் உங்களுக்கு இஞ்சை தேவைப் படாது. அவையெல்லாம் உங்கடை பெயரிலை பத்திரமா இருக்கும். இஞ்சை ஸ்ரோரிலை கிடக்கும். பிறகு நீங்கள் போகயிக்கை (எங்கை போகயிக்கை என்று அவர்களுக்குத் தெரியாமலிருந்தது) அவையெல்லாம் திருப்பித் தருவம். காசு கழகத்துக்கு போய்ச் சேரும்...சரிதானே..! மற்றது நீங்கள் வந்த அலுப்பு. கைகாலிலை உரசல் காயங்கள் இருக்கும். அதாலை 3 நாள் உங்களுக்கு லீவு. நல்லா ஓய்வெடுங்கோ" என ஒரு விளக்கத்தை சிரிப்பு மறந்த உருவம் கொடுத்தது. விறைப்பான முகம் கொண்ட அவர் யார்,*

அருகில் நின்ற மீசை அரும்புவிடுகிற சிரித்த முகமுடைய மற்றவர் யார் என்பதையெல்லாம் அவர்கள் அறிமுகப்படுத்தவில்லை. முதுகுக்குப் பின்னாலான அறிமுகம் அவர்களின் தற்பெருமையை உயர்த்திக் கொள்ள உதவும் என நினைத்தார்களோ தெரியாது. சோசலிச தமிழீழத்தின் தோழமை இவ்வாறு தான் தொடங்கியது. அந்த சிரிப்பு மறந்த உருவம் பயிற்சிக்கான பொறுப்பாளர் பாண்டி என்பதையும் அந்த அரும்பு மீசைக்காரர் முகாம் பொறுப்பாளர் மதன் என்பதையும் உங்களுக்கு இந்த இடத்தில் அறிமுகப்படுத்தி விடலாம்.

மூன்று நாள் லீவு அதிகளவு சந்தோசத்தை அவர்களுக்குக் கொடுத்திருந்தது. உடம்பில் எலும்புகள் இடம்மாறியிருந்தது போல் வலியை உணர்ந்திருந்தார்கள் புதியவர்கள். அத்தோடு கடல்நீருக்குள் காலேகியபோது கடற்பாறைகளின் மோதலால் அவர்களது விரல்கள் புண்பட்டுப் போயிருந்தன.

“ஏன்ரா எங்கடை உடுப்புகளையும் வாங்கியிட்டாங்கள்?”

“எனக்கும் விளங்கயில்லை” என்றான் ரகு.

அவை பயிற்சியின்போது தேவையில்லை என்பதும், அவற்றை தம்முடன் அவர்கள் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு வசதியில்லை என்பதும் ஏற்கப்பட வேண்டிய காரணமாக இருந்த போதும், முகாமைவிட்டு தப்பியோடுவதற்கு காசும் உடுப்பும் உதவி விடலாம் என்பதால் அவற்றை உருவிய கள்ளத்தனத்தை அவர்கள் அறிந்திருக்கவில்லை. அவர்களின் எந்த உடமையும் ஒருபோதும் அவர்களுக்கு திரும்ப வந்துசேராது என்பதையும் அவர்கள் அறிந்திருக்க நியாயமில்லை.

“காம்ப் ஒழுங்குவிதியளை கவனமாய் கேளுங்கோ. காலமை நாலே முக்கால் மணிக்கு விசிலடிப்பம். பிறகு அஞ்சு நிமிசத்தாலை இன்னொரு விசில் அடிப்பம். முதல் விசிலுக்கு எழும்பாத ஆக்கள் கட்டாயம் இந்த விசிலுக்கு எழும்பியிடோணும். பிறகு ரொயிலற்றுக்கு இருக்கப் போறியள். பக்கத்திலை கொஞ்சம் தள்ளிப் போய் சவுக்கம் காட்டுக்கை இருக்கோணும். காலமைக்குப் பழைய ஆட்கள் போவினம். அவையள் இடத்தைக் காட்டுவினம். முகம் கழுவிற இடமெல்லாம் அவையள் காட்டுவினம். பிறகு அய்ஞ்சே காலுக்கு இன்னொரு விசில் அடிப்பம். கோப்பி குடுபடும்.

கியூவிலை நிண்டு வாங்கோணும். அதுக்குப் பிறகு அய்ஞ்சே முக்காலுக்கு விசிலடிக்கும். எல்லாரும் பரேட் ஆகோணும். கழகக் கொடி ஏத்துப்படும். ஆறு மணிக்கு கிறவுண்ட்ஸ் இலை றெயினிங் தொடங்கும். மிச்சத்தை நாளைக்குச் சொல்லுறம். பழைய ஆட்களும் சொல்லுவினம்தானே. சரி, இப்ப எல்லாரும் அலுப்பிலை இருக்கிறியள். போய்ப் படுங்கோ. மூன்று நாளும் நீங்கள் விசிலடிக்கயிக்கை எழும்பத் தேவையில்லை. ஆனால் கொடி ஏத்தயிக்கை எல்லாரும் எழும்பி நிக்கோணும். சரிதானே... இப்ப உங்கடை பிளட்டூன் அதுதான்''. உணவுக் களஞ்சியத்துக்கு (ஸ்ரோருக்கு) அருகில் இருந்த கொட்டிலைக் காட்டினான் பாண்டி.

அவர்கள் தமது உடமைகளோடு கொட்டிலுக்குப் போனார்கள். மூலையில் சாய்த்து அடுக்கிவைக்கப்பட்டிருந்த புறபாய்களை ஒவ்வொருவரும் எடுத்துக் கொண்டார்கள். புழுதித் தரை. இலாவ கமாக விரித்து படுக்கைக்கு ஆயத்தமானான் ரகு. ஒளித்துநின்ற உறக்கம் தாவி வந்து அவனை இறுக அணைத்துக் கொண்டது. பிறகு அவனுக்கு எதுவுமே தெரியவில்லை. கனவும் வரவில்லை.

விசில் சத்தம் காதோரக் காற்றை உலுக்கிவிட அது தூக்கத்தை அரைகுறையாய் உதிர்த்துப் போட்டது. நாலேமுக்கால் விசில் அது. எல்லா கொட்டில்களிலும் லைற் வெளிச்சம் தெரிந்தது. சந்தடிகள் ஆரம்பித்தன. புதியவர்களின் கொட்டிலில் எல்லோ ருமே படுக்கையில்தான் கிடந்தார்கள். திடீரென லைற் வெளிச்சம் பரவியது. தோழர்கள் இந்திரன், சந்திரன் இருவரும் அங்கலாய்ப்பாய் நின்றார்கள். ரகுவுக்கு மகிழ்ச்சி, உற்சாகம் எல்லாம் பிறந்தன. பற்கள் வெளியே தெரியச் சிரித்தான் சந்திரன். துடிதுடிப்பானவன் அவன். எதிலும் வேகமாகச் செயற்படுவான். இந்திரனின் முகம் அப்பாவித்தனத்தால் செதுக்கப்பட்ட ஒன்று. வேகம் இருக்காது.

இவர்கள் இருவரையும் ரகுதான் பின்தளப் பயிற்சிக்கு அனுப்பி வைத்திருந்தான். அவர்களைச் சந்தித்தது அவனை மகிழ்ச்சிப் படுத்தியது. ஏதோதோ நிறையக் கதைகள் பரிமாறிக் கொள்ளப்பட வேண்டும் என்ற அங்கலாய்ப்பானது வார்த்தைகளை குறுக்கும் நெடுக்குமாக அறுத்துக் கொட்டியது. அவர்களது ஆதங்கத்தை காற்றை கிழித்தெறியும் அந்த விசில் எங்கே புரிந்துகொள்ளப் போகிறது. அது மீண்டும் அலறியது.

“பிறகு வாறம். கனக்கக் கதைக்க இருக்கு”

“ஒன்பது மணிக்கு வருவம்” என்றபடி அவர்கள் சென்றனர்.

பயிற்சி பற்றி அறிய வேண்டும் என்ற ஆவல் ரகுவை துருத்தியபடி இருந்தது. அவனது மெலிந்த உடல்வாகு இதை அறியும் முனைப்புடன் ஓர் ஓரத்தில் நின்றிருக்கலாம். தாக்குப் பிடித்தேதான் ஆக வேண்டும் என்ற முனைப்பே மனதின் நடுமுற்றத்தில் உறுதியாக நின்றது. உடற்களைப்பின் மேல் கோழித்தூக்கம் ஏறிநின்றது. மீண்டும் விசில் சத்தம். கொடி ஏற்றலுக்கானது அது. தரப்பட்ட உத்தரவுப்படியே ‘பயபக்தியுடன்’ எழுந்து நின்றார்கள். ஒவ்வொரு பிளட்டுன் அணியும் தனித்தனியாக பெட்டி வடிவில் ஒரே நிரையில் அணிவகுத்து நின்றன. மதன், பாண்டி, பிளட்டுன் சார்ஜன்கள் எல்லோரும் கொடிக்கம்பத்தை நோக்கி இராணுவ விறைப்புடன் நடந்து செல்கிறார்கள். கொடிக் கம்பத்திற்கு சுமார் இரண்டு மீற்றர் தூரத்தில் அவர்கள் வரிசை கட்டி நின்றபின், பாண்டியும் மதனும் கொடிக்கம்பத்தின் அருகில் அதே விறைப்புடன் செல்கிறார்கள். இப்போ எல்லோரும் சல்யூட் அடித்தபடி நிற்க மதன் கழகக் கொடியை ஏற்றினான். அந்த ஒற்றைச் சிறகுக் கொடி கம்பத்தின் நுனியில் தொங்கியபடி பறந்துகொண்டிருந்தது. சங்கிலியால் பிணைக்கப்பட்டு சிறைப்பட்டிருக்கும் உலக உருண்டையை ஒரு சம்மட்டி ஓங்கி அடிக்க, அந்தச் சங்கிலி நொருங்க, விடிவெள்ளி பிரசவிப்பதுபோல அந்த சிவப்பு நிறக்கொடி காற்றில் மெல்ல அசைந்து கொண்டிருந்தது. வெக்கை புழுதி ஆவியாக வெளியே றியது. பச்சைப் புல் பூண்டொன்றும் முகாம் முற்றத்தில் இல்லை. மரங்கள் இல்லை.

பயிற்சி மைதானத்தை நோக்கி எல்லோரும் அணிவகுத்துச் சென்றார்கள். இப்போ முகாம் கிட்டத்தட்ட வெறுமையாக இருந்தது. புதிய தோழர்கள் மற்றும் கடமையில் (டியூற்றியில்) நிற்பவர்கள், இன்றைய குசினிமுறைக்காரர்கள், சுகவீனமடைந் திருப்பவர்கள் என மிகச் சிறு பகுதியினரே முகாமினுள் எஞ்சினர்.

முகாமின் பின்பக்க வழி அருகிலிருந்தது. அதில் அமைக்கப் பட்டிருந்த பரணின் கீழ்ப் பகுதியில் தடியினால் சரிசெய்யப் பட்டிருந்த இருக்கையொன்றில் இளைஞன் ஒருவன் கடமையில் இருந்தான். கையில் ஒரு கொப்பி. அருகில் ஒரு சவுக்கம் கொட்டன். புழுதி படிந்திருந்த காற்சட்டை. புழுதி குடித்து

வெண்ணிறம் மங்கிப்போன பெனியன். இரண்டு முன்பக்க தோள் பட்டையிலும் கிழிசல் இருந்தது. தலையில் காக்கித் துணியிலான ஒரு தொப்பி. கழுத்தில் நூலில் தொங்கியது விசில் ஒன்று.

“டியூற்றி! நம்பரை எழுது” என்றார் அவர்களை அழைத்துச் சென்ற தோழர்.

“தோழர் உங்கடை நம்பர் என்ன?”

“1548”

“சைன் பண்ணோணுமா தோழர்? “

“இல்லை தோழர். திரும்பி வரயிக்கைதான் சைன் பண்ணோணும்”

ஒவ்வொருவராக தமது இலக்கத்தைக் கொடுத்துவிட்டு வெளியே வருகிறார்கள். பெரிய வைக்கோல் கும்பி. அருகில் கைப்பந்தாட்ட மைதானம். நீண்டு விரிந்து கிடந்த வயல் வெளியின் வியாபிப்பில் அவர்கள் நின்ற இடம் குறுகித் தெரிந்தது. சவுக்கு மரத்தின் முரட்டுப் பச்சை இலைகளையும், அது சிறைப்பிடித்து வைத்திருக்கிற வெப்பக் காற்றையும் இந்த வயல்வெளி பசுமையாலும் இதமான குருத்துக் காற்றாலும் கேலிசெய்துகொண்டு இருந்தது. முகாமை ஒட்டி சவுக்கம் தோப்பு நாற்புறமும் நீள வளர்கிறது, அல்லது சவுக்கம் தோப்பை சதுரமாய்க் குடைந்து அதற்குள் முகாம் உருவாகியிருக்கிறது. வயல்வெளியுள் ஒரு சிறிய கட்டடம் தெரிந்தது. அவர்கள் மலங் கழிக்க அடுத்த சவுக்கம் தோப்பை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள்.

“தோழர் உங்கடை பெயர் என்ன? ”

“இராவணன்”

“நீங்கள் எந்த இடம்? ”

(புன்சிரிப்பு)

“வந்து கனகாலமோ? ”

“நாளையோடை சரியா 4 மாதம் முடியுது. நீங்கள் நேற்றிரவா வந்தனியள்? ”

“ஓம், நாங்கள் 20 பேர் வரை வந்தனாங்கள்”

“நேவி கலைக்கயில்லையா? ”

கேள்விகள் விடைகளுக்கானவையாக வளர்ந்தன. உறவுகள் பின்னப்படாத ஒரு பிரதேசத்தின் மனிதர்களாக அவர்கள் பேசியபடி நடந்தார்கள். ரகுவும் ஆனந்தனும் அரசியல் பேசுவதை கவனித்த கஸ்ரோ அவர்களுடன் நெருக்கமாக நடந்தான்.

இப்போ அவர்கள் வயல்வெளி ஒற்றைக் கட்டடத்துக்கு அருகில் நின்று வேடிக்கை பார்த்தார்கள். இரண்டு கைகளின் நடுவிரல்களின் நுனிகளைப் பொருத்தி, கீழே பெருவிரல்கள் இரண்டினதும் நுனிகளைப் பொருத்திவைத்தபடி ஒரு வட்டத்தை உருவாக்கிப் பாருங்கள். அதன் விட்டத்தையும்விட பெரிதாக அந்தக் குழாய் இருந்தது. இந்த எரியும் பூமியை நீர்நிறைந்த வயல்வெளியாய் மாற்றும் நீர்த்தாரை அந்தக் குழாய் வழியே வெளித்தள்ளப்பட்டபடி இருந்தது. அந்த நீரில் இந்த புதிய போராளிகள் முகமும் கழுவினார்கள். குண்டியும் கழுவினார்கள். பிறகு இவர்களும் பயிற்சி முடிந்தபின் இதில் குளிப்பதை நீங்கள் பார்ப்பீர்கள். அந்த குழாய்க் கிணறு இடைவிடாமல் நீரை உந்தித்தள்ளியபடி இருக்கும். அந்தளவு ஆழத்துக்கு பூமிக்குள் நிலத்தடி நீர்வரை குழாய் இறக்கப்பட்டிருந்திருக்க வேண்டும். வயற்காற்று நொந்துபோயிருந்த உடலை உயிர்ப்பித்தது. அந்த ஒற்றைக் கட்டடத்துக்குள்ளிருந்து கரகரத்த குரலில் சற்று பரிச்சய மில்லாத தமிழில் யாரோ உரப்பிக்கொண்டிருந்தது கேட்டது. கிழவன் வெளியே வந்தான். முகத்தில் மட்டுமல்ல அவனது சற்றுக் கூனிய உடல் முழுவதும் முறுக்கேறியிருந்தது. குரலில் அதிகாரம் தெறித்தது.

“தோழர் யார் இந்த ஆள்? “

“கிழவன் பெரிய அட்டகாசம். காம்ப் போடுறதுக்கு அவ்வளவு இடத்தையும் சவுக்கை அழித்து இடம் தந்தவன். அதாலை ஒண்டும் செய்யேலாது. அவனை கட்டுப்படுத்த முகாம் பொறுப்பாளராலும் முடியாது. அவன் அடிக்கடி காம்ப்புக்குள்ளை வருவான். சிலவேளை கொழுவுப்படுவான். வாயாலை வாற சொல்லுகளை நீங்கள் இனி கேட்பியள்தானே...” என்று அறிமுகப் படுத்தினான் இராவணன்.தோழர் இராவணன் !

புற்பாய்கள்மீது தமது கொட்டிலுக்குள் புதியவர்கள் படுத்தபடி பேசிக் கொண்டிருந்தார்கள். ஆணி அடித்தாற்போல் “லெப்ற்... றைற்...லெப்ற் றைற்...” என கட்டளை வார்த்தைகள் அருகிலிருந்த பயிற்சித் தளத்திலிருந்து வந்துகொண்டிருந்தன. குசினிக்குள்

சுமார் 10 பேர்வரை சறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தார்கள். முகாமைச் சுற்றிய வடத்தின் மூலைகளிலும் நடுவிலும் டியூற்றியில் சிலர் நின்றுகொண்டிருந்தனர். சிலர் பரண்களின் மேல் தனித்தனியாக நின்றுகொண்டிருந்தனர். சுற்றியிருந்த சவுக்கம் காட்டைப் பார்த்தபடி அவர்கள் நிற்க வேண்டும். அதாவது காவல் காக்கும் உசார்நிலையில் அவர்கள் நின்றனர் அல்லது நடித்தனர். அரைக்காற்சட்டை, ஒரு பெனியன், கையில் ஒரு சவுக்கம் கொட்டன். இதுவே அவர்களின் விம்பம்.

“அப்ப நேற்று இரவு இவங்கள் திடுதிடுப்பெண்டு எங்கடை வாகனத்தை மறிச்சது ஓடித்திரிஞ்சது எல்லாம் இந்தக் கொட்டனை வைச்சுக்கொண்டுதானா?. இதுதான் எங்கடை ஆயுதமோ?“ ஆனந்தன் குறும்பாகப் பேசினான். அதேநேரம் பயிற்சி பற்றிய பிரமையில் அவர்களுக்கு விழுந்த முதல் அடியாகவும் அது இருந்தது.

பின்னர் ஆயுதம் குறித்து அவர்கள் வகுப்பெடுத்ததையும் அந்த ஆயுதங்களை கொப்பியில் பிஸ்ரல், ஏகே-47, எஸ்எல்ஆர், எல்எம்ஜி ஆர்பிஜி-7 என படம்கீறி வைத்திருந்ததையும், சிலர் காலையில் விழித்தவுடன் அந்தப் படங்களை பார்வையால் ‘வணங்கிவிட்டு’ எழுந்து அந்த நாளை தொடங்குவதையும் நீங்கள் பார்ப்பீர்கள். இந்த ஆரம்ப முகாம் பயிற்சியை முடித்து வெளியேறுவது வரையான காலத்தில் எந்த ஆயுதத்தையும் பயிற்சித் தோழர்கள் எவரும் கண்ணால் கண்டதே கிடையாது என்பதையும் தெரிந்து கொள்வீர்கள்.

நேரம் 9 மணி. காலை பயிற்சியின் முதல் கட்டத்தை முடித்துக் கொண்டு வரிசையாக எல்லோரும் முகாமுக்குள் இராணுவ அணிவகுப்புடன் வழிநடத்தப்பட்டுக் கொண்டு வந்தார்கள். அணிவகுப்பு கலையும் கட்டளை அவர்களை அவிழ்த்துவிட, அமளி தொடங்குகிறது. பெனியன், காற்சட்டை மட்டுமல்ல உடல் முழுவதும் புழுதி மூத்திரம் பெய்து விட்டிருந்தது. களைப்போடு ஆனாலும் உற்சாகமாக இயங்கினார்கள். முகாம் களை கட்டியது. அவர்கள் கையில் கொணர்ந்த ஆயுதங்கள் (கொட்டன்கள்) ஒவ்வொரு முகாம் கொட்டில் மூலையிலும் குவிந்தன. தட்டுகள் டம்ளர்களுடன் திடீரென வரிசை குசினி நோக்கி நீண்டது. புதியவர்கள் இப்போதும் தமது கொட்டிலுக்குள் நின்றார்கள். வரிசையில் நிற்பதா அல்லது பிறகு சாப்பாடு

தருவார்களா என்று மாறிமாறி அவர்களுக்குள் குழம்பி, தட்டை எடுப்பதும் கூரைக்குள் சொருகுவதுமாய் தயங்கி நின்றார்கள். இந்திரன், சந்திரன் இருவரும் ஓடி வந்தார்கள். வேறும் சில தோழர்களும் தமக்குத் தெரிந்தவர்கள் யாராவது இந்தக் குழுவில் வந்திருக்கிறார்களா என ஆர்வப்பட்டுக்கொண்டு நின்றார்கள். இந்தினும் சந்திரனும் வியர்வைகள் விலக சிரித்தார்கள். மளமளவென பயிற்சி பற்றிய வீரப்பிரதாபங்களைக் கொட்டினார்கள். இந்திரன் தனது முழங்கையைக் காட்டினான். ஒரு முழுங்கையில் சிவப்பாக புண்பட்டிருந்தது. மறு கையில் அது காய்ந்து கறுத்துப்போயிருந்தது. கிறவலிங் பயிற்சியின் தழும்புகள் அவை என்றான்.

இப்போ எல்லோரும் கியூவில் சாப்பாட்டுக் கோப்பைகளுடன் நின்றார்கள். தொடர்ந்து றெயினிங் பற்றியே கதை, அவர்கள் (புதியவர்கள்) வந்துசேர்ந்தது பற்றிய கதை என பரிமாறிக் கொண்டிருந்தார்கள். "நேவி கலைக்கயில்லையா" என்ற கேள்வியை எதிர்கொண்டு அவர்களுக்கு அலுத்துப்போய்விட்டது.

அவித்த பச்சைப் பயறு, டம்ளரில் பால் என காலைச் சாப்பாடு கிடைத்தது. வசதியான இடங்கள் தேடி சிறு சிறு குழுக்களாக அவர்கள் அமர்ந்துகொண்டார்கள். எல்லையோரமாய் விழுந்து கிடக்கும் சவுக்குமரத் துண்டு நிழல் அவர்களில் பலரையும் விளிம்பு மனிதர் களாக இருத்தியிருந்தது.

"வேறை என்னென்ன சாப்பாடு தருவாங்கள்? "

"காலையிலை கடலை அல்லது பயறுதான். மாறிமாறி வரும். மத்தியானம் சோத்தோடை இறைச்சி அல்லது முட்டை. இரவு புக்கை அல்லது கஞ்சி வரும். சிலவேளைகளிலை றொட்டி அல்லது புட்டு எப்பவாவது அபூர்வமாய்க் கிடைக்கும். எல்லாமே அளவுச் சாப்பாடுதான். இரண்டாம் முறை என்ற பேச்சுக்கே இடமில்லை" என்றான் சந்திரன்.

சுமார் 320 பேர்வரை அந்த முகாமில் அப்போது இருந்தார்கள். எல்லோரும் 40 பேர் கொண்ட பிளட்டூன்களாக பிரிக்கப்பட்டு ஒரு சார்ஜன் தலைமை கொள்வார். 10 மணிக்கு விசில் சத்தம் வீரிட்டது. பிளட்டூன்கள் அணிபிரிந்து நின்றுகொண்டன. 'பிளட்டூன் சார்ஜன்கள்' எல்லோரும் எல்லா பிளட்டூன்களுக்கும் பொறுப்பான சார்ஜனுக்கு நேர்த்தியாக சல்யூட் அடித்து தத்தமது

பிளட்டூன் அணிகளை வந்தடைந்தார்கள். பின்னர் வரிசையாக பயிற்சிக்களம் நோக்கி வழிநடத்தினார்கள். புதியவர்கள் மீண்டும் கொட்டிலுக்குள் முடங்கிக் கொண்டார்கள். முகாம் மீண்டும் வெறுமையாகியது. ஒரு புதிரை அவிழ்க்கும் சூழலில் ரகு விடப்பட்டது போல உணர்ந்தான். எதைக் கேட்கலாம், எதைக் கேட்கக்கூடாது, யாருடன் எந்த எல்லைவரை வினாத் தொடுக்கலாம்... என்ற விடையற்றுத் தெரிந்த அந்தரத்தில் நிலையற்றுத் தவித்தான் ரகு. ‘‘இராணுவ இரகசியம்’’ என்ற சொல் பயிற்சித் தோழர்களின் இயல்பான சுதந்திரமான உரை யாடலையும் வார்த்தைகளையும் கட்டுப்படுத்தி வைத்திருந்தது.

இப்போ மூன்று நாட்கள் கடந்துவிட்டிருந்தன. புதியவர்களின் ஓய்வுநாட்கள் முடிவுற்றன. எட்டாவது புதிய பிளட்டூன் அணி பிறந்தது. அந்த பிளட்டூன் சார்ஜனாக காளி என்ற தோழர் பொறுப்பேற்றார். மைதானத்தில் முதல்நாள் உடற்பயிற்சிகள் உற்சாகமாகத் தொடங்கியது. அதற்குமுன் முக்கால் மணி நேரம் அவர்கள் ஒரே தட காலடி ஓசையுடன் ஓட பயிற்சி எடுத்தார்கள். பிறகு உடற்பயிற்சிகள் என தொடர்ந்தது. வியர்வையில் பெனியன்கள் ஒட்ட, பயிற்சிகளின் உருளலில் பிரளலில் அவர்கள் மண்மனிதர்களாகிக் கொண்டிருந்தார்கள்.

பயிற்சியின் தளபதிபோல், மேற்பார்வையாளன் போல் ஒரு குள்ளமான மனிதர் துருத்திக்கொண்டு திரிந்தார். தொளதொளத்த நீலக் காற்சட்டையும் வெள்ளை பெனியனும் அணிந்திருந்தார். இடையிடையே சவுக்கம் காட்டுக்குள் நுழைந்து நின்றபடி பீடி அடித்துக்கொண்டிருந்தார். யார் இந்த மனிதர்?. அவர் ஒரு இராணுவ உடலமைப்போ ஆளுமையோ கொண்டவரல்ல. கழுத்தில் தொங்கிய விசிலில் அவரின் கட்டளை இயங்கியது. லெனின் போல குறுந்தாடி வைத்திருந்த அவரை ‘லெனின்’ என்றுதான் சக தோழர்கள் அழைத்தார்கள். இந்த லெனின் இந்திய இராணுவத்தில் இருந்தவர். ஓய்வுபெற்ற பின் பயிற்சியாளராக இங்கு வந்துசேர்ந்தார். ஞாயிற்றுக்கிழமை பயிற்சிகள் இல்லாத தால் அன்று மட்டும் அவர் வீடு போய் வருவார். லெனினின் கொட்டில் முகாமுக்குள் இடதுபுறமாக இருந்தது. வயல்கார கிழவனின் இருப்பிடம் வலதுபுறமாக முகாமுக்கு வெளியே சுமார் நூறு மீற்றரில் குழாய்க் கிணற்றடியில் இருந்தது. கழகம் இந்த முகாமை ஆரம்ப முகாமாக வைத்திருந்தது. இயக்கத்துக்கு புதிதாக வரும் தோழர்களின் எண்ணிக்கையை லெனின்

மறுநாள் காலையில் கேட்டறிவார். வயற் கிழவன் எந்தச் சாமமானாலும் நித்திரைவிட்டு எழுந்து ஓடிவந்து தானே புதிதாக வரும் உருப்படிகளை எண்ணிக் கொள்வான். அப்படி முடியாத சந்தர்ப்பங்களில் அவனும் மறுநாள் காலை வந்து கேட்டறிவான். இதில் அவன் எந்த தவறவிடலையும் செய்வதில்லை, லெனினும் தான்.

மதியம் எல்லோரும் பயிற்சிக் களத்திலிருந்து திரும்பியிருந் தார்கள். கோப்பைகளுடன் வரிசை (கியூ) முளைத்தது. அந்த சூழலுக்கும் தோழர்களுக்கும் பழக்கப்படாததால் புதிய தோழர்கள் கடைசியில் நின்றார்கள். ரகு கோப்பையால் தலைக்கு நிழல் விழுத்திக் கொண்டு நின்றான். அளவுச்சோறு. பெரிய அண்டாவின் முன்னால் ஒரு கரண்டியுடன் நின்ற தோழர் இறைச்சிக்கறியை பரிமாறிக் கொண்டிருந்தார். இறைச்சித் துண்டுகளை அவர் கரண்டித் தூண்டில்போட்டுப் பிடித்துக்கொண்டிருந்தார். 'ஒறேஞ்ச் முட்டாசு' அளவிலான மூன்று சிறு துண்டுகளுக்கு மேற்படாதபடி அந்தக் கரண்டி பார்த்துக்கொண்டது. பருப்புக்கறி கோப்பையில் சிரித்துக்கொண்டிருந்தது. அருகில் ஒரு வாளியில் உப்புத் தண்ணீர் வைக்கப்பட்டிருந்தது. தத்தமது லோட்டாவில் அள்ளிக்கொண்டு சென்றனர் தோழர்கள். இந்தத் உப்புநீரை ஊற்றி அவரவர் தமது சுவைக்கேற்ப அண்ணளவாகவேனும் கறியை சரிசெய்ய முயல்வர்.

மீண்டும் நேரம் ஒன்றரையாக விசில் அலறியது. மீண்டும் பயிற்சி. எல்லோரும் 'ஆயுதங்களுடன்' போனார்கள். அளவாக நறுக்கப்பட்டு, சொத்துப்போல் பேணப்பட்ட அந்த சவுக்கம் கொட்டன்களுடன் அவர்களது ஆரம்பப் பயிற்சிகள் நடந்தன. சிலர் அதற்கு இரு முனைகளிலும் இழைக்கயிற்றால் இணைத்து தோளில் கொழுவிச் செல்வதில் திருப்திப்பட்டார்கள். அதனுடன் குத்துக்கரணம் அடிப்பது, ஊர்ந்து செல்வது (கிராவலிங்), கையை மடக்காமல் முன்பக்கம் அல்லது தலைக்கு மேல் பக்கம் தூக்கியபடி வேகமாக ஓடுவது... என்றெல்லாம் பயிற்சி நடந்தது. கரன் பதின்ம வயதும் துடிப்பும் நிறைந்த இளைஞன் என்பதால் அபரிதமாக தனது பயிற்சிகளை செய்துகாட்டினான். ஆனந்தனுக்கு விளையாட்டுத்தனம் பயிற்சியிலும் இருந்தது. ரகுவின் உடல்வாகை மீறி அவனது சீரியஸ் தன்மையும் அர்ப்பணிப்பும் சக்தியை வழங்கிக் கொண்டிருந்தது. கஸ்ரோ

பயிற்சிகளைச் செய்தாலும், அவனது முகத்தில் தெரிந்த களை இராணுவத்தனத்தை வெறுத்தொதுக்குவது போல தெரிந்தது. அவனை ஊடுருவிப் பார்க்க வேண்டும் என்று ரகுவுக்கு விருப்பம் இருந்தது.

இரண்டாம் பொழுதுப் பயிற்சி முடிய நாலு மணிக்கு முகாம் திரும்பினார்கள். உடல்முழுவதும் வியர்வையில் தோய்ந்த நிலையில் தாரைதாரையாக பீய்ச்சியடித்துக் கொண்டிருக்கும் வயற் துரவு நீர்க்குழாயில் தலையைக் கொடுத்து காகக்குளிப்பில் இறங்கினர்.

மாலைநேரத்தில் முகாம் முன்றலில் கராத்தே வகுப்பு நடைபெறும். விரும்புபவர்கள் மட்டும் ஈடுபடலாம் என்ற தளர்வுநிலை இருந்தபோதும் பலர் அதில் பங்கேற்பது வழமை யாக இருந்தது. ஆர்வம் அல்லது தனது ஆளுமைக்கு சற்று இழுக்கு வந்துவிடலாம் என்று ஒருவித பயம் இந்தப் பயிற்சியில் பலரையும் ஈடுபட வைத்தது. ரகு ஆர்வமுடன் தவறாமல் அதில் ஈடுபட்டான். ஊரில் ‘பத்துநாளில் கராத்தே’ என்ற சிறு நூலொன்றை வைத்து முயன்று பட்ட தோல்வியை அவனது மனம் சரிசெய்ய துடித்துக்கொண்டிருந்தது.

மாலை 7 மணிக்கு ‘றோல்கோல் மீற்றிங்’ என்று ஒன்று இருக்கும். அதற்கான நேரம் நெருங்கியது. ரகு, கரன், ஆனந்தன் மற்றத் தோழர்களுடன் அந்த இடத்தில் கூடிநின்றார்கள். திடீரென அட்டகாசமாக தூசண வார்த்தைகள் பேசியபடி ஓர் இடிமுழக்கம் போல் அந்த வயற்காரக் கிழவன் வந்தான். ஏதோ பிரச்சினை. அவன் முரட்டுக் குணம் படைத்தவன். சில தோழர்களுக்கு எப்பவும் அவனைச் சீண்டுவதில் அலாதிப் பிரியம். இனந் தெரியாத நபர்களாக அந்த விளையாட்டை அவர்கள் மேற் கொள்வர். அப்படியாக ஏதோ யாரோ செய்துவிட்டார்கள் என்பது மட்டும் புரிந்தது. தெளிவாக அவனது வார்த்தைகள் ரகுவுக்குப் புரியவில்லை. பருத்தித்துறை-கொடிகாமம் வழித்தடத்தில் தட்டி வானில் *(van)* பயணிப்பது போன்ற அவனது உடல் மொழியை ரகு வெகுவாக ரசித்தான். முகாம் பொறுப்பாளர்கள் சமாதானம் பேசியபடி அந்தக் கிழவனை சமாளித்துக் கொண்டிருந்தார்கள்.

இப்போ அவன் போய்விட்டான், றோல்கோல் மீற்றிங்கின் கொஞ்ச நேரத்தை விழுங்கிவிட்டு அவன் மறைந்தான். முகாம் பொறுப்பாளர் மதன், பயிற்சிப் பொறுப்பாளரும் உதவி முகாம்

பொறுப்பாளருமான பாண்டி ஆகியோருடன் ‘மொட்டை மூர்த்தி’ யுமாக எல்லோரும் சப்பாணி கொட்டியபடி முன்னால் அமர்ந்தி ருந்தார்கள். யார் இந்த மொட்டை மூர்த்தி? இவரைப் பற்றி இப்போ உங்களுக்கு சொல்லிக்கொண்டிருந்தால் றோல்கோல் மீற்றிங் முடிந்துபோய்விடும் என்பதால் பிறகு பார்க்கலாம்.

“இந்தக் கூட்ட முறைமையை சீனப் புரட்சிக் காலகட்டத்தில் மாவோ தோழர்களிடத்தில் கடைப்பிடிக்க அறிவுறுத்தியிருந்தார். ஒவ்வொருநாளும் அன்றைய நாள்பூரான நிகழ்வுகளின் மீதான விமர்சன முறையாக இது நடத்தப்படும். அது யார் மீதான விமர்சனமாகவும் இருக்கலாம். முகாம் பொறுப்பிலுள்ள எம் மீதான விமர்சனங்களையும் நீங்கள் முன்வைக்க இங்கே சுதந்திரம் இருக்கிறது...” என்று புதிய தோழர்களுக்காக பாண்டி விளக்கம் அளித்துக் கொண்டிருந்தான்.

இப்படி ஜனநாயகத்தை விரிப்பாய் பரப்பியிருக்கிறாங்களே என ரகு நினைத்து பெருமைப்பட்டான். ரகுவும் யோகனும் முகப்புக்கு வந்து தமது கருத்துகளை சொன்னார்கள். “நாம் நாட்டில் அரசியல் வேலை செய்துகொண்டவர்கள்” என்ற அறிமுகத்துடன் இருவருமே தொடங்கியிருப்பார்கள். பாண்டி யின் கடைவாயில் புன்னகை ஒழுகியது. மதன் வழமையான புன்னகையின்றி உணர்ச்சியற்ற முகத்துடன் இருந்தான். மொட்டை மூர்த்தி முகமூடி அணிந்ததுபோல் விறைப்பாய் இருந்தான். “நாம் தோழர் என்ற வார்த்தையை செயலதிபர் உமா மகேஸ்வரனுக்குக்கூட சரளமாக அங்கு பயன்படுத்து கிறோம். ஆனால் இங்கு பொறுப்பாளர்கள் பயிற்சியாளர்கள் எல்லோரையும் ‘அண்ணை’ என்ற சொல்லால் எல்லாத் தோழர்களும் அழைக்கிறீர்கள். இது எப்படி தோழமை உணர்வை வளர்க்க முடியும். இதை தோழர் உமா மகேஸ்வரனும் கூட விரும்பமாட்டார்” என்றவாறாக இருவரும் தமது கருத்தை -தனித்தனியாக- சொல்லி முடித்தனர். தனது வலித்த முகத்தை சிரிப்பால் வென்றபடி பாண்டி அதற்கு விளக்கம் கொடுத்தார். “தோழர் என்று அழைப்பதற்கு தடையேதுமில்லை. ஆனால் எல்லோரும் எமது கலாச்சாரம் கற்றுத்தந்திருக்கிற வழமையான பாணியில் அண்ணை என்று அழைத்துக் கொள்கிறார்கள். அவ்வளவுதான்” என்றார். இந்தப் பதில் ரகுவுக்கு சொதப்பலாய்த் தெரிந்தது. ஆனாலும் வேறு யாரிடமும் கேள்விகள் எழுவதா யில்லை. விமர்சனங்களும் எழுவதாயில்லை. முன் வரிசையில்

அமர்ந்திருந்த கஸ்ரோவின் பார்வை கூர்மையாக ஊடுருவியபடி இருந்தது. இந்தக் கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்த மூவர் மட்டும் மாறிமாறி கருத்துகள் சொல்லிக் கொண்டிருந்தனர்.

இவர்கள் உட்கார்ந்திருந்த இடத்துக்கு இடதுபக்கமாக இருந்த குடிசை வடிவிலான தனது கொட்டிலின் முற்றத்தில் காலாட்டிய படி லெனின் பீடியை ஊதிக்கொண்டிருந்தார். கயிற்றுக் கட்டில் அவருக்கு வசதியாய் களைப்பாற உதவியாயிருந்தது. அவர் இந்த றோல்கோல் மீற்றிங் பக்கமே வருவதில்லை. தனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்றவாறாக அவர் இளைப்பாறியபடி இருந்தார். நேரம் சுமார் எட்டு மணி. ஒன்றுகூடல் முடிகிறது. முற்றத்திலும் கொட்டில்களுக்கு உள்ளும் புறமும் என தோழர்கள் கும்பல் கும்பலாக கூடி கதைக்கிற அன்றைய சுதந்திரத்தை அனுபவித்தார் கள். லெனின் முன்னால் இப்போ சிலர் கூடுகின்றனர். அவர் ஒரு பிரசங்கியாக மாறிவிடுகிறார்.

பசுமையற்றிருந்த புழுதித் தரையை நிலவு குளிர்மையால் நனைத்தது. ஒளிபுகமுடியாத சவுக்கம் தோப்புகளின் கருமை இந்த நிலாத் துண்டு வெளியை சிறைப்படுத்தியிருந்தது. பார்வை எல்லையை அந்த தோப்பு அறுத்துப் போட்டிருந்தது. என்றபோதும் நிலாவின் வியாபிப்பு உடலுள் எல்லையற்று புகுந்துகொண்டதை ரகு அனுபவித்தான்.

முகாமினுள் ரகுவும் ஆனந்தனும் கூட்டம் பற்றி கதைத்துக் கொண்டிருந்தார்கள். இந்திரனும் சந்திரனும் வந்தார்கள். அவர்களுடன் தனியாக பேசும் விருப்பத்தை சைகையால் காட்டிச் சென்றார்கள். “நீங்கள் இந்தத் ‘தோழர்’ பிரச்சினையை எழுப்பாதையுங்கோ. அதைக் கேட்ட தோழர்களுக்கு ஏற்கனவே சில பிரச்சினையள் நடந்திருக்கு. அதாலை எல்லாரும் பயம். கொஞ்சம் கவனமாயிருங்கோ...” இதற்குமேல் அவர்கள் பேச வில்லை. ரகுவிடம் புதிர்கள் முளைக்கத் தொடங்கின. கரனின் பெருவிழிகளுள்ளும் அவை தெரிந்தன. அவர்களைக் காணும் போதெல்லாம் பாண்டி ‘தோழர்’ என்று சொல்லி நக்கலாகச் சிரித்தான். சுவறிய அந்தச் சிரிப்பில் புதிர்கள் மேலும் வளரத் தொடங்கின. ஆனாலும் அவர்கள் மூவருக்கும் ‘அண்ணை’ என்று அழைப்பது முடியாமலிருந்தது. இறுதிவரை அவர்கள் தவிர்த்துக்கொண்டனர். சக பயிற்சித் தோழர்களை மட்டும் தோழர் என விழித்தார்கள். அங்கு அதுவே வழமையாகவும் இருந்தது.

## 6

*இன்றுதான் முதன்முதலில் புதியவர்கள் காவல் (டியூற்றி) கடமையைத் தொடங்குகிறார்கள். முகாமின் முன்வாசலிலும் பின் வாசலிலும் உயரமான பரண்கள் இருந்தன. இந்தப் பரணின் மேல் ஒருவரும், கீழே ஒருவருமாக இருவர் ஒரு மணி நேரக் கடமையில் நிற்பர். முகாமின் மற்றைய மூலைப் பகுதிகளிலும், நான்கு பக்க எல்லைகளின் நடுப்பகுதிகளிலுமென டியூற்றியின் மற்றைய வியூகம் இருக்கும். சக தோழர் ஒருவர் 'றெக்கி டியூற்றி'யாக சுழன்று திரிவார். கடமையில் நிற்போர் ஒழுங்காக நிற்கிறார்களா என கண்காணித்தும், அவர்களுடன் தொடர்பாடலை பேணிய படியும் அவர் சுற்றித் திரிவார்.*

*ரகுவின் முறை அதிகாலை 2 மணியிலிருந்து 3 மணிவரை இருந்தது. முன்வாசல் பரணின் மேல் அவன் ஏறி நின்றான். கீழே தோழர் பரம் நின்றான். அவன் இலங்கையில் தீயணைப் புப் படையில் வேலை செய்தவன். நல்ல உடல்வாகு கொண்ட வன். இரக்க குணம் கொண்டவன். சவுக்கம் தோப்பை இருள் மூடியிருந்தது. ஒற்றையடிப் பாதையின் மீதான நகர்வைத் தவிர சவுக்கம் தோப்புக்குள் அசைவுகள் இலகுவில் புலப்படா. ஒரு சிறு இரைச்சலைத் தன்னும் அனுமதிக்காத அமைதியும் திரண்டு கொழுத்திருந்த இருளும் ரகுவின் முதல்நாள் டியூற்றியின் மீது ஒருவித அச்சத்தை கிளப்ப முயற்சித்தன. காற்றும் உறைந்து போகிற பேயமைதியை இருள் அணைத்து வைத்திருந்தது. டியூற்றி யில் நிற்பவர்களின் அசுகையைத் தவிர முகாம் உறக்கத்தில் இருந்தது.*

*திடீரென சவுக்கம் காட்டுக்குள்ளிருந்து ஒரு அலறல் கேட்டது. மனதில் ஆழ இறங்குகிற அலறல். அது நரம்புகளை கைப்பிடி யாய்ப் பிடித்து இழுத்து உலுக்கியது. மரணஒலி என்று கதைகளில் படித்ததை இப்போ ரகு அனுபவித்துக்கொண்டிருந்தான். மனிதர் களின் ஒலி இப்படி குரூரமாகவும் ஒலிக்க முடியும் என்பதை அன்றுதான் அவன் உணர்ந்திருத்தல் கூடும். ஒரே உரப்பல் ஒலியும் கேட்டது. "உங்களுக்கு அண்ணா இல்லையா... தம்பி இல்லையா..." என்றெல்லாம் குரல் நடுங்கி எழுவதும், அதைச் சிதைக்கும் அதட்டல்களுமாக சவுக்கம் தோப்பின் அமைதி உடைந்து நொருங்கியது. ஈனக் குரல் இருளில் கசிந்து வழிந்தது. பதட்டமாக இருந்தது. என்ன நடக்கிறது?*

சில நிமிடங்களின்பின் மீண்டும் அமைதி நிரம்பியது. கீழே எட்டிப் பார்த்தான் ரகு. பரம் நிலத்தில் வீழ்ந்து கிடந்தான். அவசர அவசரமாக ரகு கீழே இறங்கினான். றெக்கி தோழரும் வந்திருந்தார். பரமின் முகத்தில் தண்ணீரை தெளித்தான் றெக்கி. மெல்ல விழித்த அவனை றெக்கி அவனது முகாம் கொட்டிலுக்கு அழைத்துப் போனான். இன்னொரு தோழர் அந்த டியூற்றி இடத்தை நிரப்பினான். ரகு பரணின்மேல் மீண்டும் நின்றான். மீண்டும் சத்தம் வருமா?

"அது ஒண்டுமில்லை. இதைப் பற்றி நாளைக்கு நான் சொல்லிறன்... இப்ப டியூற்றியைப் பாருங்கோ..." என்றெல்லாம் றெக்கி மெழுகிவிட்டுப் போனவைகளை துலக்க முடியாமல் அவதிப்பட்டான் ரகு. அவனுக்கு அந்தக் கணம் மட்டுமல்ல, அன்றைய மிகுதித் தூக்கமும் நொருங்கிப் போனது.

மறுநாள் விசில் அவர்களுக்குக் கட்டளையிட பயிற்சிக்குத் தயாரானார்கள். முகாமைவிட்டு வெளியில் போய்க்கொண்டிருக் கும்போது இரவு சத்தம் வந்த இடத்தை உற்று நோக்கினான் ரகு. ஒரு சிறு கொட்டில் அதற்குள் ஒளித்துநின்று பார்த்தது.

பயிற்சி மைதானத்தில் உடலைச் சூடாக்குகிற முன்பயிற்சியான ஓட்டம் தொடங்கியிருந்தது. மைதானத்தை அண்டியிருந்த சவுக்கு மரங்கள் சோகை பிடித்திருந்தன. அது மரணஒலி எழுப்பிய தோப்புப் போல கொழுத்துப் பரவியிருக்கவில்லை. லெனின் அந்த சவுக்கம் மரங்களுக்குப் பின்னால் போனதை ரகு அவதானித்தான். சவுக்கு மரத்துக்கு மேலால் புகை வந்துகொண்டிருந்தது. பீடியை ஊதியபடி அவர் இடையிடையே வெளியே வருவதும் போவதுமாக புகைத்து விளையாடிக் கொண்டிருந்தார். மைதானத்துள் புகைபிடிக்கக்கூடாது என்று பெரிசு (உமாமகேஸ்வரன்) சொல்லிக் கட்டளை என்ற விடயத்தை தோழர் ஒருவர் சொன்னார். அது லெனினுக்கு ஒரு பொருட்டல்ல.

சனிக்கிழமை. 9 மணி. காலை உணவுக்கு பயிற்சி மைதானத்தி லிருந்து எல்லோரும் முகாம் திரும்பிக்கொண்டிருந்தார்கள். சவுக்கம் காட்டுக்குள் இருந்த கொட்டில் பெயர்த்து எடுக்கப்பட்டு முகாமின் முன்வாசல் வழியருகில் கிடுகுகள் ஒழுங்காக ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட்டிருந்தது. மதன், பாண்டி, மொட்டை மூர்த்தி எல்லோரும் ஓடித்திரிந்தார்கள். பெரியவர் இன்று முகாமுக்கு வருகிறார் என்று அறிவித்தார்கள். இவ்வளவு

விரைவாக தோழர் உமா மகேஸ்வரனைப் பார்க்க சந்தர்ப்பம் கிடைக்கும் என ரகு எதிர்பார்த்திருக்கவில்லை. மகிழ்ச்சியாக இருந்தான். அவன் எதிர்பார்ப்பின் அடுத்த வாசலைத் திறந்து காத்திருந்தான்.

ஒரு சிவப்பு ரீசேர்ட், வேட்டியுடன் எளிமையாக வந்திருந்தார் உமா மகேஸ்வரன். அவருடன் அனைத்துமுகாம் பொறுப்பாளர் ராஜனும் இன்னும் சிலரும் வந்திருந்தனர். முகாம் நடுவில் இருந்த கம்பத்தில் கொடி ஏற்றப்பட்டது. முகாம் எழுந்து நின்றது. காற்று இலேசாக கொடியை அசைத்தபடி இருக்கிறது. பயிற்சித் தோழர்கள் புழுதிபடிந்து நின்றனர். ஒவ்வொரு கொட்டிலாக உட்புகுந்து வந்த உமாமகேஸ்வரன் இப்போ இந்த புதியவர் களின் கொட்டிலுக்குள் வருகிறார். சிரித்த முகத்துடன் வணக்கம் சொல்கிறார்.

“இவையள்தான் கடைசியாக வந்தாக்கள்” என்கிறார் முகாம் பொறுப்பாளர்.

“நாட்டுக்காக எல்லாத்தையும் விட்டிட்டு வந்திருக்கிறியள். பெருமையான விசயம். கொஞ்ச நாளைக்கு கஸ்டமாக இருக்கும். விடுதலைக்காகப் போராடுறதெண்டால் நாம் சிலதுகளை இழந்து தான் ஆகவேணும். உறுதியாக இருங்கள்.” என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்.

“சிம்பிளாக இருக்கிறார் தோழர்” என்றான் ரகு. அருகில் வந்த இந்திரன் “தோழர் என்று சொல்லாதையுங்கோ. பெரிசு அல்லது பெரியவர் எண்டு சொல்லுங்கோ” என்று ரகுவின் காதோரம் சொன்னான். “பனங்காணிக்குள், சுடலைக்குள், தோட்ட ஆடுகாலுக்குக் கீழ், ஒதுக்கமா கோயில் மண்டபத்துள் என்றெல்லாம் வகுப்பெடுக்கும் தருணங்களில் தளத்தில் தோழர் உமா மகேஸ்வரன் என்றுதானே சொன்னோம்” என்று சொல்ல ரகுவுக்கு எந்த உந்துதலும் இல்லாமலிருந்தது.

இப்போ அந்த வயற்கிழவன் அட்டகாசமாக கத்திக்கொண்டு வருகிறான்.

“தலைவரு வந்திருக்கிறாப்ல. எங்க?”

தாண்டித்தாண்டி வந்தான் அவன். ‘பெரிசு’ கையெடுத்து வணக்கம் சொன்னது. பெரிசுடன் வயற்கிழவன் அமைதியாக அளவளாவினான்.

இப்போ பயிற்சி மைதானத்தில் பயிற்சி தொடங்கியிருந்தது. எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்த பெரியையா கிறாவலிங் செய்வது பற்றி புதியவர்களின் பிளட்டுனுக்கு விளக்கம் கொடுத்தார். தோழர்கள் எல்லோருமே உற்சாகமாக இருந்தார்கள். தலைவரைக் கண்ட மகிழ்ச்சியும் அவரது எளிமையும் காரணமாய் இருக்கலாம். சுவாரசியம் என்னவெனில் இன்று லெனின் பீடி குடிக்காமல் இருந்தார் அல்லது அவதிப்பட்டார்.

மறுநாள் காலை எழுந்தபோது சவுக்கம் காட்டுக் கொட்டில் மீண்டும் அதே இடத்தில் முளைத்திருந்தது. இது ரகுவுக்கு சந்தேகத்தை அதிகமாக்கியது.

"இதெல்லாம் பெரிசுக்குத் தெரியாமல்தான் செய்யிறாங்கள் போலை. அதாலைதான் பெரிசு வரயிக்கை எல்லாத்தையும் புடுங்கிப் போட்டிட்டு, இப்ப திரும்பவும் போட்டுட்டாங்கள்" என்றான் சந்திரன்.

"நீங்கள் வாறதுக்கு கொஞ்சநாள் முதலிலை இங்கை பிரச்சினை யொண்டு நடந்தது. பெடியள் குழம்பியிட்டாங்கள். கடைசியிலை மதன் அண்ணை பிஸ்ரலாலை மேலை சுட்டு அமைதியாக்க வேண்டி வந்தது."

"என்ன நடந்தது?"

"முகாமுக்குள்ளை இருந்த ஒரு தோழரைக் காணயில்லை எண்டு பிரச்சினை. அவன் சுகயீனமா இருந்தவன். இரவு மொட்டை மூர்த்தி 'சிக்கிரி போர்ட்' க்கு (சுகவீனமானவர்கள் தங்கியிருக்கிற கொட்டில்) போய் மெல்ல தட்டி எழுப்பி சுகம் விசாரிச்சவனாம். பிறகு மூத்திரம் விடப்போறியோ... உதவி செய்யிறன்" என்று கைத்தாங்கலாய் கூட்டிப் போனதை பக்கத்திலை படுத்திருந்த தோழர் கண்டவனாம். பிறகு பார்க்க யிக்கை போன தோழரைக் காணயில்லை. விடிய, எங்கை எண்டு கேட்டதற்கு அவன் ஓடிப்போயிட்டான் எண்டு பதில் சொல்லிச்சினம். கதை முகாம் முழுக்க பரவியிட்டுது. அவன் ஓடக்கூடிய நிலையிலை இல்லாததாலை சந்தேகம் வந்திட்டுது. பெடியள் குழம்பியிட்டாங்கள். இந்த அமர்க்களத்தை நிப்பாட்டுற துக்கு மதன் அண்ணை பிஸ்ரலாலை மேலை வெடிவைச்சவர். பிறகு அவன் புலியின்ரை உளவாளி அதாலைதான் அவனை விசாரிக்கிறம் எண்டு சொன்னாங்கள். அதோடை எல்லாம் அடங்கியிட்டுது."

இந்தக் கதை ரகுவுக்கு அதிர்ச்சியளித்தது. ஏதோ தவறு நடப்பது போல உள்மனம் சொல்லிக்கொண்டிருந்தது. அதே மனம் பிறகு ''சீ இருக்காது'' என்றும் சொன்னது. தீர்மானமாக முடிவுக்கு வர முடியாமல் குழப்பம் அவனை தீண்டியது. மீண்டும் முகாம் சூழ்நிலைக்குள் அவன் சங்கமித்தான்.

முகாம் பொறுப்பாளரான மதன் மெல்லிய தோற்றமுடைய வன். இராணுவக் கடுப்புடன் அவன் முகத்தை வைத்திருப்ப தில்லை. நெருங்கிக்கொள்ள தயக்கம் தராத முகத்தோற்றம் அவனுடையது. இன்னமும், முழுவதுமாக முகாம் ரகுவுக்கு பரிச்சயப்பட்டிருக்காத ஒரு காலைப் பொழுது. கூட்டம் கூட்டமாக கிசுகிசுத்ததை சந்தேகித்திராத ரகுவையும் அந்தச் செய்தி வந்தடைந்தது. ''மதன் முகாமைவிட்டு ஓடிவிட்டானாம்... புலியளின்ரை உளவாளியாம் அவன்'' என்றவாறு அது பரவியது.

அதிகாலை. இருள் இன்னும் முற்றாக உதிரவில்லை. சுமார் 320 பேர் பயிற்சிக்குப் புறப்படுவதற்கான படையணி நிலையில் எட்டு பிளட்டூன் பிரிவுகளாக நிற்கிறார்கள். திடீரென இரு கார்கள் வேகமாக வந்து முகாம் வாசலில் புழுதியெழுப்பி நின்றது. ஒரே களேபரம். திடுதிடுப்பென இறங்கியவர்கள் மதனை இழுத்துக் கொண்டு வந்தார்கள். அனைத்து முகாம் பொறுப்பாளர் ராஜன் வீராவேசத்தோடு வாகனத்திலிருந்து குதித்தான். மதனை கைப்பிடி யில் கைதியாக்கி வைத்திருந்தனர். மதன் மீதான தாக்குதல் தொடங்கியது. இப்போ பரேட் குலைந்து அரைவட்டமாகியது. நடுவில் மதன் தாக்கப்பட்டுக் கொண்டிருந்தான்.

எந்த உண்மையையும் அறியமுடியாத 'இராணுவ இரகசியம்' என்ற வன்முறை வசதிகொண்ட சூழலுக்குள் அவர்கள் விடப் பட்டிருந்தார்கள். அநியாயம் என்று தெரிந்திருந்தாலும் கூட அணிதிரள முடியாதவாறு தனிமனித உறவுநிலைகள், புனைவு அறிமுகங்கள், வெளிப்படைத் தன்மையற்ற நிலை என்பன முகாமுக்குள் கவனமாகப் பேணப்பட்டிருந்தன. எதிரியிடம் பிடிபட்டால் மற்றவர்களைக் காட்டிக்கொடுக்காமல் இருக்க இந்த முறைமை நடைமுறைப் படுத்தப்படுவதாக ஒரு தர்க்க ரீதியிலான காரணம் சொல்லப்பட்டது. இந்த உறவுநிலை முகாமுக்கு முகாம் ஏற்ற இறக்கமாக இருந்தது.

புலியின் உளவாளி என்ற உரப்பலில் தோழர்கள் உண்மையறி யாது குழம்பி நின்றார்கள். மீட்பர்கள் அடித்தார்கள். குதறினார்கள்.

‘சுந்தரம் படைப்பிரிவு’ என்று பெயர் சூடிக்கொண்ட அவர்கள் சுமார் ஆறு ஏழு பேரும் ஒரு பந்தைப் போல மதனை உருட்டி எடுத்துக் கொண்டிருந்தார்கள். இராணுவ ரீதியிலான திறமையிலும் இடதுசாரிய சிந்தனை முறையை நோக்கிய பயணத்திலும், பிரபாகரனையும் உமா மகேஸ்வரனையும் இடம்பெயர்க்கக் கூடிய ஆளுமையாக உருவாகிய சுந்தரத்தை 80 களின் தொடக்கத்தில் புலிகள் (ஓர் அச்சகத்தின் முன் வைத்து, மறைந்திருந்து) சுட்டுக் கொன்றார்கள். அப்போ சுந்தரத்தின் உடலிலிருந்து குருதி வெளியேறியது. இப்போ எஞ்சியிருந்த அவனது பெயரிலிருந்தும் சவுக்கம் காட்டில் குருதி வடிந்தது.

“நான் சொல்லுறதைக் கேட்டுப் போட்டு அடியுங்கோ..” என்று திரும்பத் திரும்ப மதனிடமிருந்து அழிந்தழிந்து உருக்குலைந்து வந்த வார்த்தைகள் ரகுவின் மனிதாபிமானத்தின்மீது தொங்கிக் கொண்டன. இவர்கள் ஏன் சொல்லவிடுகிறார்கள் இல்லை என்ற கேள்வி ரகுவை தாக்கியது. “என்னடா சொல்ல இருக்கு உனக்கு?... சுந்தரத்தின்ரை நினைவுதினத்துக்கு நாங்கள் டெல்லி றெயினிங் காம்பிலை உண்ணாவிரதம் இருக்கிறதுக்கு ‘மாட்டேன்’ எண்டு சொன்னனி. நீ புலியின்ரை ஆள்தான்ரா...நாயே..” என்றெல்லாம் கத்தினார்கள். செவிப்பறையையும் அச்சுறுத்துகிற வன்முறை வார்த்தைகளுடன் மதன் கிழித்தெறியப்பட்டான். இப்போ அவனது உடலில் பெனியனும் அரைக் காற்சட்டையும் மட்டுமே இருந்தது. இரத்தமும் புழுதியும் அவனுக்கு உடையணிந்து கொண்டிருந்தன. “உனக்கெல்லாம் என்னடா கழகத்தின்ரை பெனியன்” என்று கேட்டவாறு பெனியனை கிழித்தெறிந்தான் ஒருவன். காற்சட்டையையும் உருவினார்கள். கொட்டனால் அவனது முழங்காலை மீண்டும் மீண்டும் தாக்கினார்கள். “எழும்படா துரோகி” என்ற குரலுக்கு அவனால் செயல்பட முடியாத நிலையில் கையில் இழுத்து தூக்கினார்கள்... கீழே போட்டார்கள். சிதைந்து கிடந்த மதனின் முதுகில் ஏறிநின்றவாறு “கிறாவலிங் செய்யடா” என்று கட்டளையிட்டார்கள். அவனால் அசையவே முடியவில்லை. அடித்தார்கள். இரத்தம் புழுதியையும் வாரிக்கொண்டு உடலில் வழிந்தோடியது.

சுமார் அரைமணி நேரம் நடந்த இந்த புரியமுடியாத சம்பவத்தில் ரகுவின் மனம் கோணல்மாணலாய்ப் போனது. அவர்கள் மதனை கிழிசலாக்கி முகாமின் வலது பக்கத்திலுள்ள மூன்றாவது புதிய சித்திரவதை முகாமை நோக்கி இழுத்துச்

சென்றார்கள். யாராவது தப்பியோடும் எண்ணத்துடன் இருந்தி ருந்தால் அவர்கள் இவ்வளவு சித்திரவதைகளையும் உடலுக்குள் அனுபவித்திருப்பார்கள். அவர்களின் மனம் நாராய்க் கிழித்தெறி யப்பட்டிருக்கும்.

தோழர்கள் மீண்டும் படையணியாய் அடுக்கப்பட்டார்கள். பயிற்சி மைதானத்துக்கு அவர்களது கால்கள் நடந்தன. உற்சாகம் கொலைசெய்யப்பட்ட சாவீட்டிலிருந்து திரும்பியவர்கள்போல் அவர்கள் நடந்தார்கள். மதனை அவர்கள் புலிகளுடன் பொருத்திப் பார்க்க முயற்சித்தும் இருக்கலாம் அல்லது முடியாமல் அவதிப்பட்டும் இருக்கலாம். சோர்வாகவே இருந்தார்கள். வார்த்தைகளை தமக்குள் சிறைப்படுத்தி வெளியில் வந்துவிடாமல் பார்த்துக் கொண்டனர். பயிற்சிநேரம் முழுவதும் ரகுவுக்கு இருப்புக்கொள்ளவில்லை. எதையுமே தெளிவாக தெரிந்துகொள்ளும் பேச்சுக்கே அங்கு இடமில்லை என்றானபோது, அவனை இருத்திவைத்து ஊகங்கள் கதை சொல்லிக் கொண்டிருந்தன.

காலை பயிற்சி முடிந்து அவர்கள் திரும்பிக்கொண்டிருந்தார்கள். சூரியனின் காலைக் கதிர்கள் நீண்டு வளரத் தொடங்கியிருந்தது. அது சவுக்கம் காட்டை ஊடுருவி பிஞ்சு ஒளியை எறிந்துகொண்டி ருந்தது. சவுக்கம் பற்றைக்குள் கார் ஒன்று நின்றதை ரகு கண்டான். துப்பாக்கிச் சூட்டுத் துவாரங்கள் காரை முழுவதுமாக மேய்ந்தி ருந்தன. அன்று இரவு முகாமைச் சுற்றி டியூற்றிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. புலிகள் வந்து தாக்கக்கூடும் என்று கதையை விட்டார்கள் முகாம் பொறுப்பாளர்கள். மதன் காட்டிக்கொடுத்து விட்டான்... துரோகம் செய்துவிட்டான்... என்றெல்லாம் கதை பரவியது. ஓர் அச்சமான சூழல் விரவியிருந்தது.

சவுக்கம் காட்டுக்குள் இருந்த இரண்டாவது சித்திரவதை முகாமினுள் கைதியாக்கப்பட்டிருந்த விச்சு என்பவனையும் மதன் அழைத்துப் போனதாகவும், விச்சு தப்பிவிட்டான் என்றும் கதை விரிந்தது. விச்சு ஒரு பழைய போராளி. 70 களில் பலஸ்தீனப் பயிற்சிக்கான தொடர்பு ஈரோஸ் இயக்கத்தினூடாகக் கிடைத்த போது, அவர்கள் புலிகள் அமைப்புக்கும் இடங்கொடுக்க முன்வந்திருந்தனர். அப்போ உமா மகேஸ்வரனும் பிரபாகர னும் ஒன்றாக இணைந்திருந்த ஆரம்பகால புலிகள் அமைப்பிலி ருந்து உமா மகேஸ்வரனும் விச்சுவும் இந்தப் பயிற்சிக்கான

சந்தர்ப்பத்தை பெற்றனர். உமாவுடன் ஏற்பட்ட முரண்பாட்டால் விச்சு பயிற்சியை இடையில் கைவிட்டு திரும்பினார். தான் ஒதுங்கியிருப்பதாக சொல்லிக்கொண்டு, தனிமையாகத் திரிந்த விச்சுவின் நடவடிக்கைகள் மீது (புளொட் அமைப்பு உருவாகிய பின்) அவர்களுக்கு சந்தேகம் வரவே, சென்னையில் வைத்து விச்சுவை புளொட் கைதுசெய்தது. இப்போ இந்த 'நாலாம் மாடி'யில் (கொட்டிலில்) அவர் சிறைவைக்கப்பட்டிருந்தார்.. ரகுவுக்கு இந்த விபரங்கள் அப்போ தெரிந்திருக்க வில்லை. விச்சு ஓர் அரசியல் கைதி என்று மட்டும் அறிந்து வைத்திருந்தான்.

மதனின் மீதான சித்திரவதை காட்சிகள் ரகுவை தொந்தரவு செய்தன. அவனை உலுக்கியது, புலிகளின் மீதான அச்சமா அல்லது விசாரணையற்ற அணுகுமுறையா அல்லது போராளிகள் வன்முறையில் எந்த மட்டத்துக்கும் இறங்கி வெறியாட்டம் ஆடக்கூடிய ரவுடித்தனமா எது எனத் தெரியவில்லை. இதுகுறித்து கேள்வி எழும்பாமலோ அல்லது கேள்வி எழுப்ப முடியாமலோ இவளவு பேரையும் கட்டிப் போட்டது பயமா, விசுவாசமா, புலியெதிர்ப்பு கருத்து உருவாக்கமா அல்லது கூட்டுப் பிரக்ஞை இன்மையா.. என அவதிப்பட்டான். மதன் புலிகளிடம் முகாமைக் காட்டிக்கொடுத்தால் இவளவு போராளிகளினதும் நிலை என்ன வாகும் என்று பிறகு யோசித்தான்.

மதன் ஒரு பண்ணையாரின் வீட்டில் ஒளிந்திருந்ததை உளவுப் படை மோப்பம் பிடித்து அந்த பண்ணையார் வீட்டை நெருங்கி யிருக்கிறது. பண்ணையாரும் அவரது அடியாட்களும் துப்பாக்கி ஏந்தியிருந்தனர். துப்பாக்கிச் சமர் நடந்து பண்ணையார் கொலை யுண்டார். மதன் பிடிபட்டான். இவர்களின் கார் ஒருதொகை குண்டுகளால் துளைக்கப்பட்டிருந்தது. அந்தக் கார் இப்போ சவுக்கம் காட்டுக்குள் காயப்பட்டுக் கிடந்தது. அப்போ எம்ஜிஆர் முதலமைச்சராக இருந்த காலம். இந்த கொலை முறைப்பாடு செய்யப்பட்ட பதிவேட்டிலிருந்து பக்கங்களைக் கிழித்தெறிந்தார் எம்ஜிஆர். அந்த பண்ணையாரோ அல்லது அடியாட்களோ எம்ஜிஆருக்கு வாக்குக்கூட போட்டிருக்கலாம். என்ன விலை கொடுத்தாவது தமிழீழத்தை காண எம்ஜிஆர் ஆசைப்பட்டாரோ தெரியவில்லை.

ரகுவுக்கான இன்றைய டியூற்றி நேரம் காலை 10 மணி. தோழர் பரமுக்கும் அதே டியூற்றி நேரம். நொந்துபோன காலையிலிருந்து

தொடங்கிய இந்த நாள் நீண்டு இழுபட்டுக்கொண்டிருந்தது. ரகு நின்ற மூலைக்கு அருகில் சவுக்கம் காட்டுக்குள் இருந்தது, மதன் சிறையிடப்பட்ட சித்திரவதை முகாம். கூரை மேலும் கீழும் அசைந்து கொண்டிருந்தது. மதன் இப்போ 'உளன்றி'யில் (தலைகீழாக) தொங்கவிடப் பட்டிருக்க வேண்டும். விசாரணை செய்யும் உரப்புகள் கேட்டன.

ரதன் அருகிலுள்ள ஊரைச் சேர்ந்தவன். ஒரே கல்லூரியில் படித்தவர்கள். அவனும் ரகுவும் இதைவைத்துத்தான் தற்செயலாக அறிமுகமாகியிருந்தார்கள். அவன் வேறொரு முகாமில் பயிற்சி எடுத்துக்கொண்டு இருந்தவன்.

“இங்கை ஏன் வந்தனியள்?”

“நான் களவாக சிகரட் பத்தி பிடிபட்டிட்டன். பணிர்ஸ்மென்ற் ஆக இங்கு அனுப்பப்பட்டனான். முடிஞ்சபிறகு நான் திரும்பிப் போகயில்லை.”

“ஏன்?”

“மூர்த்தியண்ணை தன்னோடை இருக்கச் சொல்லியிட்டார். இருக்கிறன்.”

உண்மை அதைத் தாண்டிய குற்றமாக இருக்கலாம் என ரகு சந்தேகப்பட்டான். ஊரிலை தர்மனைத் தெரியுமோ... அவனைத் தெரியுமோ... இவனைத் தெரியுமோ... என்று தொடர்ந்த அறிமுகம் ரகுவையும் அவனையும் படிப்படியாக நெருங்க வைத்திருந்தது. மெல்லத் துளித்த பேச்சொழுக்கு சிறு தூறலாகி, பின் கோடை மழையாய்ப் பெய்ய ஆரம்பித்தது.

“இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கை வந்த உளவாளியளைப் பிடிச்சு விசாரணை செய்யத்தான் இந்த சித்திரவதை முகாம் எண்டு சொல்லிறாங்கள். அந்தளவுக்கு அவங்கள் இங்கை வாறாங்களா? ”

மெல்லியதாய் புன்னகைத்த ரதன் “அப்பிடியெண்டும் ஒருசில ஆட்களை கொண்டு வாறாங்கள்.”

“அவை சிங்கள ஆட்களா தமிழ் ஆட்களா? ”

“தமிழ் ஆட்கள்தான்”

“உங்களுக்கு நான் நம்பிக்கையிலை ஒண்டு சொல்லிறன். கவனம்... ஒருத்தருக்கும் சொல்லிப் போடாதையுங்கோ. நம்பிச் சொல்லிறன். தெரிஞ்சால் உங்களுக்கும் ஆபத்து, எனக்கும்

ஆபத்து'' என்றவன் அருகில் எவரும் இல்லாததை உறுதிப்படுத்தி யபடி சொன்னான்.

''முகாம்களுக்கை சந்தேகப்படும்படியா நடந்துகொள்ளிற பெடியளையும், முகாமைவிட்டு ஓடிப்போற பெடியளையும் பிடிச்சுக் கொண்டுவந்து விசாரிப்பாங்கள்.''

''அதுக்கேன் இங்கை கொண்டுவரோணும்.''

''அவங்கள் புலியின்ரை உளவாளியள் எண்டு சந்தேகம்தான் காரணம். இருக்கலாம்தானே. கவனமாத்தானே இருக்கோணும்.''

இப்போ ரதனும் இன்னும் நான்கு பேரும் மதனை உளன்றியில் தூக்கிய கொட்டிலுக்குள்ளிருந்து வருகிறார்கள். தமது ரீசேர்ட்டை கைகளில் வைத்திருந்தார்கள். உடல் முழுக்க வியர்த்தபடி விறு விறுப்பாக வந்தார்கள். கொட்டிலுக்குள் மதனின் ஈன ஒலியும் மொட்டை மூர்த்தியின் உரப்புகளும் நின்று போயிருந்தன. ரதன் ரகுவின் சென்றி பொயின்ற்றை தாண்டி போனவன், என்ன நினைத்தானோ தெரியவில்லை பின்னால் சில அடிகள் வைத்து ரகுவிடம் வந்தான். தாழ்ந்த குரலில் பேசினான்.

''மதனை உளன்றியில் தொங்கவிட்டிருக்கு'' என்றான்.

''விசாரணை நடக்குது. அண்டைக்கு உன்னோடை நிண்டு சென்றிப் பொயின்ரிலை மயங்கி விழுந்த (பரம்) தோழரை மூர்த்தி யண்ணை கூட்டிவரச் சொல்லியிருக்கிறார்.''

''ஏன்?''

''தெரியயில்லை''

ரதன் போய்விட்டான்.

ரகுவைத் தாண்டி பரம் டியூற்றியில் நின்ற இடத்தை நோக்கி ரதன் நடந்தான். இப்போ பரம் எதுவும் தெரியாதவனாய் அச்ச மடைந்தவனாய் ரதனுடன் போனான். சவுக்கம் இலைகளின் உரசலை உடைந்த பீங்கானின் உரசலாக அவன் நிச்சயம் உணர்ந்திருப்பான். கொட்டில் மீண்டும் மேலும் கீழும் ஆடியது. மரணத்தின் ஓலங்கள் நசிந்தபடி வெளியேறின. ''என்ன நடக்குது? அடுத்தது நான் போகவேண்டி வருமா'' என்ற பயம் ரகுவிடம் மேலெழுந்தது. இப்போ பரம் தலைகுனிந்தபடி வந்துகொண்டிருந்தான். அவன் முகம் இறுகிப்போயிருந்தது.

அவனிடம் பேச எழுந்த ரகுவின் அவாவை அச்சம் தடுத்தது. எச்சரிக்கையாக இருந்தான்.

இராணுவ இரகசியம் என்ற பெருஞ்சுவரால் தோழர்களுக்கு இடையிலான வெளிப்படைத்தன்மை தடுத்து நிறுத்தப்பட்டிருந்தன. அதையும் மீறி கதைகள் முகாமுக்குள் செட்டை முளைத்துத் திரிந்தன. முகாம் இரவுவேளையில் முணுமுணுத்தது. மதனை சிலர் ஏசினார்கள். “துரோகி... எப்படி காட்டிக் குடுக்க மனம் வந்தது...”என்றெல்லாம் திட்டினார்கள். சிலர் அழித்தழித்து தீர்ப்பெழுதினார்கள். சிலர் மவுனமாக இருந்தனர். புதிர் விடுபடுவதாயில்லை. முகாம் இரவு வேளையில் உசார்நிலையில் வைக்கப்பட்டது. புலிகள் வந்து தாக்கலாம் என்று கதை பரவியது.

பரம் தோழரை ரகு தனியாகச் சந்தித்தான். “ஏன் உன்னை கூட்டிக் கொண்டு போனவங்கள். அங்கை என்ன நடந்தது? யார் அங்கை நிக்கிறாங்கள்?“ என்றெல்லாம் அவதி அவதியாய் விசாரித்தான் ரகு. அவன் அழுதான். “தோழர்! என்னிட்டை ஒரு கொட்டனைத் தந்து மதனை அடிக்கச் சொன்னான் மொட்டை மூர்த்தி. என்னாலை முடியாமலிருந்ததடா. கை நடுங்கிச்சு. உனக்கு போராளியாகிறதுக்கு துணிவு காணாது. அதாலைதான் சென்றியிலை மயங்கி விழுந்தனி. அடியடா.. எண்டு கத்தினான். அவன் காலாலை என்ரை குண்டியிலை அடிச்சான். அடியடா... என்றான். பயத்தில நடுங்கி நடுங்கி அடிச்சன். அடிச்சனா தொட்டனா தெரியாது. என்னாலை முடியாமலிருந்ததடா...” என்றவாறு கண்ணீர்விட்டு அழுதான். “இங்கை என்ன நடக்குது எண்டு ஒண்டும் புரியயில்லை” என்றான். “மதனை தலைகீழாய் கட்டித் தொங்கவிட்டிருக்கிறாங்கள். செத்துக் கொண்டிருக்கிறான். பார்க்க முடியயில்லையடா” என்று விம்மி அழத் தொடங்கினான். மனங்குலைந்து போயிருந்தான் அவன்.

அன்று மாலை ஒளிமங்கி இருள் கருங்குருத்தாய் விரிந்து கொண்டிருந்த பொழுதில் ஒரு மோட்டார் சைக்கிள் வந்தது. கடவையின் அருகில் டியூற்றிக்கு நின்றவர்களுடன் ராஜன் கதைத்துக் கொண்டிருந்தது தெரிந்தது. கடவைக்கு உள்ளே -முகாமுக்குள்- அனைத்து முகாம் பொறுப்பாளர் என்ற முகமும், கடவைக்கு வெளியே -சவுக்கம் காட்டுக்குள்- உளவுப்படை பொறுப்பாளர் என்ற முகமுமாக அவனது முகமூடிகள் கடவையில் தொங்கின. மதன் சிறைப்பிடிக்கப்பட்ட நாலாம்

மாடியை நோக்கி நடந்தான் அவன். அன்றைய காலையை துவம்சம் செய்த காட்சிக்கான இசையை மோட்டார் சைக்கிளின் உறுமல் சத்தம் கறல் படிந்த இசைநரம்புகளால் ‘மெருகூட்டிவிட்டது’. அந்த சத்தம் ரகுவை பின்தொடரும் என அவன் அப்போது நினைத்திருக்க வில்லை.

## 7

பாண்டி புதிய முகாம் பொறுப்பாளராக பதவியேற்றிருந்தான். சிரிக்கும்போது நெருங்கக் கூடியவனாகவும் கடுப்புடன் நிற்கும் போது இடைவெளியை உண்டாக்குபவனாகவும் மாறிமாறி தோற்றமளிக்கக் கூடிய ‘நீரும் நெருப்பும்’ அவன். ஒருவேளை அப்படி பாத்திரமேற்று நடித்தும் இருக்கலாம். அவனது சிரிப்பில் கபடம் இருப்பதில்லை.

இன்று முகாமுக்கு புதிதாக கொஞ்சப்பேர் வந்திருந்தனர். ரகுவின் அரசடித் தோழன் மோகனும் அவர்களில் ஒருவன். அவனிடம் கதை கேட்டுக்கொண்டேயிருக்கலாம். துரும்பையும் சுவாரசியமாக விளக்கக்கூடிய அவனது ஆற்றல் தனி. அவன் பளபளக்கும் சிவப்பு அரைக்காற்சட்டையுடனும் ரீசேர்ட் உடனும், கையில் ரெனிஸ் விளையாடுபவர்கள் தூக்கிவருவது போன்ற ஒரு பையுடனும் வந்திருந்தான். முகாமுக்குள் அந்தத் தோற்றத்தில் யாரும் வந்ததை ரகு கண்டில்லை. றோல்கோல் மீற்றிங் நடந்த வேளையில் அவர்கள் வந்ததால் அங்கு நேராகவே வந்து அமர்ந்திருந்தார்கள். ரகுவுக்கு அவனை கண்டது சற்று சந்தோசத்தைக் கொடுத்தது. போய் அவன் அருகில் அமர்ந்தான். நக்கலாக மேலும் கீழும் பார்த்துவிட்டு “இடம் மாறி வந்திட்டாய் போலை” என சொன்னான். சிரிப்பை பரிமாறிக்கொண்டார்கள். முகாமுக்கு உணவுப் பொருட்களை ஏற்றிவந்த லொறியில் வந்ததால், மொட்டை மாடியிலிருந்து வந்திருக்கிறார்கள் என்பதை ஊகிக்க ரகுவுக்கு சிரமம் இருக்கவில்லை.

கூட்டத்தில் வழமைபோல் அலுப்படித்த பாண்டி “முகாமில் மருத்துவப் பிரிவுக்கு பொறுப்பாக ஒருவர் தேவையாக இருக்கிறது. இதுவரை வேலைசெய்த தோழர் வேறு முகாமுக்குப் போய் விட்டார்” என்றான். அவன் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மருத்துவ பீடத்து மாணவனாக இருந்தவன்.

பாண்டி, "இங்கை யாராவது மருத்துத்துறை படிப்புக்கு யூனிவேர்சிற்றி போன ஆட்கள் இருக்கிறியளா" எனக் கேட்டான். பதில் குரல் எதுவுமில்லை. "சரி... ஏ.எல் இலை பயோலஜி (உயிரியல்) படிச்சாக்கள் யாராவது இருக்கிறியளா?" என கேட்டான். காத்திருந்ததுபோல உடனே மோகன் கையை உயர்த்தினான். "என்னடா நீ கையை உயர்த்திறாய்" என்று ரகு காதோரம் கேட்க, "சும்மா இரடா" என்றான். இவன் கல்லூரியில் உயர்தர வகுப்பு (ஏ.எல்) கணிதப் பிரிவில் படித்தவன். இப்போ முகாமில் உயிரியல் பிரிவு! சுவாரசியம் இருக்காதா என்ன. பாண்டி அவனை அழைக்கிறான். அவன் 'டாக்குத்தர்' ஆனான். கையில் ஒரு 'சொப்பிங் பாக்'இல் சொரியலாக குளிசைகளை கொடுக்கிறான் பாண்டி. அதற்குள் ஒரு 'லிஸ்ற்' இருந்தது. கடுங்காய்ச்சலுக்கு வெள்ளைக் குளிசை, மெல்லிய காய்ச்சலுக்கு மஞ்சள் குளிசை, வயிற்றாலடித்தால் சின்ன சிவப்புக் குளிசை, தலைவலிக்கு பெரிய நீளமான வெள்ளை குளிசை... என்றவாறெல்லாம் அதில் எழுதப்பட்டிருந்தது. இந்த லிஸ்ரை தொலைத்தால் இவனின் கதி என்ன என்று நீங்கள் நினைக்கக் கூடும். அப்போதும்கூட அவனால் டாக்குத்தராக பணியாற்ற முடியும் என்பது ரகுவுக்குத் தெரியும்.

"ஏன்ரா நீ பொய்சொன்னனீ? "

"நான் மொட்டை மாடியிலை எல்லாம் கேள்விப்பட்டிட்டன். 'சிக்கிறி போர்ட்'க்குப் பொறுப்பாயிருந்தால் ஒழுங்காக றெயினிங் எடுக்கத் தேவையில்லையாம். நீ பேசாமல் இருந்தால் காணும்" என்றான். சிக்கிறி போர்ட் ஒரு தனிக் கொட்டில். சுகவீனமுற்ற வர்களை பாய்ப்படுக்கையில் வைத்திருக்கும் இடம் அது. பயிற்சி எடுக்காமல் விடுவதற்கு சாட்டுச் சொல்பவர்களும் டாக்குத்தனின் அனுமதியுடன் அங்கு தங்கலாம். தண்ணி கலக்காத பாலும் குடிக்கலாம்.

முகாமுக்கு ஒவ்வொரு நாள் காலையிலும் பால் கொண்டு வருவார்கள். முதலில் இந்த சிக்கிறி போர்ட் க்கு பாலை எடுத்துவிட்டு மிகுதியை பெரிய அண்டாவுக்குள் ஊற்றுவார்கள். பிறகு தண்ணியை வாளியால் ஊற்றுவார்கள். இப்போதும் அது வெள்ளை நிறத்தில்தான் இருக்கும். அதில்தான் கோப்பி தயாராகும். இந்த சிக்கிறி போர்ட் க்குள் எப்பவும் ஒரு நாலைந்து பேர் படுத்துக் கிடப்பார்கள். ஒருவருக்கும் வருத்தம் வராவிட்டால் டாக்குத்தன் தனது நண்பர்களைக் கெஞ்சுவான்.

ஒருவருமே இல்லாத நாட்களில் அவனும் பயிற்சிக்குப் போக வேண்டி வரும் என்பதால் இந்த ஏற்பாட்டை அவன் செய்துகொள்வான். அந்த நேரங்களில் அவன் ரகுவுக்கு தொந்தரவு கொடுப்பான். "டேய் வாடா.. சுகமில்லையெண்டு இரண்டு நாளைக்கு கிட. நாங்கள் முசுப்பாத்தியா கதைக்கலாம்" என்பான். ரகு போவதேயில்லை. போராட்டத்தின் மீது அவளவு பற்று ரகுவுக்கு.

ஒருநாள் தோழர் ஒருவர் வயிற்றைப் பிடித்தபடி நின்றார். "ஒரே வயிற்றாலையடி தோழர்" என்றான் அவன். "மலம் தண்ணியாப் போகுதா கட்டியாப் போகுதா? எத்தனை தரம் போனது? போகயிக்கை வயிற்றை முறுக்குதா? மலவாசல் எரியிறதா?..." என்றெல்லாம் கேள்விகள் கேட்ட டாக்குத்தன் தோழரின் வயிற்றை பக்கவாட்டில் நடுவில் என விரலால் அமர்த்திப் பார்த்து "இங்கை நோகுதா... அங்கை நோகுதா" என்றெல்லாம் கேள்விகளாய்க் கேட்டான். தோழர் அப்பாவித்தனமாய்ப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார். "அப்ப நீ இந்த மருந்துதான் எடுக்கவேணும். இந்தா இந்த மருந்தை ஒரு நாளைக்கு மூன்று தரம் எடு." என்று குளிசையை நீட்டினான். வயிற்றாலடிக்கு அவனிடம் இருந்தது அந்த ஒரேயொரு வகைக் குளிசை மட்டுமே என்பதை இந்த டாக்குத்தரப் பாத்திரத்தை காணநேரும் எவருமே நினைத்துப் பார்க்க இடமில்லை. அவளவு 'நேர்த்தியாக' அவன் வைத்தியம் பண்ணினான்.

பயறு, பால், கடலை, மதியம் சோறு இவைகளை கண்டுகண்டு சலிக்கும் மனம் பாணை ஆவலோடு எதிர்பார்த்து வரவேற்கும். ஒவ்வொரு ஞாயிறன்றும் எல்லா முகாம் தோழர்களுக்கும் காலைச் சாப்பாடாக பாண் (bread) கொடுப்பார்கள். ஆசையுடன் சாப்பிடுவர் தோழர்கள். 'நாலு கிழமை ஒரு மாதம்' என்று மனப் பாடம் செய்து வைத்திருந்ததை, இப்போ 'நாலு பாண் ஒரு மாதம்' என்று டாக்குத்தன் திருத்தி சொல்லிக்கொள்வான்.

பின்னேரங்களில் முகாமின் முற்றத்தில் வைத்து வழங்கப்படும் கராத்தே பயிற்சியில் டாக்குத்தரும் பங்குபற்றுவான். அவன் ஊரிலேயே கராத்தே பயிற்சி கற்றிருந்ததால் அதிக ஆர்வம் காட்டி னான். தான் சோம்பேறியில்லை என்பதைக் காட்டவேண்டி யுமிருந்தது அவனுக்கு. கராத்தே பயிற்சியை வழங்கிய தோழர் ஊரில் கராத்தே மாஸ்ரராக இருந்தவர். வாகுவான உடலமைப்பு.

தாடி வைத்திருப்பார். அளவாகப் பேசும் அவரிடம் நிறைய விசயம் இருக்கலாம் என ரகு நினைத்தான். ஒருநாள் கழகத்தின் கொடியைப் பற்றிய விளக்கத்தை அவரிடம் கேட்டான் ரகு. ஆனந்தனும். சிங்கப்பூரும் அருகில் நின்றிருந்தனர்.

"தமிழீழத்தை எடுக்கிறதே பெரும் பிரச்சினை. இதுக்கை உலகவிடுதலை எண்டெல்லாம் நாங்கள் ஏன் வீணாய்க் கதைக் கோணும். அதை நாங்கள் செய்யவா போறம்? எங்களாலை ஏலுமா அது? " என்றான் ஆனந்தன்.

கராட்டித் தோழர் விட்டுக்கொடுக்காமல் கதைத்தார். "முக்கிய மான கண்ணிகளில் விழும் அடி உலகையே உலுக்கக்கூடியது. இலங்கை ஒரு முக்கியமான கண்ணி. அதில் நடக்கும் புரட்சி உலகைப் பாதிக்கும். மற்றைய நாடுகளின் புரட்சிக்கு வித்திடும் அல்லது உந்துதலாக இருக்கும்" என்றார். கேட்டவர்கள் விலகிச் செல்லும் போது சிங்கப்பூர் சொன்னான்,

"நீ பார்க்கயில்லையா சங்கிலி குறொஸ் பண்ணிற இடத்திலை தான் அடிக்கிறாங்கள். அதைத்தான் கண்ணி எண்டுறது" என்றான்.

சிங்கப்பூரில் வேலைசெய்துகொண்டிருந்த அவன் தமிழீழ விடுதலைக்கு போராட, வேலையை தூக்கியெறிந்துவிட்டு ஊரில் வீட்டாருக்கும் தெரியாமல் வந்திருந்தான். உடற்பயிற்சியில் அவனது உடல் இரப்பர் போல வளைந்து கொடுத்தது. பயிற்சியை நன்றாகவே அவன் செய்ததால் இடையிடையே அவனே இந்தப் பிளட்டூனின் உடற்பயிற்சியை மேற்கொள்பவனாக பிரதியிடப்படுவது வழமையாக மாறியது. அவனது கலாய்ப்புடன் ரகுவின் இந்த எட்டாவது பிளட்டூன் கொட்டிலில் படிப்படியாக சிரிப்புகள் கேலிகள் என களைகட்டத் தொடங்கியது. சுவாரசி யமாப் பேசியபடியே இருப்பான். கழகப் பெயரையும் தாண்டி அவனுக்கு சிங்கப்பூர் என்ற புனைபெயர் பொருந்திப் போனது.

தோட்ட வேலையில் உடல் முறுக்கேறிய தோழன் கணன். நரம்பன்போல் காட்சிதருவான். அவன் எதையுமே இலகுவாக எடுத்துக் கொள்வது வழக்கம். இறகுபோல் தரையிலிருந்து மேலெழுந்து திரிவான். அவனது பாதங்களில் ஆணிகள் முளைத் திருக்கவில்லை. நடனமாடுவதுபோல சுழன்று திரிவான்.

"நீ எப்பியடா இயக்கத்துக்கு வந்தாய்?" என்று கேட்டான் சிங்கப்பூர்.

“அதென்ன தோழர்... நான் பொயிலைக் கண்டுக்கு மருந்தடிச்சுக் கொண்டு நிண்டனான். அப்ப எங்கடை அரசியல் பொறுப்பாளர் அவசரமாக வந்தான். வண்டி இண்டைக்குப் போகுது. ஒரு இடம் இருக்கு வா எண்டான். அப்பிடியே மருந்தடிக்கிற பம்ப்பை ஆடு கால் கட்டில் கழற்றிவைச்சிட்டு வந்திட்டன்... யார் எடுத்தானோ என்ரை பம்ப்பை... தெரியாது” என்றான். தான் பம்ப்பை கழற்றி வைத்த அந்த உடல் அசைவை இலாவகமாக தனிநபர் நடிப்பாக நடித்துக் காட்டினான்.

“ஒண்டும் யோசியாதை. உன்ரை பம்ப் காணாமல் போனால் இன்னொருத்தனட்டையிருந்து பறிக்கிறதுதானே. இயக்கத்திலை சேர்ந்து இதைக்கூட செய்யேலாட்டில் எதைச் செய்யிறது” என குசும்பாக பேசினான் சிங்கப்பூர்.

“பறிக்கயிக்கை புதுப் பம்ப்பாக பார்த்து பறிச்சால் போய்ச்சு” என்றான் கணன்.

ஒவ்வொரு நாளும் சிலர் ஆயுத வகுப்புக் கொப்பியைத் திறந்து ஆயுதங்களில் விழித்து நாளை தொடங்குவதுபோல, கணன் தலைமாட்டில் செங்கல் வரப்புக்கு இடையில் விரலைத் தேய்த்து நெற்றியில் பூசிவிட்டு அன்றைய நாளைத் தொடங்கு வான். பிளட்டூன் கொட்டிலைச் சுற்றி அதன் தாழ்வாரப் பகுதிக்கு உள்ளே செங்கற்களால் வரப்புப் போடப்பட்டிருக்கும். அவை தோழர்களின் தலையணையாக தேய்ந்தும் போயிருக்கும். அதில் தலைவைத்துப் படுப்பது பழக்கப்பட்டு விடும். இவனது இந்த மண்பூச்சு மண்ணின் மீதான அவனது பற்று என பலரும் நினைத்தனர். தமிழீழத்தை வணங்குகிறான் என கிண்டலடிக்கும் சிங்கப்பூருக்கு சந்தேகம் வந்திருக்க வேண்டும். அவன் ஒருநாள் அந்த இரு செங்கற்களுக்கு இடையில் புகுந்து பார்த்தான். அங்கு பிள்ளையார் ஒளிந்திருந்ததைக் கண்டான். இரண்டு ரூபா அளவிலான ஒரு வட்ட தகட்டில் அவர் தும்பிக்கையுடன் இருந்தார். அவரை வெளியே மீட்ட சிங்கப்பூர் தூக்கிக் காட்டி, “பிள்ளையார் கூட றெயினிங் எடுக்க வந்திட்டார்” என்றான். எல்லோரும் சிரித்தனர். கணனின் முகத்தில் சிரிப்பு அசடாக வழிந்தது.

அவனருகில் உட்கார்ந்திருந்த ரகு, “இதில சிரிக்க என்ன இருக்கு” என்றான். இடதுசாரிகளாக இருந்த பலர் கோவில் கும்பிட வருபவர்களை கிண்டல் செய்ததையும் பின்னர்

அவர்களே கோவிலை விழுந்து விழுந்து கும்பிட்டதையும் அவன் கண்டிருக்கிறான். தனித்து விடப்பட்டதாக உணர்ந்த கணனை ரகு இந்த விடயத்தைச் சொல்லி அரவணைப்பாக நின்றான்.

“சோசலிசம் பற்றிப் பேசுறதாலை கடவுளை மறுப்பவர்களாக இருக்க வேணும் அல்லது பாசாங்கு செய்ய வேணும் எண்டது ஒரு நிபந்தனையல்ல. கடவுளின்ரை இருப்புக் குறிச்ச விசயம் மனிதகுல வரலாற்றோடை தொடர்புடையது. கடவுளின் பெயராலை அநியாயம் செய்யிறவங்களும், குறிப்பா மதவாதியளும் கடவுளை வைச்சு பிழைப்பு நடத்திறவங்களும் கடவுளை பிரக்ஞைபூர்வமா நம்புறதில்லை. பிரக்ஞைபூர்வமா நம்புற சாமான்ய மனிதர்தான் ஊனுருகி வணங்கிறாங்கள். அதைப்போல கடவுளை அறிவாலை மறுக்கிறவங்கள் எல்லாரட்டையும் பிரக்ஞைபூர்வமான மறுதலிப்பு இருக்கும் எண்டு எதிர்பார்க்கவும் ஏலாது. இயற்கை சம்பந்தப்பட்ட புதிர்களையும் உயிர் சம்பந்தப்பட்ட புதிர்களையும் முற்றுமுழுதா விஞ்ஞானம் விடுவிக்கிறது சாத்தியமில்லாத நிலையிலை, அதை வைச்சு மரபு ரீதியாக கைமாறப்பட்டுக் கொண்டிருக்கிற, தர்க்கங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்கிற நம்பிக்கைகளை முழுசா களையிறது அவளவு இலகில்லை. அது இடதுசாரிகள் சிலரை -கட்சியை விட்ட பிறகு- கோவிலுக்கு போகவைக்குது. நாளைக்கு இயக்கத்தை விட நேர்ந்தால் அல்லது இயக்கம் இல்லாமல் போனால் அல்லது தமிழீழம் கிடைச்சால் அதுக்குப் பிறகு எங்களிலை எத்தினை பேர் இப்பிடி விழுந்து விழுந்து கும்பிட ஆரம்பிப்பம் எண்டு தெரியாது” என்றான் காஸ்ரோ.

“கடவுள் இருக்கிறார் எண்டதை எப்பிடி ஆதாரத்தோடை நிறுவ முடியாதோ அதேமாதிரித்தான் கடவுள் இல்லை எண்டதையும் ஆதாரத்தோடை நிறுவ முடியாது. அதுவும் நம்பிக்கை. இதுவும் நம்பிக்கைதான். அதாலைதான் நாத்திகத்தையும் ஒரு மதம் எண்டு சிலர் சொல்லக் கேட்டிருக்கிறன்” என்றான் ஆனந்தன்.

“கடவுள் அரூபமானவர் எண்டு சொல்லிறதின் மூலம், புலன்வழி நிரூபிச்சுக் காட்டேலாது எண்டு அவங்கள் தப்பிப் போறாங்கள். நாங்கள் காரண காரியத் தொடர்பற்ற நம்பிக்கையளை மறுக்கிறம். அவளவுதான்” என்றான் கஸ்ரோ

“என்ரை அப்பர் ஒரு கதை சொல்லுவார். ஒரு பெடியன் தும்பியின்ரை வாலிலை நூலைக் கட்டி பறக்கவிட்டு விளையாடிக்

கொண்டிருந்தான். அந்த வழியாலை வந்த மதகுரு ஒராள் 'தம்பி இப்பிடி விளையாடக்கூடாது. நீ இப்பிடி உயிரை வருத்திறதாலை அடுத்த பிறவியிலை நீ தும்பியாகவும் தும்பி நீயாகவும் கடவுள் படைச்சிடுவார். பிறகு நீ இந்தத் தும்பியின்ரை வலியை அனுபவிக்க வேண்டி வரும்' எண்டிருக்கிறார். அதுக்கு அந்தப் பொடி 'போன பிறவியிலை நான் தும்பியாக இருந்தாலைதான் இப்ப இப்பிடி செய்யிறன்' எண்டானாம்'' என சிங்கப்பூர் சொல்லி சுவராசியமாக்கினான்.

''கடவுளை மறுப்பது எண்டது முக்கியமில்லை. கடவுளின்ரை பெயரால் மனிசராலை உருவாக்கப்பட்ட மதம்தான் பிரச்சினை. மதம் எல்லாக் காலத்திலையும் அழிவைத்தான் தந்திருக்கு. இப்பவும்கூட அதன் பெயராலை நடக்கிற அட்டகாசங்கள் ஓய்ஞ்ச பாடில்லை'' என்றான் ஆனந்தன்.

''மதங்களை மறுத்தல் என்பது கடவுளர்களை மறுத்தல் என்பதில்தான் முழுமைபெறும்'' என்றான் ரகு.

''எங்களுக்கு மேலை ஒரு சக்தி இருக்கு எண்டு நான் நம்புறன். மனிசரை நல்வழிப் படுத்தத்தானே மதங்கள் வந்தன'' என்றான் கணன்.

''மதங்கள் மனிசரை நல்வழிப்படுத்தத்தான் உருவாகினவை எண்டு சொன்னால், கடவுளின்ரை பெயராலை செய்யுற அநியாயங்களுக்கும் அல்லது அநியாயம் செய்திட்டு விழுந்து விழுந்து கடவுளை கும்பிடுறதுக்கும், பாவமன்னிப்பு கேட்கிறதுக்கும் கடவுள் ஒத்துக்கொள்ளுவரெண்டால் எதுக்கு மதமும் கடவுளும்!. இல்லை, கடவுள் இதுகளை ஏற்றுக்கொள்ளாதவர் எண்டால், தன்ரை வாழ்க்கையிலை நேர்மையா இருப்பவரையும், மற்றவர்க்கு தீங்கிழைக்காதவரையும், சகமனிதரை அரவணைப்பவரையும் உதவுபவரையும் அவர் ஏற்றுக் கொள்ளுவார் தானே. இவைகளை கடைப்பிடிக்க ஒருவர் மத அடையாளத்தோடை இருக்கவேணுமா என்ன. நாம ஏன் பயப்பட வேணும். ஏன் மதத்தை ஏற்றுக்கொள்ள வேணும்? மனிசரா முதலிலை இருக்கப் பழக வேணும்'' என்றான் ஆனந்தன்.

ஒரு கடுமை அந்த இடத்தை ஆக்கிரமித்தது. சிரிப்பு பொலிவிழந்து போனது. சிங்கப்பூர் பிள்ளையாரை அதே இடத்துக்கு கொண்டுபோய் விட்டான். இதுக்கெல்லாம் இவளவு விளக்கமா

என்பதுபோல் அவனது உடல்மொழி இருந்தது. அதை திரும்ப கையில் எடுத்த கணன் விரல்களுக்குள் வைத்து சுற்றிக்கொண்டிருந்தான். திரும்ப அதே இடத்தில் வைத்தான்.

## 8

"நான் என்ரை உழைப்பிலை கஸ்ரப்பட்டு ஒரு றலி சைக்கிள் புதுசா வாங்கியிருந்தன். என்னையும் திடீரெண்டு கூப்பிட்டாங்கள். வரயிக்கை அவங்களிட்டையே சைக்கிளை விட்டிட்டு வந்திட்டன். வீட்டை கொண்டுபோய் கொடுக்கிறம் எண்டாங்கள். கொடுத்திருப்பாங்கள்" என நம்பிக்கையோடு சொல்லிக் கொண்டிருந்தான் சிவன். உழைப்பின் சுவடுகள் அவனது மார்பில் பதிந்திருந்தன. ஒரு 3 மாதத்தில் பயிற்சி முடித்து திரும்பி வரலாம் என இவனுக்கும் அவர்கள் சொல்லியிருக்கக் கூடும்.

இவனது பக்கத்து ஊரவனான சங்கர் ஒருபோதும் இவனுடன் பழகியதை ரகு கண்டில்லை. ரகு படித்த அதே கல்லூரியில் மாணவ ஒழுங்கு நெறியாளனாக (Prefect) இருக்கும் காலங்களில் சங்கரின் ஐந்து நிமிட அதிகார பாவனை பலரையும் வெறுப்புறச் செய்யும். அவன் வகுப்பு நடைபாதையில் கண்காணித்தபடி அங்குமிங்குமாக காவல் நடை பயிலும்போது ரகுவின் வகுப்பில் அமைதியை யாராவது உடைத்துக் காட்டிவிட்டு பேசாமல் இருந்துவிடுவார்கள். இப்பவும் அதே திமிருடன் இருந்தான்.

ஒருநாள் அவன் பக்கத்துத் தோழனிடம், "சாப்பாட்டுக்கு வழியில்லாதவனெல்லாம் இயக்கத்துக்கு வந்திடுறாங்கள். ஒரே தட்டிலை வேறை சாப்பாடு!" என்று உமிழ்ந்த வார்த்தைகளில் சிவன் ஆத்திரமுற்றான். அதை மனதுக்குள் புதைத்து வைத்தான்.

"என்ன தோழர் கதைக்கிறியள். இயக்கம் சோசலிசத்தைப் பற்றிக் கதைக்குது. நீங்கள் என்ன இப்பிடி இருக்கிறியள்" என்றான் ரகு.

"தோழர் இடம் மாறி வந்திட்டார்" என சிங்கப்பூர் இணைத்துச் சொன்னான்.

சங்கர் ஒன்றும் பேசவில்லை. மறுநாள் மாலைச் சாப்பாட்டு நேரம் சிவன் கூரைக்குள் சொருகி வைத்த தனது தட்டைத் தேடினான். காணவில்லை. ரகுவும் சேர்ந்து தேடினான். கிடைக்க

வில்லை. சங்கரையும் காணவில்லை. இப்போ ரகுவும் சிவனும் வரிசையில் ஒரு தட்டுடன் நின்றார்கள். அதைக் கவனித்த பாண்டி "தட்டு எங்கை" என சிவனிடம் கேட்டான். "காணயில்லை" என்றான் சிவன். பாண்டி இவர்களது கொட்டிலுக்குச் சென்றான். கூரைக்குள் தட்டு சொருகியிருந்தது. தட்டுடன் வந்த பாண்டி அது சிவனுடையதுதான் என்பதை கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டான். "றோல்கோல் மீற்றிங் முடிய என்னை வந்து சந்தியும்" என்றுவிட்டுப் போனான்.

பாண்டி "தட்டை வடிவாக தேடினீரா" என்றபோது, "ஓம்.. ரகுவும் சேர்ந்து தேடியும் காணயில்லை" என்றான். "உனக்கு யார் மீதாவது சந்தேகம் இருக்கா" என கேட்க அவன் சங்கரின் குத்தல் பேச்சுகள் குறித்து பாண்டியிடம் சொன்னான். சங்கரை அழைத்தான் பாண்டி. சங்கர் தான் செய்யவில்லை என மறுத்தான். தான் எதுவும் குத்தலாக பேசுவதில்லை சிவன் பொய் சொல்கிறான் எனவும் சாதித்தான். இருவரும் எச்சரிக்கை செய்யப்பட்டு விடப்பட்டனர்.

சில நாட்களின் பின் சிவனின் ஆயுதத்தில் (சவுக்கம் கொட்டனில்) என்ஏ (Na) என கூர்முனை ஒன்றினால் கீறி அடையாள மிடப்பட்டு இருந்தது. அதைக் கண்ட சிவன் ஆத்திரமுற்று, சங்கரை ஓங்கி காலால் உதைத்தான். சலசலப்புத் தோன்றியது. மற்றைய தோழர்கள் விலக்குப் பிடித்து விட்டனர். பாண்டிக்கு செய்தி போய்விட்டது. பாண்டி சிவனுக்கு அரை மணி நேர உடற்பயிற்சித் தண்டனையை வழங்கினான். சிவன் தனது பக்க நியாயத்தை சொல்ல பாண்டி அனுமதிக்கவில்லை.

பின்னர் சிவனை அழைத்து பாண்டி தனியாகக் கதைத்தான். "ஒபே த ஓடர்" (Obey the Order). சக தோழன் மீது வன்முறை நிகழ்த்தியது தவறு. இராணுவத்துக்கு ஒழுக்கம், கட்டுப்பாடு முக்கியம் என்று சாதித்தான். அதன்மூலம் தனது அணுகுமுறைக்கான நியாயப்பாட்டை முன்வைத்தான். வன்முறை என்பதை உடல் ரீதியிலானதாக மட்டும் பாண்டி பார்த்தான் அல்லது இராணுவ ஒழுக்கம் பார்த்தது. "இப்ப நீர் சொல்லும்" என்றான். சிவன் நடந்ததைச் சொன்னான்.

பாண்டி பிளட்டுனுக்கு வந்தான். "சிவனின் ஆயுதத்தில் அப்படி எழுதினது யார். நீயா" என சங்கரைப் பார்த்துக் கேட்டான். அவன் இல்லை என்று தலையாட்டினான். வேறை ஆராவது

செய்திருந்தால் அல்லது கண்டிருந்தால் தனிப்பட என்னட்டை வந்து சொல்லலாம். திருந்த சந்தர்ப்பம் கொடுக்கலாம். இல்லாட்டில் மோசமான தண்டனைக்கு உள்ளாக நேரிடும். கழகம் ஒருக்காலும் இதை அனுமதிக்காது'' என கண்டிப்புடன் சொன்னான். அங்கு அமைதி நிலவியது. சங்கரும் பேசாமல் நின்றான். பாண்டி போய்விட்டான்.

ரகு சங்கரை தனிய சந்திக்கும்போது ''நீ இதைச் செய்திருந்தால், தயவுசெய்து இத்தோடு திருந்தப் பார். அவனுக்கும் கூடாது. உனக்கும் கூடாது'' என்று ஒரு புத்திமதி பாணியில் சொன்னான். அது சங்கருக்கு எரிச்சலூட்டியிருக்க வேண்டும். ''நீ என்ன மற்றாக் களுக்கு வக்காலத்து வாங்க வாறியா'' என்றான் சங்கர். ரகு மேற்கொண்டு எதுவும் பேசாமல் நகர்ந்தான்.

சிவன் ஏழ்மையான குடும்பத்தில் தனது தம்பியுடனும் தங்கை யுடனும் வாழ்ந்து வந்தவன். அவனது வீடு ஒரு குடிசை. தகப்பன் ஒருமுறை சறுக்கி விழுந்து கால் பாதிக்கப்பட்டதால் பெரிய வேலைகள் எதுவும் செய்ய முடியாத நிலை உருவாகியது. சிறிய கூலித் தொழில்களுக்கு போய் வந்தார். அதனால் குடும்பம் சிவனில்தான் தங்கியிருந்தது. சகோதரங்களின் படிப்பும், குடும்ப மும் என்னவாகப் போகுதோ தெரியாது என்றபடி சோகமாய் இருந்தான். அவன் இப்போது மிக அதிகமாக தனது குடும்ப நிலையை உணர்ந்தவனாக அவதிப்பட்டது தெரிந்தது. ''என்ரை சைக்கிளை கொண்டுபோய் தம்பியிட்ட குடுத்திருப்பாங்கள் தானே'' என அவன் ஒரு குழந்தைபோல் கேட்டான். அவனிடம் இழப்பதற்கு வேறேதும் இல்லை. அதேநேரம் அவனிடம் தார்மீகக் கோபம் இருந்தது. அதை அவன் இழக்க முடியாது. ரகு அவனுடன் நெருக்கமாக, பக்கபலமாக இருந்தான். ரகுவுக்கு ஜெயவீரசிங்கத்தின் நினைவு வந்தது.

ரகு ஆறாம் வகுப்பில் படிக்கும்போது தாழ்த்தப்பட்ட மக்களின் பிள்ளைகளுக்கென கடைசி வரிசையில் போடப்பட்ட வாங்கு ஒன்றில் ஜெயவீரசிங்கம் மட்டுமே அமர்ந்திருப்பான். மற்றைய எல்லோருமே தனித்தனியான மேசை கதிரையில் இருப்பார்கள். தனியாக இருக்கும் ஜெயவீரசிங்கத்தைப் பார்க்க ரகுவுக்கு மனதை நெருடும். அவன் தானும் போய் அந்த வாங்கில் இருந்துவிடுவான். அதற்காகவே ஆங்கில ஆசிரியை கமலா ரீச்சரிடம் தண்டனை பெற்றிருக்கிறான். மேசைமேல் உள்ளங்கையை வைக்க கட்டளை

யிடப்பட்டு, விரல் மொழியில் அடிமட்டத்தின் விளிம்பால் பலமுறை அடிவாங்கியிருக்கிறான். சொல்லிக் களைத்துப்போன கமலா ரீச்சர் அதே பாடசாலையில் படிப்பித்த ரகுவின் தந்தையையும் அழைத்து தலைமை ஆசிரியரிடம் போனார். "சொல்லச் சொல்ல இவன் அந்த வாங்கிலில் போய் இருக்கிறான் சேர்" என்று முறையிட்டார். தலைமையாசிரியர் தந்தையாரை விழியால் கேள்வி கேட்டார். "அவன் விரும்பிற இடத்திலை போய் இருக் கட்டும். அது அவன்ரை சுதந்திரம்" என்றுவிட்டு ரகுவின் தந்தை விசுக்கென கிளம்பிப் போய்விட்டார். இப்போ சிவனில் ஜெயவீரசிங்கத்தைக் கண்டான் ரகு.

சில நாட்களின் பின் ஒரு தொகுதி போராளிகள் வழமைபோல் உயர் பயிற்சியைப் பெற வேறு முகாமுக்கு இடமாற்றமாகினர். அதற்குள் சங்கரும் ஒருவன். கடைசியாக உருவாகிய பிளட்டூனிலிருந்து சங்கர் அவர்களுள் ஒருவனாக இணைக்கப்பட்டிருந்தான். இது வழமையான முகாம் நடைமுறைக்கு மாறாக இருந்தது.

# 9

இன்று சனிக்கிழமை. நாளை ஓய்வுநாள். மாலையில் முகாம் சற்று சிலிர்த்தெழுந்தது. முகாம் முற்றத்தில் ஒரு சிறிய தொலைக் காட்சியை மேசையொன்றின்மீது வைத்தார்கள். படம் காட்டப் போகிறார்கள் என்றதும் உலகைத் துண்டித்துக் கிடப்பவர்களிடம் மகிழ்ச்சி மயிர்நுனி வரை பரவியது. வீரபாண்டிய கட்டப்பொம்மன் படம். "அட...சீ இதுதான் கிடைச்சுதா இவங்களுக்கு" என்றான் டாக்குத்தன். ஒரு சிறீதேவியை, காஞ்சனாவை, சிலுக்கை காட்டவே மாட்டாங்களா. பரதேசியள்" என்று வேறு அடக்கி வாசித்தான். யார் காதிலும் விழுந்திடப்படாது என்பதை சுற்று முற்றும் நோட்டமிட்டுவிட்டு கள்ளமாய்ச் சிரித்தான். கட்டப் பொம்மன் வாள் வீசினான். வசனம் பேசினான். ரகு தலையைக் குத்திக் குத்தி படத்தைப் பார்த்தான். பின் சரிந்து கையால் தலையில் முண்டுகொடுத்தும் பார்த்தான். வாள் வீச்சுக்கூட அவனை ஒன்றுமே செய்துவிடவில்லை. படம் முடிந்தபின் அருகிலிருந்தவர்கள் எழுப்பிவிட்டார்கள். நேரம் சாமமாகிவிட்டிருந்தது. இன்னொரு சனிக்கிழமை இரவில் இன்னொரு நாயகன்

தொலைக்காட்சியினூடாக வருவான். நியாயத்துக்காக, உரிமைக் காக அடிதடி வெட்டுக் குத்து என களத்தில் இறங்கி தனியனாகப் போராடுவான். தோழர்கள் பயிற்சிக் களைப்பில் அல்லாடிய உடல்களுடன் தொலைக்காட்சியின் முன்னால் புழுதித் தரையில் உதிர்ந்துபோய்க் கிடப்பார்கள்.

முகாம் தோழர்களைத் தவிர, புறவுலக மனிதர்களை அவர்கள் இந்தத் தொலைக்காட்சி திரையில்தான் பார்த்தார்கள். எல்லோருமே இளைஞர்கள் என்பதால் இளம் பெண்களை மாதக்கணக்காக கண்ணால்கூட பார்க்காத ஏக்கத்தை திரைப் படத்தில் வருகிற நாயகிகள் சிலவேளைகளில் தீர்த்துவைப்பர். அன்று இரவு சிலரது கனவுகளில் நாயகிகள் வருவதுண்டு. சிலருக்கு சுயஇன்பம் ஒரு வால்நட்சத்திரம்போல் தோன்றி மகிழ்வித்து பின் மறையும். கட்ட பொம்மன் வந்துபோன அன்றைய இரவில் அது வாய்த்திராது.

அநேகமாக இன்று 'உசார்ப்படுத்துற பல்லவி' *(Alert)* இருக் காது என பலரும் நம்பினர். ஞாயிறு விடுமுறை நாளாதலால் பொதுவில் சனிக்கிழமை இரவுதான் அது திடீரென நிகழும். பலமாக விசில் ஊதுவார்கள். அது அதிகமும் நடுநிசி தாண்டிய பின் ஒரு பிசாசு போல வந்து உலுப்பி எழுப்பும். வழமையில் யாரும் காற்சட்டையுடன் படுக்கக்கூடாது. சரத்துடன் (லுங்கி யுடன்) படுக்க வேண்டும். சில கணங்களுக்குள் பென்ரர், காற் சட்டை, பெனியன், சப்பாத்து எல்லாம் அணிந்தபடி ஆயுதத்தை (சவுக்கம் கொட்டனை) தூக்கியபடி முகாமைச் சுற்றி வெட்டப் பட்டிருக்கும் பதுங்குகுழிக்குள் போய், நிலை *(position)* எடுத்துவிட வேண்டும். முகாமில் எந்த வெளிச்சமும் இல்லாமல் இது நடந்தேறவும் வேண்டும். ஒரு மின்னலாய் நிழல் எதிரி முகாமைத் தாக்க, இவர்கள் எதிர்த்தாக்குதல் செய்து முகாமை காப்பாற்ற தயாராகிவிடுவதான பாசாங்குடன் அந்த நடுநிசி நாடகம் அல்லது பயிற்சி அரங்கேறும்.

எல்லோரும் எதிர்பார்த்ததுக்கு மாறாக அன்றும் அது நடந்தது. விசில் பிசாசு ஊளையிட்டது. எல்லாம் அதுவாகவே நடந்து இப்போ பதுங்கு குழிக்குள் இருந்தார்கள் தோழர்கள். ரோச் லைற்றுடன் ஒவ்வொரு கொட்டிலாகப் பரிசோதித்துவிட்டு, பின் பதுங்கு குழி நீளமுமாய் எல்லோரும் 'பொசிசனில்' இருக்கிறார் களா என்பதை பொறுப்பாளர்கள் கண்காணித்தார்கள்.

*அடுத்த விசில் ஒலி எல்லோரையும் பதுங்கு குழிக்குள்ளிருந்து கிளப்ப, எல்லா பிளட்டூன்களும் பரேட் ஆகின. ஒவ்வொருத்தராக காற்சட்டைக்குள் பக்கவாட்டில் மெல்லியதாய் கையை விட்டு பென்ரர் போட்டிருக்கிறார்களா என்றும், கட்டிய சப்பாத்தின் நூல் ஒட்டை மாறிக் கட்டப்பட்டிருக்கிறதா என ரோச் லைற் அடித்தும் பரிசோதித்தார்கள். இதில் ஏதாவது ஒரு தவறு நிகழ்ந்தாலும் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பின்னர் அரை மணி நேர இராணுவப் பயிற்சிமுறைத் தண்டனை வழங்கப்படும். அந்த தண்டனை அதே நேரங்கெட்ட நேரத்தில் நடத்தி முடிக்கப்படும்.*

*ரகு இந்த விடயத்தில் சில தந்திரங்களை மேற்கொண்டான். ஒவ்வொரு சனிக்கிழமையும் படுக்கைக்குப் போகும்போது காற் சட்டைக்குள் பென்ரரை பொருத்தமாக செற்றப் பண்ணி விட்டு தலைமாட்டில் வைப்பான். ஆயுதத்தையும் (கொட்டனையும்) அதனருகில் வைப்பான். விசில் ஊதியவுடன் படுத்திருந்தவாறே காற்சட்டை பென்ரர் 'செற்றப்' குலையாதவாறு கால்களுக்கூடாக இழுத்து மாட்டிவிட்டு, சரத்தை உதிர்த்துவிட்டு, சப்பாத்தையும் கொட்டனையும் கையில் எடுத்துக்கொண்டு பதுங்குகுழிக்குள் ஓடிவிடுவான்.*

*இதை ஆனந்தன், கரன், ரகு மூவரும் மற்ற எவரினதும் கண்ணில் எத்துப்படாமல் செய்வது இச் சந்தர்ப் பங்களில் வழமையாகியது. பதுங்குகுழிக்குள் இருந்தவாறு சப்பாத்தை அணிந்துகொள்வார்கள். வலு அவதானமாக சப்பாத்தின் துளைகள் மாறாதபடி, விரலால் தடவிப் பார்த்து நூலைக் கோர்த்து சரிசெய்துவிடுவார்கள். அதற்கான அவகாசம் அவர் களுக்கு எப்போதும் இருந்தது. அநேகமாக முதலில் இவர்கள் மூவரும் பதுங்குகுழிக்குள் ஓடிவிடுவார்கள், அதுவும் மூலைப் பகுதிக்கு! அப்போதான் சுற்றி வருகிற பயிற்சியாளர்களின் ரோர்ச் லைற் வெளிச்சம் வருவதற்குள் இந்த வேலைகளை செய்து முடிக்க அவகாசம் வரும். குழிக்குள் பாம்பு பூச்சியை கண்ட சந்தர்ப்பம் இருந்தாலும், அதைவிட துன்பம் தருவது முகாம் தண்டனைமுறை என்பதால், இந்த ஆபத்து இரண்டாம் பட்சமாக மாறியிருந்தது. சிங்கப்பூரும் கணனும் பென்ரர் போட அவகாசமற்றுப் போன நாட்களில் காற்சட்டையின் இரண்டு பொக்கற்றுகளையும் உட்பக்கம் பக்கவாட்டில் மேலிழுத்து விடுவார்கள். பயிற்சியாளர் இடுப்புப் பகுதியின் பக்கவாட்டில் கையை விடுகிறபோது கூச்சமாக நடித்து வளைந்து நெளிந்து*

பொக்கற்றை பென்ரராக ஆக்கிவிடுவார்கள். கணன் ஒருநாள் பிடிபட்டுவிட்டான். பின்னர் இம் முறை ஆபத்தானதாக மாறியது.

இந்த அலேட் நாடகம் முடிந்து எல்லோரும் தத்தமது முகாம் கொட்டிலுக்குள் திரும்பினார்கள். தண்டனை பெறுபவர்களை பார்த்து இரசிக்க ஒரு கூட்டம் முற்றத்திலேயே தங்கி நின்றது. ஞாயிறு மட்டும்தான் ஓய்வு. பயிற்சி இல்லை. கொஞ்சம் நீளமாய் நித்திரை கொள்ளலாம். முகாமுக்குள் காலெறிந்து உலவித்திரியலாம். பரஸ்பரம் கூடிப் பேசலாம். அதைக்கூட சிப்பிலியாட்டி விட்டுத்தான் தருவாங்களோ என்று முணுமுணுத்தபடி ரகு படுக்கைக்குச் சென்றான்.

## 10

ரகுவின் குசினிமுறை வந்தது. குசினிமுறைகாரருக்கு அன்று பயிற்சியில்லை. புதிய பிளட்டூனிலிருந்து ஆனந்தனும் ரகுவும் இன்றைய சமையல் குழுவில் இருந்தார்கள். ஊரில் ஒரு வெங்காயம்கூட உரித்ததில்லை. சமையல் அண்டாக்களின் பக்கம் ரகு போகவில்லை. காய்கறிகளை வெட்டுவதில் பங்கெடுத்தான். சிலர் இறைச்சியை வெட்டிக் கொண்டிருந்தார்கள்.

“இவ்வளவு இறைச்சி எப்பிடியடா 320 பேருக்கும் காணும்?”

அருகிலிருந்த தண்ணீர் வாளியைக் காட்டிய ஆனந்தன், “இது என்னத்துக்கு இருக்கு” என்றான்.

சற்று நேரத்தில் மொட்டை மூர்த்தியின் எடுபிடிகள் மாணிக்கத்தை கூட்டி வந்தார்கள். அவன் ஒவ்வொரு நாளும் மரக்கறி வெட்டவேண்டும். அவனுக்கு மொட்டை அடித்திருந்தார்கள். கூண்டுக்குள் வளரும் ஒரு பறவையின் அசைவுபோல அவன் ‘ஸ்லோ மோசனில்’ இயங்குவான். ஒருவருடனும் அவன் கதைப்பதில்லை. குசினியில் குனிந்த நிலையிலேயே இருந்தபடி காய்கறியை வெட்டிக்கொண்டிருப்பான். மற்றவர்கள் சொல்வதை செய்வதுதான் அவனது வழமையாக இருந்தது. இது ஒவ்வொரு நாளும் நடந்தேறியது. அவன் சவுக்கம் காட்டுக்குள் இருந்த இரண்டாவது கொட்டிலுக்குள் (‘நாலாம் மாடி’யுள்) விச்சுவுடன் சிறைவைக்கப்பட்டிருந்தான்.

*மாணிக்கம் இப்போ காய்கறிகளை நறுக்கிக் கொண்டிருந்தான். அருகில் ரகு இருந்தான்.*

*"சொந்த இடம் எது?"*

*"- - -"*

*"ஏன் உன்னை இஞ்சை கொணர்ந்திருக்கிறாங்கள்?"*

*"களவு எடுத்தனான்"*

*"எங்கை?"*

*அவன் மேலதிகமாக எதுவும் பேசவில்லை. குனிந்தபடியே வேலைசெய்துகொண்டிருந்தான்.*

*"மாணிக்கம் என்ன பாங்கையா (வங்கியையா) கொள்ளையடிச் சிருக்கும். மோட்டச் சைக்கிளையா கடத்தியிருக்கும். அதெல்லாம் எங்கடை வேலை. கோழிக்களவு செய்திருக்கும். தோட்டத்துக்கை காய்கறி களவெடுத்திருக்கும் அல்லது உரல் உலக்கையை களவெ டுத்திருக்கும்" என்றான் ஆனந்தன்.*

*அவனை மாணிக்கம் என்று அழைப்பதைவிட 'கள்ளன்' என்றே முகாமில் அழைப்பது வழமையாக இருந்தது. பார்க்க பாவமாக இருக்கும். அவனது தோற்றமும் அசைவும் பரிதாபப்பட வைக்கும். அவனுடன் எல்லோருமே 'எடா' போட்டு மரியாதைக் குறைவாகக் கதைப்பார்கள்.*

*"மாணிக்கம் மின்கம்பத்திலை தொங்க வேண்டிய ஆள். சமூக விரோதி. ஏன் உன்னை றிஸ்க் எடுத்து இங்கை கொண்டுவந்தாங் களோ தெரியாது" என்று அருகில் நின்ற ஒரு தோழர் சொன்னார். எரிச்சலுற்ற ஆனந்தன் "மாணிக்கத்துக்கு முதலே நீங்க இங்கை வந்ததாலைதான் தோழர்" என நமட்டுச் சிரிப்புடன் பதில் சொன்னான். அந்தத் தோழர் ஆனந்தன் மீது வெறுப்பை உமிழ்ந்தார். மாணிக்கத்தின் முகம் இருண்டுபோனது. கண்கள் மிரட்சி கொண்டிருந்தன. சமையல் உதவிகள் முடிய திரும்பவும் மாணிக்கம் வழமைபோல் அழைத்துச் செல்லப்பட்டான்.*

*ரகு உயர்தர வகுப்பு மாணவனாக இருந்த காலத்தில் முதன் முதலாக இந்த "சமூகவிரோதி" என்ற சொல்லை கேள்விப் பட்டிருந்தான். "மந்திகை பெற்றோல்செற் லைற்போஸ்ற்றிலை ஒரு ஆளை கட்டி இயக்கம் சுட்டிருக்குதாம்" என்று கிளம்பிய*

செய்தி கேட்டு, அந்தக் காட்சியைப் பார்க்க அவனும் நண்பர்களும் சைக்கிளில் பறந்து சென்றனர். நெற்றிப் பொட்டிலிருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. மின்கம்பத்தில் முதுகுப்புறமாக நிற்க வைக்கப்பட்டு, இரு கைகளும் பின்புறமாக மின்கம்பத்தை சுற்றியிருக்க, மணிக்கட்டு இரண்டும் பிணைத்து கட்டப்பட்டு, நெற்றியில் சுடப்பட்டிருந்தான் அந்த மனிதன். கழுத்தில் தொங்கிய ஒரு கார்ட்போர்ட் மட்டையில் 'சமூகவிரோதி' என எழுதப்பட்டிருந்தது. உயிரற்ற அவனது உடல் மின்கம்பத்தில் சறுக்கியபடி நெளிந்துபோய்த் தொங்கியது. நெற்றியிலிருந்து இரத்தம் ஒழுகி முடியவில்லை. இரத்தப் பிசுபிசுப்பிலிருந்து வாடை காற்றில் பரவத் தொடங்கியிருந்தது. அந்த வாடை இலையான்களை எட்ட நேரமாகாது.

பலர் கூடி நின்றனர். ஆளாளுக்கு கதை எழுதினர். மீட்பர்களின் வரவும் இந்த 'சமூக விரோதியை' அவர்கள் மோட்டார் சைக்கிளில் கொண்டுவந்த விதமும் என சாகசங்களை வரைந்து கொண்டிருந்தனர். அந்த அலைக்குள் ரகுவும் சொல் நனைத்த வனாக நின்றான். "உயிரோடு கட்டிச் சுட்டாங்களா அல்லது உயிர்போன பிறகு கொண்டுவந்து கட்டிச் சுட்டாங்களா" என ஆராய்ச்சிகள் வேறு நடந்துகொண்டிருந்தது. இந்தக் கூட்டத்தின் முன்னும் அவன் 'விசாரிக்கப்படாத குற்றவாளியாக' சிதைந்திருந்தான். அவன் யார், அவன் செய்தது என்ன அல்லது அவன் மீது என்ன குற்றச்சாட்டு வைக்கப்பட்டது, யாரால் தீர்ப்பு எழுதப்பட்டு சுடப்பட்டான் என்றுகூட யாருக்கும் தெரியவில்லை. "எங்களுக்காக உயிரைக்கூடக் குடுக்கப் போனவங்கள், அவங்கள் செய்தால் சரியாத்தானிருக்கும்" என்றனர். மேய்ப்பர்களின் தீர்ப்பை ஏற்று ஒரு கொலையை சாகசித்தனர், சுகித்தனர் அல்லது சகித்தனர்.

முதல் 'சமூகவிரோதி' மனிதன் சுடப்பட்ட இந்த நாளிலிருந்து அரச உளவாளி என சந்தேகிக்கப்பட்டவனை, இராணுவ முகாம் இருந்த பெரு வீதியால் நடந்து வந்தவனை எனத் தொடங்கி, பிறகு மன நோயாளர்களை, பால்வினைத் தொழிலாளர்களை, ஓரினப் புணர்ச்சியாளர்களை, கோழி பிடித்தவனை, பசியில் களவெடுத்த வனை எல்லாம் அந்த கார்ட்போர்ட் மட்டை துரத்தித் திரிந்தது. மாணிக்கம் அதனிடம் அகப்பட்டிருந்தால் எப்படியாய் சிதைந் திருப்பான் என இப்போ ரகுவுக்கு கற்பனை பண்ணிப் பார்க்க மனது மறுத்தது.

பன்னிரண்டு மணிக்கு சாப்பாடு தயாராக இருக்க வேண்டும். சற்று முன்னதாக மூர்த்தியும் அவனது அடியாட்களும் விசுக் கென்று குசினிக்குள் வந்தார்கள். வரிசையில் உட்கார்ந்தார்கள். மளமளவென சாப்பாடு அவர்களுக்கு பரிமாறப்பட்டது. போதுமான இறைச்சித் துண்டுகளை அண்டாவுக்குள் சுழியோடி எடுத்துக் கொடுத்தார்கள், சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள். ஒன்றும் புதிசாயில்லை. வழமையாக நடப்பதுதான் அது. புடைக்கத் தின்றுவிட்டுப் போனார்கள். பிறகு குசினிமுறைக்காரர்கள் சாப்பிட்டார்கள். ரகு அன்றுதான் தேவையானளவு இறைச்சியை தட்டில் போட்டு அவாவுடன் சாப்பிட்டான்.

“தோழர், நேற்று காம்ப் வாசலிலை கட்டியிருந்த மாடோ இது?”

எலும்புகள் சதையை முந்திக்கொண்டிருந்த உடலோடு, அசையாமல் அந்த மாடு நேற்று நின்றபோது, “இதை இண்டைக்கு அடிக்காட்டில், நாளைக்கு தானாய் விழுந்து செத்துப்போயிடும்” என சிங்கப்பூர் சொன்னது ரகுவுக்கு ஞாபகத்துக்கு வந்தது. வழமையாக முகாமில் மாடு அடிப்பதில்லை. அந்த மாட்டை யாரோ ஒரு விவசாயி தனது பங்களிப்பாக வழங்கியதாக ஒருவன் சொன்னான். “மேய்ச்சலிலை வழிமாறி வந்து அகப்பட்டிட்டுதோ தெரியாது” என்றான் ஆனந்தன்.

மொட்டை மூர்த்தி குழு போனபின், “ஏன்ரா இவங்கள் லைனிலை நிண்டு சாப்பாடு வாங்கிச் சாப்பிடப் பழக யில்லையா?” இரகசியமாய்ப் பேசினான் ஆனந்தன். “சந்ததி யாரைப் போல ஆரும் சோசலிசம் பேசுற ஆக்களுக்குத் தான் அதெல்லாம்” என்றபடி கள்ளமாய்ச் சிரித்தார்கள்.

மதியச் சாப்பாட்டு அமளி தொடங்கிவிட்டது. திடீரென வரிசை (கியூ) முளைத்தது. பலர் கோப்பையை தலையில் குடையாய்க் கொண்டனர். வெயில் கொழுத்தியபடி இருந்தது. ரகு இறைச்சிக் கறி அண்டாவுக்கு முன் பரிமாற நின்றான். பக்கத்தில் பருப்பு ‘அகழிக்கு’ முன் ஆனந்தன் நின்றான். வழமையான கரண்டியை வைத்திருந்தான் ரகு. இந்தக் கரண்டியைக் கண்டாலே பலருக்கும் கோபம் பொத்துக்கொண்டு வருவதுண்டு. “ஆமியைச் சுடுறனோ இல்லையோ, இந்தக் கரண்டியை அடிச்சுடைக்கிறதுதான் என்ரை முதல் இலட்சியம்” என்று சிங்கப்பூர் அடிக்கடி சொல்லுவான். வழமைபோல் எண்ணி மூன்று -பாக்கு அளவிலான- துண்டு

இறைச்சியை மட்டும் அந்தக் கரண்டிக்குள் அகப்படச் செய்வதில் கவனமாக இருந்தான் ரகு. இந்த வேலையை அவன் சரியாகச் செய்கிறானா இல்லையா என்பதை இடையிடையே குசினிப் பொறுப்பாள தோழன் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டான். இந்த மூன்று இறைச்சித்துண்டுக்கும் அகப்பைக்கும் உள்ள தொடர்பே சிங்கப்பூருக்கு கோபத்தை ஏற்படுத்துவதுண்டு.

கறிகளெல்லாம் மஞ்சளாய்ச் சிரிக்கும். எல்லோரது கைவிரல் இடுக்குகளும் நகங்களும் எப்போதுமே மஞ்சள்ப்பட்டிருக்கும். அன்றைய காலகட்டத்தில் இராணுவத்தினர் தமிழ் இளைஞர் களின் முழங்கையைப் பார்த்து இயக்கத்தில் பயிற்சி எடுத்தவர் களா இல்லையா என உறுதிப்படுத்துகிற ஒரு வழிமுறை இருந்தது. கிறாவலிங் செய்வதால் முழங்கை சதையிறுகி கருமை நிறம் கொண்டதாக மாறிவிடும். “புளொட் இயக்கத்திலை றெயினிங் எடுத்தாக்களை பிடிக்க முழங்கையெல்லாம் தேவை யில்லை. நக இடுக்குகளுக்கை மஞ்சளாய் இருக்கோ எண்டு பார்த்தால் காணும்” என டாக்குத்தன் சொல்வான்.

அன்று சனிக்கிழமை. நாளை ஓய்வுநாள். எல்லோரும் இடைஞ்சலற்று தூங்கிக்கொண்டிருந்தார்கள். திடீரென எழும்பி லைற்றைப் போட்டு உடன் நிற்பாட்டினான் சிங்கப்பூர். ரகு விழித்துக்கொண்டான். “மஞ்சளையும் மீறி வேலைசெய்யுது பார்” என்றான். அருகருகில் இரு தோழர்கள் கைபோட்டு இச்சைப் பட்டுக் கொண்டிருந்தனர். அவர்களின் இரகசிய மூச்சொலி சிங்கப்பூருக்குக் கேட்டுவிட்டது. முஸ்பாத்தி பண்ணுவதிலுள்ள ஆபத்து அவர்கள் எல்லோரினதும் பம்பலையும் சிரிப்பையும் கட்டிப்போட்டது. தெரிந்தால் அவர்களைத் ‘தூக்கியிடுவாங்கள்’.

பாலியல் வேட்கையை மஞ்சள் குறைத்துவிடுமாம். எந்த கிரகத்தைக் கடைந்து இந்த அறிவியல் உண்மையைக் கண்டு பிடித்தார்களோ தெரியாது. அதனடிப்படையில் இந்த ஏற்பாடு தொடர்ந்தது. மஞ்சள் நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவல்லது என்றளவில், இப்படி பெருந்தொகையானோர் கூடிவாழும் நிலையில் அதை சாப்பாட்டுக்குள் சேர்த்தார்களோ தெரியாது. ஆனால் கதை ‘உள்ளாலை’ இப்படித்தான் உலாவியது. மஞ்சள் பாலியல் வேட்கையைத் தூண்டும் சுரப்பியினை (testosterone) ஊக்குவித்து, அதன் மட்டத்தை அதிகரிக்கக்கூடியது என மருத்துவம் சொல்கிறது.

எப்போதும் கறிக்குள் மஞ்சள் தூக்கலாய் இருக்கும். அது காலப்போக்கில் நக இடுக்குகளை மஞ்சள் வலயமாக்கிவிடும். இந்த மஞ்சள் கதைக்கு ஒரு மூலம் இருந்தது. தேனீ முகாமில் போராளி ஒருவனை அவனுள் வாழ்ந்த பாலியல் 'கள்வன்' அழைத்துச் சென்று ஆட்டோடு புணர வைத்தான். மனித உடலின் ஆற்றலாய், இயல்பூக்கமாய் அவ்வப்போது விழித்தெழும் இந்த 'கள்வனை' சமூகவிரோதியாக தீர்ப்பளித்து, ஒழிக்க வழிதேடினார்கள். சிற்றரசர்களின் சிந்தனையில் 'நலமடித்தல்' ஞாபகத்துக்கு வரவும், பாலியல் இயல் புணர்ச்சியை இல்லாமலாக்குவதற்கான ஊசிமருந்து குறித்து விவாதிக்கலானார்கள். ஆனாலும் அந்த முகாமின் பொறுப்பாளர் சேகர் அதை இறுதிவரை எதிர்த்து நின்று அந்த திட்டத்தையே இல்லாமலாக்கினார் என்ற ஒரு கதை உண்டு. யார் இந்த சேகர் என்பதை பிறகு தெரிந்து கொள்வீர்கள்.

## 11

குசினிக்கு எதிரில் உணவுப் பொருட்களின் சேமிப்பிடம் இருந்தது. அதன் முன்னால் கதிரையொன்றில் தோழர் ஒருவர் காவல் கடமையில் இருந்தார். ரகுவும் சில தோழர்களும் அவனுடன் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். நேரம் இரவு சுமார் 9 மணியிருக்கும். அவசரமாக வந்த மொட்டை மூர்த்தி ஸ்ரோர் காவலாளி (டியூற்றி) யைத் தாண்டி "கொண்டுவா மிளகாய்த் தூள்" என்றபடி வேகமாய் உள்ளே நுழைந்தான். தூளோடு மட்டுமல்ல, வெறும் செத்தல் மிளகாய்ச் சாக்குடனும் திரும்பிய அவன் கருமின்னலாய் சவுக்கம் காட்டினுள் மறைந்தான்.

பின்னர்தான் தெரிந்தது, சித்திரவதையின்போது உடலில் சதையைக் கீறி அதற்குள் மிளகாய்த் தூள் தடவி விசாரிக்கும் முறை பற்றி. இதையே ஒரு சிறிய விசயம் ஆக்குவதுபோல் ரதன் சொன்ன தகவல் ரகுவுக்கு இன்னும் அதிர்ச்சியாக இருந்தது. உடம்பின் மேல் நெருப்புக்குச்சியின் மருந்தை உதிர்த்துப் போட்டு கொழுத்தி விசாரிக்கும் முறை பற்றி அவன் சொன்னான். செத்தல் மிளகாய்ச் சாக்கால் தலையை மூடி விசாரிக்கும் முறை பற்றியும் சொன்னான். நம்பிக்கையின் அடிப்படையில் அவன் அவ்வப்போது ரகுவிடம் சொல்லும் இப்படியான

தகவல்கள் ரகுவிடம் படிப்படியாக உள்காயங்களை ஏற்படுத்தத் தொடங்கியது. பயத்தை உருவாக்கத் தலைப்பட்டது.

மதன் உளன்றியில் தொங்கவிடப்பட்ட கொட்டில் இப்போ அமைதிக்குள் அமுங்கியது. அங்கு எந்த நடமாட்டமும் இருக்க வில்லை. ரதன் கொஞ்சநாளாய் சைக்கிள் கரியரில் சாப்பாடு கொண்டுபோகும் ஒரு வழமையை ரகு அவதானித்திருந்தான். மதன் இப்போ எங்கோ காட்டுப் பகுதியில் வைக்கப்பட்டிருப் பதாகவும் அவனுக்கான சாப்பாடுதான் அது என்றும் ரதன் ரகுவிடம் இரகசியமாகச் சொல்லியிருந்தான். சிலநாட்களின்பின் ரதன் சாப்பாடு கொண்டுபோவது நின்றுபோனது. ரகு மெல்ல அவனிடம் பேச்சுக் கொடுத்தான். மதனை உளன்றியில் தொங்க விட்டு, அவனது... (தணிக்கை)... குருதியோடவைத்து கொலை செய்துவிட்ட தகவலை அவன் சொன்னான். ரகுவின் நரம்புகள் ஒரு சைக்கிள் கம்பிபோல் விழியைத் துளையிட்டு ஊடுருவிச் சென்றன.

பிறகு கழகம் பற்றிய உற்சாகமான செய்திகளை பரப்பும் தமிழீழத்தின் குரல் வானொலியும், இந்த உளவுப்படை வேலை யெல்லாம் பெரிசுக்கு (உமாவுக்கு) தெரியாமல்தான் நடக்கிறது என்ற சக தோழர்கள் சிலரின் பேச்சுகளும் ரகுவை தூக்கி நிறுத்தும். பிறகு போராளியாக மாறிவிடுவான்.

உலகில் மட்டுமல்ல இலங்கையிலும்கூட அன்றாடம் நடக்கும் செய்திகள், விவாதங்கள், மாற்றங்கள், கண்டுபிடிப்புகள், அரசியல் நிலைமைகள் எதுவுமே எட்டாத உலகில் ரகு விடப்பட் டிருந்தான். வாசிப்பதற்கு ஒழுங்காக பத்திரிகைகள் எதுவும் கிடையாது. எல்லா இயக்கங்களையும் தாழ்த்தி கழகத்தை மிதப்பாய்க் காட்டும் வேலைகளில் கழகப் பொறுப்பானவர்கள் இடும் செய்திகளை "தமிழீழத்தின் குரல்" வானொலி தனது அறுந்தறுந்து வரும் குரலில் சொல்லிக் கொண்டிருக்கும். தமிழீழத்தைச் சுற்றி பின்னப்படுகிற செய்திகளே பெரும்பாலும் ஒலிபரப்பாகிக்கொண்டிருக்கும்.

இலங்கை அரச உளவுப்படையானது வானொலி ஒலிபரப் பாகிற அதிர்வலையை தனது தொழில்நுட்பத்தால் இடையீடு (jamming) செய்து குழப்பிக் கொண்டிருக்கும். அதற்கேற்ப முன்னும் பின்னுமாய் வானொலியின் அதிர்வலைக் கட்டையைத் திருப்பித்தான் இதைக் கேட்க வேண்டியிருந்தது.

இந்த ஒற்றையடிப் பாதை வெளியுலகத்தின் வாசலாய் இருந்தது ரகுவுக்கு. அதுவொரு பொய்யான உலகை சிருஸ்டித்தபடி இருந்தது என்பதை அவன் அறிந்திருக்கவில்லை, அல்லது அறியவிடாமல் ஏதோவொன்று தடுத்துக்கொண்டிருந்தது. முகாமின் வலதுபக்க பின் மூலையில் இந்த தமிழீழத்தின் குரல் மாலை வேளைகளில் ஒலிக்கத் தொடங்கும். அங்கு ஒரு சிறு குடிசை இருந்தது. திறந்துதான் இருக்கும். அதற்குள் சில அச்சுப் பிரதிகள், கொப்பிகள், பழைய சில செய்தித்தாள்கள், சில மொஸ்கோ மொழிபெயர்ப்பு நூல்கள் என்பன இருந்தன. அது சிலவேளைகளில் கழக உயர் மட்டங்கள் வருகிறபோது சந்திப்பு இடமாகவும் இருந்தது. அதன் வாயிலில் ஒரு வானொலிப் பெட்டி இழைக்கயிற்றால் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது. அதற்குள்ளிருந்து தமிழீழத்தின் குரல் புயலாய் வெளியேறும். தேர்ந்தெடுத்த செய்திகள், பிரச்சாரங்கள் மற்றும் விடுதலைப் பாடல்கள் என்பன ஒலிபரப் பாகிக் கொண்டி ருக்கும்.

''புதிய பாதை அமைத்திடுவோம் தோழா
புரட்சி வெல்ல உழைத்திடுவோம் தோழா..''

என அது உசுப்பேத்தியபடி இருக்கும். ரகு உணர்ச்சிகரமாக அதை உள்ளிழுத்துக் கேட்பான். அவனுக்கு மயிர் சிலிர்க்கத்தான் செய்யும். ஒரு புரட்சியை நோக்கிய வழித்தடத்தில் தோழர் களோடு சேர்ந்து தயாராகிக்கொண்டிருப்பதான உணர்வு ஏற்படும். அது பேசுகிற பிரச்சாரத்தை வைத்து நாட்டு நிலைமையை உருவகித்துப் பார்த்தனர் தோழர்கள். புறநிலை யதார்த்தம் எதுவும் அவர்களுக்கு தெரிய வாய்ப்பில்லை. றோல்கோல் சந்திப்பு முடிய அதன்முன் சிலர் குந்தியிருப்பார்கள். இன்னொரு சிறு பகுதியினர் லெனினின் குடிசைக்கு முன் கூடுவார்கள். இப்படியாய் ஒரு நாளில் இரவு நேரம் லெனின் தனது கொட்டிலின் முன் இருந்து பீடியை ஊதிக்கொண்டிருந்தார். கயிற்றுக் கட்டிலில் அநாயாசமாக அவர் இருந்தார். முன்னால் நிலத்தில் தோழர்கள் சிலர் அமர்ந்து அவரிடம் கதைகேட்பது வழக்கமாக இருந்தது. ரகுவும் ஆனந்தனும் கரனும் ஒருநாள் போயிருந்தார்கள். கஸ்ரோவும் போயிருந்தான்.

''சிலோன் ஆர்மி தமிழ்ப் பொண்ணுங்கள கற்பழிச்சிருக்கி றாங்க எண்டு நேற்று சொன்னாங்க. நீங்க போராட சிலோனுக்குப் போனபிறகு இம்மட்டு சிங்களக் குட்டிகளையெல்லாம் கற்பழிச் சீங்க என்ற செய்தியை நான் இந்தக் காதாலை கேட்கணும்'' என்று

தனது காதோரம் கைவைத்துக் காட்டினார் லெனின். அவர் தனது லெனின் தாடியை தடவியபடி கதைகதையாச் சொன்னார்.

"தோழர் லெனின் இந்திய பாகிஸ்தான் யுத்தத்திலை நீங்கள் எத்தினை ஆமியைச் சுட்டிருப்பியள்? "

"சுமாரா 20 பேர் வரும்."

அவர் அந்த யுத்தம் பற்றிப் பேசத் தொடங்கினார். பாலியல் வல்லுறவு, கொலை பற்றியெல்லாம் பேசினார். ரகுவும் ஆனந்த னும் கரனும் அந்த இடத்தைவிட்டு அகன்றார்கள். அவர்களால் அங்கு இருக்க முடியவில்லை. அதற்கெதிராக அவர்கள் அங்கு குரல் எழுப்பினால் உளன்றியில்தான் தொங்கவேண்டும்.

"சீ என்ன கேவலமாயிருக்கு. இந்தாளுக்குப் போய் லெனின் என்று பெயர் வைச்சிருக்கிறாங்கள் பார்" என்று பொங்கினான் கஸ்ரோ. ரசியப் புரட்சியின் நாயகனும் தத்துவவாதியுமான தோழர் லெனினை இதைவிட கொச்சைப்படுத்த எவராலும் முடியாது என்று அதை அர்த்தம் பெயர்க்க முடியும்.

"அதல்லடா இப்பிடிக் கதையளைக் கேட்டுக் கொண்டிருக்குது கள் பார். முகாம் பொறுப்பாளரும் இதை விட்டு வைச்சிருக்கிறார் தானே."

கஸ்ரோ கொதித்துப் போய் இருந்தான்.

முகாம் தோழர்களால் மதன் படிப்படியாக மறக்கப்பட்டிருந்த ஒரு நாளில் சந்ததியார் முகாமுக்கு வந்தார். "நாளைக்கு சந்ததியார் வருகிறார். யார்யார் அவரோடு கதைக்கப் போகிறீர்கள் என்று பதிவுசெய்ய வேண்டும்" என்று முகாம் பொறுப்பாளர் பாண்டி முதல்நாளே சொல்லியிருந்தான். சந்ததியாருடன் பேச ரகுவுக்கு இருந்த விடயங்கள் தலமைறைவாகிப் போயின. பதிவு செய்வதை தவிர்த்தான் ரகு. மறுநாள் சந்ததியார் வந்தார். சிலர் போய்க் கதைத்தார்கள். சந்ததியாருடன் முகாம்பொறுப்பாளரும் அருகில் உடன் இருந்தததை ரகு கேள்வியுற்றபோது தனது முடிவு சரியானதாக திருப்தியடைந்தான்.

ஒருபுறம் நீண்டு விரிந்த வயல்வெளி. முகாமின் அரண்போல் இருந்த சவுக்கம் தோப்பானது, வயல்வெளிக் காற்று காவிவரும் குளிர்மையை எரித்துப் போட்டுக்கொண்டிருந்தது. வெப்பக் காற்றுள் முகாம் சிறைப்பட்டிருந்தது. அன்றாடம் உசும்பும்

காதோரக் கதைகள் தோழர்களுக்கிடையிலான உறவுகளை அரித்துக்கொண்டிருந்தது. யாரும் நம்பிக்கைக்கு உரியவர்களாக முடியாதிருந்தது. வெளிப்படையாக பொறுப்பாளர்களை அணுக விடாமல் அவை தடுத்தன. குறைந்தபட்சம் கழகம் பற்றிய சாதாரண தகவல்களைக்கூட கேட்கலாமா விடலாமா என்ற வாறான குழப்ப நிலையில் 'இராணுவ இரகசியம்' அவர்களைத் தடுத்து வைத்திருந்தது. எப்போதும் கூர்ந்த விழிகளுடன் மவுனமாகவே எல்லாவற்றையும் கேட்டும் நோட்டம் விட்டுக்கொண்டுமிருந்த கஸ்ரோ சந்ததியாருடன் பேச தனது பெயரை கொடுத்திருந்தான்.

மதியச் சாப்பாட்டு கியூ நீண்டு இருந்தது. வரிசையின் கடைசியில் சந்ததியார் கோப்பையுடன் நின்றார். அவருடன் சேகரும் நின்றார். நிலத்தை எரித்துவிடுவது போன்ற வெறியில் கொள்ளியுடன் நடமாடும் வெயிலின் கொடுமை மற்றைய தோழர்களைப் போன்றே இவர்களையும் சாப்பாட்டுக் கோப்பையால் தலைக்கு நிழல்விழுத்தியபடி நிற்க வைத்தது. வழமையாக பதினொன்றரை மணிக்கே குசினிக்குள் தடாலடி யாக புகும் மூர்த்தி தலைமையிலான சித்திரவதைக் குறூப் மற்றும் முகாம் பொறுப்பாளர் அன்று வரிசையில் நின்று சாப்பாட்டை பெற வேண்டியேற்பட்டதை முதன்முதலில் பார்த்தான் ரகு. அது எல்லா தோழர்களுக்கும் சுவாரசியத்தை அளிக்கத் தவறவில்லை.

மாலையில் சந்ததியாரின் உரை இடம்பெற்றது. 320 பேரைக் கொண்ட இந்த முகாமில் அது ஒரு பொதுக்கூட்டம் போல இருந்தது. சாப்பாட்டை கொட்டுவதில், பொருட்களை வீண் விரயம் செய்வதில் அவர் காட்டமாகவே தொடங்கினார். தான் அன்று அவதானித்தவைகளிலிருந்து அவர் தொடங்கினார். "ஒவ்வொரு சதமும் சனத்தின் உழைப்பில் வந்த காசு. அதை வீணாக்குபவர் போராளியாக இருக்க முடியாது" என்றார். முகாம் பொறுப்பாளர் பக்கம் திரும்பிய அவர் "முகாம் வாசலில் கடவையில் 'ஸ்ரொப்' (STOP) என்று எழுதியறிவிக்க சாப்பிடுற கோப்பைதான் கிடைச்சதா? ஒரு கார்ட்போர்ட் மட்டை போதுமே. இப்படியெல்லாம் வீண்விரயம் செய்யிறதை நிற்பாட்டுங்கோ" என்றார்.

இப்படியாகத் தொடங்கிய அவரது பேச்சு வர்க்கம், சாதியம், பெண்ணியம் என்ற விடயங்களுக்கு ஊடாக எளிமையான

சொற்களுடன் பயணித்தது. ''ஊரிலை எந்த இடம். அம்மங் கோயிலுக்கு கிழக்காலையா வடக்காலையா... ஆ... அந்தாக்களா...'' என்றவாறான யாழ்ப்பாணீய உரையாடலிலுள்ள சாதியத்தை சுவைபடச் சொன்னார். ஆக்கிரமிப்புக்கு எதிரான விடுதலைப் போராட்டங்கள் பற்றிய பேச்சை வியட்நாம், கியூபா, பலஸ்தீனம், நிக்கரக்குவா போன்ற பிரதேசங்களினூடாக முரசறைந்துகொண்டு வந்த அவர் தமிழீழத்தில் வந்து நின்றார். அவ்வப்போது முகாம் நடைமுறைகள் ஏற்படுத்தும் நம்பிக்கைச் சரிவுகளை சந்தியாரின் பேச்சு நிமிர்த்திவிட்டது. ரகு அவ்வப்போது சரிவுறும் தனது நம்பிகைகளை திரும்பத் திரும்ப சரிசெய்தபடி இருந்தான். ஆனாலும் இந்த சித்திரவதை முகாம் பற்றிய எந்த விடயமும் சந்ததியாரின் பேச்சில் வரவேயில்லை. கேள்விகள் இருந்தால் கேட்கலாம் என்றார். ஒரு ஆசிரிய மாணவ சூழலை சந்ததியார் உருவாக்கியிருந்ததால் ஆசிரியரைப் பார்த்து கேள்வி கேட்பதற்கு மாணவர்கள் தயங்கினர்.

பின்னர் சந்தியாருடன் பேச பதிவுசெய்து வைத்திருந்தவர்கள் ஒவ்வொருவராக அழைக்கப்பட்டனர். வானொலி தொங்கவிடப் பட்ட கொட்டிலினுள் இந்த சந்திப்பு நடந்தது. கஸ்ரோவும் போயிருந்தான். திரும்பிவரும்போது உற்சாகமின்றி வெளியில் வந்தான்.

## 12

ரகு சற்று களைப்படைந்திருந்தான். கடந்த மூன்று நாளாக அவனது உடல்நிலை சரியாக இல்லை. இருமும்போது சளி வந்து கொட்டிக்கொண்டிருந்தது. பயிற்சியின்போது அதிகமும் மூச்சு வாங்கத் தொடங்கியது. வியர்வை உலர முன்னரே ஓடிப்போய் வயற்கிழவனின் குழாய்க் கிணற்றில் தலையைக் கொடுப்பதாலாக இருக்கலாம் என நினைத்தான். வியர்வை உலரும்வரை காத்து நிற்க நேர அவகாசம் எவருக்கும் கிடைப்பதில்லை. முகாம் டாக்குத்தரின் வைத்தியம் பற்றி அவன் தெரிந்திருந்ததால் அதுபற்றி அவன் அலட்டிக்கொள்ளவில்லை. இப்படியான விசயங்களுக்கெல்லாம் முகாம் பொறுப்பாளரை அணுகவும் முடியாது. கேலிப் பேச்சை கேட்கவேண்டியிருக்கும்.

ஒவ்வொரு கொட்டிலுக்குள்ளும் பெரிய மண்பானை ஒன்று இருந்தது. அதை எப்போதாவது கழுவி ரகு பார்த்ததில்லை.

அதற்குள் தண்ணீரைக் கொணர்ந்து வார்ப்பார்கள். முகாம் கிணற்றுத் தண்ணீர் அடிக்கடி வற்றிவிடும். சமைப்பதற்கு மட்டுமே உபயோகப்படுத்தினார்கள். குடிநீர் அருகிலுள்ள வயற் கிணறிலிருந்து எடுத்து வரவேண்டும். அந்தந்த பிளட்டூன்காரரர் தமக்கான நீரை எடுத்துவர வேண்டும். ஒரு நீளமான தடியின் நடுவில் பெரிய வாளியை கட்டித் தொங்கவிட்டு முன்னுக்கும் பின்னுக்குமாக இருவர் அதை தோளில் காவி வருவர்.

மூலையில் உள்ள இந்த இராட்சத மண்பானை குளிர்சாதனப் பெட்டியின் வேலையை இயற்கையாகவே செய்துவிடுகிறது. அந்த சவுக்கம் காட்டு வெயிலில் அது அமிர்தமாக தொண்டைக் குழிக்குள் இறங்கும் புத்துணர்ச்சி அனுபவம் ரகுவில் புதிதாக சேர்ந்து கொண்டது. அதன் அடியில் மண்ணுக்குள் குளிர்ச்சிக்காய் பாம்பு வந்து சுருண்டு படுத்திருந்ததை ஒருமுறை ரகு கண்டிருக்கிறான். பாம்பு பூச்சி மீதான பயத்தையெல்லாம் தெளிவற்ற எதிர்காலமும், சவுக்கம் தோப்பு மர்மமும் பின்னுக்குத் தள்ளியிருந்தன. ஆனாலும் நம்பிக்கை, பின் நம்பிக்கையின்மை, மீண்டும் நம்பிக்கை என ஏதோவொன்று ரகுவை மாறிமாறி தாங்கிப்பிடித்தபடி இருந்தது.

காலையில் எழுப்பும் விசிலிலிருந்து படுக்கைக்குத் தள்ளும் விசில்வரை விசில் சத்தம் அந்த வாழ்வின் ஓர் அங்கமாக மாறியிருந்தது. அது அதிகாரத்தின் ஒலியாக கட்டளையை காவிவருவது வெறுப்புக்குரியதாக இருந்தது. உடலை மட்டுமல்ல, மனத்தையும் உலுப்புகிற அது எப்போதும் ஒருவித எரிச்சலை உண்டுபண்ணியபடி இருந்தது. காலையிலிருந்து மதியம்வரையான இராணுவப் பயிற்சி, பின்னர் அணிவகுப்புப் பயிற்சி, கராத்தேப் பயிற்சி என இறுகிப்போன உணர்வுகளை விடுவிக்க எந்தக் கலைநிகழ்ச்சியோ, கலைச் செயற்பாடோ, இலக்கிய வாசிப்போ, இசையோ பாடலோ எதுவுமே இருந்ததில்லை. சினிமாப் பாடலைத்தன்னும் கேட்க முடியாது. ஆடல் பாடலும் இல்லை. அறிவூட்டலுக்கான எதுவுமே இல்லை. ஓய்வாக பொழுது போக்க கார்ட்ஸ் விளையாட்டும் தடைசெய்யப்பட்டிருந்தது. அது ஒரு போதையாம். நேரத்தை வீணடிப்பதாம். சதா உடற்பயிற்சியில் களைத்துப் போகும் உடலுக்கு பொழுதுபோக்காக கைப்பந்து மைதானமொன்று இருந்தது. அவ்வப்போது யாராவது விளையாடுவார்கள். போதாக் குறைக்கு இரவு கிடைக்கிற ஓய்வு நேரத்தை மொட்டை மூர்த்தி

தன் பங்குக்கு இடையிடையே களவாடி விடுவான். பிளட்டூன் கொட்டிலுக்குள் லெனின் அல்லது ஸ்ராலின் மொழிபெயர்ப்பு நூல்களை ஒருவர் வாசிக்கவிட்டு, யார் தூங்கிறார்கள் என நோட்டம் விட்டு தத்துவம், கோட்பாடு மீது வெறுப்புணர்வை ஊட்டிக்கொண்டிருந்தான்.

உலர்ந்துபோன அந்த வாழ்தல் இரக்கமற்று மனித மகிழ்ச்சியின் மீது மோதியபடியே இருந்தது. குடும்ப கூட்டுவாழ்க்கைக்குள் வாழ்ந்த ரகு பிரிதல் தரும் உணர்வுகளை அனுபவித்தான். ஒழுங்கான கடிதப் பரிமாற்றம் கிடையாது. இவைபற்றியெல்லாம் கதைத்தால் "விடுதலைக்கென்று வெளிக்கிட்டனியள்... இப்படி யான இழப்புகளையெல்லாம் சகித்துத்தான் ஆகவேண்டும்" என்பார்கள்.

அவனைப் பிடித்திருந்த நெஞ்சுச்சளி அதிகமாகியது. பயிற்சியின் போது மூச்சுவாங்க வைத்தது. ஓய்வெடுக்க விரும்பினான். டாக்குத்தன் மகிழ்ச்சியில் துள்ளினான். பேச்சுத்துணை கிடைத்த சந்தோசம் அவனுக்கு. கஸ்ரோவுக்கு பயிற்சியின்போது முழங்கால் இரண்டும் வீங்கியிருந்தது. அதனால் அவன் ஏற்கனவே சிக்கிரி போர்ட் க்குள் இருந்தான். "அப்பிடி செய்யுதோ... இப்பிடி செய்யுதோ, அங்கை நோகுதோ... இங்கை நோகுதோ எண்டெல்லாம் கேட்காதை. உன்னட்டை இதுக்கு ஒரேயொரு குளிசைதான் இருக்கும். அதைத் தா. லிஸ்ற்றிலை மாறி வாசிச்சு தந்திடாதை" என்றான் ரகு. டாக்குத்தன் கள்ளச் சிரிப்புடன் பிளாஸ்ரிக் பையைத் திறந்து லிஸ்ரை எடுத்தான்.

இப்போதான் கஸ்ரோவிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ரகுவுக்குக் கிடைத்தது. கஸ்ரோ பயிற்சியில் வெறுப்புற்றிருந்தான். சந்ததியாருடன் சந்திப்பு எப்படியிருந்தது என்று கேட்ட ரகு, தொடர்ந்து "சந்ததியாரைப் போலை ஆட்கள்தான் எப்பவும் நம்பிக்கை தரக்கூடிய ஆட்களாகவும் இருக்கினம்" என்றான்.

"நீங்கள் சொல்லிறது சரி. அற்புதமான தோழர் அவர். அவரோடு நான் இங்கு கண்டவைகள் பற்றியும் லெனினின் பிரசங்கம் பற்றி யும் மட்டுமல்ல, சோசலிச மனநிலையை எப்படி தோழர்களிடம் உருவாக்கப் போகிறீர்கள் என்பது பற்றியும் கதைத்தேன். விளக்கங்கள் தந்தார். எனக்கு பெரியளவில் திருப்தி தரவில்லை. அது கேள்விக்கு பதிலளிப்பதுபோல இருந்தது. மனந்திறந்த

ஓர் உரையாடலாக இருக்கவில்லை. இயக்கத்தை காப்பாற்றும் ஒரு போக்கு அவரிடம் இருந்ததாக உணர்ந்தேன். அவர் கருத்து வழங்குபவராக மட்டும் இருப்பதாக தெரிகிறது. அத்தோடு சில சந்தர்ப்பங்களில் ஒரு எள்ளலுடன் எனது கருத்துகளை எதிர் கொண்டதுபோல் உணர்கிறேன். அது இடைஞ்சலாக இருந்தது.'' என்றான் கஸ்ரோ.

''அவளவு இலகுவாக அவரை மதிப்பிடலாமா. அவர் 70 களில் இயக்கம் தொடங்கிய காலத்திலிருந்தே போராடப் புறப்பட்டவர். அப்பவே அரசியலை முன்னிலையில் வைச்ச ஆள். கழகத்தின்ரை அரசியல் பாசறைகளை நடத்தின ஆட்களிலை அவரும் ஒராள். டேவிட் ஐயா தொடக்கி நடத்தின காந்தீயம் பண்ணையிலை மிகக் கடுமையா உழைச்சவர். அதுக்கூடாக, 77 கலவரத்திலை அகதியாக வந்த மலையக மக்களுக்கு புகலிடம் குடுத்து, அந்த அபலைச் சனத்துக்கு புது வாழ்க்கையை தொடக்கி வைக்க முன்னின்ற தோழர். அவர் ஒரு தீவிரமான செயற்பாட்டாளர்''

''அதில் மறுப்பேதுமில்லை. நான் அவதானித்தவைகளைத்தான் சொல்கிறேன். சரியும் இருக்கலாம் பிழையும் இருக்கலாம். நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என சொல்லவில்லை. அவர்கள் தவறு விடமாட்டாதவர்கள், புனிதர்கள் என்றெல்லாம் நாம் பார்க்க முடியாது. அந்த மனநிலை கூடாது'' என்று ரகுவுக்கு பதிலளித்தான் கஸ்ரோ.

''இந்தியாவின்ரை தலையீடு எப்பிடி எங்கடை போராட்டத்தை பாதிக்கலாம் எண்டு உணர்த்திறதுக்கு அவர் ''வங்கம் தந்த பாடம்'' நூலை எழுதியிருக்கிறார். பார்த்தனிங்களா'' என்று கேட்டான் ரகு.

''வாசிச்சனான். சிறுநூல். கட்டாயம் படிக்க வேண்டியது. ஆனால் அந்த நூலை அவர் எழுதவில்லை. அது லோறன்ஸ் லைப்சூள்ஸ் (Lawrence Lifschultz) என்பவரால் எழுதப்பட்ட நூல். அதை ஒரு கழகத் தோழர் வாசித்துவிட்டு இன்னொரு தோழருக்குச் சொல்ல அவர் சந்ததியாருக்கு அறிமுகமாக்கினார். முதலில் வாசித்த தோழர்தான் அதை தமிழுக்கு மொழிபெயர்த்தார். அதுபற்றி சந்ததியார் பின்தளத்தில் உமாவிடம் தெரிவித்தபோது அந்த பிரதியை தமக்கு அனுப்பும்படி தளத் தோழர்களுக்கு அறிவுறுத்தல் போனது. தளத் தோழர்கள் அந்த பிரதி அங்கு போனால் அது பிரசுரிக்கப்படும் சாத்தியம் இல்லாமல் போய்விடும் என்று சந்தேகப்பட்டார்கள்.

இந்தியா மீதான பகையை கழகம் தவிர்க்கும் நிலைதான் காரணமாக இருந்தது. அதனால் தளத் தோழர்களே அதை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் பெயரில் வெளியிட்டார்கள்''.

இது ரகுவுக்கு புதிதாக இருந்தது.

''உண்மையா?''

''ஓம்''

இந்திய இராணுவம் இலங்கையில் இருந்தபோது இந்த சிறுநூல் 1988 இல், எஞ்சியிருந்த கழகத்தவரால் -வேறு அட்டைப் படத்துடன்- மீண்டும் ஒருமுறை வெளியிடப்பட்டது என்பதை நீங்கள் அறிந்திருக்கக் கூடும்.

''எப்பிடியோ சந்ததியார் கழகத்தின்ரை ஒரு ஆதர்சமான, நேர்மையான, கடின உழைப்புள்ள, தேடலுள்ள, அர்ப்பணிப்புள்ள தோழர்தானே'' என்றான் ரகு.

''அதில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. தனிமனிதர்களுக்கான இந்தப் பண்புகள் போற்றுதற்குரியவை. ஆனால் one man army அல்ல இயக்கம் என்பது! இயக்கத்தின் போக்கு, எதிரியின் அணுகுமுறை, தத்துவத்துக்கும் நடைமுறைக்கும் இடையிலான முரண்கள், புறநிலை மாற்றங்கள் அல்லது நெருக்கடிகள், நடைமுறைப் பிரச்சினைகள், தனிமனித பலம் பலவீனங்கள், தன் முனைப்பு, அதிகாரம், புகழ், பிம்ப உருவாக்கம் என பல காரணிகள் இந்த தனிமனிதர்களை இப்படியே தொடர்ந்து காப்பாற்றி வைத்திருக்கும் என நாம் அப்பாவித்தனமாக நம்பத் தேவையில்லை. லெனின் இப்போ இருந்திருந்தால்... சேகுவேரா இப்ப இருந்திருந்தால்... மாவோ இப்ப இருந்திருந்தால்.. என்றெல்லாம் அவர்கள் நடந்த அதே தடத்தில் வைத்து சமன்பாட்டு ரீதியில் கணிப்புகள் செய்ய முடியாது. அத் தடத்திலிருந்து முறித்துக்கொண்டு, அவர்கள் வீரியமான அல்லது வீழ்ச்சியான பாதையில் பயணித்திருத்தல் கூடும். சுந்தரம் இன்று இருந்திருந்தால்... என சில தோழர்கள் அங்கலாய்ப்பதும்கூட இதற்குள் அடங்கும். அதையும்விட சுந்தரம் படைப்பிரிவு என கழகத்துள் குழுநிலையிலிருப்போரை பார்க்கும் போதெல்லாம் சுந்தரம் இப்படியானவர்கள் உருவாக எப்படி வழிவிட்டார் என்பதிலிருந்து அவரை மதிப்பிட வேண்டியுமுள்ளது. ''இருந்திருந்தால்...'' எனும் நினைப்பை வெறும்

ஆதங்கம் என்று மட்டும் புரிந்துகொள்ள முடியும். வரலாறு அப்படி இயங்குவதில்லை. சந்ததியாருக்கும் இது பொருந்தும். அவர் எமது இயக்கத்தை அரசியல் ரீதியில் வழிநடத்துவதில் வெற்றிபெறவும் முடியும். தோல்வியுறவும் முடியும். ஒரு வெள்ளை காகத்தை காண்பதற்கான சாத்தியப்பாடுகளையும் நாம் மறுக்காது இருக்க வேண்டும். வெற்றிபெற வேண்டும் என்பதே எனது ஆசையும். இல்லையெனின் நாங்கள் மக்களை ஏமாற்றியவராவோம்.'' என்றான்.

''இயக்கத்துக்கை நடைமுறைப் பிரச்சினையள் வருந்தானே. அதுக்காக நாம் இப்பிடி நம்பிக்கையீனமாப் பேசலாமா'' என சொன்னான் ரகு.

''நம்பிக்கை, நம்பிக்கையீனம் பற்றி நான் பேசயில்லை. எனக்குத் தெரிஞ்ச அரசியலைப் பேசுறன்'' என்று பதிலளித்த காஸ்ரோ தொடர்ந்து கதைத்தான்,

''அடிப்படையில் நாம் ஒரு முதலாளித்துவ இராணுவக் கட்ட மைப்புடன் இயங்குகிறோம். போராளிகள் பிரக்ஞை பூர்வமாக இயங்க பயிற்றுவிக்கப்படாதவரை, அரசுக்கெதிரான அதிகாரம் என்பதை விடவும் மக்களுக்கு எதிரான அதிகாரம் எமது துப்பாக்கியிலிருந்து பிறக்காது என்பதற்கு உத்தரவாதம் இல்லை. மக்கள் சார்ந்த பிரக்ஞை என்பது போராளி என பெயர் பெற்று விடுவதால் வருவதில்லை''.

''இந்தப் போராளியளை எல்லாம் கடைசியிலை தேவையில்லா மல் சாகக் குடுத்துவிடுவமோ தெரியாது'' என்றான் கஸ்ரோ.

''அதைப்பற்றி யோசியாதையுங்க தோழர். அதுக்குத்தானே ஒவ்வொரு நாளும் முக்கால் மணி நேரம் திரும்பிக்கூடப் பார்க்கா மல் ஓடப் பழக்கிறாங்கள்'' என்று சொல்லிவிட்டு சத்தமாகச் சிரித்தான் டாக்குத்தன்.

கஸ்ரோ சிரிக்கவில்லை.
ரகு டாக்குத்தனின் கடியை இரசித்தான்.

கஸ்ரோவிடமிருந்து கருத்துகள் அரசியல் வகுப்பில் வருவது போல் தடங்கலின்றி வந்து கொண்டிருந்தது. இதற்கு ஈடுகொடுத்து விவாதிக்க ரகுவால் முடியாமலிருந்தது. ரகுவினது விடுதலை அரசியல் குழந்தைப் பருவத்தில் இருந்தது. இந்த

அரசியலைத்தான் அவன் தளத்தில் கழகத்துக்கு ஆட்களைச் சேர்க்க பேசிக்கொண்டு திரிந்தான். ஆனாலும் அதை அவன் ஏமாற்றாகச் செய்யவில்லை. நேர்மையாக இருந்தான். நம்பிக்கை களை தனக்குள் பலமாக கட்டியெழுப்பியிருந்தான். கஸ்ரோ விடம் பேசும்போது அவன் கொஞ்சம் குறுகித்தான் போனான்.

“அரசியல் அறிவூட்டப்படாத இராணுவம் ஒருபோதும் சோசலிச விடுதலையை பெற்றுத் தரப்போவதில்லை. வெறும் இராணுவ அதிகாரம் சொந்த மக்களுக்கு எதிராகவே தனது துப்பாக்கியை திருப்பக் கூடியது. அது விடுதலை அடைந்தால்கூட அதைச் செய்யும்” என்றான் கஸ்ரோ.

“அதை எப்பிடி சொல்லிறியள். மற்ற முகாம்களிலை அரசியல் வகுப்புகள் இருக்கலாம் தானே” என்று சொன்னான் ரகு.

“அப்படி இருந்தால் நல்லதுதான். அரசியலை ஆணையில் வைக்க வேண்டும்” என்றான் கஸ்ரோ.

“இராணுவப் பயிற்சி எண்டிறது இராணுவ விதிமுறையளுக்கு உட்பட்டுத்தானே இருக்கேலும். தாக்குதல் களத்திலை நிண்டு அரசியல் பேசிக்கொண்டிருக்கேலாது. இராணுவமாத்தான் இயங் கேலும். இங்கை இராணுவப் பயிற்சிக்குத்தானே நாங்களெல்லாம் வந்திருக்கிறம்” என்று கொஞ்சம் கடுப்புடன் சொன்னான் ரகு.

“தாக்குதல் களத்தில் நீ சொல்வது முற்றிலும் சரி. தவிர்க்க முடியாதபடி பிணைக்கப் பட்டிருக்கிற துப்பாக்கியுடனான எமது போராட்ட வாழ்வு குறித்து கதைக்கிறேன். நாங்கள் தனி இராணுவமில்லை. போராளிகள். இராணுப் பயிற்சி அதன் ஓர் தவிர்க்க முடியாத அங்கம். ஆயுதப் போராட்ட வழிமுறை என்பது தவிர்க்க முடியாமல் எம்மீது திணிக்கப்பட்ட ஒன்று. துப்பாக்கி பூக்களைச் சொரியாது. அதை ஆணையில் வைக்க முடியாது. ஒவ்வொரு போராளியினதும் அர்ப்பணிப்பு மனப்பான்மைக்கும் பிரக்ஞைக்கும் அதேநேரம் அறிவுக்கும் நாம் ஒரு தொடர்ச்சியை வழங்கி வளர்த்தெடுக்க வேண்டும். துப்பாக்கி அதற்கு கட்டுப்பட வேண்டும். மனித மனங்களில் சாகச மனப்பான்மை என்பது இயல்பான ஒன்று. அது அவசியமானது. அதையே பிரதானமாகக் கொண்டு அரசியல் பிரக்ஞையை பின்தள்ள முடியாது. வெறும் இராணுவப் பயிற்சி இந்த சாகச மனப்பான்மையை அதிகாரமாக வளர்த்தெடுக்கும் ஆபத்துக் கொண்டது”.

“இருக்கலாம். இதுக்கெல்லாம் நீண்ட காலம் பிடிக்கும். அதுக் கிடையிலை சிங்கள பேரினவாத அரசு தமிழ் மக்களை இல்லாம லாக்கியிடும். இன அழிப்பு, கைதுகள், குடியேற்றங்கள் என அது தீவிரமா செயற்படுது. அதையும் கவனத்திலை எடுக்கத்தானே வேணும்” என்றான் ரகு.

“இந்த உடனடி அரசியல் நிகழ்ச்சி நிரல்களில் வருகிற எல்லாப் பிரச்சினைகளையும் இப்போதான் பலம்பெற்று வருகிற இயக்கங் களின் தலையில் கட்டிவிட முடியாது என்பது உண்மைதான். அரசியல் தலைவர்கள், சமூகப் புத்திஜீவிகள், சிவில் நிறுவனங்கள், வெகுஜன அமைப்புகள் என எல்லோருக்கும் இவற்றை எதிர் கொள்கிற பொறுப்புகள் இருக்கிறது. மக்களுக்கு இதுகுறித்து அறிவூட்டுகிற பொறுப்பு இருக்கிறது. இதில் இயக்கங்களுக்கு தவிர்க்க முடியாமல் மிக அதிக பொறுப்பு உள்ளது. எமது அவசரம் எம்மையே அழித்துவிடவும் கூடும். கழகத்தின் வளர்ச்சி என்பது படிப்படியாகவோ இயல்பாகவோ நடந்தேறிய வளர்ச்சியல்ல. அது ஒரு வீக்கம். இதை கவனத்திலெடுத்து நாம் நிதானமாகவும் சரியாகவும் சோசலிசப் பாதையில் பயணிப்பதே அடிப்படையில் முக்கியம்” என்றான் கஸ்ரோ.

“மொட்டை மூர்த்தியட்டை சோசலிசம் படிச்சு நாமெல்லாம் சோசலிஸ்டுகளாக வராட்டில் பிறகெப்படி..” என்று நக்கலாக சிரித்தான் டாக்குத்தன்.

மதியச் சாப்பாடு எமைத் தேடி வந்தது. குசினி சமையல் முறை தவிர, அன்று மூன்று துண்டுகளுக்கு அதிகமான இறைச்சித் துண்டு களை ரகு தனது சாப்பாட்டுத் தட்டில் கண்டான்.

மறுநாள் மூர்த்தி சிக்கிரி போர்ட்டுக்கு சிரித்துக் கொண்டு வந்தான். அவன் கஸ்ரோவை சுகவீனம் பற்றி கேட்டறிந்தான். கஸ்ரோவின் முழங்கால் பெரிதாக வீங்கியிருந்தது. காலை நீட்டுவதில் அவன் உபாதையை அனுபவித்தான். கைத்தாங்கலாக எழுந்து நடக்கும்போது வரும் வலி நரகத்தின் வாயிலை எட்டிப் பார்க்க வைத்துவிடுவதுபோல் இருப்பதாக அவன் சொன்னான். டாக்குத்தனின் மருத்துவம் கஸ்ரோவின் நோயோடு பகிடிவிட்டுக் கொண்டிருந்தது. கஸ்ரோ வலியை மூர்த்தியிடம் சொன்னான். தனக்கு மருத்துவ உதவி செய்யும்படி கேட்டான். இயக்கம் பற்றி, பெரிசு பற்றி மூர்த்தி திட்டமிட்டே கொண்டு வந்த செய்திகளை அவிழ்த்துக் கொட்டினான். ரகு மிக எச்சரிக்கை

யாக இருந்தான். கஸ்ரோ வெளிப்படைத்தன்மையாக இருந்தான் அல்லது அப்பாவித்தனமாக இருந்தான். அவன் வேறு உலகத்தில் இருந்தான் என்றும் சொல்லலாம்.

மதனைப் பற்றிய கதை வரும் போது, ''அவன் புலியின்ரை ஆள். இப்பிடி உளவாளியள் வந்து எங்களை அப்பிடி இலகுவிலை ஏமாற்றிப் போட்டுப் போக முடியாது. எப்பவும் எச்சரிக்கையா இருக்க வேண்டியிருக்கு'' என்றான் மூர்த்தி.

''அந்தத் தோழர் தான் சொல்லிறதைக் கேட்டுப் போட்டு அடியுங்க என்ற கத்தினாரே. ஏன் அவரையும் பேசவிட்டிருக்கலாம் தானே'' என கஸ்ரோ கேட்டான். ''எமது தோழர்களையே நாம் பேச விடாமல் அவர்கள் பக்க நியாயத்தைக் கேட்க தயாராக இல்லையெண்டால், எப்பிடி மக்களை பேச விடப்போறம்'' என்று வேறு சொன்னான் கஸ்ரோ.

மூர்த்தி, ''நீங்க சொல்லிறதும் சரிதான். ஆனால் அவன் தோழரல்ல. உளவாளி என நிரூபிக்கப்பட்ட ஒரு ஆள். துரோகி... எல்லா இயக்க விசயங்களையும் நாங்கள் உங்களுக்கு பகிரங்கமாக சொல்லமுடியாது'' என்று முற்றுப்புள்ளி வைத்தான்.

''நான் இதைப் பற்றி சந்ததியாரோடை கதைச்சன். அவர் தெளிவாக ஒன்றும் சொல்லிறாரில்லை'' என ஏற்கனவே கஸ்ரோ ரகுவிடம் கூறியிருந்தான். சந்ததியாருடன் கதைக்கும்போது முகாம் பொறுப்பாளர் பாண்டி அருகில் இருந்தான் என்பதை வாசகர்கள் நீங்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

மூர்த்தி அவனது வருத்தம் சம்பந்தமாக பாண்டியுடன் தான் பேசுவதாக சொல்லிச்சென்றான். மறுநாள் அதிகாலைப் பொழுதில் மூர்த்தி குறூப்பைச் சேர்ந்த நால்வர் வந்தார்கள். நடக்க முடியாதவாறு நோயுற்ற போராளிகளை பிரதான வீதிவரை காவிச்சென்று, பின்னர் வாகனத்தில் வைத்தியசாலைக்கு ஏற்றிச் செல்வது வழமை என ஏற்கனவே சொல்லப்பட்டிருந்தது. முகாமை யாருக்கும் அடையாளம் காட்டக்கூடாது என்பதற்கான ஏற்பாடு இது என்பது இதற்கான காரணம். இப்போ சாக்குத் துணி கொண்டு இரண்டு பக்கமும் நீளப்பாட்டுக்கு இரு கம்புகளில் கட்டப்பட்ட 'பல்லக்கில்' கஸ்ரோவை கிடத்தி தூக்கிச் சென்றனர். கிடத்தி என்பதை கடத்தி என நீங்கள் தவறுதலாக வாசித்திருக்கவும் கூடும்.

## 13

அன்று 'றோல்கோல்' சந்திப்பு முடிந்திருந்தது. அயல் வீட்டிலிருந்து வருபவன்போல மூர்த்தி (அடிப்பொடிகள் இல்லாமல்) சவுக்கம் காட்டுக்குள்ளிருந்து வந்துகொண்டிருந்தான். அவன் சண்டிக்கட்டை எப்போதும் முடிச்சுப்போட்டுக் கட்டியிருப்பான். அருகில் வரும்போது வியர்வை வாடையாய் எகிறும். ஆனந்தன் சிரித்தபடி கேட்டான்,

"இந்த முடிச்சை அவிழ்த்து இப்ப எத்தினை நாளாகுது?"

"ஒரு கிழமையாகுது"

"அப்ப ஒரு கிழமையாய் குளிக்கயில்லையா?". தெத்திப்பல் புன்னகையை ஒளிரவிட்டான் ஆனந்தன்.

"கெரில்லாக்கள் குளிப்பதில்லை" என்ற சுயஎள்ளலுடன் சிரித்தான் மூர்த்தி. உளவுப் படையின் நாலாம் மாடியில் (சவுக்கம் தோப்பு கொட்டிலில்) சிறைவைக்கப்படுபவர்களை விசாரணை செய்யும் குழுவுக்கு இந்த மொட்டை மூர்த்தி பொறுப்பாயிருந்தான், அடிப்பொடிகளாக சிலரை தன்னுடன் அவன் வைத்திருந்தான் என்பது உங்களுக்கு ஏற்கனவே புலப்பட்டிருக்கும்.

அவனது கையில் லெனின் மொழிபெயர்ப்புப் புத்தகம் இருந்தது. இன்று ரகுவினது பிளட்டூனுக்குள் அறுவை தொடங்கியது. எல்லோரும் சொருகிக்கொண்டு நிலத்தில் இருந்தார்கள். "நல்லா தமிழ் தெரிஞ்ச ஆட்கள், நல்லா வாசிக்கக்கூடிய ரண்டு பேர் முன்னுக்கு வாங்கோ" என்றான் மூர்த்தி. இருவர் போனார்கள். மாறி மாறி வாசிக்கத் தொடங்கினார்கள். மூர்த்தி அவர்களருகில் அமர்ந்தபடி நித்திரையில் தியருறுபவர்களை கண்காணித்தான். பகல் முழுவதும் பயிற்சி எடுத்த உடலின் அயர்ச்சி ரகுவுக்கு மெல்ல நித்திரையை வருடியது. அதைச் சமாளிப்பதான போராட்டம்தான் வாசிப்பு முடியும்வரை அநேகமாக எல்லோருக்குமானதாய் இருந்தது. சாதாரண தமிழில் தத்துவத்தைப் படிக்கவே மண்டையைப் போட்டு உடைக்க வேண்டியிருக்கும்போது மொழி பெயர்ப்புத் தமிழ் என்றால் சொல்லவும் வேண்டுமா. சோசலிசம் பற்றி ரசியப் புரட்சி நாயகன் லெனின் சொல்லிக் கொண்டிருக்க, முன்வரிசையில் அமர்ந்திருந்த சிங்கப்பூர் எல்லாம்

விளங்குவது போல் அடிக்கடி மெல்ல தலையாட்டிக் கொண்டு இருந்தான். டாக்குத்தன் சிங்கப்பூருக்கு மென்போட்டியாக ஆட்டிக்கொண்டிருந்தான். மூர்த்தி அதிலிருந்து கேள்விகள் எதுவும் கேட்பதில்லை.

“தோழர், நல்லா ஆட்டினீங்கள் போலை. நல்ல காலம்... மூர்த்தி கேள்வி கேட்டால் நிலைமை என்ன” என்றான் ஆனந்தன். சிங்கப்பூர் “மூர்த்திக்கு விளங்கினால்தானே எங்களைக் கேள்வி கேட்க...” என்றான். மாறிமாறி ஒவ்வொரு பிளட்டூனுக்குள்ளும் நடக்கும் இந்தத் துயரம் மூர்த்தியின் இன்னொருவகைச் சித்திரவதையாகப் பட்டது பலருக்கு.

முகாம் பகலில் வெக்கையில் தகித்துப்போயிருந்தது போல் இரவில் இருப்பதில்லை. இருள் நிலத்தில் ஒரு உயிர்க் குமிழியாய் முகாம் பூத்திருக்கும். அதற்குள் வெக்கை சற்று இளைப்பாறியபடி யிருக்கும். அது தனது உடற்களைப்பை வருடிவிடுவதுபோல் உணர்ந்தான் ரகு. எப்போதுமே இப்படியாய் இருப்பதில்லை. மழைகாலத்தின்பின் நுளம்புத் தொல்லை எல்லோரது நித்திரை யின் மீதும் தாக்குதல் தொடுத்தபடி இருக்கும். சாக்கு, உரப்பை என கிடைத்த ஒருசிலர் ஒப்பீட்டளவில் பாக்கியசாலிகளாக இருந்தனர். மற்றவர்கள் நுளம்பை வெல்ல முடியாமல் சாமத்தில் முகாமில் சுற்றித் திரிவதும் குறைத்தூக்கம் கொள்வதுமாக இருப்பர். முகாம் பொறுப்பாளர் பாண்டி, பயிற்சியாளர் லெனின் ஆகியோர் நுளம்பு வலைக்குள் தூங்கினர். மொட்டை மூர்த்தியின் சித்திரவதைக் குறூப் உம் சிலவேளை நுளம்புவலைக்குள் தூங்கும் பாக்கியம் பெற்றவர்களாக இருந்திருக்கக் கூடும். கொஞ்ச வேப்பம் இலையோ கொட்டையோ அல்லது பட்டையோ தன்னும் கிடைக்காதா என ரகு போலவே பலரும் நினைத்திருக்கக் கூடும்.

கோடையில் எரியும் புழுதி நிலமும் வெக்கையும் மழைக் காலத்துக்காக ஏங்க வைக்கும். மழைகாலத்தில் படைநடத்தும் நுளம்பு கோடை காலத்துக்காக ஏங்க வைக்கும். நுளம்புத் தொல்லையால் துண்டாடப்படுகிற தூக்கத்துடன் தொடரும் உடல் தனக்கான ஓய்வை பெற துடித்தது. தொடரும் பயிற்சியோ எந்த ஈவிரக்கமுமின்றி அந்த உடலை வருத்துவதுபோல் உணர்ந்தான் ரகு. ஆனாலும் அந்த விட்டுக்கொடுப்பற்ற பயிற்சி ஒழுங்குமுறை தேவையானது எனவும் மனம் ஒப்பினான்.

மழைக்காலம் முடிந்து போக படிப்படியாக வெக்கை தனது வியர்வைப் பரிவாரங்களோடு மண்ணை ஆக்கிரமிக்கத் தொடங் கியது. இலைதளிர் காலத்தை இந்த இரசனையற்ற சவுக்க மரங்கள் புழுதி கழுவி கொஞ்சம் பச்சையாய் கோலம் கொண்டு வரவேற்றதைத் தவிர பெரிதாய் எடுப்பெடுத்துக் காட்டவில்லை. முகாம் முற்றத்தில் காணாமல் போயிருந்த புற்கள் கொடிக் கம்பத்தை அண்டிய இடங்களில் மட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாக கூட்டமாக எழுந்தன. அவை கிழிசலான பச்சைக் கம்பளமாக காட்சியளித்தன. வெக்கை மட்டுமல்ல, இந்தப் போராளிப் படைகளின் நடமாட்டத்தில் தேயும் நிலமாக கொடிக்கம்ப குறுநிலத்தைச் சுற்றிய முழு நிலமும் இருந்ததால் புல் அங்கு வருவதில்லை. வாசலில் வட்டக் குடிசையின் அருகில் வளரத் தொடங்கியிருந்த வேப்பமரம் தனது மழலைக் குருத்து களாலும் பசுமையாலும் இலைதளிர் காலத்தை வரவேற்றது. ரகு அதை இரசித்தான்.

நாளை தமிழக அரசியல்வாதிகள் சிலர் வருவார்கள் என்ற அறிவிப்பு முகாம் தோழர்களுக்கு கொடுக்கப்பட்டது. யார் எவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என எதுவுமே சொல்லப்பட வில்லை. கேட்பது குற்றமாகிவிடலாம் என்பதால் ரகுவும் அதுபற்றி கேட்கவில்லை. அவர்கள் கழுத்தில் தொங்கும் சால்வை யுடன் வந்தார்கள். அது அவர்களின் கட்சி அடையாளத்தை கண்டு பிடிக்கிற ஒரு பரீட்சையை தோழர்களிடத்தில் நடத்தியது. முகாம் சுற்றாடல் துப்பரவாக ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தது. அவர்க ளுடன் யாரும் பேசக்கூடாது என்ற அறிவுறுத்தலால் அவர்களை முகம்கொடுப்பதை ரகுவும் தவிர்த்திருந்தான்.

அவர்களை முகாம் பொறுப்பாளரும் வெளியிலிருந்து வந்த பொறுப்பானவர்களுமாய் சிலோமோசனில் பிளட்டூன்களின் வாசல்வழி அழைத்துவந்தார்கள். ஒரு போராளிக் காட்சிச் சாலையை கண்டுகளிப்பதுபோல் பெருமிதத்தோடு அவர்கள் நடந்தார்கள். ஏதோதோ சொன்னார்கள். அந்த அரசியல்வாதிகள் இடையிடையே கரத்தை மேலுயர்த்தி கோணலாக வணக்கம் போட்டார்கள். அவர்கள் வணக்கம் போட்ட முறையைப் பார்த்த சிங்கப்பூர் “இவங்கள் என்ன வணக்கத்தை வளைச்சு வளைச்சு சொல்லுறாங்கள். நாங்களென்ன வாக்காளர்களா?” என்று முணுமுணுத்தான். “பழக்கதோசம்” என்றான் ஆனந்தன். எமது போராட்டத்துக்கு அங்கீகாரம் இந்தியாவிடமிருந்து கிடைக்கிறது

என்பதான தொனியில் கதைகள் முகாமுக்குள் பரிமாறப்பட்டன. அப்படியாய் நினைத்து நம்பிக்கைகளை பாதுகாத்து வைத்திருந்த வர்களுக்கு தமிழீழம் அண்மித்துத் தெரிந்தது. பின்னர் முகாம் வாசலில் இருந்த வட்டக் கொட்டிலுள் அவர்களும் முகாம் பொறுப்பாளரும் அமர்ந்து பேசினார்கள். அவர்கள் கொக்கோ கோலா குடித்தார்கள். பிஸ்கற் சாப்பிட்டார்கள். பின்னர் அவர்கள் போய்விட்டார்கள்.

இந்தப் போராளிகளுக்கு அரசியல் வகுப்பெடுத்தும், கழகம் மீதான நம்பிக்கையை வைத்து உறுதிமொழிகள் கொடுத்தும் இங்கு பயிற்சிக்கு அனுப்பிவைத்த அரசியல்துறைப் பொறுப் பாளர்கள் எவருமே இந்த முகாம்களுக்கு வரமாட்டார்களா என தோழர்கள் ஏங்குவதுண்டு. மத்தியகுழுவிலிருந்த அரசியல் பிரிவுத் தோழர்கள் மத்தியகுழுக் கூட்டத்துக்கு பின்தளம் வரும்போதாவது அவர்கள் முகாம்களை பார்வையிட வருவதில்லை அல்லது அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் தேர்தல் அரசியலுள் இயங்கும் இந்த தமிழக அரசியல்வாதிகள் வந்தார்கள். போனார்கள்.

அந்த வட்டக் கொட்டிலினுள் முகாம் போராளிகள் போய் அமர முடியாது. அது சுற்றிவர மண்ணிலானான அரைச் சுவரைக் கொண் டது. கூரை பனை ஓலையால் வேயப்பட்டிருந்தது. உட்புறமாய் மரத்தில் செய்யப்பட்ட வாங்கிலும் சிறிய அரைவட்ட மேசையும் இருந்தது. எரியும் பூமியில் அது குளிர்மையை ஒளித்துவைத்திருந்தது. அருகில் ஒரு வேப்பமரக் கன்று வளர்ந்து கொண்டிருந்தது.

மற்றபடி முகாமின் முற்றத்திலோ உட்சுற்றுப் புறத்திலோ எந்த மரங்களும் இல்லை. சவுக்கமரக் காடு சூழவும் நெரிசலாய் வளர்ந்து காற்றை தடுத்து வீழ்த்திக்கொண்டிருந்தது. குளித்தவுடன் மீண்டும் வியர்க்கும். ஈரத் துவாயையும் பென்ரரையும் கூரையில் போட்ட சில நிமிடங்களிலேயே உலர்ந்துவிடும். அந்த இடைவெளியில் எழுதப்படாத டியூற்றியாக தமது பென்ரருக்கு எல்லோருமே கடைக்கண் காவல் காக்க வேண்டியிருந்தது. அவர்களது கொட்டில் கூரையில் அது காயும்வரை அருகில் உலாத்தவேண்டியிருக்கும். கழகத்தின் பெனியன் அநேகமாக இரு தோட்பட்டையிலும் கிழிந்திருக்கும். கிராவலிங்கின் சுவடு கள் அவை. அரைக்காற் சட்டையும் வெள்ளை பெனியனும்

புழுதி படிந்து மண்நிறமாக மாறிவிட்டிருக்கும். புதிய பென்ரரை அணிகிற அவர்களது ஆவல் ஒரு கனவுபோல் வந்தலையும்.

கழகத்தின் மத்தியகுழு உறுப்பினரில் ஒருவரான வாசு ஒருமுறை முகாமுக்கு வருகை தந்தார். ஒழுங்காக வாரிவிடப் பட்டிருந்த தலைமயிருடனும், புரட்சிக்கரத் தாடியுடனும், ஒருபக்கத் தோளில் தொங்கும் ஒரு பையுடனும் அவர் காட்சிதந்தார்.

''அண்ணை எங்களுக்கு பென்ரர் பெரிய தட்டுப்பாடாக இருக்கு. ஏதாவது வழிபண்ணலாமே''

''தோழர்! பென்ரர் கொம்பனி எல்லாம் ஸ்ரைக் இலை நிக்குது. அதுதான் முக்கியமா? உங்களுக்குத் தெரியுமா கோவணம்தான் எங்கடை மரபுசார்ந்த உள்ளாடை. விடுதலைக்கு எண்டு வந்த னீங்கள்... வசதிகளையெல்லாம் எதிர்பார்க்கக்கூடாது. கோவணம் கட்டுறதிலை வெட்கப்பட என்ன இருக்கு?'' என்றபடி அளவாக கத்தரிக்கப்பட்ட தனது தாடியைத் தடவிக்கொடுத்தார். அவர் அழகான நீல டெனிம் றவுசர் அணிந்திருந்தார். மடிப்புக் கலையாத நீலக் கோடு போட்ட முழுநீள சேர்ட் அணிந்திருந்தார்.

முகாம் வாழ்க்கை பல மாதங்களைக் கடந்துவிட்டிருந்தது. வீட்டிலிருந்து ஏதாவது பதில் கடிதம் வந்ததா என்று விசாரித்து ரகுவுக்கு அலுத்துப்போய்விட்டது. அவன் இங்கு வந்தவுடன் ஒரத்தநாடு மொட்டை மாடியில் வைத்து வீட்டுக்கு எழுதிய பாவமன்னிப்புக் கடிதத்துக்கு என்ன நடந்தது என்று தெரியாது. முகாம் தோழர்கள் எழுதும் கடிதங்கள் மொட்டைமாடி நிர்வா கத்தால் படித்து தணிக்கை செய்யப்பட்ட பின்னரே கடல்வழி கழக வண்டியில் அவரவர் ஊர் அரசியல் பொறுப்பாளரிடம் போய், பின் வீட்டுக்கு போய்ச் சேரும் நடைமுறை இருந்தது. அதேபோல் வீட்டார் அனுப்பும் கடிதங்கள் மொட்டை மாடியில் படிக்கப்பட்டு தணிக்கையுடன் கிடைக்கும்.

போகும் கடிதத்தில் கழக இரகசியமும், வரும் கடிதத்தில் போராட்ட உணர்வைப் பாதிக்கும் விடயங்களும் தணிக்கைக்கு உள்ளாகும். இந்த ''விடுதலைத் தணிக்கைக் குழு'' யாரென்று எவருக்கும் தெரியாது. அதன் நடைமுறையும் தெரியாது. தந்தை தாய் இறந்துபோன விடயம்கூட பலருக்கும் தெரியாமல் போனது. இந்தக் கடிதப் பரிமாற்ற காலம் இரு கிரகங்களுக்கு

இடையிலானதாக இருந்தது. இதற்கு சுமார் மூன்று அல்லது நான்கு மாதங்கள் கூட ஆகலாம் அல்லது நடக்காமலும் போக லாம், அல்லது கடற்படை கலைக்கும்போது கடலிலும் வீசப் படலாம்.

ரகு வந்த வண்டிக்கு அடுத்ததாக பின்தளம் வந்த வண்டி கடலில் அடிபட்டுப் போனது. வாடகைக்கு அமர்த்திய அதே வண்டிதான் அது. அதில் வந்த எல்லோருமே இலங்கைக் கடற்படையின் தாக்குதலில் கொலையுண்டு போனார்கள். இந்தச் செய்தியை கடலில் மிதந்து கரையில் வந்தொதுங்கிய சடலங்கள்தான் ஊருக்குக் காவிவந்தன. அதில் ரகுவின் சாயலில் ஒருவரது உடல் வீங்கிய நிலையில் இருந்தது. அதேபோல் கரனின் சாயலிலும் இன்னொரு உடலம் ஊதியிருந்தது. ஊரவர்கள் பதட்டமடைந்தார்கள். உண்மையா பொய்யா என ரகு வீட்டாரும் கரன் வீட்டாரும் குழம்பிப்போயிருந்தனர் என்பதை பின்னரான காலங்களில் ரகு அறிந்துகொள்ள முடிந்தது.

இப்போ புதிய முகாம் பொறுப்பாளராக ஆதவன் வந்தார். இவர் அரசியல் தெளிவுள்ளவர் என்ற அறிமுகம் ரகுவுக்குள் எதிர்பார்ப்புகளை உருவாக்கியது. முதல் பார்வையில் அவரது சுபாவமும் பார்வையும் இறுகியதாக தெரியாதது ஆறுதலைத் தந்தது. ஆனந்தனுக்கு ஏற்கனவே அவரைத் தெரியும் என்பதால் ரகுவும் ஆனந்தனும் அவருடன் தனியாகப் பேச சந்தர்ப்பத்தை உருவாக்கினார்கள். முகாம் வாசலின் கடவை அருகே இருந்த வட்டக் கொட்டிலில் ஆதவன் அவர்களைச் சந்தித்தார். அருகில் யாரும் இல்லாததை உறுதிப்படுத்தியபடி ரகுவும் ஆனந்தனும் கதைத்தார்கள்.

முகாமில் நிலவும் நடைமுறைகள், தண்டனை முறைகள், நாலாம் மாடி என்பன பற்றியும், அதைவிட ஒருவித மூடுண்ட பிம்பமாக கழகத்தை தாம் உணர்வது பற்றியும் ஒரு சிறு உரையாடலை ரகுவும் ஆனந்தனும் ஆதவனுடன் தயங்கித் தயங்கி நிகழ்த்தினார்கள். வெளித்தெரிந்தால் ஏற்பட்டுவிடக் கூடிய ஆபத்திற்கும், மர்மங்களால் பிசையப்பட்டுக் கொண்டிருக்கும் மனதுக்கும் இடையில் ரகுவும் ஆனந்தனும் நிறுத்தப்பட்டிருந் தார்கள். ஆதவனின் பதில்கள் எல்லாம் ஒருவித மழுப்பல்களாக வெளிவந்தன. எல்லோருமே தம்மைக் காப்பாற்றும் பணியில் கவனமாக இருக்கிறார்கள் என்று ரகுவுக்குப் பட்டது.

*மாலை வேளை லெனின் தனது கொட்டிலின் முன்புறத்தில் கயிற்றுக் கட்டிலில் தனியாக இருந்து வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். இவரது பேச்சுகள் குறித்து ஆதவனிடம் ரகுவும் ஆனந்தனும் சொல்லியிருந்தார்கள். "லெனினை நாம் கட்டுப்படுத்த முடியாது" என்றார் ஆதவன். இருந்தபோதும் ஆனந்தனை அவர் லெனினுக்கு அறிமுகம் செய்து வைத்தார். தனக்கு ஊரில் ஏற்கனவே தெரியும் எனவும், அரசியல் பிரிவில் அங்கு வேலை செய்ததாகவும் சொன்னார். இவர்கள் லெனின் குறித்து குறைப்பட்டதை ஆதவன் லெனினுக்குச் சொன்னார். லெனின் ஒரு வெகுளித்தனமான சிரிப்பை உதிர்த்தார். பதிலேதும் சொல்லவில்லை. ஆதவன் தொடர்ந்து அதில் நிற்கவில்லை.*

*"நீங்க ஏன் இங்கு பயிற்சியாளராக வந்தீங்க? "*

*"நான் தமிழன். தமிழனுக்கென்று ஒரு நாடு வேணும். அதுக்கு என்னாலானதை செய்ய வேணும் எண்ணு தோணிச்சு. நீங்களெல்லாம் வாழுற வயசிலை இப்பிடி வந்து கஸ்ரப்படுறியள். எனக்குத் தான் வயசு போயிட்டுது. புள்ளை குட்டி என வாழிறவன் நான். ஆனால் நீங்க? "*

*"தமிழனுக்கெண்டு ஒரு நாடு வேணும் எண்டிறியள். தமிழ் நாட்டிலைதானே ஆறு கோடித் தமிழர்கள் இருக்கிறியள். இங்கை அந்த தனிநாட்டை கேட்டு போராடலாம்தானே? "*

*"இங்கிட்டு அதெல்லாம் சரிப்பட்டு வராது. ஈழத் தமிழன் உணர்ச்சியுள்ளவன்" என்றார்.*

*"உங்களுக்கு அப்பிடித் தெரியுது. நல்லது" என்று கோணலாகச் புன்னகைத்தான் ஆனந்தன்.*

*"இராணுவத்திலையிருந்து ஒய்வு பெற்ற பிறகா இங்கை வந்தனீங்க? "*

*"அதுக்கு இன்னும் சில வருசம் இருந்திச்சு. நான் றிற்றயர் நோட்டீஸ் முதலிலையே குடுத்திட்டன்".*

*"அது உங்களுக்கு இராணுவத் தரப்பிலை பிரச்சினை குடுக்காதா? "*

*"இல்லையில்லை. உடல்நிலையை காரணம் காட்டி வெளிய வந்தனான். இப்ப இங்கை இருக்கிறது யாருக்கும் தெரியாது"*

“ஊரிலை? “

“இல்லை. அதை இரகசியமாகவே வைச்சிருக்கிறம்”

“இப்ப இங்கை திருப்தியாக இருக்கிறியளா? “

கொஞ்சம் தன்னை ஆசுவாசப்படுத்தி அவர் “ஆமா” என பதிலளிப்பதற்குள் விழுந்த கால அவகாசம் ஒரு இழையாக ரகுவுக்கும் யோகனுக்கும் அகப்பட்டது.

“நீங்கள் எங்கட பிரச்சினைக்காக இவளவு அர்ப்பணிப்போடை வீட்டை பிள்ளையளை விட்டு இந்த காட்டுக்கை கிடக்கிறியள். ஒருவிதத்திலை பெருமையாயிருக்கு” என ஆனந்தன் ஒரு கவணை மெல்ல எறிந்தான்.

லெனின் சற்று உணர்ச்சிவசப்பட்டுப் போனார். இந்தக் கவணைப் பிடித்து ரகுவும் ஆனந்தனும் மெல்ல மெல்ல ஏற முயற்சித்தனர். மதனின் பிரச்சினையில், அவன் சித்திரவதை செய்யப்பட்ட சம்பவத்தில் மிக அவதானமாக ஆனந்தன் பேச்சைத் தொடங்கினான். “உண்மையில் எங்களை மதன் காட்டிக்கொடுத்து விட்டானா. எல்லாம் அழிவிலை போய் முடியுமா? அவன் புலிகளோடு தொடர்புபோலைதான் இருக்கு. இல்லாட்டி ஏன் முகாமைவிட்டு ஓடுறான்” என போலியாக மெல்லத் தீர்த்துக் கொண்டிருந்தான்.

நீண்ட காலமாகவே இந்த முகாமின் பயிற்சியாளர்களில் ஒருவராக நடப்பவற்றையெல்லாம் அவதானித்துக் கொண்டிருப்பவராக லெனின் இருந்தார். ஆனால் அவர் பேச மறுப்பவராகவே தனது தாடியை தடவிக்கொண்டிருந்தார். அவரது மவுனத்தை திறந்துவிட ஆனந்தன் திறப்பை தேடிக்கொண்டிருந்தான். அது அவளவு இலகுவல்ல. சிக்கலுக்குள் மாட்டிவைத்து விடவும் கூடும். ஆதவனுடன் ஏற்கனவேயான தோழமையும் நம்பிக்கையும் ஆனந்தனுக்கு சிறு பாதுகாப்பு உத்தரவாதத்தைக் கொடுத்திருந்தது.

“உந்த சவுக்கம் தோப்புக்கை இருக்கிற கொட்டிலுக்கை என்ன நடக்குதோ தெரியவில்லை. முகாமிலையிருந்து பெடியங்கள் அவ்வப்போது சிலபேர் காணாமல் போய்விடுறாங்க எண்டும் கதை அடிபடுது. ஓடிப்போயிட்டாங்க எண்டு மூர்த்தி அண்ணை சொல்லுறாராம்” என்றான் ஆனந்தன். லெனின் இப்போதும்

தாடியை தடவிக் கொண்டிருந்தார். அந்தரத்தில் நடக்கும் ஆனந்தனின் இந்த முயற்சியும், லெனின் வெளிப்படையாக எதை யும் பேசத் தயாரற்று இருந்ததும் ரகுவுக்கு கொஞ்சம் அச்சத்தை ஊட்டியது.

“என்ன இருந்தாலும் சமூகத்துக்கென எல்லாத்தையுமே உதறித் தள்ளிவிட்டு வந்திருந்தும்கூட, இயக்கத்தின்ரை இவளவு உழைப்பையும் மதிக்காமல் இப்பிடி முகாமைவிட்டு ஓடுறது பிழைதானே” என்று ரகு தீர்த்தான். லெனின் இப்போதும் தாடியை தடவிக்கொண்டிருந்தார். அவரது உடல்மொழியில் எந்த மாற்றமும் நிகழவில்லை. ரகு ஆனந்தனுக்கு மெல்ல கண்களால் சமிக்ஞை காட்டினான். அவர்கள் அந்த இடத்தைவிட்டு அகன்றார்கள். லெனின் அநாயாசமாக பீடியை இழுத்து இருளினுள் புகையை ஊதினார்.

இதேபோல சவுக்கம் காட்டுக்குள் நாய் தோண்டியெடுத்த இரண்டு அழுகின பிணங்களை வயல்காரர்கள் பார்த்துவிட்டு முகாமுக்கு வந்து சொன்னார்கள் என்ற கதையை ஆனந்தன் கேட்க மறந்திருந்தான் அல்லது தவிர்த்திருந்தான் என்பது ரகுவுக்கு கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. ஆனந்தனின் சுபாவம் ஒரு துள்ளியோடும் கன்றுக்குட்டி போன்றது. அது தடாலடியாக எந்தத் திசைக்கு திரும்பி சுழன்றோடும் என்பது கணிக்க முடியாதது என்பதை ஏற்கனவே ரகு அறிந்திருந்தான்.

## 14

இப்படியாய்த் தொடர்ந்த காலங்களில் கழகத்தின் தொலைத் தொடர்புப் பயிற்சிக்கான ஆட்களை தேர்வுசெய்வது பற்றிய தகவல் ஆதவனிடமிருந்து வந்தது. கழகத்தின் எல்லா முகாம்களி லிருந்தும் இத் தேர்வு இடம்பெறுகிறது என்றார் ஆதவன். “பி” முகாமிலிருந்தும் (ஆரம்ப முகாம்) தேர்வுசெய்யப்பட்டபோது ரகு, ஆனந்தன், டாக்குத்தன், சிங்கப்பூர் நால்வரும் தெரிவானார்கள். குறைந்தபட்சம் உயர்தர வகுப்பு படித்திருப்பது தகுதிக்கான அடிப் படையாக இருந்தது. கஸ்ரோ இருந்திருந்தால் அவனும் அவர்க ளுடன் தெரிவாகிப் போயிருப்பான்.

விடுவிக்கப்படாத கேள்விகளோடும், சமாதானப் பதில்களோ டும், நம்பிக்கையோடும் நம்பிக்கையின்மையோடும் இந்த

முகாமில் இருந்த ரகுவுக்கு ஒரு மாற்றம் என்றளவில் இது சந்தோசமாக இருந்தது. அதேநேரம் லெனினுடன் தாம் பேசியதும் அவரது மவுனமும் ஒரு மூலையில் அச்சத்தை பொத்தி வைத்திருந்தது. கரனை தம்முடன் அழைத்துச் செல்ல ஆதவனோடு கதைத்தார்கள். முடியாமலிருந்தது. அவன் உயர்தர வகுப்பு (ஏஎல்) வரை படிப்பதான பருவத்தை அடையவிடாமல் அறுத்தெறிந்து தன்னோடு ரகு கூட்டிவந்திருந்ததால், அவனைப் பிரிவது பற்றிய கவலை அதிகமாக ரகுவைப் பாதித்தது. இனி சந்திப்போமா என்ற சந்தேகமும் மனதை அரிந்தது. அதேநேரம் இந்த முகாமைவிட்டு போவதில் ஒருவித பாதுகாப்புணர்வு இருந்தது.

இந்திரனும் சந்திரனும் கடைசியாக ரகுவை சந்திக்க வந்தார்கள். இவர்கள் இருவரையும் ரகு இயக்கத்துக்கு அரசியல் வேலை செய்து கொண்டிருந்தபோது பின்தள பயிற்சிக்கு அனுப்பி யிருந்தான் என்பது ஏற்கனவே உங்களுக்குத் தெரியும். 3-6 மாத கால பயிற்சி முடிந்து ஊருக்கு வந்துவிடலாம் என்ற ஒப்புவிக்கப்பட்ட பொய்யை ரகு நம்பி, இவர்களை பயிற்சிக்காக இங்கு அனுப்பி வைத்திருந்தான்.

ஆறு மாதம் ஏற்கனவே கடந்து போய்விட்டிருந்தது. ரகுவும் விடைபெற்றுப் போய்விட்டான். இந்திரன் தனது தாயாரின் நினைவாலும், தகப்பனாரின் வன்முறையிலிருந்து தாயைக் காக்கும் பணியை இனி யார் செய்யப்போகிறார்கள் என்ற ஆதங்கத்தாலும் அவதியுறத் தொடங்கினான். அந்த அவதி வளர்ந்து அவன் இரவில் அழத்தொடங்கினான். பின்னர் முகாமை விட்டு ஓடித்தப்ப முயற்சித்தான். ஓடினான்.

முகாமின் எந்தத் திசையில் ஓடினால் வீதிக்கு வரலாம் என்ற இரகசியத்தை காப்பாற்றுகிற வேலையை இயக்கம் நடுநிசி இருளிடம் விட்டுவைத்திருந்தது. வந்த வழியின் ஒரு சுவடைக்கூட இருள் இல்லாமல் பண்ணியிருந்தது. இருந்தும் இந்திரன் அதே இருளை பன்படுத்தி ஓடினான். அது அவனை அச்சமூட்டவும் செய்தது. முகாமின் பின்பக்கத்தால் பதுங்குகுழியைத் தாண்டி முகாமிலிருந்து நழுவினான். அந்த நேர டியூற்றியில் இருந்தவர் ஒருவரினது உதவியின்றி தப்பியோடுதல் சாத்தியமாவது கடினம். திசையறியா இந்த திகில் பயணத்தின்போது விரைவான தப்பித்தல் என்பது

அவனது உடனடி இலக்காக மாறியிருந்தது. துயர் துரத்திய அந்தக் கணங்களை அவன் ஒவ்வொரு யுகமாகக் கடந்து ஓடிக்கொண்டிருந்தான். சவுக்கம் தோப்புகளும் பொட்டல் வெளி களுமென விரிந்த வெளிகளில் அவனது வியர்வை நீர்த்தூசிகளாய் பறந்துபோயின. மூளையும் இதயமும் வெவ்வேறாகப் பிரிந்து அவனது உடலை இயக்கின.

அவன் கண்கள் ஒரு வீதி வெளிச்சத்தின் புள்ளியை கண்ட போது, இன்னும் வேகமுற்றான். திசையறியா இருட்கடலில் தத்தளித்த அவனுக்கு ஒரு கரைபோல் அந்தப் புள்ளி தெரிந்தது. அந்த வெளிச்சப் புள்ளியை நோக்கி ஓடினான். அவன் கண்களுக்கு அது பெருத்துக்கொண்டே இருந்தது. அவனது பாதம் வலியெடுத்தது. காலிலிருந்து இரத்தம் பிசுபிசுத்ததை அவன் உணர்ந்தான். முட்கள் கீறிய காயங்களிலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. வீதியை அண்மித்த அவன் வியர்வையையும் இரத்தக் கசிவையும் வழித்து துடைத்தான். காயங்களில் எரிவு ஏற்பட்டது. தனது பெனியனை கழற்றி உடலை தேய்த்தான். திரும்பவும் அதை அணிந்துகொண்டு வீதி அருகிலுள்ள பற்றைவழி பதுங்கி கடந்து கொண்டிருந்தான்.

நாய்கள் குரைக்கத் தொடங்கின. இரண்டு தேனீர்க் கடைகளும் மூடியிருந்தன. கடைவாசலில் உறங்கிக்கொண்டிருந்த ஒரு நடுத்தர வயதுக்காரன் எழுந்து கவனித்தான். இந்திரன் மெல்ல அவனிடம் போனான். அந்த நடுத்தர வயதுக்காரன்தான் அந்தக் கடையின் சொந்தக்காரன் என்பது தெரியவந்தது. இந்திரனின் தமிழ் உச்சரிப்பும் புழுதிக் கோலமும் வியர்வை நாற்றமும் இரத்தக் கசிவுகளும் அந்த கடைக்காரனுக்கு வேறொரு சந்தேகத்தையும் உண்டுபண்ண அவசியமிருக்கவில்லை. ‘‘விடுதலைப் புலிங்களா’’ என்று கேட்டான் அவன். ‘‘ஆமா’’ என தலையாட்டிய இந்திரன் அழத் தொடங்கினான். கடைக்காரன் மேலதிகமாக எதுவும் கேட்கவில்லை. அவன் தீர்மானகரமாக இருந்தான். ‘‘என்னை காப்பாற்றுங்க அண்ணை’’ என்று இந்திரன் கெஞ்சினான். ‘‘சரி தம்பி, நீங்க கடைக்குள்ள உட்காருங்க. காலைல முதல் பஸ்சுக்கு ஏத்திவிடுறன். எங்கையாச்சும் போய்த் தப்புங்க’’ என்று ஒரு அண்ணனாக அரவணைத்துப் பேசினான், கடைக்காரன். இந்திரன் கடைக்குள் நடுங்கிக் கொண்டிருந்தான். அவனது உடல் அங்கங்கள் எல்லாம் அவனை மீண்டும் ஒன்றுசேர்த்துக் கொண்டி ருக்க, அவன் உறங்கிப்போனான் அல்லது மயக்கமுற்றான். அந்த

நடுநிசியில் வீதி மட்டுமல்ல, பாப்பாநாடும் உறங்கிக்கொண்டிருந்தது.

அவனது முகத்தில் விழுந்த உதையொன்று அவனை நிலைகுலைத்து, இடையில் நின்ற அவனது பயணக் கதையை தொடராக நகர்த்தியது. இழுத்துப் போனார்கள் முகாமுக்கு. கடைக்காரன் வெற்றிப் பெருமிதத்தோடு பார்த்துக்கொண்டு நின்றான். இந்திரனிடம் உருப்படியான திட்டம் எதுவும் இருக்கவில்லை. அந்த வீதிக் கடைகளின் உரிமையாளர்கள் முகாமிலிருந்து தப்பியோடுபவர்களை பிடித்து தம்மிடம் ஒப்படைக்கச் செய்ய இயக்கம் ஒரு உத்தியை கையாண்டிருந்தது. இலங்கை அரச தமிழ் உளவாளிகள் பயிற்சி முகாமை நோட்டமிட வரக்கூடும், அல்லது அப்படி தாம் பிடித்து கைதியாக வைத்திருப்பவர்கள் தப்பியோடவும் கூடும் எனவும், அவர்களை காண நேர்ந்தால் பிடித்து தம்மிடம் ஒப்படைக்கும்படி விடுதலையின் பேரால் வேண்டுகோள் விடுத்திருந்தது. அவர்கள் தமிழீழத்துக்குச் செய்யும் பங்களிப்பாக, ஒரு சக தமிழனின் கடமையாக உணர்ந்து அதை ஒப்புக்கொண்டிருந்தனர். இந்திரன் ஓர் அரச உளவாளியாக கடைக்காரனுக்கு தெரிந்திருப்பான். இவை எதுவுமே இந்திரனுக்கு தெரிய வாய்ப்பில்லை. அவனுக்கு வேறு தேர்வும் அந்தக் கணத்தில் இல்லாமலிருந்தது. இப்போ ‘நாலாம் மாடி’ கைதியாக ஆனான்.

சித்திரவதைக் குறூப்பில் இருந்தவர்களின் முகம் தெளிவடையத் தொடங்கியபோது தனது வாழ்வு மங்கலாகிக் கொண்டிருந்ததை இந்திரன் உணர்ந்தான். மொட்டை மூர்த்தியின் தலையில் சிலிர்த்த மயிர்க்காட்டைக் கண்டான். நான்கு கரங்களுடனும் கூரிய நகங்களுடனும் அவன் உருக்கொண்டிருந்ததைக் கண்டான். பிறகு தான் தலைகீழாக உளன்றியில் கட்டித் தொங்கவிடப் பட்டதை கண்டான். அவனது உலகம் தலைகீழாக மாறியிருந்தது. விசாரணை தொடங்கியது. அவனது முழங்கால் சிரட்டையின் மீது பொல்லுகளால் தொடர்ந்து தாக்கினார்கள். இந்தக் காலாலை தானே ஓடினாய் என்று சொல்லிச் சொல்லி அடித்தார்கள். எல்லா சக்தியையும் விழலுக்கு இறைத்த நீராக்கி சோர்ந்துபோயிருந்த அவனது கால்கள் துடிதுடித்தன.

“உனக்கும் புலிகளுக்கும் தொடர்பிருக்கா? “ என்ற மாபெரும் கண்டுபிடிப்பை நிகழ்த்த அவர்கள் மாய்ந்து கொண்டிருந்தார்கள்.

அவனோ ''அம்மா அம்மா'' என்று அலறினான். ''உன்னுடன் கூட பின்தளத்துக்கு வந்தவன் யார்யார்'' என கேட்டு விளாசினார்கள். அவன் சொல்லவில்லை. செத்தல் மிளகாய்ச் சாக்கால் முகத்தை மூடி கொட்டனாலும் தூசண வார்த்தைகளாலும் தாக்கினார்கள். அவனது உலகம் ஒரு நரகமாக மிளகாய் சாக்கினுள் சுழன்றது. மூச்சு விடுவதை அது குற்றமாக அறிவித்தது. தாளாத இருமலால் அவன் அவதியுற்று உயிரின் எல்லையைத் தொட்டபோது ''சொல்லிறன்'' என கத்தினான்.

இப்போ சந்திரனும் புதிதாக உளன்றியில் தொங்கியதை அவனது எரிவுகொண்ட கண்களினால் கண்ணீர்த் துளிகளின் சேற்றுக்குள் புதைந்தபடி மங்கலாகக் கண்டான். மயங்கிப் போனான். சந்திரனுக்கும் எல்லா ஆராதனைகளும் நடந்தன. அவன் உறுதியான விடாப்பிடியான குணம் கொண்டவன். தம்மை யார் இங்கு அனுப்பிவைத்தது என்ற விபரத்தை இருவரும் ஒளித்தே வைத்திருந்தார்கள். தங்களை அனுப்பிய ஆள் தளத்தில் இருப்பதாக பொய்சொன்னார்கள். ரகு என்ற பெயரை அவர்கள் உச்சரிக்கவேயில்லை. 17 வருடங்களின் பின்தான் ரகு ரகுவாக இல்லாமல் போன காலத்தில் ஊரில் வைத்து இதைக் கேள்விப்பட்டிருந்தான்.

இந்த எதிர்கால அவலத்தின் 'நாயகர்கள்' இந்திரனும் சந்திரனும், பின்னர் இவர்களையும் பிரியப் போகும் கரனுடன் நின்றனர். ரகு, ஆனந்தன் ஆகியோர் முன்னிலையில் அவர்கள் ஈரவழிகளோடு நின்றனர். பிரிவின் வலி ஒரு புகாராய் ரகுவின் மனதினுள் தெளிவற்று இறங்கியது. துயரோடு நின்றுகொண்டிருந்த கரனை ரகு குற்றவுணர்வோடு பார்த்து விடைபெற ஆயத்தமானான். ''தோழர் கொஞ்சம் கவனமாக இருங்க'' என்று இந்திரன் ரகுவின் காதோரமாய் முணுமுணுத்தான். ''உங்கள் எல்லாரையும் சேர்த்து ஒரே முகாமுக்கு அனுப்பினாங்களெண்டால் ஓகேதான். மற்றபடி வேறைவேறை முகாம்களுக்கு அனுப்புவதாக சொன்னாலோ வேறைவேறை நாட்களிலை அனுப்புவதாக சொன்னாலோ விட்டுக் குடுக்காதையுங்கோ. அது வில்லங்கமானது'' என்றான்.

இந்த ஆரம்ப முகாமிலிருந்து மேற்கொண்டு பயிற்சிபெற தோழர்கள் படிப்படியாக மற்றைய முகாம்களுக்கு அனுப்பப் படுவார்கள். மொட்டை மாடியில் ஒன்று சேர்க்கப்பட்டு பின்னர்

பிரிக்கப்படுவார்கள். வெளியேறுகிற இந்த தோழர்கள் வேறை முகாமிலை இருக்கலாம் என நம்புகிற மனிதநம்பிக்கையின் மெல்லிழைகளை உளவுப்படை ஒரு சிலந்திவலையாய்ப் பிய்த்து எறிந்திருக்கிற சந்தர்ப்பங்கள் உண்டு. தோழர்களில் சிலர் புலிகளின் உளவாளியாக முட்டாள்களின் கனவில் வந்து பின்னர் காணாமல் போய்விடுவர். நாலாம் மாடி விசாரணைக் கைதியாக்க தீர்மானிக்கப்பட்டவர்களை அசுமாத்தமில்லாமல் பிரித்தெடுக்கிற சதி இந்த முகாம் பிரியும் சந்திகளில் வைத்து அரங்கேற்றப்படுவதுண்டு. இந்த விடயம் மிக தாமதமாக ரகுவுக்கு தெரிந்தது. ஆனால் இதை இந்திரன் அறிந்திருந்தான் அல்லது ஊகித்திருந்தான். சிலவேளை சங்கர் உங்களுக்கு ஞாபகத்தில் வரக்கூடும்.

ரகுவுக்கு இந்திரனின் வார்த்தைகள் கொஞ்சம் பயத்தையும் நிதானத்தையும் கொடுக்கத் தவறவில்லை. எந்த வெளிப்படைத் தன்மையுமில்லாத முகாம் தோழர்களிடையேயான புளியம்பழ உறவையும், “ஒரு வேள்விக்கு நேர்ந்துவிட்ட கடாய்கள் நீங்கள் எல்லாம்” என்றவாறான உணர்வையும், அதை தியாகமாக மட்டும் தெரிந்து வைத்திருக்கவும் இராணுவ இரகசியம் சொல்லித் தந்திருந்தது. மூன்று மாதத்தில் அல்லது ஆறு மாதத்தில் பயிற்சியெடுத்து விட்டு ஊருக்கு திரும்பிவிடலாம் என்ற உறுதிமொழியை நம்பி வந்தவர்கள் அது நிறைவேறாதது மட்டுமல்ல, போர்க்களமும் காணாமல் பொழுதுபோக்கிய நிலையில் எதிர்காலமே என்னவென்று தெரியாதபோது, வயதான தனது தாயை எண்ணி அழுதார்கள். தகப்பனை சகோதரங்களை எண்ணி அழுதார்கள். தன் காதலியை எண்ணி அழுதார்கள். தான் வளர்த்த நாயை எண்ணி ஏங்கினார்கள். தனது பயிரின் பசுமையை காணமுடியாத அவதியில் அல்லலுற்றார்கள். ஒரு சொக்கிளேற் வாங்கி உண்ண விருப்பப் பட்டார்கள். இசை கேட்க தவித்தார்கள்.

வெளியுலகிலிருந்து துண்டிக்கப்பட்டு, பொது மனிதரைக் காணாதவர்களாக, பொதுவெளியின் இயங்குதளத்தை பறி கொடுத்தவர்களாக, சமூக நடவடிக்கைகளிலிருந்து தூர இருப்பவர் களாக, அதற்குள் இயங்கும் உறவுநிலைகளிலிருந்து துண்டிக்கப் பட்டவர்களாக வாழ்வது ரகுவுக்கு எளிதானதாக இருக்கவில்லை. அதற்கு மாற்றீடான சூழல் முகாமில் நிலவவில்லை. எல்லா வற்றையும் கொன்று புதைக்கிற இராணுவ கலாச்சாரம் “மக்களை நேசிக்கிற போராளிகளை இதோ உருவாக்குகிறது பார்” என

தமிழீழத்தின் குரல் வானொலி "புதியபாதை அமைத்திடுவோம் தோழா, புரட்சி வெல்ல உழைத்திடுவோம் தோழா" என பாடல் இசைத்துக்கொண்டிருந்தது. இந்தப் பாடலை வானொலியில் மாலை 7:30 க்கு வழமைபோல் கேட்டுவிட்டு உறங்கிப்போன அன்றைய சாமப்பொழுதில் ரகு, ஆனந்தன், டாக்குத்தர், சிங்கப்பூர் ஆகியோரின் தொலைத் தொடர்பு முகாமுக்கான பயணம் தொடங்கியது. பரந்த வெளியை இரவு தன் சிறகால் அணைத்தபடி உறங்கிக்கொண்டிருந்தது. கைவிடப்பட்ட இருள் மாளிகையை காவல் காப்பதுபோல் சவுக்கம் மரங்கள் விறைப்பாக நின்றன. ட்றக்கில் இவர்களை ஏற்றினார்கள். கவ்போய்தான் சாரதி. ட்றக் பறந்தது.

மொட்டை மாடியில் மீண்டும் ரகு, ஆனந்தன், டாக்குத்தர், சிங்கப்பூர் எல்லோரும் தங்கவைக்கப்பட்டார்கள். ரகு இருள் பரவிய வானத்தை பார்த்துக்கொண்டிருந்தான். விடுதலையின் குறியீடாய் நட்சத்திரங்கள் இருக்கவில்லை. அது இருளை தன் ஒளிக்கற்றையால் கிழித்து வீசிக்கொண்டதாய் அவனுக்குத் தெரியவில்லை. அவை இருளுக்குள் சிறைப்பட்டிருந்தது. தாம் நால்வரும் உண்மையில் ஒரே முகாமுக்குத்தான் போகிறோமா அல்லது வெவ்வேறு முகாம்களுக்கா என சிறு சந்தேகம் வேறு, ரகுவுக்கு எழத்தான் செய்தது. நட்சத்திரத்தில் காலடி வைக்கும் திசையில் பறந்துகொண்டிருந்ததான அவனது புனைவுப் பயணம் அவனை இன்னும் கைவிட்டதாக இல்லை. மொட்டைமாடி வாசலில் அவன் முன்னர் கண்டிருந்த வேப்ப மரம் கொஞ்சம் கிளைவிட்டு வளரத் தொடங்கியிருந்தது. அதன் தளிர்கள் பச்சை கலந்த செந்நிறமாக நிறம் வழிந்து கிடந்தன. அதன் மகிழ்ச்சி ரகுவின் நம்பிக்கைக்குள் பரவியது.

மூன்று நாட்களின்பின் அவர்கள் மொட்டைமாடியில் இல்லை.

## 15

தஞ்சாவூரிலிருந்த ஒரந்தராயன்குடிக்காடு என்ற இடத்தில் கழகத்தின் தொலைத் தொடர்பு முகாம் இருந்தது. இராணுவப் பயிற்சி முகாம்களைப் போல் இது இருக்கவில்லை. ஊருக்குள் தென்னந்தோப்புக்குள் இருந்தது. அதையண்டிய இரண்டு பக்க மும் வேறு பரந்த தென்னந் தோப்புகளும், ஒருபக்கம் வீடுகளும்

இருந்தன. மறுபக்கம் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றைத் தாண்டி இளம் தென்னைகள் ஒரு தோப்பை நிர்மாணிக்கும் செழுமையுடன் வளர்ந்துகொண்டிருந்தன. ஆற்றின் இந்தப் பக்கம் இளம் போராளிகள் இருந்தனர். தென்னம் சோலையையும், முன்னால் ஓடிக்கொண்டிருந்த ஆற்றையும், சனங்ளையும், அவர் தம் நடமாட்டத்தையும் கொண்ட கிராமிய சூழலை காண நேர்கிற ஒரு பயிற்சிமுகாம் அபூர்வமானதுதான்.

அந்த ஊர் பஞ்சாயத்துத் தலைவரின் தோப்பு அது. அவரது வீடு சுமார் இருநூறு மீற்றர் தொலைவில் இருந்தது. அவரது வீட்டின் இருபக்கமும் சாய்ப்பாக கூரை இறக்கைபோல் அமர்ந்திருந்தது. ஒருபுறம் தொலைத்தொடர்பு அலுவலகமும் மறுபுறம் பெண்கள் முகாமும் இருந்தது. முகாம் என்றவுடன் உங்களுக்கு தோன்றி யிருக்கக்கூடிய காட்சி வரைபு பிழைத்துத்தான் இருக்கும். இது ஒரு நீளமான சாய்வான அறை. அதற்குள் சூரிய வெளிச்சம் அவளவாக வராது. நிலத்தில் அவர்கள் இருக்க வேண்டும். நீளமான வாங்கில் அளவிலான மேசையில் வைத்தே அவர்கள் எழுத முடியும். ஒரு சிறிய உயரமான மேசை மூலையில் இருந்தது. அதில் சில பொருட்கள் இருந்தன. அருகில் தேநீர் தயாரிப்பதற்கான சிறு ஏற்பாடு மட்டும்தான் இருந்தது. ஓர் அறை வாழ்க்கைபோல அது சுருங்கியிருந்தது.

பஞ்சாயத்துத் தலைவர் வீட்டின் மறுபக்க சாய்ப்புக்குள் தூரப் பிரதேசங்களுக்கு செய்திகள் பரிமாறப் படுவதற்கான தொலைத்தொடர்புக் கருவிகள் இருந்தன. தமிழீழத்தின் குரல் வானொலியை ஒலிபரப்பும்போது இலங்கை அரச புலனாய்வுத் துறையினர் அதன் அதிர்வலைக்குக் குறுக்கே வந்து அலை வரிசைக் குழப்பம் *(jamming)* பண்ணுவார்கள். ஒலிபரப்பை கேட்பவர்களுக்கு இடைஞ்சலாக அதை அவர்கள் செய்வார்கள். அதன்போது இங்கிருந்த ஒரு ட்றான்ஸ்மீற்றர் வானொலி உதவியுடன் அருகருகான சாத்தியமான அதிர்வலைகளை கண்டுபிடித்து ஒலிபரப்பு நிலையத்துக்கு அறிவித்தபடி இருக்க வேண்டும். அவர்களும் அதற்கேற்ப அதிர்வலைகளை மாற்றிய படி ஒலிபரப்பை செய்வர். பிறகு புலாய்வுத் துறையினர் குறுக்கே வருவார்கள். இப்படியே இந்த பூனை எலி விளையாட்டு ஒவ்வொரு ஒலிபரப்பின் போதும் நிகழ்ந்தது. தமிழீழத்தின் குரல் வானொலியை தமிழீழப் பகுதிகளில் மக்கள் காத்திருந்து கேட்டார்கள். அதேபோல சிங்கள ஒலிபரப்பும் செய்யப்பட்டது.

தமிழீழப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை சொல்லி இப் போராட்டம் பேரினவாத அரசுக்கு எதிரானதே யொழிய சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல என்ற கருத்தை ஆழப்படுத்தும் விதமாக சிங்கள ஒலிபரப்பு நிகழ்ந்து கொண்டிருந்தது. இதற்கான நிகழ்ச்சிகள் எல்லாம் சென்னையில் வைத்து தயாரிக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்டு வரும். சோழன் அதை கொண்டுவந்து கொடுப்பான். தமிழீழத்தின் குரல் ஒலிபரப்பு நிலையங்கள் தஞ்சாவூரிலும் ஆலந்தூரிலும் இன்னும் சில இடங்களிலும் இருந்தன.

தொலைத்தொடர்பு முகாமில் நாற்பது பேர் இருந்தார்கள். வெவ்வேறு இராணுவப் பயிற்சி முகாம்களிலிருந்து வந்தவர்கள் புதிய முகாமின் தோழர்களாக அறிமுகமாகினர். இத் தொலைத் தொடர்பு பயிற்சிக்காக வரும் இரண்டாது குழு இது. ஏற்கனவே பயிற்சி முடித்தவர்கள் போய்விட்டிருந்தனர். அவர்கள் இந்திய அரசின் ஏற்பாட்டின்படி உத்தரப்பிரதேசத்திலோ டெல்லியிலோ இந்திய இராணுவத்திடம் இராணுவப் பயிற்சி எடுத்தவர்கள்.

ஜோன் தனது அயலூரில் பிறந்து வளர்ந்த கிருஸ்ணாவுடன் அறிமுகமாகினான். கொழும்பில் நட்சத்திர விடுதியில் வேலை செய்தவன் கிருஸ்ணா. எப்பவுமே அந்த விடுதியின் குளிர்ச்சிக்குள் நடமாடித் திரிந்த அவன் குளிர்மையாக உடல் வளர்ந்து இருந்தான். மிகவும் குண்டாக இருந்தான். அவன் தேனீ இராணுவ பயிற்சி முகாமில் பயிற்சி எடுத்திருந்தான். ஓடும்போதோ நடக்கும் போதோ இரண்டு தொடைகளும் ஒன்றோடொன்று உரசி காயம் வந்திருந்தது அவனுக்கு. இப்போ தசைகள் இறுகிப்போய் வாட்டசாட்டான ஆளாக அவன் இருந்தான். தான் வரும்போது போட்டிருந்த நீளக்காற்சட்டையை பின்னாளில் அவன் போட்டு இடுப்பளவை இழுத்துக் காட்டுவான். அதற்குள் இன்னொரு ஆள் இறங்கிவிடலாம் என்றிருந்தது. அதுகுறித்து மிக சந்தோசமாக இருந்தான்.

எப்போதுமே சிறிய துவாயொன்றை தோளில் போட்டபடி கிருஸ்ணா திரிவது வழக்கம். ஒருநாள் உமா மகேஸ்வரனும் சந்ததியாரும் ஒரந்தராயன் குடிக்காடு பஸ்நிலையத்தில் இறங்கி மழையில் நனைந்தபடி ஓட்டமும் நடையுமாக வந்திருந்தனர். எந்த காவற்படையும் இல்லை. குடையும் இல்லை. மழையில் நனைந்து வந்த பெரிசிடம் முந்தியடித்து கிருஸ்ணா துவாயை

நீட்டினான். பெரிசு தலை உலர்த்திய தனது துவாயை அவன் வழமைபோல் தோளில் போட்டபடி திரிந்தான். அதன்பிறகு அவன் அதை தோய்த்ததை தாம் காணவேயில்லை என ஜோனும், லியோவும் நக்கலடிப்பார்கள். இப்போ அவனது பெயர் ''துவாய்க் கிருஸ்ணா'' என்றானது.

முகாமுக்குப் பொறுப்பாளராக பதி என்பவர் இருந்தார். மெலிந்த தோற்றமுடையவர் அவர். கழகத்தின் ஆரம்பகால உறுப்பினராக அவர் களிசானுடன் எடுபிடி அரசியல் வாழ்வைத் தொடங்கியவர். அதனால் உமா மகேஸ்வரனின் அபிமானத்துக்கு உரியவரும்கூட. அவர் இந்த முகாமில் இருக்கும் நாட்களை விட சென்னையில் இருக்கும் நாட்கள்தான் அதிகம். அங்கேதான் கழகத்தின் செயலதிபர் உமா மகேஸ்வரனும் முக்கியமான கழக பொறுப்பாளர்களும் இருந்தார்கள். அன்ரனி தொலைத் தொடர்பு முகாமின் பயிற்சிப் பொறுப்பாளராகச் செயற்பட்டான். அன்ரனி யாழ் பல்கலைக் கழகத்தில் படித்தவன். எந்தவித கறார்த் தன்மையும் அவனிடம் இருப்பதில்லை. அவன் 'மோர்ஸ் கோட்' பயிற்சியை கொடுத்துவந்தான். மோர்ஸ் கோட் *(Morse Code)* என்பதை இந்த முகாமில்தான் புரிந்துகொண்டான் ஜோன். இது முன்னர் இராணுவ ரீதியிலான தொடர்பாடலாக மட்டுமல்ல, தபாலகங்களிலும் கப்பல்களுக்கு இடையிலான செய்திப் பரிமாற்ற சமிக்ஞைகளாகவும் பயன்படுத்தப்பட்டதாக அறிமுகப்படுத்தப்பட்டது. முன்னரெல்லாம் வானொலியில் அலைவரிசையை உருட்டும்போது இந்த ''டாடிற்... டிடா டிடாடிற்... டிடிடிற்...'' என்றெல்லாம் கேட்கும் ஒலியின் புதிர் இப்போதான் ஜோனுக்கு விடுபட்டிருந்தது. ஆங்கில எழுத்தில் *A* என்றால் ''டிற் டா'', *B* என்றால் ''டா டிற்டிற்டிற்'' என்றவாறான *(Dit,Dash)* சமிக்ஞை இருபத்தியாறு எழுத்துகளுக்கும் இருக்கும். இதை குறியீடாகச் சொல்வதென்றால் டிற் *(Dit)* என்பது ஒரு புள்ளியாலும், டா *(Dash)* என்பது ஒரு குறுக்குக் கோட்டாலும் சுட்டப்படும். கையால் பிடித்தபடி விரலைப் பாவித்து அடிக்கும் சிறு கருவி மூலமாக இந்த ஒலி வடிவை ஒருவர் எழுப்புவதும் அதை மற்றவர்கள் ஆங்கிலத்தில் -எழுத்துகளைக் கோர்த்து- சொற்களாக பெற்றுக்கொண்டு எழுதுவதுமாக பயிற்சி இருந்தது.

ஆரம்ப முகாம் *(பி முகாம்)* சவுக்கம் காட்டின் வெக்கை இந்த தென்னந்தோப்பு முகாமை ஒரு ஐந்து நட்சத்திர விடுதியாக அறிமுகப்படுத்தக் கூடியது. குலைகுலையாக இளநீர், தேங்காய்

என அது கண்ணை உறுத்தியபடி இருக்கும். அதை தொட முடியாது. ஒருமுறை அடுப்பு பற்றவைக்க பன்னாடையையும் காய்ந்த பாளையையும் தென்னையில் ஏறி பிடுங்கியது சந்ததியாருக்குத் தெரிய வந்துவிட்டது. தோழர் மாவோவை துணைக்கழைத்துக் கொண்டு விளக்கங்களோடு வந்தார். அது தென்னையில் ஒரு அடிகூட மேலேற விடாமல் செய்தது. தானாக விழுகிற தேங்காய்களைக்கூட பாவனைக்கு எடுக்க முடியாது என்றார் மாவோ.

## 16

தொலைத்தொடர்பு முகாமில் பயிற்சி எடுக்கும் எல்லோரின் பெரும்பாலான பெயர்களும் புதிதாக மீண்டும் புனையப் பட்டவை. சங்கேத சொற்களால் செய்தியை அனுப்புவதால் பெயர்களும் தமிழ் அடையாளமற்று இருப்பது இன்னும் பாது காப்பாக இருக்கும், செய்திகளை இரகசியமாக கண்காணிக்கும் எதிரிக்கு இலகுவாக அடையாளம்காண முடியாமல் இருக்கும் என்று பதி சொல்லியிருந்தார். ஆனால் அவரது பதி என்ற பெயர் தொடர்ந்து நிலைத்தது. சிலர் தமிழிலேயே பெயரை வைத்துக் கொண்டனர். அதைவிட சிங்கப்பூர், செவ்வகம், தெய்வம், டாக்குத்தன் என பட்டப் பெயர்களும் உலவின.

தொலைத்தொடர்புக் கருவிகள் பற்றிய வகுப்பு மற்றும் அதன் பௌதீகவியல் செயற்பாடு, தொழில்நுட்பம் பற்றியெல்லாம் வகுப்புகள் நடந்தபோதும் ஜோனுக்கு பெரிதாக அதில் ஈடுபாடு இருந்தது கிடையாது.

உருசியான சமையல் சாப்பாடும், வகுப்பும், தென்னைமர நிழலினுள் ஓய்வும், ஆற்றுக் குளிப்பும், கிராமிய வாசனையும், கலகலப்பும் என வசதியாக ஓர் வாழ்வு இருந்தது அங்கு. சக தோழர்களின் சொந்தப் பெயர் தவிர மற்றைய எல்லா விபரங்களும் தமக்குள் பகிரப்பட்ட அந்யோன்யம் இருந்தது. இந்த வெளிப்படைத் தன்மையும் மனந்திறந்த உரையாடலும் பலமான தோழமையுணர்வை வளர்த்துவிட்டிருந்தது. அதேநேரம் உடல்ரீதியிலான பயிற்சி கிடையாது, சென்றி கிடையாது என்பன சலுகைகளை அனுபவிக்கும் கூட்டமாக இவர்களை ஆக்கியது.

அன்று வகுப்பு முடிந்து மத்தியான சாப்பாடு சமைத்துக்

கொண்டிருந்தார்கள் சிங்கப்பூர், லியோ, யோகன் மூவரும். அருகில் ஜோனும் இன்னும் சில தோழர்களும் நின்றனர். பஞ்சாயத்து தலைவரின் இரண்டாவது மகன் வந்தார். அவர் லீவுக்கு சென்னையிலிருந்து ஊருக்கு திரும்புகிற போதெல்லாம் இந்த முகாமுக்கு வருவார். இராணுவப் பயிற்சி எடுத்து தளத்துக்கு (தமிழீழத்துக்கு) வந்து போராட வேண்டும் என்ற ஆசை அவரிடம் மேலிட்டு இருந்தது. பெரிசு இந்த வேண்டுகோளை அடியோடு மறுத்துக் கொண்டேயிருந்ததை கவலையோடு அவர் சொல்வார். அவரது முகம் அப்பழுக்கற்ற சிரிப்பை அளைந்து விளையாடியபடி இருக்கும். லியோ யாழ்ப்பாண பேச்சுவழக்குத் தமிழில் வேண்டுமென்றே இன்னும் வேகமாக இடைவிடாமல் பேசிக்கொண்டிருப்பான். பஞ்சாயத்துத் தலைவரின் மகனால் அதை விளங்கிக் கொள்ள முடியாது. லியோ சிரித்தபடியே பேசு வான். ஆனால் அது அவரை நக்கலடிப்பதாக இருக்கும். அவரும் அப்பாவித்தனமாக சிரிப்பார்.

“இவன் பேசுறது உங்களுக்கு புரியுதா” என சிங்கப்பூர் கேட்டான்.

அவர் “இல்லை” என தலையாட்டினார்.

“எங்களுக்கும்தான் புரியயில்லை” என்று அந்த நக்கல் வார்த்தைகளை அவன் மொழிபெயர்த்தான். அவரை அந்நியப் படுத்திவிடக் கூடாது என்ற நோக்கத்தில் அவன் அப்படிச் சொன்னான். ஆரம்பத்தில் இவர்களை “விடுதலைப் புலிங்க”ளாக அறிந்திருக்காதவர்களும் அந்தக் கிராமத்தில் இருக்கத்தான் செய்தார்கள். அவர்கள் இவர்களின் தமிழ்ப் பேச்சை முதன் முதலில் கேட்கும் போது “நீங்க மலையாளிங்களா” என கேட்கத் தவறுவதில்லை.

சிங்கப்பூர் சமையலில் இருந்தான். சுமார் இரண்டு மீற்றர் தொலைவிலிருந்து பானைக்குள் உப்பை கிள்ளி வீசினான் அவன். “அளவு பார்த்துப் போட்டால் பிழைக்குமடா... கிள்ளி வீச வேண்டும்” என்பான் சிங்கப்பூர். முகாமில் சமையலுக்கு பெயர்போனவன் அவன்தான். உருசியாக சமைப்பான். எப்போதும் சமைப்பான். சமையலுக்கென்று குழுப் பிரித்து மாறிமாறி சமைக்க வேண்டும் என முகாம் பொறுப்பாளர் பதி முதல்நாள் வைத்த நடைமுறை விதி இயங்குவதே கிடையாது. பிரச்சினைகள் இழுபறிகள் எதுவுமே இருந்ததில்லை. அநேகமாக

சிங்கப்பூரும் லியோவும் அந்த இடத்தில் நிற்பார்கள். இந்த விடயத்தில் யோகன் தானாகவே வந்து காய்கறிகள் வெட்டுவதில் இறங்குவான். பெண்தோழர்களுக்கான சாப்பாட்டையும் சேர்த்து சமைப்பார்கள். அந்தச் சாப்பாடு குறிப்பிட்ட தோழர்களால்தான் அவர்களின் இருப்பிடத்துக்கு (முகாமுக்கு) கொண்டுபோய்க் கொடுக்க முடியும். மற்றைய தோழர்களுக்கு அனுமதி கிடையாது. எர்னஸ்ரோ அல்லது பீலிக்ஸ் கொண்டுசெல்வார்கள். இவர்களே மாறிமாறி பஸ் தரிப்படத்திற்கு அருகில் இருந்த பால்கடைக்குப் போய் பால் வாங்கிவரவும், அதை பெண்கள் முகாமுக்கு பகிர்ந்து கொடுக்கவும் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

“விடுதலைப் புலிங்களுக்கான” பால் என்பதால் கடைக்காரன் ஒழுங்காகப் பாலை ஒதுக்கி வைத்துவிடுவான். தண்ணீர் கலப்பது கிடையாது. சுத்தமான பால். நித்திரையால் எழும்பினால் பல் துலக்கி முகம் கழுவாவிட்டால் உங்களுக்கு சிலவேளை அந்த நாள் இன்னும் விடியாததுபோல் தோன்றலாம். இந்தப் பிரச்சினை எர்னஸ்ரோவுக்கு இருப்பதில்லை. மற்றவர்கள்தான் ஞாபகமூட்ட வேண்டியிருக்கும். பால்வாங்கப் போன ஒருநாள் பால்கடையில் தாயொன்று “குழந்தை பாலுக்கு அழுவுது... கொஞ்சப் பாலாய்ச்சும் கொடு” என கடைக்காரனிடம் மண்டாடி யிருக்கிறாள். தாயின் கெஞ்சலை கடைக்காரன் புறந்தள்ளிக் கொண்டிருந்தான். கையில் நிறைந்த பால்வாளியுடன் எர்னஸ்ரோ நின்றான். அவனுக்கு பொறுக்க முடியவில்லை. வாளியிலிருந்து அந்தத் தாயின் பால் போத்தலுக்குள் பாலைகோலிக் கொடுத்து விட்டு வந்தான்.

வாட்சாட்டமான உயரம். தாடி வைத்திருப்பான். நிறத்தில் மட்டுமல்ல தோற்றத்திலும் ஒரு லெபனான்காரன் போல இருப்பான் அவன். சேகுவேராவின் மேலிருந்த ஈர்ப்பில் ‘எர்னஸ்ரோ’ என பெயரிட்டிருந்தான். இந்த சோசலிசவாதியை உங்களுக்கு இங்கு அறிமுகப்படுத்தியே ஆகவேண்டும். பயிற்சிக்கு வந்த இந்த இரண்டாவது குழு முகாமுக்கு வந்திருந்த ஒருசில நாட்களே ஆகியிருந்தன. பரஸ்பரம் நன்கு அறிமுகப்படாமல் இருந்தார்கள். சாப்பாட்டுச் சாமான்களுடன் ஒரு குலை வாழைப்பழம் வந்தி ருந்தது. சிலருக்கு வருடக் கணக்காக அல்லது பலருக்கு மாதக் கணக்காக வாழைப்பழத்தை கண்ணால்கூட கண்டிருக்க வாய்ப்பு இல்லை. சாய்ந்திருந்த குலையின் பழங்கள் மஞ்சளாய்ச் சிரித்துக் கொண்டு இருந்தன.

அன்ரனி ஒவ்வொருவருக்கும் இரண்டு வாழைப்பழம் வீதம் பிரித்துக் கொடுக்கத் தொடங்கினான். எர்னஸ்ரோ இதைக் கண்டுவிட்டான். ''சோசலிசம், சொத்துகளை சமனாகப் பகிர வேணும் எண்டெல்லாம் சொல்லுறம். நாங்களாகவே ஒவ்வொருத்தரும் சமனாக வாழைப்பழத்தைக்கூட பிரித்து எடுக்க முடியேல்லை எண்டால், என்ன சோசலிசத்தைப் பற்றிக் கதைக்க இருக்கு'' என்றான். பாண்டி கெக்கட்டம் விட்டுச் சிரித்தான். பலரும் சிரித்தார்கள். அன்ரனி விலகி வந்துவிட்டான். வரிசை (கியூ) மறைப்பில் வாழைக்குலை இருந்தது. எர்னஸ்ரோ கடைசியில் நின்றான். இடையில் நின்ற ஜோனுக்கே வாழைக் குலையின் தண்டை மட்டுமே பார்க்க முடிந்தது. பாண்டி தனது மடியில் ஏழெட்டு வாழைப் பழங்களுடன் இருந்து எர்னஸ்ரோவுக்குக் காட்டிச் சாப்பிட்டான். சிலர் காட்டாமலே சாப்பிட்டார்கள். பாண்டியும் எர்னஸ்ரோவும் ஏற்கனவே ஒரே இராணுவ முகாமில் பயிற்சி எடுத்ததால் நன்கு அறிமுகமாகியவர்கள். ''உன்னையெல்லாம் வைச்சுக்கொண்டு சோசலிசப் புரட்சி நடத்தப்போறம் பார்'' என்றான் எர்னஸ்ரோ.

## 17

வகுப்புகள் இல்லாத நேர இடைவெளிகளில் தத்தம் பாய்களை எடுத்துக்கொண்டு நிழல்களின் குளிர்மையில் தனியாகவோ சிறுசிறு கூட்டமாகவோ தோழர்கள் குந்திவிடுவார்கள். சிலரின் தலைமாட்டில் புத்தகம் இருக்க உறங்கிப் போயிருப்பார்கள். சிலர் கவிதைகள் எழுத முயற்சிப்பார்கள். வகுப்புத் தொடங்கு முன்னர் தென்னந்தோப்பில் எல்லோரையும் உரப்பாக கூப்பிடவேண்டியிருக்கும். சுவாரசியமானது என்னவென்றால், யோகனுக்கு விசிலடிச்சுத்தான் கூப்பிடவேண்டியிருந்தது. அவன் உடனே புறப்படுவான் என்றபோதும், அவன் தனது பிரகாசமான புன்னகையை அனுப்பிவிட்டு, அத் தூரத்தைத் தாண்டி வருவது வரை வகுப்பு தாமதித்தே ஆரம்பமாகும். சிலவேளைகளில் ''இந்தா வருகிறேன்'' என்பதுபோல் விசிலடித்துவிட்டு வருவான்.

முகாம் இருந்த தென்னந்தோப்பின் எல்லையில் அடுத்த தென்னந்தோப்பின் சிறு குடிலுக்குள் கயிற்றுக் கட்டிலொன்று இருக்கும். அந்தத் தோப்புக்கும் தேங்காய்க்கு காவல் இருக்கிற வேலை இந்த 'விடுதலைப் புலிங்க' வரவுக்குப்பின் தேவையில்

லாமல் போய்விட்டதால், அந்தக் கயிற்றுக் கட்டிலும் வெறுமை யானது. அதை யோகன் தனியாக ஆக்கிரமித்திருந்தான். இரவும் அங்குதான் தனியாக அல்லது ஓரிருவருடன் தூங்குவான். அத் தோப்பு சொந்தக்காரருக்கு அது மகிழ்ச்சியளித்தது. அவர் அடிக்கடி வந்து யோகனுடன் உரையாடுவார். சிங்களப் படைகளால் தமிழ்ப் பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகிற மாதிரி, சிங்களப் பெண்களை நீங்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்க வேண்டும் என்ற தொனியில் கதைப்பார். தமிழர்களுக்கு என்று ஒரு நாடு கிடைக்கவேண்டும் என்பார். ஒருநாள் வெறும் அப்பாவித்தனமாக ஒன்றை கேட்டார். ''அந்த சிங்களவங்க எப்புடி இருப்பாங்க. உடம்பெல்லாம் ரோமம் முளைச்சிருக்கும் எங்கிறாங்க'' என்று கேட்டார். அதை எதிர்பாராத யோகன் புன்னகையிலிருந்து தனது பதிலை தொடங்கி புரியவைத்தான்.

அந்தக் கொட்டில் யோகனின் இருப்பிடம்போல ஆகிவிட்டிருந் தது. அதை 'சிக்கிறி போர்ட்' என நக்கலாக பெயரிட்டு தோழர்கள் அழைத்தனர். இதுகுறித்து முகாம் பொறுப்பாளர் பதி எதுவும் கண்டுகொள்வதில்லை. வகுப்பு இல்லாத நேரங்களில் சுவாரசிய மான உரையாடல்களுடன் சிலருக்கு அங்கு பொழுதுபோகும். பெரும்பாலும் அரசியல் விவாதங்கள் நடக்கும். செய்திப் பரிமாறல்கள் இருக்கும். பம்பல்கள் இருக்கும்.

ஒருநாள் செல்வராசாவின் கதையும் வந்தது. நெல்லியடி சந்தையில் தரகு வியாபாரியாக செல்வராசா என்பவர் இருந்தார். வாட்டசாட்டான சுறுசுறுப்பான இளைஞர் அவர். அந்த தொழிலுக்கான அணுகுமுறைகளும், வார்த்தை வளைப்புகளும், அவரது முகச்சாயலும் கூட ஒரு காந்தம் போல் அவரை நோக்கி இழுக்கக் கூடியது. பரபரப்பாயிருக்கும் சந்தைக் குரல்களின் குறுக்கறுப்புகளை மேவி அவரின் குரல் ஒலித்தபடி இருக்கும். அவரது பரபரப்பான அசைவியக்கம் பார்த்து இரசிக்க சுவாரசியமாக இருக்கும். அவர் கழக ஆதரவாளராக இருந்தார். அவரை ஏதோ காரணத்துக்காக அல்லது காரணமின்றி ரெலோ இயக்கம் கைதுசெய்து சென்றது. செல்வராசாவின் மகிழ்ச்சியான முகபாவத்தை பறித்து விட்டு விடுதலை செய்தது. அன்றிலிருந்து அவர் ரெலோ ஆதரவாளராக பேசத் தொடங்கினார். ''என்ன அண்ணை இப்ப இப்பிடி ஆகியிட்டீங்க'' என்று கேட்டபோது, அவர் தனது கைவிரல்களை குவித்து வாய்க்கருகில் கொண்டு வந்து ''இது ரெலோ'' என்பார். பிறகு கையை விரித்து இதயப்

பகுதியில் வைத்து ''இது புளொட்'' என்பார். பின்னரான காலத்தில் அவரையும் இனந்தெரியாதோர் என்ற இனக்குழு 'வேற்றுக் கிரகத்திலிருந்து' வந்து சுட்டுக் கொன்றது.

மாலை வேளையில் சிக்கிரி போர்ட்டுக்கு சுந்தரராஜன் வருவார். எப்போதும் கள் போதையுடன் உடல்கோர்த்து, நேராக நடக்க முயன்று முயன்று தோற்றுக்கொண்டே வருவார். கடுமையான உழைப்பாளி. வறுமைப்பட்ட குடும்பம். இவரது போதை அந்தக் குடும்பத்தை படாத பாடுபடுத்தும். ஒருநாள் அது எல்லை மீறிப் போனது. ஒரே களேபரமாக இருந்தது. கொட்டிலுள் இருந்த யோகனும் ஜோனும் லியோவும் முகாமில் இருந்த எவருக்கும் தெரியாமல், தயக்கத்துடன் அங்கு போனார்கள். வளைந்து போயிருந்த கிளிசறியா மர கொப்புகளாலும், பூவரசம் மரங்களின் சடைப்பாலும் மூடப்பட்டிருந்தது, அந்தக் குச்சொழுங்கை! வறுமையை பிசைந்து பூசப்பட்ட அந்த குடிசை இருளுக்குள் துயரைப் பரவியிருந்தது. அயலவர்கள் ஒழுங்கையை நிறைத்திருந் தனர். மனைவியின் தலைமுடியைப் பிடித்து இழுத்து விழுத்தி தூசண வார்த்தைகளுடன் தாக்கிக்கொண்டிருந்தார் சுந்தரராஜன். யோகனைக் கண்டதும் அப்படியே பெட்டிப் பாம்புபோல அடங் கினார். பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு அதிசயமாக இருந்தது. யோகன் அவரை அழைத்து வந்தான். கொட்டிலினுள் அவருக்கு 'புத்திமதி' சொன்னான். லியோ முகட்டைப் பார்த்து புன்னகைத்த படி இருந்தான். யோகனின் வேண்டுகோளை ஏற்று அன்று அவர் அந்த சிக்கிறி போர்ட் இனுள் உறங்கினார். இந்தச் செயல் முகாம் கட்டுப்பாட்டை மீறுவன என்பதால், இந்த விசயம் எதுவும் முகாமுக்குள் உலவாமல் மூவரும் பார்த்துக் கொண்டார்கள்.

இந்த சுந்தரராஜன் ஒரு திமுக ஆதரவாளர். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோரை ஆதர்ச புருசர்களாக ஏற்றுக்கொண்டவர். கலைஞரின் பேச்சுகளை அவரது பாணியிலேயே பேசிக் காட்டுவார். மனோகரா திரைப்பட வசனம் பொறி பறக்கும். கேட்டுக்கொண்டிருக்க சுவாரசியமாக இருக்கும். இன்னொரு புறம் தமிழீழக் கனவை அவர் அதீதமாக வளர்த்து வைத்திருந்தார். யோகன் ஈழத்தமிழில் பேசுவதை உன்னிப்பாக கேட்பார். ''ஆகா... தமிழ்... தமிழ்'' என இரண்டு கைகளையும் வானை நோக்கி உயர்த்தி நிலையற்று சுழல்வார். கள்போதையும் தமிழ்ப் போதையும் கலக்க அவரது உடலசைவு ஒரு நடனம் போல இருக்கும்.

மழைகாலங்களில் நுளம்புகள் பூமிக்கு படையெடுத்து இரத்தம் சேகரிக்கும் காலம். அந்தத் தொல்லை இராணுவ பயிற்சி முகாமில் தோழர்களை கலங்கடித்துவிடும். ஆனால் இங்கு கொட்டிலுள் யோகன் வேப்பம் இலையை புகைமூட்டி படுத்துறங்குவான். சில சந்தர்ப்பங்களில் ஜோனும் அதில் இணைந்து கொள்வதுண்டு. இந்த தென்னந்தோப்பின் மூலை யில் நின்ற இளம் வேப்பமரத்தின் கொப்புகளை மரத்தில் ஏறியாகிலும் கொணர்ந்தே விடுவான் யோகன். அன்ரனிக்கு மட்டும் ஒரு நுளம்புவலை கொடுத்திருந்தார்கள். அந்த இரவுநேர வெற்று முகாமின் பாதுகாப்புக்கென அங்கு ஒருவராவது இரவில் தங்கியிருக்க வேண்டும் என்பதற்கான ஏற்பாடுதான் அது. மற்றவர்கள் எல்லாம் பஞ்சாயத்துத் தலைவர் வீட்டின் அருகிலுள்ள ஒரு சிறு தனியார் மருத்துவமனை கட்டட மொட்டை மாடியின் மேல் ஏறிப் படுக்க சென்றுவிடுவார்கள். அதை இவர்கள் ‘டிஸ்பென்சரி’ என அழைத்தார்கள். கட்டடத்தின் மழைத்தண்ணீர் வடியும் குழாயின் உதவியுடன் யன்னல் நிலை களில் காலை ஊன்றி மேலே ஏறிச் செல்ல வேண்டும். நுளம்பை வென்றுவிடலாம். மழைபெய்தால் முகாமின் கொட்டிலுக்குள் முடங்கியிருக்க வேண்டியதுதான். ஒருநாள் காலையில் வழமைபோல் எல்லோரும் இந்த மொட்டைமாடியிலிருந்து கீழிறங்கி முகாமுக்கு வருகிறார்கள். முதலிலேயே வந்த பாண்டி, அன்ரனியின் நுளம்புவலை கிழிந்து தொங்கியதைக் காண்கிறான். அன்ரனி வெளியே குந்தியிருந்தான். என்ன நடந்தது என்று கேட்டறிந்த பாண்டி, முகாமுக்கு திரும்பிக் கொண்டிருந்தவர்களை சத்தம் போட்டு அழைத்தான். “அன்ரனி நாயை றேப் பண்ணிப் போட்டான்ரா” என்று கத்தினான். அன்ரனி நெளிந்தான்.

இருள் மூடியிருந்தது. எந்த வெளிச்சமும் இல்லை. தனிமையில் தூங்கிக் கொண்டிருந்த அன்ரனி நுளம்பு வலைக்குள் அசுமாத்தம் உணர்ந்து பரபரப்படைந்தான். நித்திரை அவனை தளர்த்தி விட்டது. ஏதோவொன்று வலைக்குள் சுழன்றடிக்க, பாய் பூமியைச் சுற்றிவிட்டது. அன்ரனியும் நிலைகுலைந்து வெளியே போக முடியாமல் தவித்து, பேய் பிசாசு எல்லாம் நினைவுக்கு வர, வலை தாறுமாறாக பின்னப்பட்டு அல்லோலகல்லோலப் பட்ட அந்தக் கணத்தில் வலையைப் பிய்த்துக்கொண்டு நாயொன்று ஓடியிருக்கிறது. இப்போ அன்ரனி நுளம்புவலைப் போரில் நாயிடம் தோற்று நுளம்புக்கு முன் நிர்க்கதியாக நின்றான்.

இந்த அன்ரனியை உங்களுக்கு காட்ட வேண்டும். அவன் அந்த கிடுகுக் கொட்டிலின் 'மூலஸ்தானத்தில்' மோர்ஸ் கருவியுடன் நிற்பான். வகுப்பைத் தொடங்குவான். தோழர்கள் எல்லோரும் கொப்பிகளுடன் பாயில் குந்துவார்கள். அங்கு ஒரேயொரு மேசை மட்டுமே இருந்தது. அன்ரனி எழும்பி நின்றபடி இந்த மேசையில் மோர்ஸ் கருவியை வைத்துக்கொண்டு விரல்களை இயக்கத் தொடங்குவான். தான் தாளொன்றில் ஆங்கிலத்தில் எழுதிவந்த சங்கேத வார்த்தைகளினாலான வசனத்தை பார்த்து அதை இந்த சிறு கருவி மூலம் ஒலிவடிவில் காற்றில் எழுதுவான். காதை கூர்மையாக்கிக் கொண்டு, மனதை ஒருநிலைப்படுத்திக் கொண்டு தோழர்கள் அதை சொற்களாக பெற்றுக்கொள்ள வேண்டும். அன்ரனி எந்த இடைநிறுத்தலுமின்றி அடித்துத் தள்ளுவான். அதிகமான கிரகிப்புத் தேவைப்பட்டது. சொற்கள் விடுபட்டுப் போகிற சந்தர்ப்பங்களில், விடுபட்ட சொற்களை கடந்து சென்று ஒலியைப் பின்தொடர்ந்தால்தான் போய்க் கொண்டிருக்க முடியும். சொற்களை பெற முடியும். அதுவும்கூட படிப்படியான பயிற்சியின் பின்னர்தான் சாத்தியமாகும்.

நிமிடத்துக்கு 60 இலிருந்து 70 எழுத்துக்கள் வரை அனுப்பவும், அவற்றை விடுபடல் ஏதுமின்றி பெற்றுக்கொள்ளவும் அவர்கள் தேர்ச்சி பெற்றார்கள். அன்ரனியின் வேகத்தை விடவும் அதிகமான அல்லது போட்டி போடக்கூடியதாக சிலர் மோர்ஸ் இனை இயக்கவும் (அதாவது சொற்களை அனுப்பவும்) படிப்படியாய் தேர்ச்சி பெற்றார்கள். லியோ இதில் முன்னணியில் நின்றான். சுமார் எழுபது சொற்கள்வரை அவனால் அனுப்பவும் முடியும். பெற்றுக் கொள்ளவும் முடியும். இந்த லியோதான் ஆரம்ப பயிற்சி முகாமில் டாக்குத்தராக இருந்தவன்.

அன்ரனி வகுப்பில் மோர்ஸ் கருவி பயிற்சி வகுப்பின் இடைவேளையில், "என்னடாப்பா தமிழீழம் கிடைக்குமா" என்று கேட்பான். ஒரு அப்பாவித்தனம் அவனது குரலிலும் உடல்மொழியிலும் வெளிப்படும். இப்போ அவன் மோர்ஸ் கருவியை இயக்கிக்கொண்டிருந்தான். தோழர்கள் அதன் ஒலி யிலிருந்து சொற்களைப் பெற்று எழுதிக்கொண்டிருந்தனர். இப்போ முறையை மாற்றிக் கொண்டு, தோழர்கள் ஒவ்வொரு வராக இயக்கினர். மற்றவர்கள் எழுதிக் கொண்டிருந்தனர். அன்ரனி எப்ப எழுதுவான் என நீங்கள் எதிர்பார்த்து நிற்கத் தேவை யில்லை. உங்கள் நேரத்தை வீணாக்குவதாகப் போய்விடும்.

முகாம் வளவுள் ஒரு கிணறு இருக்கிறது. அள்ள அள்ள வற்றாத கிணறு அது. ஆழமில்லை. ஆற்றங்கரையிலிருந்து ஒரு ஐம்பது மீற்றர் தள்ளியிருக்கிறது. நீர் பருகுவதற்கு நன்கு உவப்பானதாக இருக்கும். அதன் அருகில் கொடியில் போட்டுப் போட்டுத் தேய்ந்த உடுப்புகள் காய்ந்து கொண்டிருந்தன. அவை ஒவ்வொரு தோழர்களினதும் விம்பத்தின் மாறாத ஓர் அங்கமாக இருந்தன. அதுகுறித்து எந்தத் தோழரும் கணக்கில் எடுக்கும் நிலையிலும் இல்லை. ஆனால் பென்ரர் தட்டுப்பாடு குறித்தான கவலை இங்கும் இருந்தது. மதியச் சாப்பாடு முடிந்து எல்லோரும் கொட்டில் முற்றத்தில் குழுமி கலகலப்பாக நின்று கொண்டிருந்தார்கள்.

மத்தியகுழு உறுப்பினர் வாசு மிக ஒழுங்காக கத்தரிக்கப்பட்ட தாடியுடனும், வாரிவிடப்பட்டு சாயம் பூசப்பட்ட கறுத்த தலைமயிருடனும் முகாமுக்கு வந்தார். மடிப்புக் கலையாத சேர்ட் உடனும் நீல டெனிம் நீளக்காற் சட்டையுடனும் அவர் தோற்றமளிப்பார் என்பது ஏற்கனவே உங்களுக்குத் தெரியும். அன்றும் அப்படியே தான் வந்தார். அவரது தோற்றத்திலும், வார்த்தைகளை 'அடிச்சு விடுவதிலும்' ஒரு பிரமுகத்தனம் இருக்கும். அதனால் நெருங்கிப் பழகக்கூடிய மனிதராக இருந்தார்.

"பென்ரர் தட்டுப்பாடாயிருக்கு. கொஞ்சம் ஒழுங்கு செய்ய முடியாதா தோழர்" என யோகன் கேட்டான். வாசு தனது புன்ன கையை தருவதற்கிடையில் "பென்ரர் கொம்பனி ஸ்ரைக்கிலை நிக்குது... உனக்கு பென்ரர் கேட்குதோ" என்றான் லியோ. "ஏன் கோவணம்தானே தமிழற்றை பாரம்பரிய உள்ளாடை... கட்டுறது தானே" என்றான் சிங்கப்பூர். வாசு புன்னகைத்தாரா அல்லது புன்னகை வழிந்துவந்ததா என ஜோன் சரியாக அவதானிக்க வில்லை. "சென்னைக்கு போன உடனை அனுப்புவிக்கிறன்" என்று நழுவிக் கடந்தார் தோழர் வாசு.

எல்லா முகாம்களிலும் பென்ரருக்கு காவல் இருப்பது அவசியமான கடமையாக அவரவர்க்கு இருப்பதுபோலவே, இங்கும் அது தொலைந்துவிடாதிருக்கும் அல்லது கிழிந்துவிடா திருக்கும் 'வரம்' வேண்டியே இருந்தது. ஆனால் யாரும் காவல், கண்காணிப்பு என்றெல்லாம் ஈடுபடுவதில்லை. அநேகமாக ஒவ்வொருவரிடமும் பென்ரர் இருந்தது. போதியதாக இருக்க வில்லை. அத்தோடு ஒரு சரமும் சேர்ட்டும் மட்டும் இருந்தது.

உத்தியோகத்தர்கள் கொண்டுதிரியும் கைப்பை ஒன்று தோழர் வாசுவிடம் இருந்தது. அதிலிருந்து புகைப்படத் தொகுப்பு *(photo album)* ஒன்றை வெளியே எடுத்துக் காட்டினார். பலஸ்தீன பயிற்சி முகாமில் கழகத் தோழர்கள் பயிற்சி எடுக்கின்ற படங்கள் அவை. எந்தப் பசும் தரை விரிப்பும் இல்லை. மண் முளைத்து, புழுதி வீசும் தரையிலிருந்து எழும் வெப்பம் பார்வையில் அறைந்தது. அதை விலக்கியபடி முண்டியடித்து பார்த்தார்கள். தோழர்களைக் கண்டு மெய்சிலிர்த்தார்கள்.

ஒரு கவசவாகனத்தின் முகப்பில் *PLOTE* என ஆங்கில எழுத்தில் இருந்தது. இலாவகமாக எழுதி ஒட்டியிருந்தார்கள். அதன்மேல் இராணுவ உடையணிந்தபடி மூன்று கழகத் தோழர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் தமது இரண்டு விரல்களை *V* (ஆங்கில எழுத்து) வடிவில் உயர்த்திப்பிடித்துக் கொண்டிருந்தார்கள். விமான எதிர்ப்புத் தாக்குதல் கருவி யொன்றை தரையில் படுத்திருந்தபடி குறிபார்த்துக் கொண்டி ருந்தான் மார்ட்டின். அருகில் எல்எம்ஜி சுடுகுழலில் பொருத்தப்பட்டிருந்த தாங்கி தரையிலும், அதன் பிடி சங்கரின் தோளிலும் இருக்க, அவன் தரையோடு கிடந்து குறிபார்த்துக் கொண்டிருந்தான். அதற்குள் நுழைந்திருக்கும் ஒரு பாம்புபோல் குண்டுகளை வரிப்பாகக் கொண்டிருந்த 'பெல்ற்' நீண்டும் வளைந்தும் கிடந்தது. இன்னொரு தோழன் அது மடிந்து உட்சென்றுவிடாதபடி, தரையோடு கைகளில் ஏந்திக் கொண்டிருந்தான். மரணத்தை உள்விழுங்கியிருக்கும் அந்த குண்டுகளின் பளபளப்பு சாகசத்தையும் பயத்தையும் பாதுகாப்பையும் பிசைந்த ஒளியாக தெறித்துக் கொண்டிருந்தது. இது ஒரு படங்காட்டல் போலவும் இருந்தது. இப்போ ஜோனுக் கான இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. ஒரு ஆயுதக் கிடங்கினுள் குவிக்கப்பட்டிருந்த ஆயுதங்களுக்கு நடுவே கையில் ஏகே-47 இனை தாங்கியபடி நின்றான் சுனில். ஒரு திரைப்படத்து சாகசக் கதாநாயகன் போல் காட்சியளித்தான் அவன்.

சுனில் ஜோனின் பல்கலைக்கழக கால நண்பன். ஜோனும் அவனும் படிப்பை நிறுத்திவிட்டு ஒரே காலத்தில் இயக்கத்தில் இணைந்தவர்கள். இருவரும் சேர்ந்து பின்தளம் சென்று பயிற்சி எடுக்க இருந்தனர். ஜோனின் சகோதரிக்கான திருமண ஏற்பாடுகள் அக் காலகட்டத்தில் நடந்ததால் சுனில் "நீ பிறகு வா. கல்யாணத்தை குழப்பிப் போடாதை" என்று விடைபெற்றுச்

சென்றான். இது நடந்தது 1983 நவம்பரில். ஜோன் அடுத்த வருடம் பின்தளம் போனான். அதுதான் அவர்களிருவரும் ஒருவரையொருவர் கடைசியாக கண்ட நாள். கதையுள் வாழும் வாசகரான நீங்கள் இக் கதையின் முன்பகுதிக்குச் சென்று ஜோன் யார் என்பது பற்றிய உங்கள் ஊகத்தை உறுதிப்படுத்திவிட்டு இப்போ வந்திருப்பீர்கள்.

சுனிலை பின்தளத்தில் காண தணியாத ஆவலுடன் இருந்த ஜோனுக்கு இது இன்ப அதிர்ச்சியாக அமைந்தது. இந்த சுனில்தான் தனது பலஸ்தீன பயிற்சி அனுபவத்தை முன்னுதாரணமாகக் கொண்டு, தளத்தில் முதன்முதலாக யாழ் கோட்டையை அண்டிய பகுதியில் பதுங்கு குழிகளை வெட்டி இராணுவத்தை கண்காணித்தவன். இராணுவம் படை நடவடிக்கைக்காக வெளியேறி ஊருக்கு வர ஆயத்தப்படும் சந்தர்ப்பங்களில் 'சைரன்' ஒலியை எழுப்பி மக்களை உசாரடைய வைத்தவன். பாதுகாப் பான இடங்களை நோக்கி அவர்கள் விரைவாக நகர்ந்துவிடக் கூடிய அவகாசத்தை ஏற்படுத்திக் கொடுத்தவன். மக்களின் இழப்புகளையும் பாதிப்புகளையும் குறைப்பதற்காக அவன் செய்த ஏற்பாடு அது. இதன்மூலம் மக்களிடம் ஒரு கதாநாயகனாக பிம்பமானவன். அப்போ ஜோன் நாட்டில் இல்லை. வெளியேறி விட்டிருந்தான். பின்னரான காலத்தில் விடுதலைப் புலிகள் உருக்குலைந்த புளொட்டையும் தடைசெய்து, இந்த பதுங்குகுழியை தமதாக்கிக் கொண்டனர். பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலத்திலே அவனது புத்தாக்கத் திறமையையும், தயக்கமின்றி முன்காலடி வைக்கும் துணிச்சலையும், துடிப்பான இயங்குதலையும் ஜோன் கண்டிருக்கிறான். அவனை இப்போ அல்பத்திலாவது காண முடிந்ததில் மகிழ்ச்சியடைந்தான் ஜோன்.

## 18

பெண் தோழர்களுக்கான ஆங்கில வகுப்புக்கு நேரமாகியது. ஜோன் புறப்படத் தயாரானபோது வாசுவும் அல்பத்துடன் அங்கு வந்தார். ஆலையில்லா ஊரில் இலுப்பைப் பூவாக ஆங்கில ஆசிரியனாக பூத்திருந்தான் ஜோன். "இங்கிலிஸ் தெரியாதவங்களுக்கு இங்கிலிஸ் படிப்பிக்க எந்தத் துணிவும் தேவையில்லை" என்று சிங்கப்பூர் ஜோனின் தயக்கத்தைக் களைந்து அனுப்பிவிட்டவன். அவனும் ஜோனிடம் ஆங்கிலம்

படித்தான். ‘மோர்ஸ் கோர்ட்’ செய்திப் பரிமாற்றத்துக்கு ஆங்கிலம் மிக முக்கியமானதாக இருந்தது. அதனால் பெண்கள் முகாமுக்குப் போக ஜோன் அனுமதிக்கப்பட்டான். இப்படியே ஜோனுக்கு பெண் தோழர்கள் அறிமுகமானார்கள்.

பெண்கள் முகாமில் பெண்தோழர்கள் பத்துப் பேர் இருந்தனர். வகுப்புநேரம் தவிர அவர்களுக்கென உருப்படியாக எதுவுமே இருக்கவில்லை. அங்கும் வாசிப்பதற்கான புத்தகங்கள் மிகக் குறைவு. ஆண்தோழர்களுடன் விவாதிக்கவோ உரையாடி மகிழவோ சந்தர்ப்பங்கள் இல்லை அல்லது மட்டுப்படுத்தப்பட்டு இருந்தன. வீதியால் ஆண் தோழர்கள் செல்லும்போது திறந்து கிடக்கும் வேலியருகில் மாமரத்தின் தாழ்ந்த கிளையில் இருந்தபடி அவர்களில் சிலரும் பலருமாக உரையாட காத்திருப்பார்கள். அவர்கள் இந்த முகாமுக்கு வருவதற்கு முன், பெற்றிருந்த இராணுவப் பயிற்சியின் தொடர்ச்சியை உடற்பயிற்சிகளின் மூலம் தொடர வாய்ப்பற்று இருந்தனர். அவர்கள் வெளியே சென்று காலாற நடப்பதற்கும் எந்த ஏற்பாடும் செய்து கொடுக்கப்படவில்லை. குளிப்பதற்கு ஆற்றங்கரை வரை போய்வருவதே அவர்களின் உலாத்தலாக இருந்தது பாடசாலைகள் போன்றே ஆண்போராளிகளும் பெண்போராளி களும் வெவ்வேறு இடங்களில் பிரித்து வைக்கப்பட்டிருந்தனர். பரஸ்பரம் பேசவும், தோழமையுடன் பழகுவதற்குமான சந்தர்ப் பமோ பயிற்சியோ இவர்களுக்கு போதியளவு கிட்டவில்லை. வகுப்புகளும் தனித்தனியாகவே நடத்தப்பட்டது. குறைந்தபட்சம் எல்லோரும் சேர்ந்து படிக்கும் சந்தர்ப்பம்கூட இல்லை. சேர்ந்து சமையல் செய்யும் வாய்ப்பும் இல்லை. இதுபற்றி ஜோன் உட்பட எந்தப் போராளிகளுக்கும் எதுவித கேள்வியும் எழுந்ததில்லை. அவர்களிடம் அதுகுறித்த புரிதல் இருந்ததாகத் தெரியவில்லை. கஸ்ரோ இங்கு இருந்திருந்தால் இந்த விழிப்புணர்வை வழங்கி யிருப்பான் என்றே பின்னைய காலங்களில் ஜோனுக்குத் தோன்றி யிருந்தது.

இதரா ஓர் இரும்புப் பெண்மணிபோல எதையும் எதிர்கொள் ளும் அசாதாரண துணிவு கொண்ட போராளியாக இருந்தாள். முகம் சிரிப்பை உதிர்த்தபடி இருக்கும். கம்பீரமான குரல். துடிதுடிப்பாய் அவளது உடல்மொழி பேசிக்கொண்டிருக்கும். அவள் பாடசாலை மாணவியாக இருந்தபோது, வவுனியாவில் நடந்த ஆர்ப்பாட்டமொன்றில் முன்வரிசையில் நின்றிருந்தாள்.

பொலிசின் எச்சரிக்கையை மீறி அவள் பின்வாங்க மறுத்தாள். தனது சப்பாத்து காலால் பொலிஸ் அதிகாரி ஒருவன் அவளது நெஞ்சில் உதைத்திருக்கிறான். அது அவளுடன் இப்போதும் வாழும் வலியாக தொடர்ந்தது. அடிக்கடி அவள் நெஞ்சுவலியில் அவதிப்படுவதை ஜோன் கண்டிருக்கிறான்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த சம்பவத்தை அந்த பொலிஸ் இன்ஸ்பெக்ரரின் மகன் மூலம் ஜோன் அறிந்திருந்தான். பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது அறைநண்பனாக இருந்த 'வெள்ளை' என்பவன் தனது தகப்பன் ஒரு மாணவியை (இதரா) காலால் உதைத்த கதையையும், அவளை கைதுசெய்து விசாரித்த கதையையும் அவளிடம் வெளிப்பட்ட துணிவு பற்றி தகப்பன் தம்மிடம் சிலாகித்து வியந்ததையும் சொன்னான். அப்போது அவளை ஜோனுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஜோனின் நண்பனாக, சகமாணவனாக இருந்த இதராவின் மைத்துனனும், வெள்ளையும் ஜோனின் அறைநண்பர்களாக இருந்ததால் இந்தக் கதை தெரியவந்தது. இப்போ அவள் இதரா ஆக தன் முன்னால் நிற்பதை நண்பன் வெள்ளையின் உரைப்புடன் இணைத்துப் பார்த்தான் ஜோன்.

இனியா என்ற தோழி தனது காதலனை இழந்த துயரில் இருந் தாள். அவன் கிழக்கு மாகாணத்தில் கழகத்தின் முக்கிய செயற் பாட்டாளராக இருந்தவன். 'பயங்கரவாதி' என பேரினவாத அரசால் அடையாளப்படுத்தப்பட்ட அவன் பொலிசால் தேடப் பட்டுக் கொண்டிருந்தான். சந்தர்ப்பவசமாக பொலிசை நேரடியாக அவன் எதிர்கொள்ள நேர்ந்தபோது அவன் சாவைத் தழுவினான். அவன் தன்னைத்தானே சுட்டுக் கொன்றானா அல்லது பொலிசால் சுடப்பட்டானா என்பது தெளிவற்ற செய்தியாக உலவியது. அவன் பல்கலைக் கழக மருத்துவ பீடத்துக்கு தெரிவுசெய்யப்பட்டிருந்த போதும் அதை புறந்தள்ளிவிட்டு போராளியப் பாதையை தேர்ந்த வன். இனியாவும் அவனும் நண்பர்களாக, பின் தோழர்களாக, பின் காதலர்களாக, மணஉறவில் இணைந்தவர்களாக பயணம் செய்தவர்கள். பொலிசாரால் தேடப்பட்ட நிலையில் அவர்க ளது மணவாழ்வு சில தினங்கள் மட்டுமே நீடித்தது. அவள் பின்தளத்தில் இருந்தாள். அவன் தளத்தில் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருந்தான். குறுகிய காலத்திலேயே அவனது மரணம் பேரதிர்ச்சியாய் அவளை எட்டியது. அது அவளிடம் தீராத வலியாக ஒட்டிக்கொண்டது. அந்த நினைவிலிருந்து அவள்

மீள முடியாதபடி அவதிப்பட்டாள். இடையிடையே அவளின் வெறித்த பார்வையும், வகுப்பிலிருந்து தொலைந்துபோகும் அவளது கவனமும் வகுப்பை இடையில் நிறுத்தி ஆதரவாக நாலு வார்த்தைகள் பேச வைக்கும் நிலைக்கு ஜோனை இட்டுச் சென்றுவிடும்.

ஆதியா, அதிகா இருவரும் இயக்கத்துக்கு ஓடிப்போன பள்ளிப் பிள்ளைகளில் அடக்கம். பாடசாலையில் படித்துக்கொண்டிருந்த அவர்கள் கழகத்தில் இணைந்து பின்தளம் வந்திருந்தனர். இப்போ இவர்கள் தொலைத்தொடர்பு முகாமில் இருந்தனர். ஆதியாவின் முகம் பிரகாசமாகவும் உற்சாகமாகவும் இருக்கும். அதிகா எதையோ இழந்திருப்பதான ரேகைகளை முகத்திலும் பார்வையிலும் இழையோட விட்டிருந்தாள். அவள் அதிகம் பேசுவதில்லை. அவளது கதையை ஜோன் அறிந்திருக்கவில்லை.

80களில் திடீர் திடீரென பாடசாலைகளுக்குள் புகுந்து தலைமை ஆசிரியரிடம் அறிவித்துவிட்டு (அனுமதி கேட்டல்ல) சாதாரண தர / உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இயக்ககாரர் பிரச்சார வகுப்பை நடத்திவிட்டு செல்வது ஒரு அதிரடி நடவடிக்கையாக இருந்தது. வகுப்பு எடுப்பவர்களுக்கென எந்த அரசியல் தத்துவார்த்த அடிப்படையிலான பார்வையோ, அறிவுசார் தகுதியோ, பாடசாலை விதிமுறைகளின் மீதான பொறுப்புணர்வோ கிடையாது. சொத்தையான கருத்துகளை கவர்ச்சிகரமாக முன்வைத்துச் செல்வர். பிறகு மாணவர்கள் மாணவிகள் சிலர் இயக்கத்துக்கு ஓடிவிடுவர். இந்த இளமைக் கொந்தளிப்பு மனநிலையை, அநியாயத்துக்கு எதிராக திமிறிக் கொண்டு நிற்கும் மனநிலையை புரிந்துகொண்டு அதை ஆரோக்கியமான நிலைக்கு ஆற்றுப்படுத்தும் அறிவோ வழிமுறையோ, அதைச் சாத்தியப்படுத்தும் அதிகாரநிலையற்ற ஆசிரிய அணுகுமுறையோ எல்லாமும் போதாமையாகவே இருந்தது. இன்னொருபுறம் ஒருவித அச்ச உணர்வும் ஆசிரியர் களை மவுனமாக்கியது. படிப்புத் தொல்லையிலிருந்து தப்பு தலுக்கான வழி முறையாகக்கூட சில மாணவன் மாணவிகள் இயக்கத்துக்கு ஓடுவதைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆதியா, அதிகா இருவரும் இந்தத் தீவிலிருந்து வந்தவர்களாக இருக்கக்கூடும் என ஜோன் மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

மாலி மிக வறுமைப்பட்ட குடும்பத்திலிருந்து வந்திருந்தாள். பாடசாலையில் உயர்தர வகுப்பு படிக்கும்போது, கழகத்துக்கு

வேலைசெய்த மாணவர்களுக்கு சில அமைப்பு வேலைகளில் உதவிக்கொண்டிருந்தவள். மூன்று பெண்பிள்ளைகள் கொண்ட தமது குடும்பத்தில் தனது பெற்றோருக்கு சுமையையும், தன் செயற்பாடுகளால் அவர்களுக்கு வரக்கூடிய ஆபத்தையும் குறைத்து விட எண்ணிய அவள் வீட்டைவிட்டு வெளியேறினாள். இப்போ இந்த முகாமில் இருந்தாள். அவளது விழிகள் ஜோனின் வரட்டுத்தனத்தின்மீது மழைத்தூறலாய் விழுந்துகொண்டிருக்கும். அவள் பேசிக்கொண்டிருக்கும்போது, புன்னகை அவளின் ஈரவிழிகளினூடு ஒரு மின்னலாய் தெறித்துக்கொண்டிருக்கும். இடையிடையே அவளது விழிமடல் அவளையறியாது கோணலாய் வெட்டிக் கொள்வதுண்டு. பெண்களிடம் முகம் கொடுத்து பேச தயங்குகிற ஜோனின் சுபாவம் அவளது விழிகளால் உடைந்து நொருங்கிக் கொண்டிருந்தது. அவளது கதையும் தனது கதையும் ஏதோவொரு புள்ளியில் இணைவதாக அவனுக்குத் தோன்றியது.

தான் ஒரு தனியாளாகவே எப்போதும் இருந்துவிட அவனது குடும்ப நிலைமையும் இலட்சியவாதமும் கற்றுக்கொடுத் திருந்தது. அதையும்விட இந்தப் போராட்டத்தில் தனது உயிர் வாழ்தலின் மீதான நிச்சயமற்ற தன்மையானது மேலும் ஒருவரை துன்புறுத்துவதாக அமைந்துவிடக்கூடாது என்ற மனிதாபி மானம் சார்ந்த போக்கும் அவனிடம் இருந்தது. வாழ்வை அவன் சிறகுகளின்றி வளர்த்தான். ஆனாலும் அவன் மாலியின் விழிகளுக்குள் தான் அமிழ்ந்து போய்க்கொண்டிருந்ததை உணர்ந்தான். மெல்ல சிறகுகள் முளைப்பதுபோல் உணரவும் செய்தான். ஜோன் விடாப்பிடியாக தனது இலட்சியவாதத்தை காப்பாற்ற உள்ளுக்குள் போராடிக்கொண்டிருந்தான். இயன்ற வரை அவளுடன் பேசுவதை தவிர்க்க முயற்சிப்பான். பின் பேச அவாவுறுவான். அவள் தன்மீது கொண்டிருப்பது தோழமையா காதலா அல்லது அதுவே அவளின் சுபாவமா என்றெல்லாம் அவனது மூளைக்குள் நினைவுகள் உதிர்ந்து பரவியிருக்கும். அவளின் கண்ணசைவு போல் தானும் செய்து பார்ப்பான். இருள் அதற்கு வசதிசெய்து கொடுத்தது.

அன்றும் அவன் வகுப்பை முடித்துவிட்டு தனது முகாமுக்கு போய்க்கொண்டிருந்தான். பகிரப்படாத உணர்வுகளுக்கு சுவார சியமோ, அரவணைப்போ வாய்ப்பதில்லை தனது நிலையை அவன் யாருடனாவது சொல்லி சிலாகிக்க வேண்டும்போல

இருந்தது. அது ஒருவிதத்தில் ஆபத்தானதாக முடியலாம் என்ப தால் தனது நெருங்கிய நண்பனும் தோழனுமான யோகனிடம் மட்டும் பகிர்ந்தான். சுவாரசியமாக எல்லாவற்றையும் கேட்ட யோகனின் புன்னகை ஜோனை அரவணைத்தது. "காதல் எண்டுறாய்" என்றவன், "வேண்டாம் மச்சான். தெரிஞ்சால் தூக்கி யிடுவாங்கள். அவளையும்தான்" என்றான். ஜோனின் மூளைக்குள் மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது.

## 19

ஆரம்பத்தில் அனைத்து முகாம் பொறுப்பாளராக இருந்த ராஜன்தான் உளவுப்படையின் பொறுப்பாளராகவும் இருந்தான். 1984 ஆவணி மாதம் பலஸ்தீன பயிற்சி எடுத்த போராளிகள் திரும்பியிருந்தனர். ஒரு பலம்பொருந்திய கெரில்லாப் படையை தமது கழகம் வைத்திருப்பதாக எல்லோருமே பூரிப்படைந்தனர். ஜோனுக்கு சுனிலை நேரில் பார்த்துவிட வேண்டும் என்ற அவா மேலிட்டது. இறுதிவரை அது சாத்தியமாகவேயில்லை. இந்த குழுவுக்குள் கந்தசாமியும் ஒருவன். அவன் உளவுப்படைக்கு புதிய பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். ராஜன் பலஸ்தீன பயிற்சி எடுக்கும் அடுத்த குழுவில் பயணமானான். உமா மகேஸ்வரனின் விசுவாசியாக இருந்த கந்தசாமி அமைப்பின் மத்திய குழுவிலும் அவரால் நியமிக்கப்பட்டு இருந்தான். முதன்முதலில் அவன் மோட்டார் சைக்கிளில் இத் தொலைத்தொடர்பு முகாமுக்கு வந்திருந்தான். அவனது உடல்வாகு அவனை பயங்கரமான ஒரு ஆளாக காட்டவில்லை. ஆனால் உளவுப்படை குறித்த அச்சம் தோழர்கள் எல்லோரிடமும் அவனை பயங்கரமான தோற்றம் கொண்டவனாக மறுவரைவு செய்திருந்தது. இடையிடையே முகாமுக்கு மோட்டார் சைக்கிளில் வந்து போய்க்கொண்டி ருந்தான். அந்த மோட்டார் சைக்கிள் ஒவ்வொருமுறையும் உறுமல் சத்தத்தை விட்டுச் சென்றது.

கண்ணனும் காந்தனும் ஒரத்தநாட்டிலிருந்து முதன்முதலில் துவிச்சக்கர வண்டியில் 'டபிள்' வந்திருந்தார்கள். காந்தன் விடலைப் பருவத்திலேயே ஆரம்பகால புலிகள் இயக்கத்தில் (பிரபாகரனும் உமாவும் சேர்ந்திருந்த காலத்தில்) இணைந்தவர். பின்னர் கழகத்தில் உமாவோடு இணைந்து வேலைசெய்தார். தனது மருத்துவத்துறை பட்டப்படிப்பை புறந்தள்ளிவிட்டு

இயக்கத்துக்கு வந்தவர். கண்ணன், காந்தன் இருவரினதும் நெருங்கிப் பழகவைக்கும் தோற்றமும் எளிமையும் பேச்சும் எல்லோரையும் மிக கவர்ந்திருந்தது. இவர்களும் பலஸ்தீன பயிற்சி முடித்து வந்திருந்தார்கள். கண்ணன் படைத்துறைச் செயலராக நியமிக்கப்பட்டிருந்தார். இவர்களும் மத்தியகுழு உறுப்பினர்களாக இருந்தனர். நிலத்தில் அமர்ந்திருந்த அவர் களின் முன்னால் எல்லோரும் கதைகேட்கும் ஆர்வத்தோடு அமர்ந்திருந்தனர். பலஸ்தீன பயிற்சி பற்றி அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தனர். எல்லைப் புறத்தில் தாம் கடமையாற்றிய தாகவும் சொன்னார்கள்.

"அப்ப இஸ்ரேலிய ஆமியையோடை நேரடியாக சண்டை பிடிச்சிருக்கிறியளோ? "

"அந்த சந்தர்ப்பம் பெரிசா இருக்கயில்லை. ஏனெண்டால் பலஸ்தீன போராளிகள் எங்கடை உயிர் மீது அதிகளவு கரிசனை கொண்டிருந்தாங்கள். எங்களை எப்பவும் இரண்டாம் லைனிலை தான் கடமைக்கு விட்டாங்கள்" என்றார் காந்தன்.

"இலங்கை இராணுவத்தின்ரை டாங்கியளை நாங்கள் எப்பிடி எதிர்கொள்ளப் போறம்" என்று கேட்டான் யோகன். நமட்டாகச் சிரித்த கண்ணன் "டாங்கியெல்லாம் ஒரு முட்டைக் கோது" என்றபடி உள்ளங்கையில் முட்டைக்கோதை வைத்து நொருக்கு வது போன்று விரல்களை அமுக்கி உடல்மொழியாலும் பேசினார். "அது ஒரு குருட்டு மாடு. அது தனியே செல்ல முடியாது. அதுக்கு வழிகாட்டவும் பக்கவாட்டில் பாதுகாப்புக் கொடுத்து முன்னேறவும் ஆட்கள் வேணும் அதாவது தரைவழி இராணுவம் வேணும்" என்றார்.

"கழகத்திட்டை டாங்கி ஏதாவது இருக்கா"

"இல்லை"

பலஸ்தீன-இஸ்ரேலிய எல்லையில் காந்தன் அடித்த செல் ஒன்று (மேற்கதவைத் திறந்து நின்ற) இஸ்ரேலிய இராணுவத்தின் டாங்கியினுள் வீழ்ந்து வெடித்ததை கண்ணன் பெருமிதமாய்ச் சொன்னார். அந்த தாக்குதற் செய்தியிலிருந்து எழும்பிய பிரமிப்பு ஜோனின் சாகச மனத்தின் மீது வாசனையாய்ப் பரவியது. அது ஒரு தற்செயல்தான் என்ற பாணியில் பதிலளித்து, காந்தன் அதைக் கடந்து சென்றார். பலஸ்தீன மக்களின் போராட்டம் குறித்து எந்தக்

கேள்விகளும் எவரிடமிருந்தும் எழவில்லை. அவர்கள் இருவரும் தாமாக அது பற்றி உரையாடியதுமில்லை.

பலஸ்தீன பயிற்சியெடுத்த தோழர்களையும், சந்ததியாரையும் காண்பது, அவர்களது பேச்சை கேட்பதுமான சூழல் முகாமில் எல்லோரிடமும் ஒரு புத்துணர்வை கொடுக்கத் தவறவில்லை. அவர்கள் இடையிடையே முகாமுக்கு வந்துபோனார்கள். சரிந்து போய்விடுகிற நம்பிக்கைகளை அவர்களின் முகாம் தரிசிப்பும் உரையாடலும் நிமிர்த்திக் கொண்டிருந்தன.

1984 ஒக்ரோபர் கடைசியில் இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்டார். அது முகாம் தோழர்களிடம் பெரும் அதிர்ச்சி யைக் கொடுத்தது. தமிழீழத் தாம்பாளத் தட்டு தவறி விழுந்த சகுனமாக அவர்களுக்குத் தெரிந்தது. இத் துயரை தமிழீழத்தின் குரல் வானொலியில் அஞ்சலி செலுத்தி பதிவாக்குவதற்காக முகாமுக்கு காந்தன் வந்திருந்தார். இவ் இழப்பு குறித்து ஜோனும் ஒரு கவிதை எழுதினான்.

“இந்திராவே இந்தியா,
இந்தியாவே இந்திரா
என்றிசைத்த கோசங்கள்
எத்திசையும் ஓய்ந்தனவோ”

என்று எழுதினான். பின்னரான காலங்களில் இவ் வரிகளை எழுதியமைக்காக வெட்கப்பட்டான். இரும்புப் பெண்மணி இந்திரா காந்தியின் இழப்பை தமிழீழ விடுதலைப் போராட்டத் தின் ஒரு பெரும் இழப்பாக கருதி, தமிழீழத்தின் குரல் வானொலி கண்ணீர் வடித்தது.

## 20

தொலைத் தொடர்பு முகாம் எந்த இராணுவ நடைமுறையும் இல்லாதிருப்பது பற்றியும், ‘டியூற்றி’ பார்க்கும் நடைமுறைகூட இல்லை எனவும் பதிக்கு சென்னையில் வைத்து தலைமையால் முறையிடப்பட்டது. அதன்பின் மீண்டும் டியூற்றி முறையை கடைப்பிடிக்க பதி அறிவுறுத்தினார். அவர் அங்கு தொடர்ச்சியாக தங்குவதில்லை. அடிக்கடி சென்னைப் பயணம் மேற்கொள்வார். ஒருசில நாட்களின் பின் அவர் அப்படியாய் சென்னை சென்று விட்டார். டியூற்றி முறை மீண்டும் இல்லாமல் போனது. பதி ஒரு

கடுப்பான ஆள் இல்லை. அவருடன் ஓரளவுக்காவது பேசக்கூடிய தாக இருந்தது. முகாம் தோழர்களை ஒரு குடும்பமாகப் பார்த்தார் என்றும் சொல்லலாம். அதனால் டியூற்றி முறையை கைவிடுவது என்பது எதுவித அச்சமுமின்றி நடந்தது.

முகாமுக்கு உணவுப் பொருட்களை ஏற்றிவரும் சோழனிடம் ஒரு 'எயார் கண்' (AirGun) உம் அலுமினிய முலாமிடப்பட்ட 'பெல்லற்' குண்டுகளும் கொடுத்தனுப்பியிருந்தார்கள். அந்த தென்னந் தோப்புக்குள் வருகிற காகம், குருவி எல்லாம் தோழர்களின் இலக்காய் மாறியது. துரத்தி துரத்தி சுட்டுப் பழகினார்கள். முகாமுக்கு அருகிலுள்ள ஒற்றையடிப் பாதையில் இத் துவக்குடன் லியோ றம்போ நடையுடன் செல்வான். ஆற்றில் குளித்துக் கொண்டிருக்கும் சிறுவர்கள் பின்னால் அலைய, அவன் ஒரு காகத்தையோ குயிலையோ குருவியையோ வேட்டையாடுவான். பறவைகள் கிடையாத ஓர் நாளில் சும்மா வேலியில் அசையாமல் நின்ற ஓர் ஓணானை அருகில் நின்று சுட்டு வீழ்த்தினான். அவன் தளம் திரும்பியிருந்த காலத்தில் வோக்கி ரோக்கியுடன் நெல்லியடி அத்துளு குளத்தருகிலிருந்த தண்ணீர்த் தொட்டிக் கோபுரத்தின் மீதேறி எங்கோ கதைப்பான் அல்லது கதைப்பதுபோல் நடிப்பான். அதன்போதும் பின்னால் ஓடிச்செல்லும் அந்த ஊர்ச் சிறுவர்கள் வாயைப் பிளந்தபடி கோபுரத்தின் அடியிலிருந்து நிமிர்ந்து பார்த்தபடி இருப்பர். அதை காணும் சந்தர்ப்பம் பிறகு உங்களுக்கு கிடைக்காது.

பின்னர் ஒருநாள் எல்லோரையும் தனித்தனியாக இத் துவக்குடன் வைத்து புகைப்படம் எடுத்தார்கள். ஏதோ தாக்குதலில் மறைந்து நின்று எதிரியை கண்காணிப்பது போல சிலர் 'போஸ்' கொடுத்து படம் எடுத்தனர். ஜோன் ஒரு தென்னை மரத்தின்பின் 'கவர்' எடுப்பதுபோல படத்துக்கு போஸ் கொடுத்தான். அந்த புகைப்படத்தை இன்றுவரை அவன் பார்த்ததில்லை. இப்படியேதான் பிரச்சார காணொளியொன்றை ஒருநாள் எடுத்தார்கள். கொட்டிலின் 'மூலஸ்தானத்தில்' இருந்த கரும்பலகையை கொட்டிலின் முன்றலுக்கு கொண்டு வந்தார்கள். பதி படம் கீறி படிப்பித்துக் கொண்டிருந்தார். தோழர்கள் எல்லோரும் அன்று ஒழுங்காக சேர்ட் உம் ஜீன்ஸ் உம் அணிந்து முன்னால் வரிசை கட்டி இருந்தார்கள்.

'விடுதலைப் புலிங்க' இங்கு வந்தபிறகு தேங்காய்க் களவு மட்டுமல்ல, ஊருக்குள்ளும் களவு இல்லாமல் போய்விட்டது என

பஞ்சாயத்து தலைவரின் மகன் பெருமையாகக் கூறுவார். இப்படியான ஒரு நாளில் சாமப் பொழுதில் கூக்குரலிட்டு “திருடன் திருடன்...” என கத்தும் சத்தம் கேட்டு எல்லோரும் விழித்துக் கொண்டனர். ஊர் அங்குமிங்குமாக ஓடியது. முகாமிலிருந்த பலரும் சேர்ந்துகொண்டனர். எந்தவித முகாம் கட்டுப்பாடுகளும் அவர்களை தடுத்து நிறுத்தவில்லை.

போராளிகள் என்பதால் ஊரவர்கள் அவர்களை மதித்து நடந்திருந்தனர். அது அவர்களை கவுரப்படுத்தி தீபாவளி நாளன்று விருந்தளித்ததுவரை வெளிப்பட்டிருந்தது. அந்நியமாதலற்ற இந்த வாழ்வும், ஊரில் கிராமப்புற கலாச்சாரத்தில் வளர்ந்த கூட்டு மனநிலையும் அவர்களை அந்தக் கணம் உந்தித் தள்ளியது. அவர்களில் பலரும் அந்த இருளில் கிராமத்தோடு சேர்ந்துகொண்டனர். ஊரவருடன் சேர்ந்து கள்வனை தேடினர். “அடேய் நாங்கள் இருக்கத்தக்கதாகவே துணிஞ்சு வந்து இதை செய்திட்டான்” என தமது பிம்பத்தின் மீது விழுந்த அடியாக நினைத்து சிலர் ‘களத்தில்’ இறங்கியுமிருக்கலாம் தாலிக்கொடி யொன்றை களவெடுத்துக் கொண்டு ஓடிவிட்டான் என செய்தி ஓடுபாதையில் அறுந்து தொங்கியது. அவன் தப்பி போயே விட்டான். ‘விடுதலைப் புலிங்க’ முகாம் திரும்பினர். இயக்கத்துக்கு தெரிந்தால், முகாமைவிட்டு வெளியே போனதற்கான தண்டனை எல்லோருக்கும் கிடைக்கப்போகிறது என சில தோழர்கள் எச்சரித்த போதுதான் அவர்கள் தமது பிழையை உணரத் தொடங்கினர்.

“கள்ளன் எங்களுக்கிருந்த பெயரைக் கெடுத்திட்டான்” என்றான் யோகன்.

“அன்ரனி நுளம்புவலை கவனம்” என்றான் லியோ.

“களவு போனால் வெளியிலை சொல்லவா போறம்” என்று பதில் சொன்னான் அன்ரனி. “கள்ளனே சந்தியிலை காட்டி, விடுதலைப் புலிங்களின்ரை முகாமிலை களவெடுத்தனான் என்று சொன்னாலும் சொல்லுவான். கதை கந்தலாகியிடும்” என்றான் பாண்டி.

அந்த ஊர் மக்கள் இந்தப் போராளிகள் மீது அளவு கடந்த மதிப்பு வைத்திருந்தார்கள். வீதியால் நடந்து போகும்போது திண்ணையில் கால் நீட்டியிருந்தபடியோ, சுளகில் புடைத்த படியோ, வெற்றிலை மென்றபடியோ இருக்கும் தாய்மார்கள்

“கடவுள் பெத்த புள்ளைங்க போறாங்க” என்று சொல்வர். பால் வாங்கும் இடத்தில் வரிசையில் எல்லாம் நிற்க வேண்டியதில்லை. நிற்க எவருமே விடவும் மாட்டார்கள். அந்தளவு மரியாதையும் அரவணைப்பும் அவர்களிடமிருந்து கிடைத்தது.

இதே மரியாதையும் முன்னுரிமையும் தஞ்சாவூர் வைத்திய சாலையில் வைத்தியர்களிடமிருந்தும் பணியாளர்களிடமிருந்தும் கிடைத்ததை -பயிற்சி முடித்திருந்த காலத்தில்- ஒருமுறை ஜோன் நேரில் கண்டிருக்கிறான். தொலைத் தொடர்பு பயிற்சி முடிந்த அணியில் தளத்துக்கு அனுப்பப்படாமல் எஞ்சிநிற்பவர்கள் அடுத்த தொலைத்தொடர்புப் பயிற்சி அணியினரில் யாருக்காவது சுகவீனம் வந்தால் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பை எடுக்க வேண்டியிருக்கும். நம்பிக்கையின் அடிப்படையில் முகாம் பொறுப்பாளர் அழைத்துச் செல்லும் தோழரை தெரிவுசெய்வார். அன்று ஜோனுக்கு இந்தப் பொறுப்பு கொடுக்கப் பட்டிருந்தது. ஆரம்ப இராணுவப் பயிற்சி முகாமில் (B முகாம்) இந்த நடைமுறை வேறுமாதிரியாக இருந்தது என்பதை யும், நோயுற்றவர் மீது அக்கறை செலுத்தப்படாமல் இருந்தது என்பதையும் நீங்கள் ஏற்கனவே பார்த்தீர்கள்.

காதுவலி வாட்டியெடுத்த தோழர் ஒருவரை ஜோன் தஞ்சாவூர் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றிருந்தான். அந்த வைத்திய சாலையின் முற்றத்தில் நோயாளிகளின் வரிசை (கியூ) நீண்டி ருந்தது. அந்த வரிசையில் வறுமைப்பட்ட, சலுகைகளற்ற தொழிலாளர்கள் உழைப்பாளிகள் என எளிய மனிதர்கள் காத்து நின்றனர். அவர்கள் வெயிலின் தகிப்பில் காலணியில்லாமல் கூட மணிக்கணக்கில் நிற்கும்போது, தாம் சலுகைகளை பாவிப்பது அவனுக்கு சங்கடமாக இருந்தது. போராளி என்ற பாத்திரத்தை துஸ்பிரயோகம் செய்வதான உறுத்தல் ஜோனுக்குள் எழுந்தது. வரிசை வைத்தியசாலை கட்டட முகப்பிலிருந்து வெளிவாசல் (gate) வரை நீண்டிருந்தது. அந்த வரிசையில் ஜோனும் அந்தத் தோழரும் இணைந்தனர்.

வரிசை அரக்குவதாகத் தெரியவில்லை. நேரம் போய்க்கொண்டி ருந்தது. வரிசையில் நின்று வைத்தியத்தை முடித்துக்கொண்டு போவது என்பது மாலையாகினாலும் முடியப்போவதில்லை எனத் தெரிந்தது. தாமதமாகிற மணிநேரங்கள் ‘தப்பியோடி யிட்டாங்கள்’ என்ற சந்தேகத்தை முகாமில் முளைக்க விட்டு,

மரமாகவும் வளர்த்துக் காட்டிவிடும் ஆபத்தைக் கொண்டது. இந்த இரு கோடுகளுக்கும் இடையால் நகர்ந்த ஜோன் மெல்ல வைத்தியசாலையின் விறாந்தைக்குச் சென்று வாங்கிலில் அமர்ந்து கொண்டான். வைத்திய பணியாளர்களின் கண்ணில் எத்துப்படுமாறு அந்த இடத்தை தேர்வுசெய்திருந்தான். அவர்கள் வந்து, அங்கு நின்று கொண்டிருப்பவர்களை கடுப்புடன் அப்புறப்படுத்த முயன்றபோது, "நாங்க விடுதலைப் புலிங்க. ஓரத்தநாட்டிலிருந்து வந்திருக்கிறம்" என்றான் ஜோன். அடங்கிப்போன அந்தப் பணியாள் உடனடியாகவே உள்ளே சென்றார். அவர் வைத்தியரிடம் சென்று ஏதோ பேசியிருக்க வேண்டும். வைத்தியரே எழுந்துவந்து "நீங்கெல்லாம் ஏன் காத்துக்கிட்டு நிக்கீங்க. உங்களுக்கு எவளவு பணிகள் இருக்கும். அடுத்தமுறை இப்பிடியெல்லாம் நிக்காதீங்க. நேரடியாகவே வாங்க" என்று உடன் அழைத்துச் சென்று வைத்தியம் பார்த்தார். அதற்கான வைத்தியச் செலவைக்கூட அவர் வாங்கவில்லை. நெகிழ்ச்சியாகவும், அதேசமயம் உறுத்தலாகவும் அமைந்த அந்த மணித்துளிகள் அவனது மனதில் தழும்பாக வழிந்தது. கொழுத்தும் வெயிலில் மணிக்கணக்காக வரிசையில் காத்துக் கொண்டிருக்கும் அந்த எளிய மனிதர்களைக் கடந்து வாசல்வரை வருவது அவனுக்கு சங்கடமாகவே இருந்தது.

1984 ஒக்ரோபர் மாதம். தீபாவளி. அதற்கு முதல் நாட்களிலேயே தமது வீட்டுக்கு விருந்துக்கு வரும்படி பல குடும்பங்கள் அழைத் திருந்தன. எல்லோரும் நான்கு ஐந்து பேர் கொண்ட குழுக்களாக பிரிந்தார்கள். எல்லோரையும் திருப்திப்படுத்த வேண்டும் அவர்களது அரவணைப்புக்கான மதிப்பை அதனூடு செலுத்த வேண்டும் என பதி விளக்கமளித்தார். ஒவ்வொரு குழுவும் மூன்று நான்கு வீட்டில் சாப்பிட வேண்டிய நிலை ஏற்பட்டது. இவர்கள் தமது வீட்டுக்கு வந்து உணவருந்தும்வரை ஒவ்வொரு குடும்பமும் தாம் உணவருந்தாமல் காத்திருந்தது. ஜோன் அந்த உபசரிப்பில் நெகிழ்ச்சியடைந்து போனான். பதியின் இந்த முடிவு எச்சரிக்கை உணர்வற்றது என்பதை யோகன் சொன்னபோது யாரும் கவனத்தில் எடுக்கவில்லை.

ஊரில் புளொட் அமைப்புக்கு 'சோத்துப் பார்சல் அமைப்பு' என ஒரு பெயர் இருந்தது. அங்கு புளொட் அமைப்புக்கு வேலைசெய் பவர்களுக்கு அந்தந்த ஊரில் ஒரு புளிய மரமோ, ஆல மரமோ, அரச மரமோ சந்திப்பு மையமாக இருக்கும். எப்போதும்

எச்சரிக்கையுடனும் கலகலப்பாகவும் அந்த இடம் காட்சி தரும். சைக்கிள்களும் சில மோட்டார் சைக்கிள்களும் தாறுமாறாக தரித்தபடி நிற்கும். சில ஊர்களில் இவர்களுக்கு உணவளிப்பதை ஒரு கடமையாக நினைத்த குடும்பங்கள் இருக்கின்றன. கொண்டாட்ட நிகழ்வுகளின் போதோ, குடும்ப சடங்குசார் நிகழ்வுகளின் போதோ அவர்கள் இவர்களுக்கான சோற்றுப் பார்சல்களை தாமாக முன்வந்து வழங்கத் தொடங்கினார்கள். சில சந்தர்ப்பங்களில், குறிப்பாக விசேட நாட்களில் இது நிகழ்ந்தன. கொக்குவில் புளிய மரத்தின் கீழ் வைத்து இந்த உபசரிப்பை ஒருமுறை ஜோன் கண்டிருக்கிறான்.

காலப்போக்கில் இது தலைகீழாக மாறத் தொடங்கியது. கழகத்தைச் சேர்ந்தவர்களே -குறிப்பாக இராணுவப் பிரிவைச் சேர்ந்தவர்கள்- அப்படியான நிகழ்வுகள் நடக்கும் இடங்களுக்குப் போய் பார்சல் கேட்கும் நிலையாக மாறியிருந்தது. ஒரு தேநீரைக்கூட சொந்தக் காசின்றி கழகப் பணத்தில் வாங்கக் கூடாது, அது மக்களின் பணம் என சந்ததியாரும் கேசவனும் பாசறைகளில் பயிற்றுவித்ததை மானசீகமாக ஏற்றிருந்தனர், பல அரசியல் பிரிவுத் தோழர்கள். பகல் முழுவதும் வெயிலின் தாக்கத்துக்குக் கீழ், கீச்சிடும் சைக்கிளில் அலைந்து திரிந்து, இயக்க வேலைகளை செய்தவர்கள். அவர்களில் ஜோனும் ஒருவன். களைப்பில் சாப்பாட்டுக் கடைகளில் அண்ணாக்காக தண்ணீரை அருந்தும் அவர்கள் மீது பரிதாபப்பட்டு இலவசமாக தேநீரையோ உணவையோகூட வழங்கிய கடைக்காரர்கள் இருக்கிறார்கள். இவ்வாறாய் ஜோனின் நண்பன் ஒருவனின் கொத்துரொட்டிக் கடையில் தண்ணீர் அருந்துவதை நண்பன் காணும்போதெல்லாம் சொம்பை பறித்தெடுத்துவிட்டு, தேநீரை மட்டுமல்ல கொத்து ரொட்டியையும் இலவசமாக கொடுத்திருக்கிறான். அவனது நல்லெண்ணத்தை துஸ்பிரயோகம் செய்யக்கூடாது என்பதற்காக ஜோன் இயன்றவரை அந்தக் கடைக்கு செல்வதை தவிர்த்ததுமுண்டு.

பின்தளத்திலிருந்து தளத்துக்கு இராணுவப் பிரிவு தோழர்கள் வரத் தொடங்கிய காலத்திலிருந்து இந்த 'சோத்துப் பார்சல்' ஒரு கலாச்சாரமாகத் தோன்றியது அல்லது கலாச்சாரமாக மாற்றப்பட்டது. வேலைவெட்டியில்லாமல் முகாம் அமைத்து இருந்த அவர்கள் தமது உணவுத் தேவைக்கு தமது உழைப்பை செலுத்தாமல், மக்களின் அர்ப்பணிப்பு மனப்பான்மையை

துஸ்பிரயோகம் செய்தனர். புழுதி பறக்க வாகனங்களில் ஓடித் திரிவதும், சகட்டு மேனிக்கு 'சமூகவிரோதி'களை கண்டு பிடிப்பதும் அவர்களின் இயங்குதல் ஆனது. குருட்டு விசாரணை செய்து அந்த மனிதர்களின் உயிரை சனசந்தடி மிக்க நகர மையங்களில் மின்கம்பத்தில் கட்டி, கழுத்தில் "சமூகவிரோதி" என கடதாசி மட்டையை (கார்ட்போர்ட்) தொங்கவிட்டு, சுட்டுக் கொன்றனர். அதற்கான நாளை தீபாவளியன்றோ, தைப்பொங்க லன்றோ, வருடப் பிறப்பன்றோ கூட வேண்டுமென்றே தெரிவு செய்தனர். இதன்மூலம் மகிழ்ச்சியாய்த் தொடங்குகிற அந்த நாளைப் பிடுங்கி, மக்களிடத்தில் பதட்டத்துடன் ஒப்படைத்தனர். தமது சாகச மனப்பான்மையின் இழிநிலையை தாமே இரசித்தனர். இவர்கள் சோத்துப் பார்சல் கலாச்சாரத்தை விடாது பேணினர். இந்தக் கலாச்சாரத்தை இறுதிவரை நிராகரித்து எளிமையாய் பிரக்ஞைபூர்வமாய் பல அரசியல் பிரிவுத் தோழர்கள் வாழ்ந்திருக் கின்றனர்.

தமிழர்களின் பாரம்பரியமாக இருக்கிற இந்த விருந்தோம்ப லில் அவர்கள் இயக்க வேற்றுமையைக்கூட மறந்து நடந்தனர். தமிழீழத்துக்கான போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்திருக்கும் இந்த இளைஞர், யுவதிகள் மீது அவர்கள் மதிப்பும் அன்பும் வைத்திருந்தனர். அதை இப்போது ஓரந்தராயன்குடிக்காட்டிலும் ஜோன் கண்டான். அந்த சம்பவம் நெகிழ்ச்சியான தருணமாக அமைந்தது, அவனுக்கு.

அந்த ஊரில் காலேஜில் படிக்கிற ஒரு ஏழ்மை மாணவனாக குணசேகரன் இருந்தான். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவன் யோகனின் 'சிக்கிரி போர்ட்' க்கு வருவான். தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்து அதிக ஆர்வத்துடன் பேசிக்கொண்டேயிருப் பான். அவன் இத் தீபாவளி நாளன்றான இரவுநேர உணவுக்கு ஒரு குழுவை தனது வீட்டுக்கு அழைத்திருந்தான். அக் குழுவில் அவனுடன் பரிச்சயமான யோகன், ஜோன் இருவரையும் எதிர் பார்த்தான். பதி அதற்கு அனுமதி வழங்கினார். அந்தக் குடிசையின் வாசலுக்கு தலைவணங்கித்தான் உள்ளே செல்ல முடியும். சாணத்தால் மெழுகப்பட்டிருந்த நிலத்தில் அவனது தாய் பாயை விரித்துப் போட்டாள். 'கடவுள் பெத்த புள்ளைங்களுக்கு' அவள் சுடச்சுட தோசை சுட்டு பரிமாறினாள். கூன்விழுந்த அந்தத் தாயின் துடியாட்டத்தை ஜோன் பார்த்து வியந்து கொண்டிருந்தான். இவர்களின் இந்த மதிப்பு மரியாதைகளை போராட்டத்தில்

வெற்றி பெறுவதன் மூலம், தாம் காப்பாற்றுவோமா என்ற ஏக்கம் ஜோனின் மனதில் கேள்விகளாய் விழுந்தன.

சிக்கிரி போர்ட் இல் மட்டுமல்ல, பால்வாங்கப் போகிற வழியிலும் குணசேகரன் தோழர்களை சந்தித்துப் பேசுவான். முகாமுக்கு உணவுப் பொருட்களை வாகனத்தில் கொண்டு வருகிற சோழன் கழிவிரக்கத்தில் இரகசியமாகக் கொடுக்கிற ஐம்பது சதத்துக்கோ ஒரு ரூபாய்க்கோ சொக்கிளேற் வாங்கி சாப்பிட தெருமுனைக் கடைக்கு களவாக செல்லும் தோழர் களையும் அவன் சந்திக்க நேர்வதுண்டு. இந்தக் கடையும் பால்நிலையமும் பிரதான வீதியோரம் இருந்தன. இடையில் பஸ் தரிப்பிடம் இருந்தது. இதில் இறங்கித்தான் பெரிசும் சந்ததியாரும் மழைக்குள் நனைந்தபடி ஓடிவந்ததை நீங்கள் ஏற்கனவே பார்த்தீர்கள்.

## 21

ஒருநாள் குசினிக்குள் அரிசி மூட்டைகளின் மேல் அமர்ந்தபடி ஜோன், சிங்கப்பூர், எர்னஸ்ரோ, யோகன், லியோ, ஈசன் ஆகியோர் இயக்க நிலைமைகள் பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். இரவு நேரம். திடீரென வாசலுக்குள்ளால் இருள் தீட்டிய பிஸ்ரலொன்று நீண்டது. எல்லோரும் கணநேரம் திகைத்துப் போயிருக்க, பதி சிரித்த முகத்துடன் வெளிப்பட்டார். ‘‘பயந்திட்டீங்களா’’ என்றபடி அருகில் வந்து அமர்ந்தார். சென்னையிலிருந்து அப்போ திரும்பியிருந்தார் அவர். முதன்முதலாக அவரை அன்றுதான் ஜோன் ஆயுதத்துடன் கண்டான். பதி எந்த வித்தியாசமுமில்லாமல் வழமைபோல் பழகினார் அல்லது பாசாங்கு செய்தார். ஆனால் அண்மைக்காலமாக அவர் முன்னரைப்போல் உற்சாகமாக இல்லை. மகிழ்ச்சியாக இல்லை. எதையோ விழுங்கிவிட்டு சுதாகரித்துக் கொள்பவர்போல் திரிந்தார். சென்னைப் புதினங்கள் என்ன என வழமைபோல் எர்னஸ்ரோ கேட்டான். முகத்தில் சற்று கவலை தோய அவர் ‘‘இயக்கத்துக்கை சில பிரச்சினைகள் வந்திருக்கு. பெரியவர் அதை எப்படியும் தீர்த்துவைப்பார் எண்டு நம்புறன்’’ என்றார்.

‘‘சந்ததியார் ஏன் இப்பவெல்லாம் இங்கை வாறதில்லை’’ என ஜோன் கேட்டான்.

சற்று மவுனமா இருந்த அவர் ‘‘சில முரண்பாடுகளாலை அவர் ஒதுங்கி இருக்கிறார்’’ என்றுவிட்டு எழும்பிப் போனார்.

மறுநாள் வகுப்பு தொடங்குவதற்கு முன் அவர் பேசினார். எல்லோரையும் உற்சாகப்படுத்துவது போல் பேசிய அவர் "பெரியையாவோடை கதைச்சனான். உங்களிலையிருந்து முதற் குழுவொன்றை நாட்டுக்கு அனுப்ப யோசிக்கிறன். தளத்தில எங்கடை நெற் வேர்க்கை தொடங்க வேணும். அந்த நெற் வேர்க்கை டிசைன் பண்ண ஜோனையும் வாகீசனையும் நான் நியமிக்கலாமென இருக்கிறன்" என்றார். "கெதியிலை ஒரு மோட்டார் சைக்கிள் உங்களுக்கு கிடைக்கும். எல்லாரும் ஓடிப் பழக வேணும். அதோடை 'பயரிங் காம்புக்கு' (firing camp) போய் பயிற்சி எடுத்து முடிக்கவும் வேணும்" என்றார்.

வாகீசன் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொறியியலாள ராக தொடங்கிய படிப்பை கைவிட்டு இயக்கத்துக்கு வந்திருந் தான். அவனும் மிக வறுமைப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவன். ஜோனும் அவனும் இந்த தொலைத் தொடர்பு வலையமைப்புக் கான தயாரிப்பில் இறங்குவதற்கு முன், அதற்கான இலங்கை வரைபடம், குறிப்பாக தமிழீழப் பகுதிகள் பற்றிய வரைபடம் தேவைப்பட்டது. அதற்காக ஜோனும் வாகீசனும் சென்னையை எதிர்பார்த்து காத்திருந்தனர். பதி அதற்கான பொறுப்பை எடுத் திருந்தார்.

புதிதாய்த் துலக்கமுற்றிருந்த ஓர் இரத்தச் சிவப்புநிற மோட்டார் சைக்கிள் முகாமுக்கு கொண்டுவரப்பட்டது. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையிலிருந்து கடத்தி வரப்பட்ட மோட்டார் சைக்கிள் என தெரியவந்தது. புதிய 'கொண்டா' ரக வாகனம் அது. முகாம் உற்சாகத்தில் திளைத்தது. வகுப்புநேரம் தவிர அந்த மோட்டார் சைக்கிளுக்கு ஓய்வே கிடைக்கவில்லை. ஆற்றை அண்டிய மிக நீண்ட கிரவல் பாதையில் புழுதியை கிளப்பியபடி விழுந்தெழும்பி ஓடிக்கொண்டிருந்தது. இடையிடையே பிரதான வீதியை ஊடறுத்தும் சிறிது தூரம் ஓடத் தொடங்கியது. பிரதான வீதிக்கு போகக்கூடாது என்ற பதியின் கட்டளையை அது படிப் படியாக மீறத் தொடங்கியது. பொலிஸ் மறித்தால் 'விடுதலைப் புலிங்க' என்ற வாய்வழி அனுமதிப் பத்திரத்தை (லைசென்சை) அது காட்டலாம் என்ற துணிவில் அது வீதியை எட்டிப் பார்த்தது. முகாம் தோழர்கள் எல்லோரும் மோட்டார் சைக்கிளை நன்கு செலுத்தக் கற்றுக்கொண்டிருந்தனர். இப்போதும் பெண் தோழர்க ளுக்கு அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டிருந்தது அல்லது அவர்கள் கண்டுகொள்ளப்படாமல் இருந்தனர். பதியோ அல்லது பெண்

தோழர்கள் உட்பட எவருமோ இதுகுறித்து கதைக்கவில்லை. சிந்திக்கவில்லை என்றும் சொல்லலாம். சோசலிச தமிழீழத்துக் கான போராளியம் இப்படியாய் வளர்ந்தது.

இக் காலப் பகுதியில் சுடுதல் பயிற்சிக்கான முகாமுக்கு (பயரிங் காம்ப்) இரண்டு வார பயிற்சி பற்றி அறிவிப்பு வந்தது. முகாமு க்குள் ஒரு புத்துணர்ச்சி பரவத்தான் செய்தது. ஆயுதங்களை கையாளும் ஆவல் ஜோனுக்குள்ளும் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தி யிருந்தது.

மீண்டும் ஓர் இரவுப் பயணம். புதுக்கோட்டையிலிருந்த முகாமை சென்றடைந்தார்கள். இரண்டு பெரும் கொட்டகைக்குள் அவர்கள் படுத்துறங்கினர். மறுநாள் காலை அந்த முகாம் ஒரு காட்டுப் பகுதியுள் இருப்பதை கண்டான் ஜோன். சுற்றிவரவும் முகாமை ஊடறுத்தும் பதுங்குகுழிகள் தொடர்ச்சியாக வெட்டப் பட்டிருந்தன. அதன் ஓரங்களில் மரமுந்திரி போன்ற, சடைத்து நிலத்துடன் தாழ்ந்து பரவியிருந்த தடித்த இலைகள் கொண்ட மரங்கள் பசுமை இழக்காமல் கோர்வையாய் இருந்தன. நீரின்றி அமையாது உலகு என்பதன் சாட்சியாக வளர்ந்து பரட்டை படர்ந்த உயர்ந்த மரங்கள் பல நின்றன. சற்று தொலைவில் ஓர் இடிந்த பாழடைந்த சிறிய கட்டடம். வெக்கையில் தகித்து புழுதி படிந்து போயிருக்கும் நிலம். தனித்து விடப்பட்ட மனிதர்கள். நிலவு இந்தக் காட்டிலும் பாரபட்சமின்றி ஒளியை பொழிந்துகொண்டிருந்தது.

கொட்டகைகளுக்கு இடையில் ஒரு பெரிய வேப்பமரம் விருட்சமாக வளர்ந்திருந்தது. அதில் தடித்த கயிறொன்று தொங்கிக் கொண்டிருந்தது. அதற்குக் கீழே கடற்கரை மணல் பரப்பப் பட்டிருந்தது. அந்த வேப்ப மரத்திலிருந்து சுமார் எண்பது மீற்றர் தொலைவிலுள்ள பாலை மரத்திற்கு இன்னொரு தடித்த கயிறொன்று இணைக்கப்பட்டிருந்தது. முதுகில் துப்பாக்கியை காவியபடி கைகளாலும் காலாலும் இந்தக் கயிற்றில் நடக்க வேண்டும். முதுகுப்புறம் தரையைப் பார்த்தபடி இருக்க, முகம் வானத்தைப் பார்க்க குரங்கின் அசைவாக தாண்டவேண்டும்.

பயிற்சி விடுதலை செய்த மாலை நேரம். ஜோன் அந்த மணலில் வானத்தைப் பார்த்தபடி படுத்திருந்தான். வேப்ப மரத்தின் கிளைவிரிப்பினை நிலவு அவனது வீட்டிலிருந்து காவி வந்திருக்க வேண்டும். ஒளிவழியும் இலைகளையும், நிழல் இலைகளையும்

ஒரு கலவையாக நிலவு வழங்கிக் கொண்டிருந்தது. நிலவு மவுனமாக இருந்தது. வௌவால்கள் எதையும் காணவில்லை. நட்சத்திரங்கள் அசையாது நின்றன. திண்ணையில் குந்தியிருந்த தாயை ஜோன் கண்டான். அவள் தனது மகன் ஆதரவற்று இருந்த குடும்பத்தை தூக்கி நிறுத்துவான் என்று கட்டிவைத்த கனவுகளின் சிதைவுகளுக்குள் ஓர் சிதைவாய் இருந்தாள்.

"நடுரோட்டிலை எங்களை விட்டிடாதை" என்பதை அவளது வாயசைவில் அவன் வாசித்தான். "இயக்கத்துக்கு போனியெண்டால் என்னை உயிரோடு நீ பார்க்க மாட்டாய்" என்ற பாச மிரட்டலையும் வாசித்தான். "அம்மா இருப்பாள். நான் போராளியாகவும், அதேநேரம் (சமூகம் செதுக்கியெடுத்த) பொது மனிதனாகவும் வகிக்கிற பாத்திரங்கள் இரண்டும் கலந்து எனை பயணிக்க வைக்குமா அல்லது அதில் எது என்னைப் பிரித்து தத்தெடுக்கும் எனத் தெரியாது. நிச்சயமற்ற எனது போராளிக் கனவானது, வாழ்க்கைப் போராட்டத்தில் நிச்சயமான 'போராளியாகவே' இருந்து எனக்கு விடுதலை தந்த அம்மாவின் பங்களிப்பை தூக்கியெறிந்தால், அதற்கு ஓர் அர்த்தம் இருக்குமா". இந்த இழைகளை உருவாக்கியபடி அவன் மூளைக்குள் குற்றவுணர்வு வலை பின்னிக்கொண்டிருந்தது.

அவன் தோற்றுப்போய் புகலிடம் தேடி மேற்குலகுக்கு வந்து பல வருடங்களின் பின்தான் முதுமையடைந்து தாய் இறந்து போகிறாள். தனது மகனின் பல்கலைக் கழக வாழ்வின் அன்றையகால நினைவுகளாக அவன் அணிந்த "எலிபன்ற் பெல்பொட்டம்" நீளக் காற்சட்டையையும், இறுக்கமான சேர்ட் இனையும், அவன் சக மாணவர்களுடன் சேர்ந்தெடுத்த சில புகைப்படங்களையும், தனக்கு மகன் அனுப்பிய கடிதங்களையும் காற்றுக்கூட புகமுடியாத ஓர் இரும்புப் பெட்டிக்குள் பூட்டி வைத்திருந்தாள். அவளது மரணத்தின் பின் அவற்றை ஜோன் கண்டெடுத்தான். அவளது கல்வெட்டு மலரில் அவன் எழுதியதை நீங்கள் பின்னர் வாசிக்க சந்தர்ப்பம் இருக்காது. அதில் அவன் தனது சிறுவயது வாழ்க்கையை குலைத்துப் போட்டிருப்பான்.

> ""வாழ்வுக்கான எல்லாப் போராட்டங்களினூடும் நாம் எல்லோருமே அம்மாவுக்கு ஒத்துழைத்த காலங்கள் எனக்கு இப்போதும் பெறுமதி மிக்கனவாய்த் தெரிகிறது. படிப்பு ஒன்றே மூலதனமாய்ப் போன யாழ்ப்பாண நிலைமையோ அன்றேல் மனநிலையோ எமது மீட்சிக்கான

வழியாய்த் தெரிந்தது. இதற்காக பொருளாதார ரீதியில் இன்னும் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. அந்த இழப்புகள் அம்மாவை இன்னுமின்னுமாய்த் தாக்கியது. இரவு வேளையில் சாமப் பொழுதுகளிலும் கைவிளக்கு வெளிச்சத்தின் முன் நான் புத்தகங்களுடன் மல்லுக்கட்டியபடி இருப்பேன். அருகில் அம்மா சுவரில் சாய்ந்தபடி இருப்பாள். நித்திரைத் தூக்கத்தில் அம்மா சுவரில் 'அங்காலும் இங்காலு மாக' சரிவதும் நிமிர்வதுமாகவே இருப்பாள். பரிதாபமாக இருக்கும். "அம்மா போய்ப் படு. நானும் படுக்கப் போறன்" என்று நான் சொல்வதெல்லாம் எடுபடுவதேயில்லை. இடையிடையே தேனீரையோ, பழங்கஞ்சியையோ, முட்டைக் கோப்பியையோ எனக்கு தருவதற்கான விருப்புடன் அம்மா நான் உறங்கும்வரை தானும் உறங்காமல் இருப்பாள். நாளெல் லாம் ஓயாது இயங்கி, குடும்பச் சுமைகளின் பாரத்திலும் எனது நான்கு சகோதரிகளை 'கரைசேர்க்கும்' ஏக்கங்களிலும் அம்மா மூழ்கியபடி எனதருகில் குந்தியிருப்பாள்.

தேசியப் பொருளாதாரத்தை முன்னிலைக்குக் கொண்டு வரும் மாற்று முயற்சியொன்றில் இலங்கை இடதுசாரியச் செல்வாக்கின் வழி செயற்பட முயற்சித்த சிறிமாவின் ஆட்சிக் காலமது. அது 'சிறீமாவின்ரை பஞ்சநேரம்' என வர்ணிக்கப்பட்டிருந்தது. நாற்பது வருடங்கள் எனது அப்பா வின் துணையின்றிய வாழ்காலம் அம்மாவுக்கு அதே காலப்பகுதியில் தொடங்கியது. நாம் எட்டுப் பிள்ளைகள். நான்கும் மூத்த சகோதரிகள். யாரும் அப்போ திருமணம் செய்துகொண்டிருக்கவில்லை. அப்பாவின் மரணம் எதிர்பாரா ததாய் 60 வயதிலேயே நடந்துமுடிந்தபோது குடும்பச் சுமை அம்மா தலையில் விழுந்தது. ஒரு குடும்பத் தலைமைக்கான எல்லா ஆளுமைகளையும் எடுக்க அம்மா கடுமையாகப் போராடினாள். ஒரு இரண்டு ரூபாய்க்காக இரண்டு மைல் தூரம் சந்தைக்கு கறிவேப்பிலைக் கட்டை எடுத்துச் செல்லும் நிலையில் அம்மாவின் பயணம் தொடங்கியது.

அப்பாவின் இறப்பில் திசையறியாமல் விடப்பட்ட எனக்கு உவப்பான கல்லூரியொன்றில் இடம் கிடைக்கிறது. எனது வயது பதினொரு வயது பதினொரு மாதம். 8ம் வகுப்பு. அதிகாலையில் நானும் எனது கடைசி அக்காவுமாக வீடுவீடாக அப்பம் விற்க புறப்பட்டு விடுவோம். அம்மா அதிகாலை

மூன்றரை மணிக்கே எழுந்து இடியப்பம் தோசை என தயார் பண்ணியவைதான் அவை. இருட்டாக இருக்கும். பயமாகவும்கூட இருக்கும். அதுவும் மழையென்றால் சுளகை தலையில் ஏந்தியபடி கைகோர்த்துச் செல்வோம். கையில் ரோர்ச் லைற். விற்று முடிந்தபின் வீடு திரும்புவோம். அவசர அவசரமாக பாடசாலைக்குத் தயாராவோம். போடுவதற்கு ஒரு சோடி பாடசாலை சீருடை மட்டுமே என்னிடம் இருந்தது. அம்மா அடிக்கடி தோய்த்து சுடுநீர்ப் பாத்திரத்தால் 'அயன்' பண்ணித் தருவாள். என்னிடம் சைக்கிள் இருக்கவில்லை. கால்நடையாக ஒவ்வொரு நாளும் இரண்டு மைல்கள் நடந்து பாடசாலை போகவேண்டியிருக்கும். புத்தகங்களை கையிலும் தோளிலுமாக மாறி மாறி காவியபடி பாடசாலை விரைவேன்.

மாமாவுடன் சேர்ந்து நானும் அண்ணனும் தோட்டத்தில் அதிகாலை வேலைசெய்த காலங்களில் அப்பம் விற்பது நின்றுபோனது. தூரத்திலிருந்த தோட்டத்திற்கு எமது பழைய 'வூல்சிலி' மெசினை இழுத்துச் செல்வதிலோ, அல்லது தோட்டத்தில் தண்ணிமாறுவதிலோ, சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் பக்கத்துத் தோட்டக்காரர்களின் அனுமதியோடு வெங்காயப் பூ முறிப்பதிலோ காலை நேரம் விரைவாய் கரைந்து விடும். அவசர அவசரமாய் பாடசாலைக்குப் புறப் படுதல் என்பது ஒரு பொதுவான நியதிபோல் இருந்தது. இவ்வாறாய் எனது படிப்பு தொடர்ந்தது. வீட்டுத் தோட்டமும் விசாலிக்கத் தொடங்கியது. அம்மா கறிவேப்பிலையை மட்டும் சந்தைக்குக் கொண்டு போகும் நிலையிலிருந்து மரவள்ளிக் கிழங்கு, கத்தரிக்காய், தக்காளி என எடுத்துச் செல்லும் நிலைக்கு மாறிக்கொண்டிருந்தார். என்னிடம் இப்போ இரண்டு சோடி பாடசாலை சீருடைகள் இருந்தன. அம்மா அப்பாவின் பாத்திரத்தையும் ஏற்க நேர்ந்ததால், வீட்டிலும் வெளியிலும் அவர் இயங்க வேண்டியதாயிருந்தது. ஓய்வாக அம்மா இருப்பது என்பதை நாம் காணமுடியாமல் இருந்தது.

ஏழ்மையை வெற்றிகொள்ளும் ஆயுதமாக கல்வியே என் னிடம் கைவசமிருந்தது. மிகக் கடுமையாக படித்து நான் பல்கலைக் கழகம் போயிருந்தபோது அம்மாவின் உழைப்புக் கான பரிசாக அதை நான் நினைத்தேன். ஒரு 'என்ஜினியர்' ஆக வரவேண்டும் என்ற எனது இலக்கு ஒரேயொரு புள்ளி

குறைந்ததால் தவறிப்போனது. வீணான கவலை கொண்டு தாடி வளர்த்துத் திரிந்தேன். இருந்தும் 'கட்டடக் கலை' *(architect)* பட்டப் படிப்புக்கான அனுமதி கிடைத்தது. சற்றும் எதிர்பாராதவிதமாக எனக்கு ஆதர்சமாகப் பொருந்திப் போகிற துறையாக அது இருந்தது. அதனுடன் வாழத் தொடங்கினேன். பொறியியலாளராக வருவதிலிருந்து நான் தப்பித்துக் கொண்டதுக்காக இப்போ மகிழ்ச்சியடைந்தேன். அது நிலைக்க வில்லை. 83 கலவரம் இந்த மகிழ்ச்சியைப் பறித்துக் கொண்டது. அரைகுறையில் எனது படிப்பு முடிவடைந்தது. எனது படிப்புக்கான செலவு என்னை அச்சுறுத்தியிருந்தபோது, படிப்படியாக என் அம்மா அணிந்திருந்த ஒருசில நகைகளும் காணாமல் போய்க் கொண்டிருந்தன. இந்த இழப்புகளுக்கு நான் அம்மாவுக்கு ஏமாற்றத்தையே பரிசளித்தேன். எனக்கு பிடல் கஸ்ரோவும் சேகுவேராவும் அறிமுகமானார்கள்..."" என கல்வெட்டில் எழுதியிருந்தான்.

இப்போ அவர்கள் தாங்கிய போராட்டக் குணத்தையும் ஆயுதத் தையும் தேடி அவன் வந்திருந்தான்.

வாசலில் கடவை திறந்து கொள்கிறது. பொருட்களுடன் லொறி வருகிறது. எல்லோரும் அதை நோக்கியபடி நிற்க காந்தனும் தேவனும் அதிலிருந்து குதித்து இறங்கினார்கள். வழமைபோல் ஒரு கவ்போய் திரைப்பட நாயகன் போன்று தொப்பியுடனும் இடுப்பில் பிஸ்ரலுடனும் காட்சியளித்தார் தேவன். காந்தன் மிக சாதாரணமான தோற்றத்துடன் இருந்தார். அவர் நேர்த்தியாக ஒரு இராணுவ சலூட் மரியாதையை தருகிறார். தேவன் எம்ஜிஆர் பாணியில் ஒரு சலூட் செய்கிறார். தொலைத்தொடர்பு முகாம் தோழர்களுக்கு இராணுவ நடைமுறை தூர விலகிப் போயிருந்ததால் என்ன செய்வதென்று தெரியாமல் நின்றனர் அல்லது அசட்டையாக நின்றனர்.

"சலூட் அடிக்க வேணுமெண்டு உங்களுக்கு தெரியாதா" என்றார் தேவன். காந்தனும் அதை வலியுறுத்தினார். இந்த சலூட் பற்றிய சர்ச்சை உடன் கிளம்புகிறது. முதலாளித்துவ இராணுவத்தில் மட்டுமல்ல, சோசலிச இராணுவத்திலும் சலூட் முறை இருக்கிறது. நீங்கள் அதே போன்ற சலூட் மரியாதையை செய்ய வேண்டும். அதுதான் நடைமுறை என்று விளக்கமளித்தார் காந்தன். "அப்போ எந்தெந்த சந்தர்ப்பங்களில் நாம் சலூட் செய்ய

வேணும்'' என்று கேட்டான் யோகன். சந்தர்ப்பங்களை விளக்கிய காந்தன், முதன் முதல் எதிர்கொள்ளும்போதும் சலூட் செய்ய வேண்டும் என்றார். பின்பான காலங்களில் பொறுப்பு வாய்ந்த தோழர்கள் முகாமுக்கு வரும் நேரங்களில் ஆங்காங்கு நிற்கும் முகாம் தோழர்கள் அவர்களை முகங்கொடுக்காமல் முகாம் கொட்டகையை நோக்கி எதிர்த்திசையில் மெல்ல அடியெடுத்து நடப்பது வழமையாகிற்று. இயன்றவரை சலூட் செய்வதை அவர்கள் தவிர்த்தனர்.

பாழடைந்த சிறிய கட்டடத்துள் ஆயுதங்கள் பற்றியும் அதை கழற்றி பூட்டுவது பற்றியுமான வகுப்புகள் ஆரம்பமாகின. அந்த கட்டடம் உட்புறம் துப்புரவு செய்யப்பட்டு ஒரு திண்ணை பள்ளிக்கூடமாக மாற்றப்பட்டிருந்தது. எஸ்.எல்.ஆர், ஏ.கே-47, எஸ்.எம்ஜி, பிஸ்ரல், றிவோல்வர், கிரனைட் சகிதம் தேவன் வகுப்புகளை நடாத்தினான். இந்த ஆயுதங்களின் சுடுதூரம், உயிர்கொல் தூரம் எல்லாவற்றையும் குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொண்டார்கள். இதை ஏற்கனவே ஆரம்ப முகாமில் (பி முகாம்) கொஞ்சம் தெரிந்து வைத்திருந்த ஜோன் இந்த ஆயுதங்களை மற்றைய தோழர்களைப் போன்றே படங்களாக வரைந்து வைத்திருந்தான். கொப்பியில் சொத்தியாகவும் கோடுக ளாகவும் பதிந்திருந்த ஆயுதங்கள் இப்போ நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் உருத்திரண்டு அவனது கரங்களுக்கு வந்தன. மிக கறாராக இராணுவக் கடுப்புடன் அந்த வகுப்புகளை தேவன் நடாத்தினான். ஒரு கட்டத்தில் எஸ்.எல்.ஆர் இனை கையில் வைத்திருந்து அதை கழற்றுவதற்கு எத்தனித்தபோது கொஞ்சம் வில்லங்கமாக இருந்தது. அதன் பிடியை சீமெந்து தரையில் மெல்ல செல்லமாகக் குத்தினான். ''ஆயுதத்தை பெண்களை கையாள்வது போல பக்குவமா கையாள வேணும்'' என்று அவன் சொல்லிய போது, அதிலிருந்து பொறி கிளம்பியது.

''அதென்ன பெண்களை கையாள்வது'' என்று கேட்டான் யோகன். தேவன் அதை எதிர்பார்த்திருக்கவில்லை.

''பெண்கள் என்ன ஆண்களால் கையாளப்பட வேண்டியவர் களா, அவர்களையும் ஆயுதத்தையும் ஒப்பிடுகிறீர்கள். அவர்க ளென்ன பண்டமா? '' என்று கேட்டான் ஜோன்.

''பெண்விடுதலை பற்றி கதைக்கிறம், சோசலிசம் பற்றி சமத்து வம் பற்றி கதைக்கிறம்... நாங்கள் இப்பிடி ஒப்பிடலாமா'' என கேட்டான் எர்னெஸ்ரோ.

“தேவன் துலைஞ்சான். முழிக்கிறான்ரா” என கிசுகிசுத்தான் லியோ. “பிழைதான்” என தேவன் மன்னிப்புக் கேட்டுவிட்டு, வகுப்பை தொடர்ந்தான்.

ஆயுதங்களின் பாகங்களை தொட்டுணரவும் அதை கண்ணால் பார்க்கவும் நேர்ந்த சந்தர்ப்பத்தில் ஜோனின் உடலினுள்ளிருந்து ஒரு ஒளி மெல்ல வீசத்தொடங்கியது. பாகங்களை கழற்றிப் பூட்டுவது, துப்பரவு செய்வது என பயிற்சி செக்கன்களுடன் போராட வைத்தது. பாதுகாப்பு உணர்வு தளிர்விட்டு வளர்ந்தது. துப்பாக்கிக் குழாயிலிருந்து அதிகாரம் பிறக்கிறது என மாவோ சொன்ன கூற்றுடன் சந்ததியார் தலைகாட்டிவிட்டுப் போனார். அதிகாரம் என்பது அரசியல் அதிகாரம் மட்டும்தானா, எனக்கும் தான் என மனித உடலினுள் படுத்து உறங்கிக்கொண்டிருந்த ஒருத்தன் கிளம்ப ஆயத்தமானான். அவன் தனக்கான காலம் தொடங்கியிருப்பதாக உணர்ந்தான். அவனது தகிப்பின் மீது தூறலாய் மழை ஆரம்பித்தது. ஜோன் தனது உடல் முழுமைபெற ஆரம்பித்திருப்பதாக உணர்ந்தான்.

உடற்பயிற்சியை பல நாட்களுக்குப்பின் செய்ய நேர்ந்தது. இரண்டு கிழமையும் பிழிந்து எடுத்தார்கள், பயிற்சியாளர்கள். வேப்பமரத்தில் கயிறுவழி ஏறி மரக்கிளையிலிருந்து கீழே குதிக்க வேண்டும். குதிக்கும்போது குதிக்கால் கீழே முதலில் பதியாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும், முன்பாதம் தரையில் முதலில் பட வேண்டும்... என்றெல்லாம் விளக்கமளித்த பயிற்சி யாளன் மரக் கிளையின் மேல் ஏறி நின்றான். அந்தக் கிளைக்கும் தரைக்கும் சுமார் 5 மீற்றர் உயரம் இருந்தது. கயிற்றில் ஏறி கிளையை அடைந்த பின் பயிற்சியாளன் விசில் ஊதியவுடன் கீழே குதிக்க வேண்டும். இல்லையேல் தள்ளி வீழ்த்திவிடுவதாக எச்சரித்திருந்தான். அதனால் எல்லோரும் தாமாகவே குதித்தனர். பயம் அற்றுப் போனது. சிலர் பயிற்சி இல்லாத நேரங்களில் குதித்து விளையாடினர். ஜோனுக்கும் இது பிடித்திருந்தது.

முகாமை சுற்றி வளைத்து தாக்குதல் தொடுத்தால் எங்கெங்கு நிலையெடுப்பது, எப்படி எதிர்கொள்வது அல்லது தப்பிப் போவது என்ற பயிற்சியும் அளிக்கப்பட்டது. சென்றி முறை கறாராக கடைப்பிடிக்கப்பட்டது. சலிப்பூட்டும் இந்த நேரங் கள் ஜோனுக்கு ஆரம்ப முகாம் காலத்தின் இறந்துபோன நிமிடங்களை உயிர்ப்பிப்பதுபோல் அலுப்படித்தது. இங்கு

மற்றைய முகாமில் செய்வது போன்று 'அலேட் பல்லவி' இருக்க வில்லை. சென்றியின் கண்காணிப்புடனும் அனுமதியுடனும் ஒருசிலர் இரகசியமாக முகாம் எல்லைக்கு வெளியே சென்று, வெளிப்புற பற்றைக்குள் நின்று அசுகை ஏற்படுத்த சுதந்திரம் கொடுக்கப்பட்டிருந்தது. அதை பயிற்சியின் ஓர் அங்கமாக பொறுப்பாளர் கருதியிருந்திருக்கலாம். அதன்போது அலேட் பண்ணி ஒவ்வொருவரும் நிலை எடுக்காது விட்டால் தண்டனைக்கு உள்ளாக நேரிடும். அதனால் எந்நேரமும் விழிப்புடன் அவர்கள் இருக்க நேர்ந்தது. இது சிலருக்கு விளையாட் டாகவும் சிலருக்கு எரிச்சலூட்டுவதாகவும் இருந்தது.

முகாமை அண்டியிருந்த வீதியொன்றை களமாக வைத்து கண்ணிவெடி வைக்கும் முறை பற்றியும், தொடராக வருகிற இராணுவ வாகனங்கள் மீது எப்படி கூட்டாக தாக்குதல் நடத்துவது என்பது பற்றியுமான பயிற்சி நடந்தது. தாக்குதல் நுட்பங்களைவிட மிகக் கடுமையான பயிற்சியை அளிப்பது மட்டுமே பயிற்சியாளர்களுக்குத் தெரிந்திருந்தது.

அந்த வீதியின் இருமருங்கும் பொட்டல் காடாக இருந்தது. சிவப்புப் புழுதியாக கொதித்துக்கொண்டிருக்கும் மணலின் மீது ஓர் உடும்புபோல் 'கிராவலிங்க்' இல் அவர்கள் நகர வேண்டும். அந்த நிலையில் வைத்துக்கொண்டே தாக்குதல் முறை பற்றி விளக்கம் அளித்தார்கள். மணல் படுக்கை கொண்ட அந்த அலை நிலம் கொதித்துக்கொண்டிருந்தது. அந்த பொட்டல் காட்டில் செயற்கையாகச் செய்துவைத்த மரம்போல ஆங்காங்கு கிழிசலாக குடைவிரித்து நின்ற நொச்சி மரமொன்றின் கீழ் ஒரு கிழவி குந்தியிருந்து இதை பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு எதுவுமே புரியவில்லை. அவள் மேயவிட்டிருந்த ஆடு ஒருவேளை புழுதியை மேய்ந்துகூட பழகியிருக்கலாம். அவள் மேய்ப்பாளராக இருந்தாள். ஜோனின் வயிற்றுப் பகுதி புழுதிச் சூட்டில் கொதித்துக் கொண்டிருந்தது. எல்லோரும் வயிற்றுப் பகுதியை தரையிலிருந்து எக்கிவைப்பதும் விடுவிப்பதுமாக சித்திரவதைப்பட்டார்கள். அந்தக் கிழவி எழுந்தாள். "நாசமாய்ப் போவானை இந்தப் புள்ளைங்கள இப்புடி வதைக்கிறியே" என்றபடி மண்ணை வாரிக் கொட்டி பயிற்சியாளரை திட்டினாள். ஜோனுக்கு கிழவியை பிடித்துப் போனது. அவனுக்கு அந்தக் கிழவி ஒரு தாயாகத் தெரிந்தாள். பயிற்சியாளர்கள் கிழவியை சட்டை செய்யவேயில்லை. கிழவி புறுபுறுத்தபடியே மீண்டும்

மரநிழல் கோடுகளில் போய் குந்தியிருந்தாள். சீலைத் தலைப்பால் தலைக்கு நிழல் விழுத்தினாள். இந்தக் கிழவியின் திட்டலில் உடல் பற்றிய எந்த அறிவுமற்ற பயிற்சியாளர்கள், தமது கடுமை யான பயிற்சி பற்றி உள்ளுக்குள் பெருமிதப்பட்டிருத்தலும் கூடும். அன்றிரவே பலருக்கும் வயிற்றுளைவு வந்து அவதிப்பட்டார்கள். வலிகளை இழுத்துவாரிக் கொண்டு சூடாக மஞ்சள் நிறத்தில் ஜோனுக்கு மூத்திரம் வெளியேறியது.

ஆயுதங்களோடு பயிற்சியும், வகுப்புகளுமென கடந்துபோன நாட்களின் இறுதி மூன்று நாட்களும் சுடுதல் பயிற்சி இருந்தது. போராளியாக முழுமைபெறும் பாக்கியம் கிடைக்கும் நாள் என்பதுபோல எல்லோரும் உற்சாக மிகுதியில் இருந்தனர். ஒரு எஸ்.எல்.ஆர், எஸ்.எம்.ஜி, ஏகே-47, பிஸ்ரல் அதோடு சேர்த்து ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் எடுத்த 'சொட் கண்' என்பவை சகிதம் தேவனும் பயிற்சியாளர்களும் இருந்தனர். சுமார் நூற்றியைம்பது மீற்றர் தொலைவில் இலக்கு வட்டம் வைக்கப்பட்டது. அதற்கு பின்புறமாக நீளமாக மண்மேடு இருந்தது. தோழன் ஒருவன் அந்த இடத்துக்கு தற்பாதுகாப்பு எச்சரிக்கைகளையும் காவிக் கொண்டு ஒரு வோக்கி ரோக்கியுடன் போனான். அவனுக்கு ஒரு தொலைநோக்கியும் கொடுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொருவரும் சுடும்போது அந்த இலக்குத் வட்டத்தில் எத்தனை குண்டுகள் எந்தப் பாகத்தில் தாக்கியிருக்கின்றன என்ற விபரத்தை ஒவ்வொரு முறையும் அவன் வோக்கி ரோக்கியில் தெரிவிக்க வேண்டும்.

எஸ்எல்.ஆர் இனை முதலில் லியோ சுட பணிக்கப்பட்டான். 'றெகுலர்' (R) இல் 'செற்' பண்ணிவிட்டு சுட வேண்டும். அவன் சுட்டபோது ஒரு குண்டுக்குப் பதிலாக, குண்டுகள் முழுவதும் படையெடுத்து அலையெனப் பாய்ந்து சென்றன. "ஏன் ஓட்டோ மற்றிக் இலை செற் பண்ணினாய், சொன்னது விளங்கயில்லையா" என தேவன் கத்தினான். துப்பாக்கியை பிடுங்கிப் பார்த்த போது அது R இல்தான் இருந்தது. அமைதியடைந்த தேவன், அருகிலிருந்த மரக்கட்டையில் அதன் பிடியை இரண்டுமூன்று தடவை மெல்ல குத்தினான்.

"அப்ப ஓட்டோமற்றிக்கிலை விட்டால் றெகுலரிலை வேலை செய்யும்" என நக்கலாக சொன்னான் லியோ. உடனே லியோவை அழைத்த தேவன் "இந்தா சுடு. சொன்னதைச் செய்" என்றான்.

தேவனுக்கும் அந்த சந்தேகம் வந்திருக்க வேண்டும். நடப்பதைப் பார்த்து அந்த மாற்றுவழிக்கு உரிமை கொள்ளலாம் அல்லது லியோமீது குறை சொல்லலாம் என்று தேவன் இருப்பதுபோல் அவனது உடல்மொழியை வைத்து ஜோன் புரிந்துகொண்டான். லியோ ஓட்டோமற்றிக்கில் விட்டு சுட்டான். அது றெகுலரில் வேலைசெய்தது. ஒவ்வொரு குண்டாக அது வெளியேறியது.

'சொட் கண்' இனை நேர்த்தியாக தோளில் பொறுத்து வைத்திருக்காததால் துப்பாக்கிப் பிடி (அடிப்பாகம்) ஜோனின் கன்னத்திலறைந்து எச்சரித்தது. அநேகமாக அந்தக் குண்டு அந்தத் தோழர் மறைந்திருந்த மண்முகட்டிலோ அதற்கு மேலாலோ போயிருக்கக் கூடும். தேவன் மீண்டும் அறிவுறுத்தல்களை வழங்கி தொடர்ந்து சுடப் பணித்தான். இலக்கை தன்னால் தாக்க முடியும் என்ற நம்பிக்கையை அந்த பழைய துப்பாக்கி ஜோனுக்குள் ஏற்படுத்தத் தவறவில்லை.

தூர இலக்குகள் மீதான சுடுதல் பயிற்சி முடிந்தபின், அண்மை இலக்குகளுக்கான பயிற்சி நடந்தது. எஸ்எம்ஜி யும் பிஸ்ரலும் பளபளப்பாக புதிதாக இருந்தன. அவை கட்டளைகளுக்கு குழப் படி செய்யவில்லை. கையில் வைத்திருக்கும்போது அதன் இலகுத் தன்மையும் அருகாமை இலக்கும் ஜோனுக்கு புத்துணர்ச்சி கொடுத்தன.

அன்றிரவு வேப்பமர மணல் முற்றத்தில் லியோ இந்த ஓட்டோமற்றிக்-றெகுலர் குழப்படி பற்றி கதை சொன்னான். தான் படித்த பாடசாலையில் தனது விளையாட்டுத்துறை ஆசிரியர் (பி.ரி மாஸ்ரர்) காற்பந்து பயிற்சியின்போது 'கோர்ணர்' (corner) அடித்து காட்டுவாராம். பந்து இலக்குக்கு (கோல் போஸ்ற்) முன்னால் சரியாக போய் விழுந்தால் "இப்பிடித்தான் அடிக்க வேணும்" என்பாராம். பந்து இலக்குக்கு மேலால் அல்லது பின்புறமாகப் போய் விழுந்தால் "இப்பிடித்தான் நீங்கள் அடிக்கிறது" என்பாராம். தேவனும் றெகுலரிலை இயங்க ஓட்டோமற்றிக்கிலை விடச் சொன்னதும் தனக்கு அந்த ஞாபகம் தான் வந்தது என்றான்.

மூன்று நாள் துப்பாக்கி சுடும் பயிற்சி உட்பட இருவாரகால இராணுவப் பயிற்சியை முடித்துக்கொண்டு புத்துணர்ச்சியுடன் புறப்படத் தயாரானார்கள். இப்போதான் தாம் போராளியாக முழுமைபெற்றதாக ஜோன் உட்பட பலரும் உணர்ந்தனர்.

## 22

உற்சாகமாக தொலைத் தொடர்பு முகாம் திரும்பிய அவர்களை தென்னந்தோப்பு தனது சூழலுக்குள் இழுத்துக் கொண்டது. ஒருசில நாட்கள் கடந்திருக்கும். அந்த அதிர்ச்சிச் செய்தி தொலைத் தொடர்பு முகாமுக்குள் புகுந்தது.

அந்தமின்றி தெரிந்த ஆற்றின் சிறிய குறுக்குப் பாலத்தில் நின்றபடி அதை வெறித்துக்கொண்டு நின்றான் ஜோன். "நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம், எமது எதிர்காலம் என்னவாக இருக்கும், எமது இயக்கத்துள் என்ன நடக்கிறது, ஏன் எதையுமே அவர்களுடன் வெளிப்படையாக பேச முடியாதிருக்கிறது, இந்த அந்நியத்தன்மையுடன் தோழமையுணர்வு எப்படி வளர முடியும், பரஸ்பரம் ஒருவரையொருவர் அடிப்படையில் நம்பி வாழுகிற ஒரு சாதாரண சமூக வாழ்வைவிட நாம் என்னதான் மேன்மையாக சாதித்திருக்கிறோம், தனது நலனை இழந்து குடும்பத்துக்கு இழப்புகளை ஏற்படுத்தி தனது உழைப்பை, வாழ்வை ஒரு விடுதலைக்காக அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் ஒருவர் அந்த தியாகத்தின் விளைவுகளின் அசைவியக்கத்தை அதன் திரட்சியை நேரம்சத்தில் கண்டுகளிக்க அவாவுறுவது பிழையா என்ன, அதை இந்தவகை செய்தி வடிவிலா நாம் கேட்க நேரும். நம்ப முடியவில்லை. மர்மக் குகைக்குள் கற்பனையில் வாழ்வது எவளவு காலம் சாத்தியமானது?" ஒன்றோடொன்று பிணைந்து கேள்விகள் ஒரு மூட்டமாக அவனுள் பரவியது. இத்தகைய ஒரு வாழ்வு அவலமானது!

இதே ஆற்றின் திசையில் அவன் நீச்சல் பழகினான். பின்னர் எதிர்நீச்சலுக்கும் முயற்சித்துக் கொண்டிருந்தான். இப்போ அவன் அதன் பாலம் மீது உட்கார்ந்து நிலவின் சிதறல்களை பார்த்துக் கொண்டிருந்தான். அவை ஒழுங்கற்றதாக இருந்தன. ஒளி மங்கியும் ஒளி மீந்தும் வெவ்வேறு துண்டுகளாக அவை சிதறிக் காட்சியளித்தன. இருந்தபோதும் ஒளி முழுவதையும் விழுங்கி பார்வைப் புலத்தை நறுக்கிப் போட்டுவிடும் இருளை இந்த நிலவுத் துண்டுகள் அழித்தொழித்திருந்தன. மீதமான இருள் ஆற்றங்கரை நெடுகலுமான காரைப் பற்றைகளுக்குள்ளும் எருக்கலை கூடாரத்துள்ளும் ஒளிந்திருந்தன. இந்த அமைதியான நீரோட்டத்தின் நரம்புகளை ஒரு அலைக்குஞ்சுபோல் நிலவு அழகு காட்டிக் கொண்டிருந்தது.

"என்ன கடுமையான யோசனையில் இருக்கிறாய் போலை" என்றபடி யோகன் வந்தான். "உனக்கு இந்த நிலாவிலை அதுவும் ஆற்றங்கரையிலை கவிதை வரோணுமே" என்றபடி தனது புன்ன கையை நிலவொளியில் கரைத்துக்கொண்டு நின்றான். எதையும் இலகுவாக அணுகும் அவனது போக்கு ஒருவித அப்பாவித் தனமோ என ஜோன் நினைப்பதுண்டு. அதேநேரம் அவனிடம் குன்றாமலிருந்த கலகலப்பின் ஊற்று அங்குதான் இருப்பதாக ஜோன் கண்டான். அதனால் அதை அவன் இரசித்தான்.

ஒரு குழந்தையின் மென்தூக்கத்தை கலைத்துவிடாதபடி அசுமாத்தம் காட்டாமல் இயங்கும் காற்று தாலாட்டிக் கொண்டிருந்த தென்னங் கீற்றுகளிலிருந்து நிலவொளி கரைந்து வழிந்துகொண்டிருந்தது. அமைதி. பேரமைதி. ஒரு பறவையின் சிறகொலியை கேட்கக்கூடிய தருணம் அது. ஒரு சிறு கல்லை எடுத்து அந்த ஆற்றின் மீது எறிந்தான் ஜோன். என்ன தான் நடக்கிறது? என்ற கேள்விகள் விழுந்து அந்த அமைதியின் மீது திவலைகளாக சிதறிப்பறந்தன. "நீ நம்புறியா இந்த சுழிபுரம் கொலையை கழகம் செய்யயில்லை எண்டு?".

யோகனின் புன்னகை அணைந்துவிட்டிருந்தது.

தளத்துக்கு உமா மகேஸ்வரன் சென்றது பற்றியும், இலங்கை விமானப்படையின் உலங்குவானூர்தி கண்காணிப்புக்கு நடுவில் பெரிசு சுழிபுரம் வடலிகளினூடாக பற்றைகளினூடாக பதுங்கி சென்றது பற்றியும் ஒரு சாகசம் போல வர்ணித்து கதைகள் விட்டார்கள். அவரின் பாதுகாப்புக்கென கந்தசாமி தலைமையில் உளவுப்படையினரும் சென்றதாக சொன்னார்கள். உமா ஏன் அங்கு போனார் என்பதை வெளிப்படையாக சொல்லாமல் விட்டதன் மூலம், தமது வழமையான மர்மப் பாணியை கடைப் பிடித்தார்கள். இது தோழர்கள் மத்தியில் அவரவர் ஊகத்தில் தமக்குள் கதைகளை எழுதி தாமே வாசித்துப் பார்க்கும் நிலைக்கு இட்டுச் சென்றது.

இப்போ தளத்தில் காட்டுத் தீயாக செய்தி பரவிக்கொண்டி ருந்தது. பெரிசு தளத்தில் நின்ற காலத்தில் சுழிபுரத்தில் ஆறு இளைஞர்கள் கொல்லப்பட்ட அந்தச் செய்தி அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. அந்த இளைஞர்கள் அறுவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரச்சார எழுத்துப் பிரதிகளை மதில்களில் ஒட்டிக் கொண்டிருந்தபோது, கழகத்தின் உளவுப்படையால்

கைதுசெய்யப்பட்டார்கள் எனவும், அவர்களது கோரமான படு கொலைக்கு கழகம்தான் பொறுப்பு எனவும் விடுதலைப் புலிகள் அறிவித்துவிட்டார்கள். ஆனால் அதை பின்தளத்தில் மட்டுமன்றி தளத்திலும் அரசியல் பிரிவு மறுப்பறிக்கை விட்டு 'ஞாயம்' பேசியது. கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்ட அந்த இளைஞர் களின் உடலை புதைகுழியிலிருந்து தாம் கண்டுபிடித்தபோது அவர்களின் ஆண்குறிப் பகுதி வெட்டப்பட்டு வாயில் திணிக் கப்பட்டிருந்ததாகவும் விடுதலைப் புலிகள் பகிரங்கமாக அறிவித் திருந்தனர்.

"இந்தக் கொலையை இவங்கள்தான் செய்திருப்பாங்கள். இப்ப மறுக்கிறாங்கள்" என்றான் யோகன்.

"எங்களைப் போலத்தானே அவங்களும் போராடப் போயிருப் பாங்கள். சகிக்க முடியுதில்லை" என்றான் ஜோன்.

கொஞ்சம் நின்று கிரகித்த யோகன் தனது வழமையான பாணியில் பேசத் தொடங்கினான். "புலிகள் புளொட்டுக்கு எதிரான பிரச்சாரத்துக்காக இதை பயன்படுத்துறாங்கள் எண்டதை யும் புறக்கணிக்கேலாது. இவங்கள் சொல்லிற மாதிரி பெரிசை உளவு பார்க்க அந்தப் பெடியளை புலிகள் அனுப்பியிருக்க மாட்டாங்கள் எண்டும் சொல்லேலாது" என்றான்.

யோகனிடம் ஒரு பண்பு இருக்கிறது. ஒத்த கருத்துடன் இருந்தா லும் விவாதம் அல்லது கருத்தோட்டம் ஒரே திசையில் செல்லும் சந்தர்ப்பங்களில் எதிர்மறுப்பாக தர்க்கிக்க தொடங்கிவிடுவான். அதை ஜோன் ஏற்கனவே அவதானித்திருந்தான். இலகுவாக ஒரே திசையில் சென்று முடிவுக்கு வருவதைவிட வேறு சாத்தியப்பாடு களை கருத்திலெடுத்து சிந்திக்கவைக்க அவன் கடைப்பிடிக்கும் ஓர் உத்தி இது. ஜோனுக்கு இது வெகுவாகப் பிடித்திருந்தது.

"அதுக்கும் சாத்தியம் இல்லாமலில்லை. அப்படி இருந்தால்கூட அந்தப் பெடியள் வெறும் அம்புதானே. அவங்களை சிறைப் பிடித்து விட்டு பிறகு விடுவித்திருக்கலாமே. நாம் மட்டுமே போராடுறம் மற்றவங்கள் எதிரிகள் அல்லது துரோகிகள் எண்ட மனப்பான்மை தானே இப்பிடி இலகுவா அழித்தொழிப்பை செய்ய வைக்குது. தமிழீழத்தை நாங்கதான் பெற்றுக் கொடுக்கப் போறம் எண்டதுக்கு என்ன உத்தரவாதம் இருக்கு. இந்த கொலைத் தீர்ப்பு பிழையெண்டு உணருற காலமொண்டு

வருமெண்டால் மன்னிப்பு கேட்கிறதாலை அந்த உயிர்களை திரும்பக் குடுக்க முடியுமா என்ன'' என்றான் ஜோன்.

''நீ சொல்லிறது சரியாகத்தான் இருக்கு. நடைமுறையிலை இதெல்லாம் சாத்தியமா. இராணுவம் எண்டு வருகிறபோது இந்தப் பிரச்சினைகள் எழத்தான் செய்யும். இவங்கள் செய்தது சரி எண்டது என்ரை வாதமில்லை. ஆனால் ஆயுதம் தாங்கிய குழுதானே நாங்கள். முந்திக்கொள்பவர்தான் பிழைக்கலாம் எண்ட ஒரு உள்விதி இதுக்கை இயங்கும். இல்லையா. அரசியல் மனோபாவத்திலை, தோழமை எண்டு நாங்க வரையறுக்கயிக்கை, அது சகமனிதரின்ரை அந்நியோன்யத்தை கோருது. சக மனிதரிலை தன்னைக் காணக் கோருது. இராணுவ மனோபாவத்திலை, தற்பாதுகாப்பு எண்டு வரயிக்கை, அது சக மனிதரை சந்தேகிக்கக் கோருது. அவங்களிலை தன்ரை எதிரியைக் காணக் கோருது'' என்றான் யோகன்.

ஜோன் சல்லிக் கற்களை ஒவ்வொன்றாக ஆற்றின் அமைதிமீது வீசிக்கொண்டிருந்தான்.

''எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது என்னெண்டால், தளத்திலை அரசியல் பிரிவுக்காரர் இதை மறுத்து அறிக்கை விட்டதுதான்" என்றான் ஜோன்.

''அதிர்ச்சிதான் காரணமாக இருக்கும் எண்டு நினைக்கிறன். அதுவும்கூட இரண்டு நிலைகளிலை சாத்தியமாக இருந்திருக்கும். ஒண்டு பின்தளத்தின்ரை போக்கு அவங்களுக்கு தெரியாமலிருக்கு. அதாலை கழகம் கொலை செய்திருக்காது எண்ட நம்பிக்கை இருந்திருக்கலாம். இரண்டாவது என்னெண்டால் உண்மை எண்டு தெரிஞ்சால் தங்கடை இதுநாள்வரையான உழைப்பிலை கழகம் பற்றி சனம் வைச்சிருக்கிற மதிப்பீட்டை இது ஒரு வெடிகுண்டைப் போலை நாசமாக்கிப் போடும் எண்ட அச்சம் காரணமாக இருக்கலாம். இப்ப மறுத்து அறிக்கை விடுவம். பிறகு கழகத்துக்கை போராடுவம். இப்பிடி தவறு இனி நேராமல் பார்த்துக் கொள்ளுவம் எண்டும் கூட தங்கடை அரசியல் வழியிலை யோசிச்சிருக்கலாம்'' என்றான் யோகன்.

இது சரியெண்டு நீ நினைக்கிறியா. உண்மை வெளியிலை தெரியவரயிக்கை இது சனத்தின்ரை மதிப்பீட்டிலை இன்னும் மோசமான விளைவையெல்லோ ஏற்படுத்தும்'' என்ற ஜோன்,

"மதத்தின்ரை பெயராலை நடத்துற அநியாயங்களை மதத்தைக் காப்பாத்த நியாயப் படுத்துறாங்கள். பண்பாட்டின்ரை பெயராலை நடத்திற ஒடுக்குமுறையளை பண்பாட்டைக் காப்பாத்த நியாயப் படுத்துறாங்கள். பாடசாலைக்குள்ளை காயடிக்கப்படுற சமூக சிந்தனைகளை கல்வியின்ரை பெயராலை நியாயப்படுத்துறாங்கள். தேசியத்தின்ரை பெயராலை செய்யிற எல்லா அராஜகங்களையும் இனத்தின்ரை பெயராலை நியாயப்படுத்துறாங்கள். இந்தச் சமூகத்துக்காலை வந்தனாங்கள் அதைத்தானே செய்யிறம். அதுக்கை நமக்கெல்லாம் போராளி என்ற லேபல் வேறை. முதலிலை ரத்தமும் சதையும் கொண்ட மனிசரா இருக்க வேணும்" என்று கொட்டித் தீர்த்தான்.

"இவங்க என்னதான் ஞாயம் பேசினாலும் இந்தக் கொலையை மன்னிக்கவே முடியாது" என்று தீர்த்தான் யோகன்.

"கடைசியிலை நாங்கள் பரதேசியளா அல்லது சாமியாப் போக வேண்டியதுதானோ தெரியாது" என கூவி தனது புன்னகையை திரும்ப அழைத்துக்கொண்டான் அவன்.

ஜோனின் கடுப்பை அவதானித்த யோகன் தனது வழமையான பாணியில் சிறகுவிரித்தான். ஜோனை இலேசாக்க முயற்சித்தான்.

"மாலு மாலு மாலு சுராங்கனிகா மாலு
சுராங்கனிகா மாலு கெனவா"

என்று யோகன் பாடி உரசத் தொடங்கினான். அவன் மாலு என்று உச்சரித்த இடமெல்லாம் மாலி எனக் கேட்டது ஜோனுக்கு. ஒருவேளை அவன் அப்படியேதான் பாடியிருக்கவும் கூடும்.

"என்னவாம் உன்ரை ஆள்" என சுவாரசியமாக மடைமாற்ற எத்தனித்தான் யோகன். ஆனால் ஜோனுக்கு நிலவு இன்று வேறு அர்த்தத்தை வழங்கிக்கொண்டிருந்தது. அவன் புன்னகையை கோபத்தால் கொன்று போட்டிருந்தான். சிறகுகளை ஒடுக்கியபடி உட்கார்ந்திருந்தான்.

## 23

பெண்கள் முகாமுக்கு வகுப்பு எடுப்பதற்காக ஜோன் சென்றிருந்தான். வகுப்புக்கான முற்தயாரிப்புகளை செய்வதில் அவனுக்கு நாட்டம் குறைந்துபோயிருந்தது. ஏனோதானோ என அவன் வகுப்பை முடித்துவிட்டு வெளியே வரும்போது மாலியும்

இதரா வும் எழுந்து பின்னால் வந்தார்கள். சுடுதல் பயிற்சி முகாம் பற்றி அவர்கள் அறிய ஆவல் கொண்டிருந்தார்கள். அடுத்து அவர்கள் அங்கு பயிற்சிக்குப் போக வேண்டும். அவர்களை உற்சாகப்படுத்தி அனுப்பினான் ஜோன்.

அவர்களும் பயிற்சிக்குப் போய்விட்டார்கள். ஜோனுக்கு வகுப்பெடுக்கும் சிரமம் இல்லாமலிருந்தது. ஆனாலும் ஏதோவொன்றை இழந்துபட்டிருப்பதான உணர்வு மெல்லிய தாய் அவனுக்குள் எழுந்தது. அதையும் மீறி கழகம் குறித்தான நம்பிக்கையீனமும், ஒருவித உட்பயமும் தனது இந்த வாழ்க்கைக் கான அர்த்தத்தை இழந்து கொண்டிருப்பதான உணர்வும் ஒளிமங்கிய இதயத்தின் ஓர் மூலையில் குந்தியிருந்ததை மகிழ்ச்சி யின்றி பார்த்தான். அவன் எங்கிருந்தாவது நம்பிக்கையை கண்ட டைய ஏங்கினான். அவனது இருத்தல் அவனுக்கு முக்கியமான தாகப் பட்டது. சிக்கிரி போர்ட் பக்கம் அதிக நேரத்தை செலவ ழிக்கத் தொடங்கினான்.

சந்ததியாரின் நிலை பற்றிய சந்தேகம் ஜோனிடம் முள் ளைத்தது போல இருந்தது. எர்னஸ்ரோவும் ஜோனும் முகாமுக்குத் தேவையான பொருட்களை வாகனத்தில் ஏற்றிவருகின்ற சோழனுடன் இரகசியமாக கதைத்தார்கள். இழையின் தலைப்பை இழுத்தபோது அது சிக்குப்பட்டிருந்தது தெரியவந்தது. அளவாக பேசுகிற, அதேநேரம் காதில் தகவல்களைப் போட்டுவைக்கிற எச்சரிக்கைத் தன்மையும் பகிர்தல் உணர்வும் சோழனிடம் எப்போதுமே இருக்கும். படிப்படியாக முகாமுக்குள் இந்த இழையின் சிக்குகளை பலர் அவிழ்க்கத் தொடங்குமளவுக்கு தகவல்கள் தொலைத் தொடர்பு செய்திகளினூடும் கசிந்து வரத் தொடங்கின. முக்கிய தோழர்களான சந்ததியார், டேவிட் ஐயா இருவரும் ஒதுங்கியிருப்பதாகவும் கழகத்தோடு தொடர்புகள் எதுவுமில்லை எனவும் அந்த சிக்கு அவிழ்ந்திருந்தது. பின்னரான காலத்தில் சந்ததியார் உளவுப்படையால் கொல்லப்பட்ட செய்தியை நீங்கள் அறிந்திருக்கக் கூடும்..

முகாம்களில் இராணுவ பயிற்சியின்போது தொடர்ந்து பயிற்சியெடுக்க முடியாமல் போனவர்கள், விபத்துகளுக்கு உள்ளானவர்கள், அல்லது உளவுப்படையின் சித்திரவதைக்கு உள்ளாகி உருக்குலைக்கப்பட்டு பின் தவிர்க்க முடியாமல் விடுவிக்கப்பட்டவர்கள் எல்லோரையும் சேர்த்து அரசியல் வகுப்புக்கான முகாம் (H முகாம்) ஒன்றை உருவாக்கியிருந்தார்கள்.

அந்த முகாமுக்கு தோழர் தங்கராசா பொறுப்பாக நியமிக்கப் பட்டிருந்தார். இடதுசாரிய சிந்தனை கொண்டவராகவும் மலையகத்தில் தொழிற்சங்கவாதியாகவும் இருந்த ஒரு எளிமை யான தோழர் அவர். இயக்கத்துள் நிலவும் பிழையான போக்கு களையும் அதை சரிசெய்வதற்கான ஆலோசனைகளையும் தமக்குள் விவாதித்து, அறிக்கை வடிவில் தயாரித்து, எல்லோரும் கையெழுத்திட்டு தலைமைக்கு அனுப்பியிருந்தார்கள். சந்ததி யாரின் அரசியல் பிசாசு இந்த முகாமுக்குள் உலவுவதாக உளவுப்படை கனவு கண்டு துடிதுடித்து எழுந்தது. அமைப்பை குழப்ப முனைவதாக அவர்கள் மேல் குற்றம் சாட்டப்பட்டு, உளவுப்படையால் எதிரி மீதான ஒரு தாக்குதல் போல் அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டது. மிக மோசமாக அவர்கள் தாக்கப் பட்டு விசாரிக்கப்பட்டார்கள். அவர்களுக்கான புதைகுழிகளை அவர்களைக் கொண்டே வெட்டவைத்து அந்தத் தோழர்களை உளவியல் சித்திரவதை செய்தார்கள். சில நாட்களாக இந்த விகாரமான நாடகத்தை அரங்கேற்றி பின் அதிலிருந்து விடுவித்தார்கள், உளவுப்படையினர். சில தோழர்கள் கொல்லப் பட்டனர். தங்கராசா தப்பியோடியதாக கதை வந்தது. அவருக்கு என்ன நடந்தது என தெரியாமலிருந்தது. ஜோனுக்கு கஸ்ரோ நினைவில் வந்தான்.

இப்போ தொலைத் தொடர்பு முகாம் கலகலப்பை இழக்கத் தொடங்கியிருந்தது. கந்தசாமியின் வருகை கொஞ்சம் அதிகரித்தி ருந்தது. முகாமில் பெரும்பாலானோரும் தாடி வளர்த்திருந் தார்கள். அநேகமும் சரம் உடுத்தியிருந்தார்கள். இந்த முகாம் தோழர்களுக்கிடையில் பரஸ்பரம் திறந்த உரையாடலும் விவாதங் களும் எந்த புறநிலை அழுத்தமுமின்றி சுதந்திரமாக நடைபெற்று வந்திருந்தது. அதனால் மிக ஒற்றுமையாக இருந்தார்கள். ஒருவரையொருவர் அண்ணளவாகவேனும் சரியாக மதிப்பிட்டு மிருந்தனர். இந் நிலைமை இராணுவப் பயிற்சி முகாம்களில் ஏற்படுவதற்கான வாய்ப்பும் சூழலும் அருகியே இருந்தன.

எல்லா முகாம்களிலும் ஒற்றர்களை வைத்திருந்தது போல் இங்கும் கந்தசாமி தனது ஊரைச் சேர்ந்த சக தோழரை ஒற்றராக நியமித்துவிட்டான். அவன் முதலில் இதை தனது நெருங்கிய தோழர்களிடம் சொல்லி தான் யாரையும் உளவுபார்க்கப் போவதில்லை என்றான். இது பின்னர் படிப்படி யாக எல்லோருக்கும் தெரிந்து போனது. ஒற்றன் என்ற வார்த்தை

கேலிக்குரியதாக அந்த முகாமில் திரிந்தது. என்றபோதும் அது சிறிய எச்சரிக்கை உணர்வை எல்லாத் தோழர்களிடமும் தோற்று விக்கத்தான் செய்தது.

“தாடி வளர்ப்பவன், (எப்போதும்) சரம் கட்டுபவன், அரசியல் பேசுபவன் எல்லாம் சந்ததியின் ஆட்கள்” என்ற இலகுவான சூத்திரத்தை கந்தசாமி தனது ‘ஒற்றனுக்கு’ வழங்கியதால் எல்லோரும் முகச்சவரம் செய்துவிட்டிருந்தனர். தேடிப் பிடித்து அநேகமாக எல்லோருமே நீளக்காற்சட்டையை பெற்று அணியத் தொடங்கினர். பகலில் சரம் கட்டுவதும், வெளிப்படையாக அரசியல் பேசுவதும் படிப்படியாக குறைந்துபோனது. பின் அரசியல் பேசுவது என்பது மிக நம்பிக்கையானவர்களுக்கு இடையிலானதாக சுருங்கிப் போனது. இந்த உளவுப்படை கண்காணிப்பு முறை பெண்கள் முகாமுக்குள்ளும் நீண்டது. அங்கு அது பிளவை ஏற்படுத்தியது. சுதந்திரமாக கருத்துரைக்கும் வெளிக்கு வேலி போட்டது.

இயக்கத்துள் என்ன நடக்கிறது என்பது எல்லோரினதும் கேள்விகளாக மனதில் பிசைந்துகொண்டிருந்தன. அது ஜோனின் புத்துணர்ச்சியை கொன்று போட்டது. ஒரு மர்மக் குகைபோல கழகம் ஆகிக்கொண்டிருந்தது. தொலைத் தொடர்பு முகாமில் பலரையும் படிப்படியாக பயம் கவ்வியது. உளவியல் ரீதியில் பாதிப்பு ஏற்படுத்தியது. இப்படியாய் சிதைந்துகொண்டிருந்த வர்களில் ஜோனும் ஒருவன். ஒரு கட்டத்தில் போராளியாகவும் இன்னொரு கட்டத்தில் பலிக்கடாவாகவும் மாறி மாறி உணரும் நிலை தொடர்ந்தது.

அன்று சிக்றிபோர்ட் கொட்டிலினுள் ஜோனுக்கும் எர்னஸ்ரோ வுக்கும் இடையில் நடந்த உரையாடல் விவாதமாக மாறியது. யோகனும் அங்கு இருந்தான்.

“நீ நினைக்கிறாயா கழகம் தமிழீழம் எடுத்துத் தரும் எண்டு?” கேட்டான் எர்னஸ்ரோ.

“நீ நம்பிக்கையீனமா பேசுறாய். முதலிலை நாங்கள் அமைப் பிலை நம்பிக்கை வைக்கோணும். இவளவு தோழர்களின்ரை உழைப்பும் தியாகமும் வீணாகப் போகுமெண்டா நினைக் கிறாய்?” என்றான் ஜோன்.

அவநம்பிக்கைளின் சூழலை அவன் வெறுத்தான். அதனால் தர்க்கங்களோடு எதிரில் நின்றான். அவன் தனது கருத்தை

இன்னொருவர் எதிரொலிப்பதைக்கூட எதிர்க்க தயாராகவே இருந்தான். அவனுக்கு நம்பிக்கை தேவைப்பட்டது. நிம்மதி தேவைப்பட்டது. ஒளியின் ஒரு கீற்றைக் கிழித்தாவது யாரும் காட்டமாட்டார்களா என்ற ஏக்கம் அவனுள் முட்டிமோதிக் கொண்டிருந்தது.

“நேற்றைய கூட்டத்துக்கு வந்தாங்கள்தானே பார்த்தியா. கள்ளர் போலை (திருடர் போல்) இருக்கிறாங்கள். போராளிகளைப் போல கலகலப்பாக இருக்கிறாங்களா அல்லது தோழமையாகத் தன்னும் கதைக்கிறாங்களா. தங்களுக்கும் சுழிபுரம் கொலைக்கும் சம்பந்தமில்லை. புலிகளின்ரை அவதூறுப் பிரச்சாரம் எண்டு நிறுவுற வேலையிலைதான் குறியாக இருந்தாங்கள்.” என தடாலடியாக இறங்கினான் எர்னஸ்ரோ.

“பி காம்ப் இலை பார்த்தாய்தானே... மொட்டை மூர்த்தி கூட்டம் என்ன அட்டகாசம் பண்ணுதெண்டு. எல்லாரும் பயத்திலை தானே இருக்கிறாங்கள். வீட்டை போகோணுமெண்டு எத்தினை பேர் அழுகிறாங்கள். மூண்டு மாதம் பயிற்சி எண்டு கூட்டி வந்து வருசக் கணக்கா வைச்சிருக்கிறாங்கள். குடும்ப சென்ரிமென்ற் அவஸ்தையிலை அல்லது குடும்ப நிலையை எண்ணி களவாகத் தப்பியோட வெளிக்கிட்ட தோழர்களை யெல்லாம் பிடிச்சு சித்திரவதை செய்து தள்ளுறான் மூர்த்தி. இந்த முட்டாளுகளுக்கெல்லாம் அதிகாரத்தை குடுத்து வைச்சிருக்கிறாங்கள். உளவியல் ரீதியலை கூட தோழர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறாங்கள். அமைப்பு உள்ளுக்கை சிதைஞ்சு கொண்டிருக்கு” என்று மூச்சுவிடாமல் கொட்டித் தீர்த்தான் யோகன். வழமையான பாணியில் அவன் அன்று பேசவில்லை. அவனது சொற்கள் கொதித்துக் கொண்டிருந்தன.

“நீ சொல்லிறதிலை உண்மை இல்லாமலில்லை. ஆனால் இப் பிடியான பெரிய இயக்கங்களிலை நடைமுறைப் பிரச்சினை யளும் இருக்கத்தான் செய்யும். அதை திருத்திக் கொண்டு முன்னேற வேண்டியதுதான். காந்தன், கண்ணன் போன்ற தோழர்களைக் காண அந்த நம்பிக்கை சாகாமல் இருக்குது” என்றான் ஜோன். சரிந்துவிடாமல் நம்பிக்கைகளை தாங்கிப் பிடிக்க அவன் முயற்சித்தான்.

“சரி. பஸ்ஸிலை வந்துபோன பெரிசுக்கு இப்ப இந்த பாதுகாப்பு எல்லாம் எதுக்கு. எங்கை சந்ததியார். அடிக்கடி வந்து போனவர் இப்ப எங்கையெண்டே தெரியாமல் இருக்கு.”

“அதுதான் ஏதோ உள்முரண்பாடு. பெரிசு தீர்த்துவைக்கும் எண்டு பதி சொன்னவர்தானே” என்றான் ஜோன்.

“சொந்தத் தோழர்களையும் சக இயக்கப் போராளியளையும் கொலை செய்துகொண்டு எந்த மக்களுக்காகப் போராடப் போறம். குறைந்தபட்சம் அதை ஏற்றுக்கொள்ளிறதுக்கோ, அதற்கான காரணத்தை பகிரங்கமா முன்வைக்கிறதுக்கோ, சுயவிமர்சனம் செய்யிறதுக்கோ, திருந்திக்கொள்ளிற முனைப்பை காட்டுறதுக்கோ வக்கில்லாத இயக்கம் தனக்காக போராடுதா அல்லது மக்களுக்காக போராடுதா” என்று கடுப்பாக பேசினான் எர்னஸ்ரோ.

“தமிழீழம் எடுத்துக் கிழிப்பாங்கள். காத்திருந்து பார்” என்று அறைந்து முடித்தான் யோகன்.

நம்பிக்கையின் எல்லைக்கோட்டை எட்டிப் பிடிக்க முயற்சித்த ஜோனின் முயற்சி அவனை ஏமாற்றிக்கொண்டிருந்தது. ஆனாலும் அவன் அதை விடுவதாயில்லை. அதை விட்டால் அவன் சிதைந்து போய் விடுவான்.

தொலைத் தொடர்பு முகாமில் அடுத்த குழுவுக்கான பயிற்சிக்கு புதிய தோழர்களை கொண்டுவர ஏற்பாடுகள் நடந்தன. பயிற்சி முடித்தவர்களை படிப்படியாக ஊருக்கு அனுப்பும் வேலையில் பதி இருந்தார். இக் காலப் பகுதியில் தோழர் காந்தன் தொலைத் தொடர்பு முகாமுக்கு வந்தார். எங்களுக்கு உங்கள் உதவி தேவைப் படுகிறது என அவர் சொன்னபோது ஜோன் அதிர்ந்து போய்விட் டான். அதை கவனித்த காந்தன் “பெரிசா ஒண்டுமில்லை. புதிய முகாமொன்றில் ஒரு மொடல் செய்ய வேணும். அது முடிய நீங்கள் இங்கை திரும்பி வரலாம். நீங்கள் ஆக்கிரெக்ற் படிச்சதாலை உங்களை நான் சிபாரிசு செய்தன்” என்றார். காந்தன் மீதிருந்த நம்பிக்கையில் அவன் அதற்கு ஒத்துக்கொண்டான்.

## 24

ஒரத்தநாடு அலுவலகத்திலிருந்து புறப்பட இருந்த லொறி யினுள் ஜோனும் ஏறினான். அன்றும் ஓர் இரவுப் பயணம். வண்டி கீழைச்சேவல்பட்டி என்ற இடத்திற்கு வந்தது. கவனிப்பின் போதாமையை பிரதிபலித்துக் கொண்டிருந்த அந்த கோவிலின் பின் பகுதியில் வாகனம் நின்றது. அந்த மாடிக் கட்டடம் இரவுப்

பொழுதில் பொலிவிழந்து, ஒரு இராட்சத உருவமாய்த் தெரிந்தது. சூழவும் பற்றைகள். ஆனாலும் கூரை இருந்தது. உள் நுழையும் பிரதான வாயிலை பற்றைகள் மறித்துக்கொண்டிருந்தன. கொண்டுவந்த நீளமான கத்தியால் இருவர் வெட்டியெறிந்தனர். ரோர்ச் வெளிச்சத்தில் ஜோனும் மற்றவர்களைப் பின்தொடர்ந்து கடப்புக்குள்ளால் உள்ளே சென்றான். ஒழுங்கமைக்கப்பட்ட முகாமாக இருக்கும் என இயல்பாய் அவன் கொண்டிருந்த கற்பனையை அச் சூழல் குலைத்து விட்டிருந்தது. அதற்குள் இருள் புகுந்துகொண்டது.

ஒரு நாற்சார வீடமைப்பைக்கொண்ட அந்த கட்டடத்தின் நாலுபக்க திண்ணைகளும் கைவிடப்பட்ட கோலத்தில் இருந்தன. அவைகளை பருமட்டாக துப்பரவு செய்துவிட்டு, மேல்மாடியை படுக்கைக்கான இடமாக தற்காலிகமாக தேர்வு செய்தனர். நான்கைந்து மின்குமிழ்கள் எரிந்தன. பூச்சிகளின் இரைச்சல் அந்த இடத்தின் இருள்விரி கோலத்து பேரிசையாக இசைத்தது. கொண்டுவந்த பாய்களுடனும் உடமைகளுடனும் மேல்மாடியில் இடம்பிடித்துக் கொண்டனர். மின்குமிழ் வெளிச்சத்திலேயே உறங்கிப் போயினர்.

நீண்ட காலத்துக்குப் பிறகு விசில் ஜோனை உறக்கத்திலிருந்து எழுப்பியது. எல்லோரும் ஒன்று கூடினர். ஜோனுக்கு ஏதோவொரு மனவுணர்வு தட்டுப்பட்டுக்கொண்டே இருந்தது. படபடப்புடன் பார்வையால் எதையோ தேடினான். முகங்களுக்கு இடையில் புதைந்து போய்க் கிடந்த இருள் காலையில் கரைந்தழிய, ஜோன் கரனைக் கண்டான். கரனுக்கு ஜோனைக் கண்டது இன்ப அதிர்ச்சியாக இருந்தது. "நான் நினைச்சன்" என்றான் ஜோன். "நான் எதிர்பார்க்கயில்லை" என்றான் கரன். வேறெவரையும் ஜோன் அறிந்திருக்கவில்லை. கைவிடப்பட்ட இந்த கட்டடத்தின் கோலத்தை புதுப்பிக்க வேண்டிய கட்டளைகள் சேகரிடமிருந்து வந்தன. சேகர்தான் இந்த முகாமுக்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். இவர் முன்பு தேனீ முகாமுக்கு (மதுரை) பொறுப்பாக இருந்தவர். தனது அணுகுமுறைகள் மூலம் முகாம் தோழர்களது ஆதர்சமான தோழராகவும், விசுவாசிக்கப் படுபவராகவும் இருந்தார். முதல் வேலையாக அந்த கட்டடத்தின் உட்புறம் வெளிப்புறம் சுற்றுப்புறம் எல்லாம் துலக்கமாகத் தொடங்கின. இளைஞர் பட்டாளம் தமது முகாமை நிர்மாணித்துக் கொண்டிருந்தது. குப்பை மேடு எரிந்துகொண்டிருந்தது. பச்சை மர

சுள்ளிகள் வெடிக்கும் ஓசை நரம்பில் துமித்தன. பச்சிலைகளின் புகைமணமேறிய காற்று சுவாசத்தில் வாசம் பரப்பியது. நில வெடிப்புகள் சீமெந்தால் நிரப்பப்பட்டது. உட்புறச் சுவர்கள் உரசிக் கழுவப்பட்டு பின் வெள்ளையடிக்கப்பட்டது. இப்படி பொலிவாக இந்த கட்டடம் இவளவு விரைவில் துலங்குமென ஜோன் நினைத்திருக்கவில்லை.

சேகருடன் ஜோனும் சதாவும் மேல்மாடியில் தங்கினர். மேல்மாடி இந்த கட்டடத்தின் முன் பகுதியில் மட்டும் இருந்தது. அது கோவிலை பார்த்துக்கொண்டிருக்கும் திசையில் இருந்தது. பயிற்சிக்கான போராளிகள் எல்லோரும் கீழ்மாடியோடு இணைந்த நாற்சார வீட்டின் திண்ணைக்கு இடம்மாற்றப்பட்டனர். இனி அதுதான் அவர்களின் இருப்பிடம். அவர்கள் தத்தமது இடத்தை எப்படி நேர்த்தியாக வைத்திருக்க வேண்டும் என சேகர் விளக்கமளித்தார். பின்பற்றப்பட வேண்டிய விதிகள் அறிவுறுத்தப்பட்டன. பாயின் தலைமாட்டில் அவர்களது உடைகள் மடிப்பு பிசகாமல் அடுக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்களது காலணியும் அருகில் இணைபிரியாமல் முன்பின் விலகாமல் நேராக இருக்க வேண்டும். சாப்பிடுகிற தட்டின் மத்தியில் டம்ளர் தலைகீழாகக் கவிழ்த்து நேர்த்தியாக வைக்கப்பட்டிருக்க வேண்டும். காலையில் அவரவரது புற்பாய்கள் ஒழுங்காக சுருட்டி வைக்கப்பட வேண்டும். அது சுவருக்கு சமாந்தரமாக, சுவருக்கு அருகாமையில் இருக்க வேண்டும். மாலையில் இந்தப் பாய் சுவருக்கு செங்குத்தாக விரித்தபடி இருக்க வேண்டும் என்றெல்லாம் ஒழுங்கு விதிகள் உருவாகின இந்த ஒழுங்கு விதிகள் எதுவும் மேல்மாடியில் சகவாசம் செய்யும் ஜோனுக்கோ சதாவுக்கோ உரியதல்ல.

காலையில் உடற்பயிற்சிக்கான அறிவிப்பை காவிவரும் விசில் ஒலியுடனும், மாலையில் வகுப்பிலிருந்து பொழுதை விடுவித்து போராளிகளுக்கு கையளிக்கிற விசில் ஒலியுடனும் சேகர் ஓர் இராணுவத் திமிரான நடையுடன் வருவார். நாற்சார திண்ணைப் புறங்களில் போராளிகள் இராணுவ முறுக்குடன் சிலையாக நிற்க வேண்டும். உடல்மொழியை இராணுவ நடைமுறை கையேற்றிருக்கும் அந்தப் பொழுதில், சேகர் முன்னால் வருகிற வேளை அவர்கள் சல்யூட் அடித்துக்கொள்வர். அவரும் நேர்த்தியாக சல்யூட் செய்து ஏற்றுக்கொள்வார். அவர்கள் கடைக்கண்ணால் பார்த்தால் கூட தண்டனை வழங்கப்படும்.

இடையில் அவர்களுக்கான மூலோபாய, தந்திரோபாய வகுப்புகளின்போது அவர் ஓர் ஆசிரியராக இருப்பார். வகுப்புகள் முடிய அந்நியோன்யமாக ஒரு தோழராக பழகுவார். மார்க்சிசம், சோசலிசம் குறித்து, புரட்சி குறித்து, உலகப் போர்கள் குறித்து எல்லாம் உரையாடுவார். இந்திய சாதிய அமைப்புமுறைகள் பற்றி உரையாடுவார். இலங்கை சாதிய அமைப்புமுறை பற்றி கேட்டறிவார். இந்த பன்முக அறிவாலும் பழகும் தன்மையாலும் தோழர்களிடம் அதிக மதிப்பையும் பிரமிப்பையும்கூட அவர் பெற்றிருந்தார்.

ஒவ்வொரு மாலை ஓய்வு நேரத்தின் பின்னும், முழு ஓய்வு நாளான ஞாயிற்றுக் கிழமைகளிலும் ஜோன் இந்தப் போராளி களுடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது. வகுப்பு நேரங்களில் மட்டும் போராளிகள் மேல்மாடிக்கு வர அனுமதிக்கப்பட்டி ருந்தனர். இந்தப் போராளிகள் பலஸ்தீன பயிற்சி எடுத்தவர் களையும், டில்லியில் அல்லது உத்தரப் பிரதேசத்தில் இந்திய இராணுவத்திடம் பயிற்சி எடுத்த மிகத் திறமையானவர்களையும், கழக பயிற்சி முகாம்களில் கமாண்டோ பயிற்சியில் திறமை வாய்ந்தவர்களையும் உள்ளடக்கிய குழுவாக இருந்தார்கள். இதுதான் இந்த முகாமில் பயிற்சி எடுக்கப்போகும் முதலாவது குழு. இந்த முகாம் “எல் முகாம்” (L) என அழைக்கப்பட்டது. கழகத்தின் மூலோபாய, தந்திரோபாய முகாம் அது. அதுவே உயர் இரகசியம் பேணும் முகாமாக, போராட்டத்தின் இராணுவத் தூண்களாக ஆக்கப்படுதற்கான பயிற்சியில் ஈடுபடப் போகிறது. சேகருக்கு மேல் மாடியில் ஓர் அலுவலக அறையும், அதனோடு சேர்த்து இராணுவ ரீதியான ஆங்கில நூல்களைக் கொண்ட சிறு நூலகமும் இருந்தது. அது அவருக்கு மட்டுமானதாக இருந்தது.

மேல்மாடி ஒரு பெரிய மண்டபம் போல இருந்தது. ஓர் நிலக் கிழார் வாழ்காலத்து பவுசு வேலைப்பாடுகளுடனான தூண்களும், திறந்திருக்கும் யன்னல் வெளிகளும், பழசாகிப்போய் கருமை ஆங்காங்கு படர்ந்த சுவர்களும், சேதமுறாத அழுத்தமாக இப்போ தும் காணப்படும் தரையும் மனவெளியை அகல விரித்துவிடக் கூடியதாக இருந்தது. முன்புறத்தே யன்னலை உரசியபடி ஓங்கி வளர்ந்திருந்த வேப்பமரமும் பின்புறத்தே சோலையாகிப் போய் விட்டிருந்த புளிய மரமும் குளிர்மையை பெய்துகொண்டிருந்தன. கைவிடப்பட்ட நிலத்தினை நோக்கி தாழ்வாகப் பதிந்திருந்த புளியமரக் கிளைகள் பகல் பொழுதிலும் இந்த நிலத்தை இருண்

மையாக வைத்திருந்தது. நிலம்தாழ்ந்த கிளைகள் வெட்டப் பட்டு அந்த இடம் உடற்பயிற்சிக்கான களமாக மாற்றப்பட்டது. சாதாரண உடற்பயிற்சிதான் தினந்தோறும் நிகழ்த்தப்பட்டன. இந்த முகாம் கற்கையையே நோக்கமாகக் கொண்டிருந்தது. அதற்கேற்ப வகுப்புகள் சேகரால் நடத்தப்பட்டன.

ஞாயிறு முழு ஓய்வு நாள். ஆனாலும் மிக அதிகாலையில் விசிலுக்கு எழும்ப வேண்டும். சுமார் 25 கிலோ மீற்றர் தூரத்தை இராணுவ முறைப்படியான பாத அசைவுடன் எல்லோரும் சேர்ந்து அணி பிரியாமல் ஓடவேண்டும். போராளிகளை காணக் கண் வேண்டும் என்பதுபோல் இந்த மரதனைக் காண அந்த அதிகாலைப் பொழுதிலும் மக்கள் படலைகளுக்கு வெளியில் வந்து கூட்டம் கூட்டமாக நிற்பார்கள். அது போராளிகளுக்கு மிக உற்சாகத்தை வழங்குவதாகவும், களைப்பறியா நிலையை ஏற்படுத்துவதாகவும் இருந்தது. இதில் ஜோனும் பங்கு கொண்டான். பலஸ்தீனப் பயிற்சி எடுத்த தோழர் மார்ட்டின் இந்த இராணுவ மரதனை வழிநடத்திச் செல்வார். எல்லோரையும் கண்காணித்தபடியும் அக்கறையுடன் விசாரித்தபடியும் ஓடிக் கொண்டிருப்பார். அந்த அரவணைப்பில் இராணுவ தொனி மறைந்தே போய்விடும். இடையிடையே "ஜோன் ஓகேயா" என் பார். அது அங்கு வழமையான பயிற்சியில் ஈடுபடாத ஜோனின் மீதான அக்கறையாகவும் இருக்கலாம், அல்லது ஜோனின் மெலிந்த உடற்கட்டு காரணமாகவும் இருக்கலாம் என ஜோன் ஊகித்திருந்தான். ஆனால் மரதன் ஜோனுக்கு ஏற்கனவே மிகவும் பிடித்ததும் பரிச்சயமானதும் ஒன்று. அவன் சளைக்காமல் ஓடி முடிப்பான். இந்த மரதனின் பின்னான ஞாயிறு ஓய்வாக மலரும்.

சதாவை உங்களுக்கு அறிமுகமாக்க வேண்டும். அவன் பயிற்சிக்காக பின்தளத்துக்கு வரவில்லை என்பான். மேல்மாடி யில் தங்கியிருந்தான். நல்ல உயரமும் உடற்கட்டும் உள்ள அவன் எதற்காக அங்கு கொண்டுவந்து விடப்பட்டான் என்ற விபரம் ஜோன் முகாமை விட்டு வெளியேறும் வரை அறிய முடியாதிருந்தது. மட்டக்களப்பைச் சேர்ந்த அவன் யாழ்ப் பாணம் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். கழகத்துக்கு வேலை செய்யும் அரசியல் பிரிவைச் சேர்ந்த தோழர் ஒருவர் இவனது சினேகிதனாக இருந்தார். பின்தளத்துக்கு ஆட்களை பயிற்சிக்காக அனுப்புகிற நாட்களில் சதாவும் அவனுடன் கரைக்கு போய் வருவான்.

அவ்வாறே அன்றும் நடந்தது. படகில் இன்னும் ஒருவருக்கான இடம் இருக்கிறது என்று சொன்ன அரசியல் பிரிவுத் தோழர் அப்பாவித்தனமான சதாவுக்கு ஆசையூட்டினார். "ஒரு இடம் இருக்கு. கடற்பயண அனுபவம் இருக்கா உனக்கு. நீ விரும்பினால் வண்டியில் கூடப் போய், திரும்பலாம்" என்றிருக்கிறான். சதா வண்டியில் ஏறினான். இந்தக் கதையை சதாவேதான் சொன்னான்.

இன்று இந்த முகாம்வரை அவனது பயணம் நடந்தேறியிருக் கிறது. "எங்கட குடும்பம் வறுமைப்பட்ட குடும்பம். அம்மா என்னை நிச்சயம் தேடிக் களைத்திருப்பா" என அவன் சொல்லும் போது, ஜோனின் இழையொன்றையும் சேர்த்திழுத்து மீட்டினான். அவன் அதிகம் பேசுவதில்லை. தான் ஊரில் கராட்டி பழகியதாக சொல்வதோடு நிற்காமல், தனது கையின் சதையிறுக்கத்தை மீட்டி தொட்டுப் பார் என்று ஒரு குழந்தைபோல் சொல்வான். ஊருக்குத் திரும்புவதைப் பற்றிய கவலை அவனை பெரிதும் வாட்டியது. அவனது உடலசைவு ஒரு பயிற்சிபெற்ற போராளியின் துடிப்பை இழந்திருந்தது. முகம் சிரிப்பை இழந்திருந்தது. மிக அளவாகப் பேசுவான். அவன் ஜோனுக்கு உதவுவான் என அறிமுகப்படுத்தப் பட்டவன். ஆனால் அவன் ஜோனின் வேலைமுறையில் பெரிதாக எந்த உதவியும் செய்யவில்லை. அதை சேகர் கண்டுகொள்வது மில்லை. அவன் மொட்டை மூர்த்தியின் கூண்டுக்குள் அகப்பட்டு பின் திறந்துவிடப்பட்ட 'அதிர்ஸ்டம்' பெற்றவனாக இருக்கக் கூடும் என்ற ஊகம் ஜோனிடம் இருந்தது.

பெரிய இலங்கை வரைபடமொன்று ஜோனிடம் கொடுக்கப் பட்டது. அதை 26 அடி நீளமுள்ள இலங்கை வரைபடமாக பெருப் பித்து வரைய வேண்டும். அந்த மிகப் பெரிய துணியின் மேல் 'பிறிஸ்ரல் போர்ட்' என சொல்லப்படுகிற வெண்ணிற மெல்லிய 'கார்ட் போர்ட்' மட்டைகளை நேர்த்தியாக ஒட்டி முடித்திருந்தான் ஜோன். சதா அதற்கு உதவினான். அளவு நேர்த்தியுடன் குறுக்கும் நெடுக்குமாக பென்சிலால் பிரிப்புகளை செய்து, நேர்கோடுகளை வரைந்தான். இலங்கைத் தீவின் எல்லைப் புறங்களை புள்ளிகளிட்டு, மாறாத பரிமாணத்துடன் முதலில் வரைந்தான். பின்னர் ஆறுகள், வீதிகள், குளங்கள் அணைகள் என உள்ளுடனை நிரப்பி செய்து முடித்திருந்தான்.

இப்போ கொழும்பு வரைபடம் ஜோனிடம் கொடுக்கப்பட்டது. 19அடி நீளமும் 16 அடி அகலமும் கொண்ட மொடல் ஒன்றை

செய்ய பணிக்கப்பட்டான். அதன் அகலப் பகுதியை நான்கு பகுதிகளாக பிரித்து எடுக்கக்கூடியவாறு அமைப்பதென முடிவாகி யது. இலக்கு மீதான ஒரு தாக்குதல் வியூகத்தை கற்பிப்பதற்கு தேவையான அகல வீதி தேவைப்பட்டது. இராணுவ மற்றும் எதிர்த்தாக்குதலுக்கான குஞ்சு வாகனங்கள் நகரக்கூடிய அளவுக்கு வீதிகள் அமைவது முக்கியமானது. இந்த பரிமாணத்திலிருந்து தொடங்குவதென்றால் கொழும்பை முழுமையாக உள்ளடக்க முடியாது என்பதை சேகருக்கு ஜோன் கணிப்பிட்டுக் காட்டினான். ஒரு சிறிய பரிமாண குளறுபடியைச் செய்தால்கூட அது சாத்தியமில்லை என விளக்கினான். எனவே கொழும்பு நகரின் ஒரு பகுதியை மட்டும் மொடலாக செய்வது என முடிவுக்கு வந்த னர். அதுவும் கூட வீதிகளின் பரிமாணம் விதிவிலக்காக பெரிதாக இருந்தது. இறுதி வடிவமாக உயர்மாடிக் கட்டடங்கள், வீடுகள், மரங்கள், நடமாடும் மனிதர்கள், வாகனங்கள், பூங்காக்கள், நீர்நிலைகள் என எல்லாம் நிர்மாணிக்கப்பட்டது. இருந்தாலும் கட்டடக் கலையியல் நுட்பத்துடன் உயிர்பெற்று எழுந்துநிற்கும் நகரப் பகுதியாக அது பொலிவுறவில்லை. அதற்காக நேர அவகாசத்தை அவன் நீட்டிக்கொள்ள விரும்பவில்லை. அதை சாத்தியமாக்கும் புத்தாக்க மனநிலையும் இருக்கவில்லை. வசதி யும் இல்லை.

மொடலுக்கான பளபளப்பான பெரிய பலகைகள் ஆணிகள் சில உபகரணங்கள் மட்டுமே ஆரம்பத்தில் தயாராக இருந்தன. கட்டடங்கள், வீதிகள், மரங்கள் என எல்லாமும் நேர்த்தியாக நிர்மாணிக்கப்படுதற்கு சில பொருட்களை வாங்க மதுரைக்கு செல்ல வேண்டியிருந்தது. சேகரின் மோட்டார் சைக்கிளில் ஜோன் பின்னால் அமர்ந்துகொண்டான். நாற்பது மைல் வேகத்தை அது தாண்டினால் தானாகவே நின்றுவிடுமோ என்ற ஐயமொன்று ஜோனின் நரம்புகளுக்குள்ளால் பயணித்து மூளையை சுவாரசித் தது. மோட்டார் ஒரு வயோதிபனின் உரப்பாக குரலெழுப்பிக் கொண்டிருந்தது. இந்த மோட்டார் சைக்கிளில் போய் ஒரு கெரில்லா தாக்குதலை செய்து விட்டு ஓடித்தப்ப முயற்சித்தால் எப்படியிருக்கும் என ஜோன் கற்பனையோடு விளையாடிக் கொண்டிருந்தான்.

மதுரையிலிருந்து திரும்பும்போது இரவாகிவிட்டிருந்தது. வழியில் தனது வீட்டுக்கு அவர் அழைத்துச் சென்றார். வாசலில் மல்லிகைப் பந்தலுக்கு பதிலாக பாவற்கொடி படர்ந்திருந்தது.

காய்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அதன் கசப்பு மணம் காற்றுடன் புணர்ந்து சுகந்தித்து ஜோனின் சுவாசக் காற்றாக உள்ளிறங்கியது. கையில் ரோச் லைற்றுடன் வந்தார், சேகரின் தந்தை. சேகரின் மனைவியும் வந்தார். எதிர்பாராமல் வந்துநின்ற சேகரை வாஞ்சையுடன் அவர்கள் சுகம் விசாரித்தனர்.

''பாவற்கொடியை இப்படி வளர்த்திருக்கிறியள். அழகாக இருக்கு'' என்ற ஜோனின் வியப்பை, சேகர் முற்றத்துக்கு அழைத்துச் சென்றார். தந்தையார் கையிலிருந்த ரோச் லைற்றிலி ருந்து ஒளியை கற்றையாக உதறி முற்றத்தில் வீசிவிட்டார். பூக்கள் காய்கள் கனிகள் என தக்காளி, வெண்டி, கத்தரி, மிளகாய்ச் செடி எல்லாம் ஒரு பூந்தோட்டத்தின் அமைவாக தமது குடியிருப்புகளை அமைத்து வாழ்ந்து கொண்டிருந்தன.

சேகரை நினைத்து பெருமிதப்பட்டான் அவன். பிள்ளைகள் இருவரையும் ஏகரின் மனைவி தூக்கத்திலிருந்து எழுப்பி விட்டி ருந்தார். கண்ணைக் கசக்கியபடி ஓடிவந்து தகப்பனின் கால்களை அணைத்துக்கொண்டு நின்றன குழந்தைகள். தந்தையின் அருகா மையை வேண்டியிருக்கிற பருவம் அது. இந் நிலையில் ஈழ விடுதலைக்காக இப்படி தன்னை தியாகிக்கும் சேகரின் மீது ஜோனுக்கு மதிப்பு அதிகமாகியது. தீர ஆராய்ந்து அறிதல் என்பதை பின்னுக்கு தள்ளிவிட்டு, உணர்ச்சி பூர்வமாகவும் உணர்வு பூர்வமாகவும் சிந்திக்கிற ஜோனின் எழுச்சிகளும் வீழ்ச்சிகளும் அதற்குள்ளாலேயே நிகழ்ந்து விடுவன. மெல்ல ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்களில் அவன் அமைதியாக பயணித்தான். அவன் தேடிக்கொண்டிருந்த நம்பிக்கையின் ஒரு பகுதியை சேகரில் கண்டான்.

மொடல் வேலை துரிதமாக நடந்து கொண்டிருந்தது. சதா இடையிடையே உதவிசெய்து கொண்டிருந்தான். அன்று காந்தன் இன்னொரு தோழருடன் முகாமுக்கு வந்தார். கண்ணாடி அணிந்திருந்தான் அந்தத் தோழன். அவன் அருகில் வரும்போது வியர்வை மணம் மரணத்தின் வாடையை சுமந்து வந்ததை ஜோன் உணர்ந்தான். புதிர்களையும் சோகத்தையும் ஒருவித பயத்தையும் அவனது முகம் பூசிக்கொண்டிருந்தது.

''இந்தத் தோழர் உங்களுக்கு உதவியாக பணிபுரிவார்'' என காந்தன் ஜோனுக்கு அறிமுகமாக்கிவிட்டு போய்விட்டார். எதற்கு உதவி. சதாவுக்கே செய்வதற்கு பெரிதாக ஒன்றுமில்லாதபோது

இன்னொருவர் எதற்குத் தேவை என்பதை ஜோனால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

"உங்கடை பெயரென்ன தோழர்?"

"எந்திரன்"

"இப்ப எங்கையிருந்து வாறியள்"

"ஒரத்தநாடு மொட்டைமாடி"

"எந்த முகாமில் பயிற்சி எடுத்தனியள்?"

"பயிற்சி எடுக்கயில்லை. தளத்திலிருந்து வந்தனான்."

"ஏன்?"

"அங்கை அரசியல் பிரிவிலை வேலைசெய்தனான். நோண்டியாப் போய்ச்சு. பொலிஸ் என்னைத் தேடி வரத் தொடங்கியிட்டாங்கள். அதுதான்!"

எப்போதும் மௌனமாகவே காலந்தள்ளிய எந்திரனிடம் ஏதாவது கழக இரகசியம் உறங்கிக் கிடக்குமோ, அதை எப்படி கேட்பது, கேட்கக்கூடாதல்லவா என்றவாறாக ஜோன் ஒரு பக்கமாக யோசித்தான். எந்திரனின் தடித்த இமையின் கீழான கூரிய விழிகள் சிரிப்பை அறிந்திருக்காதவையாக இருந்தன. அவை ஊடுருவும் விழிகளாக கடுப்புடன் இருந்தன அல்லது மிரண்டு இருந்தன.

சேகர் காணும்போது மட்டும் ஜோனின் வேலையில் பங்கெடுப்பதுபோல் நடித்தான். மற்றபடி வாளாவிருந்தான். சேகரும் அவனோடு எதுவும் பேசுவதில்லை. ஜோனின் பொறுமையின் கடைசி இயடு அறுந்துவிட்ட ஓர் நாளில் அவன் எந்திரனோடு வார்த்தைகளுடன் பாய்ந்தான். தன்னை ஏமாற்றுவதையும் விட இயக்கத்தை ஏமாற்றுகிறானே இவன் என உணர்ச்சிவசப்பட்டான். வார்த்தைகள் எந்திரன் மீது மோதி விழுந்தபோதும் எந்திரன் உணர்ச்சியற்றே இருந்தான். அப்படி ஜோனுக்குத் தெரிந்தது. ஆனால் அவை எந்திரனின் மவுனச் சுவரை படிப்படியாக உடைத்து நொருக்கிக் கொண்டிருந்தன.

அந்த சிதிலங்களினூடு எந்திரன் தோன்றினான். அங்குமிங்கும் நோட்டம் விட்டு எதையோ உறுதிப்படுத்திக் கொண்ட அவன் பேசத் தொடங்கினான்.

“உன்ரை கடமையுணர்வையும் அர்ப்பணிப்பையும் உழைப்பையும் நேர்மையையும் நான் இதுநாள்வரை அவதானித்துக் கொண்டு தான் இருந்தன். உனக்கு நான் சொல்லப்போற விசயத்தை நீ யாரிடமும் சொல்ல மாட்டாய் எண்ட நம்பிக்கை இருக்கு. இல்லை, அப்பிடி நீ சொன்னால் இரண்டு பேருக்குமேதான் ஆபத்து எண்டதையும் உனக்கு சொல்லிவைக்கிறன்” என்று ஜோனை சுயசிறைக் கம்பிகளின் பின்னால் தள்ளினான். புதிர்களோடு ஜோன் அதற்குள் விடப்பட்டான்.

“நான் ஒரு மத்தியகுழு உறுப்பினர். இப்ப எங்கையிருந்து கொண்டுவரப்பட்டிருக்கிறன் தெரியுமா. ‘நாலாம் மாடி’... அதான் சித்திரவதை முகாமிலிருந்து..” என்றதும் ஜோன் “பி முகாம்” சவுக்கம் காட்டின் நசித்து பிழியப்பட்ட ஒலிகளை மீட்டினான். அதிர்ச்சி ஒரு பூனைக்குட்டியைப் போல் மெல்ல எழுந்து கூரிய பற்களுடன் மூளையை பிராண்டத் தொடங்கியது. “உண்மையா தோழர்” என அர்த்தமற்று வார்த்தையை உதிர்த்த ஜோன், “என்ன பிரச்சினை” என்று கேட்டான். பதில் வருவதற்குள் பூனைக்குட்டி திடீரென நகர்ந்து மீண்டும் சுருண்டு படுத்தது. விடுதலை மீதான கனவு “இவன் ஒரு துரோகியாக இருக்குமோ” என்று அதன் காதுக்குள் இரகசியம் பேசியது.

தனது கால்களும் கைகளும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு அந்த சவுக்கம் காட்டு கொட்டிலுக்குள் சிறையிடப்பட்டிருந்த அவலங்கள் பற்றி அவன் பேசத் தொடங்கினான். விசாரணை முறைகள் பற்றிப் பேசினான். அந்த சிறிய சிறைக் கொட்டிலின் காவலர்களாக இருந்த உளவுப்படை எடுபிடிகளின் மிரட்டல்களையும் தூசண வார்த்தைகளையும் பற்றிப் பேசினான். இயக்கத்துக்கு வந்து மூன்றாம் நாள் முதன்முதலாக சென்றி பார்த்த அன்று இரவு 2 மணிக்கு நுழைவாயில் பரணின் மேல் நின்றபோது அதே சவுக்கம் காட்டுக்குள்ளிருந்து மரண ஒலி கேட்டு அடைந்த அதிர்ச்சியின் நினைவு பூனைக்குட்டியை திரும்ப எழுப்பிவிட்டது. விடுதலைக் கனவை விலத்தித் தள்ளிவிட்டு வந்த மனிதாபிமானம் ஒரு மனிதஉயிரியின் வாழ்தல் மீதான அச்சுறுத்தலை எதிர்த்து நிற்க ஜோனைக் கோரியது.

“உன்னைப் பார்க்க எனக்கு பரிதாபமாக இருக்கு. எவளவு தூரம் இயக்கத்தை நீ நம்பி விசுவாசமா இருக்கிறாய். ஏமாறப் போறாய்” என்றான் எந்திரன்.

கதவில்லா யன்னலுக்கூடாக வெளியே விறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான் ஜோன். தெருநாய்கள் இரண்டினது சல்லாப சமிக்ஞைகளையும், செல்லக் கடிகளையும், குழையல்களையும் ஏற்கனவே அவன் பார்த்துக்கொண்டிருந்த போதும், அவை அவனுக்கு சுவாரசியமற்றுத் தெரிந்தன. இப்போ அவை புணரத் தொடங்கியிருந்தன. ஓர் உயிரியின் இயற்கைத் தேர்வையும் துய்ப்பையும் மகிழ்வையும் காற்றில் அள்ளுண்டு போகும் சருகுபோல் நினைத்து கடந்து சென்றான் ஜோன்.

எந்திரனின் கண்களை ஜோனால் ஊடுருவிப் பார்க்க முடிய வில்லை. பூனைக்குட்டி மூளையை பிராண்டிக்கொண்டிருந்தது. தலை குனிந்தபடி நின்றான் ஜோன். எந்திரன் வார்த்தைகளின் வாசலைத் திறந்துவிட்டிருந்தான். அவை அவநம்பிக்கையை சுமந்தபடி கட்டற்றுப் பாய்ந்தன.

மொடல் வேலை அண்ணளவாக முடிவுற்ற நிலையில் இருந்தது. சோர்வு ஜோனை ஆட்கொண்டது. சந்ததியார், கேசவன், காந்தன், கண்ணன், மற்றும் சேகர் போன்ற தோழர்களையும், இவளவு தொகையான தோழர்களின் அர்ப்பணிப்பையும், தளத்தில் அரசியல் பிரிவுத் தோழர்களின் நேர்மையான உழைப்பையும் நினைக்கும் தருணத்தில் பூனைக் குட்டி உறக்கத் துக்குப் போய்விடும். இருந்தாலும் ஒரு குண்டூசி சத்தமும் அதன் உறக்கத்தை கலைத்து விடுகிற நிலை இப்போ தோன்றியிருந்தது.

“பெரிசுக்கு தெரியாமல் தானே நாலாம் மாடி இயங்கிறதாக கதைக்கிறாங்கள். இதெல்லாம் உளவுப்படையின்ரை வேலை தானே” என்றான் ஜோன்.

“அப்பாவித்தனமாக இருக்கிறியள் தோழர். பெரிசுக்கு தெரியா மல்தான் இதெல்லாம் நடக்குது எண்டது பொய். தலைமை என்பது ஓர் உயர் நிர்வாகமும், முடிவுகளை எடுக்கிற கூட்டு அதிகாரமும், வழிநடத்திற பொறுப்பு வாய்ந்ததுமான மட்டம். அது தனிநபரைச் சார்ந்து இருக்கு மெண்டால் நாம் சோசலிசத்தை கதைச்சு என்ன பயன். அதாலைதான் சந்ததியார் கூட்டுத் தலைமை பற்றி பேசுறார். மத்தியகுழுவை ஜனநாயகப் படுத்துறது பற்றி பேசுகிறார். அவரையே இப்போ ஆபத்துத்தான் சூழ்ந்திருக்கு”.

‘பி’ முகாமில் இருந்தபோது நடுநிசியில் கேட்ட மரண ஒலியையும், இன்னொருநாள் மதன் மீது நடாத்தப்பட்ட கொடிய

சித்திரவதைகளை கண்ட காட்சியையும் அவன் அனுபவித்திருக்க வில்லை எனின், எந்திரனை ஒரு துரோகியாக ஜோன் தீர்த்திருப் பான். இருந்தாலும் பெரிசு மீதான நம்பிக்கையை ஜோன் முழுவது மாக இழக்கத் தயாராக இல்லை.

அன்று முகாம் எல்லாம் துப்பரவாகவும் ஒழுங்காகவும் இன்னமுமாய் மினுக்கப்பட்டது. நாற்சார திண்ணையின் பின் கதவின் இரு பக்கமும் பெரியளவிலான சட்டமிடப்பட்ட இரு படங்களை சேகர் நேர்த்தியாகக் தொங்கவிடுவதில் மும்முரமாக இருந்தார். ஒரு சட்டகத்துள் தாக்குதலுக்குத் தயாராக ஒரு நாக பாம்பு படமெடுத்து நிற்கிறது. அதாவது "தாக்குதல் நிலை". மற்ற சட்டகத்துள் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த ஒரு தேர்ந்த வடிவத்தில் வலையமைப்பை அமைத்து சிலந்தி மையத்தில் நிற்கிறது. அதாவது "தற்காப்பு நிலை". இந்த 'எல்' முகாமின் தந்திரோபாயத்தின் கருத்துருவைப் பிரதிபலிப்பதாக நாகமும் சிலந்தியும் இங்கிருக்கின்றன என சேகர் விளக்கம் கொடுத்தார். தான் ரொயிலற்றில் இருக்கும்போது சிலந்தியொன்று வலையை பின்னிக் கொண்டிருந்ததைக் கண்டதாகவும், திடீரென தனக்கு இந்த கருத்தாக்கம் தோன்றியதாகவும் வேறு சொல்லி புன்னகைத்தார்.

தோழர்கள் பெரிசைக் காண்கிற வேட்கையிலும் ஆர்வத்திலும் சுறுசுறுப்படைந்தார்கள். ஜோனும் வரைபடத்தையும் மொடலை யும் காட்சிப்படுத்தி மண்டபத்தின் பெரும் பகுதியை ஆக்கிரமிக்க அனுமதித்திருந்தான். பி முகாமில் வெள்ளை வேட்டியோடும் சிவப்புநிற 'ரீ சேர்ட்' உடனும் கண்ட பெரிசை இப்போ இராணுவ உடையில் (கொமாண்டோ யூனிபோர்மில்) கண்டான். ஒரு பரபரப்புப் படை சூழ பெரிசு முகாமுக்கு வந்தது. நாற்சார வீட்டின் நாற்புற திண்ணைகளையும் போராளிகள் இராணுவ உடையுடன் விறைப்பாக்கியிருந்தனர். பெரிசு தோழர்களை பார்வையால் தொட்டுச் சென்றது. பெரிசுக்கு அருகில் சேகர், காந்தன், கண்ணன் ஆகியோர் நடை பவனித்தனர்.

மேல்மாடியிலிருந்து ஜோன், சதா, எந்திரன் ஆகியோர் பார்த்துக் கொண்டிருந்தனர். இப்போ பெரிசும் பட்டாளமும் மேல்மாடிக்கு வந்தனர். முதலில் தனது அலுவலகப் பகுதிக்கு அழைத்துச் சென்றார் சேகர். அங்கு அவருக்கான சிறு நூல்நிலையமும் இருந் தது. உலகப் போர்கள் பற்றிய இராணுவ வகை நூல்களாலும்,

மாவோ, சேகுவேரா போன்ற புரட்சியாளர்களின் கெரில்லா போர்முறை பற்றிய நூல்களாலும் அது நிரம்பியிருந்தது. எல்லாமே ஆங்கில நூல்கள். கிற்லரின் படைநடத்தல் தந்திரோ பாயங்கள் கொண்ட நூல்களையும், சோவியத் யூனியனின் ஸ்ராலின்கால படைநகர்த்தல்கள், எதிரிகளை எதிர்கொள்ளல்கள் என்பவற்றில் கையாளப்பட்ட தந்திரோபாயங்களையும் கொண்ட நூல்கள் பலவற்றை அவர் வாசித்திருந்தார் என சொல்லப்பட்டது. தாக்குதல் மற்றும் தற்காப்பு வடிவங்களை தமிழீழப் போராட் டத்தில் பொருத்தமாக எவ்வாறு உருவாக்குவது என்பது பற்றி நாம் இன்னமும் தீவிரமாக சிந்திக்க வேண்டியிருக்கிறது என சேகர் பெரிசுக்கு சொன்னார். மிகக் குறைந்த இழப்புகளோடு, மிகக் குறைந்த காலத்தில், மாபெரும் தாக்குதல்களோடு தமிழீழத்தை விடுவிப்பதையே கழகம் மூலோபாயமாக கொண்டி ருந்தது.

அலுமாரியிலிருந்து ஒரு கோப்பினை (பைலை) எடுத்த சேகர் தனது இதுவரையான திட்டங்களை பெரிசிடம் காண்பித்தார். அவரது கடலில் V (ஆங்கில எழுத்து) வடிவத்தில் அதன் கூர்முனை முன்னநகர வள்ளங்கள் அணிவகுத்துச் செல்கின்றன. எதிரியின் தாக்குதலை எதிர்கொள்வதில் அது ஒரு சிறகுபோல விரிந்து கொள்ளவும் ஒடுங்கிக் கொள்ளவும் முடியும் என்றார். சேகர் தனது அட்டவணையிலிருந்து ஆயுதங்களை எடுத்து வள்ளத்தில் புறப்படுகிற போராளிகளிடம் கையளிக்கிறார். போராளிகள் தமிழீழத்தை மீட்க போய்க் கொண்டிருக்கிறார்கள். இலங்கையை நோக்கிய கெரில்லா படையணியின் இந்த படைநகர்த்தலை அழகான படமாக சேகர் வரைந்திருந்தார். குறைந்த கால இடைவெளிக்குள் பின்தளத்திலிருந்து எல்லா போராளிகளையும் தளத்துக்கு அனுப்புவது இந்த மூலோபாயத்துக்கு அவசியமானது. இதற்கு பெருந்தொகைப் படகுகள் தேவையாக இருந்தன. அதை இலக்காக வைத்து சில தமிழக கடலோரப் பகுதிகளில் மீனவ சமூகத்துள் ஈழ ஆதரவு வெகுஜன அமைப்புகள் உருவாக்கப் பட்டிருக்கின்றன எனவும், பெரும் ஆயுதக் கொள்வனவில் கழகம் ஈடுபட்டிருப்பதாகவும் சேகர் சொன்னார்.

பிரமாண்டமான இலங்கை வரைபடத்தையும், மொடலையும் பார்த்த பெரிசு சற்று பிரமிப்படைந்திருக்க வேண்டும். சேகர் ஜோனை சுட்டிக்காட்டி ஒரு சிறு அறிமுகமும் செய்துவிட்டு “இவரது உழைப்புத்தான்” என்றார். புன்னகையுடன் ஜோனை

எதிர்கொண்ட பெரிசு அந்த விசாலமான வரைபடத்தை நோட்டமிட்டது. நீண்ட ஒழுங்காக சீவிவிடப்பட்டிருந்த தடியொன்றை சேகர் பெரிசிடம் கொடுத்தார். அந்தத் தடியின் நுனியால் வரைபடத்தை மேய்ந்து வந்துகொண்டிருந்தவர் அனுராதபுரவில் நின்றார். *Anuradha* என முடியிற இடத்தில் "இதென்ன *a* (என்ற ஆங்கில எழுத்து) க்குப் பதிலாக *e* என பிழையாக எழுதியிருக்கிறீர்" என சுட்டிக்காட்டி ஒரு ஆசிரியராக மாறியபோது பெரிசின் பிம்பத்தில் முதல் உடைவு விழுந்தது. அனுராதபுரத்துக்குள் போய் எழுத்துப்பிழையை கண்டுபிடித்த கண்ணுக்கு எதிரியின் நிலைகள், தாக்குதலுக்கான கண்ணிகள் என எதுவும் வரைபட முழுமைக்குள் உள்ளடக்கப்படாமல் இருந்தது தட்டுப்படவில்லை என்பது வியப்பானது.

"இந்த வரைபடத்திலை வீதிகளும் காடுகளும் நீர்நிலைகளும் தான் இருக்கு. முப்படைகளின்ரை முகாம்களோ, அதன் தலைமை யகங்களோ, ஏன் விமானநிலையம் துறைமுகங்களோகூட இல்லை. அவை காட்டப்படாட்டில் இதிலை என்ன பிரயோசனம் இருக்கப் போகுது" என்றான் ஜோன். இந்தக் கேள்வியை ஏற்கனவே அவன் எந்திரனிடம் கேட்டபோது, அது 1956 இல் வரையப்பட்ட படம் எனவும் அதை தான்தான் கிளிநொச்சி நீர்வளத் திணைக்களத்திலிருந்து 'அடிச்சதாகவும்', அதிலை ஆறு, குளம் இல்லாமல் வேறை என்ன இருக்கும்" என நக்கலாக பதிலளித்து, தெளிவாக்கியதையும் மனதில் வைத்துக் கொண்டுதான் ஜோன் பெரிசிடம் இதை சொல்லிக்கொண்டான்.

அவரே அதை கண்டுபிடிக்க முன் ஜோன் சொல்லிவிட்டதால் வழிந்த முகத்தினை வைத்துக்கொண்டு, அருகிலிருந்த பரிவாரத் தில் ஒருவரைப் பார்த்து "ஏன் மெட்ராசிலை எல்லாம் இருக்குது தானே. அதை இங்கை அனுப்பிவிடுங்க" என்றார். "ஆம்" என தலையாட்டிய அந்த பரிவாரத் தோழர் கடைக்கண்ணால் ஜோனை பார்த்தார்.

பிறகான ஒருசில வாரம் கடந்த நாளொன்றில் அந்த வரைபடச் சுருள் வந்து சேர்ந்திருந்தது. அதை ஆவலோடு விரித்த ஜோன் ஏமாந்து போனான். அவையெல்லாம் 'ஸ்கெச்' வடிவில் முகாம்களின் வெளித்தோற்றமும், அதை அண்டிய வீதிகளும் வரையப்பட்ட படங்கள். இவை தளத்தில் வேலைசெய்து கொண்டிருந்த அரசியல் அமைப்பு தோழர்கள் குத்துமதிப்பாக

வரைந்தனுப்பியவை. அதற்குள் ஜோன் வேலைசெய்த வடமராட்சி அரசியல் பிரிவுக்குள்ளால் வரையப்பட்டு அனுப் பப்பட்ட வரைபடமும் இருந்தது. இது அவன் தளத்தில் வேலைசெய்யும்போது பார்த்த வரைபடம்தான். இந்த வரைபடச் சுருளுக்குள்ளால் ஏமாற்றம் மட்டும் கொட்டுப்படவில்லை. கழகத்தின் பிம்பமும் உதிர்ந்தது.

இப்போ மொடல் பக்கம் திரும்பிய பெரிசுக்கு தோழர்கள் ஒரு மாதிரித் தாக்குதல் வடிவத்தை மினி இராணுவ வண்டிகளை வீதிவழியேயும் அதன் நிலைகளிலும் வைத்து செய்து காட்டினர். என்னென்ன ஆயுதங்கள் பயன்படுத்தப்படவேண்டும் என்ற விபரத்தையும் பெரிசுக்கு தோழர்கள் ஒப்புவித்தனர். எல்லாம் முடிந்து செல்லும்போது அவர் ஜோனை ஒரு புன்னகையால் கடந்து சென்றார். ஒரு சிறு பாராட்டைத் தன்னும் சொல்வாரா என்ற ஜோனின் சிறு ஆசை விழுந்தழிந்தது.

பின்னாளில் இந்த வரைபடத்தையும் மொடலையும் அவன் புலம்பெயர்ந்த நாட்டில் வைத்து காணொளியில் பார்த்திருப்பான். 1986 ஆரம்பத்தில் அவன் சுவிசில் அகதிகள் முகாம் ஒன்றில் இருந் தான். வெவ்வேறு நாட்டு அகதிகளைக் கொண்ட அந்த முகாமில் சுமார் 30 தமிழர்களும் இருந்தனர். அவர்கள் எல்லோருக்கும் அவன் இயக்கம் பற்றி நிறைய சொல்லியிருந்தான்.

அன்று நான்கைந்து பேர் முகாமுக்கு கழக பிரச்சாரக் குழுவாக வந்திருந்தனர். அவர்களில் எவரையும் அவனுக்குத் தெரியாது. பாரிசிலிருந்து தாஸ் என்பவர் தலைமையேற்று வந்திருந்தார். விடுதலை, தமிழீழம், அது இது... என வாரிக் கொட்டிய அவர் “எமது தோழர்களின் பயிற்சி பற்றிய காணொளியை இப்போ பார்க்கப் போகிறீர்கள்” என்றார். அது தொடங்கி சில நிமிடங்களில் “நிக்கவரெட்டியா பொலிஸ் நிலையத் தாக்குதல் செயலதிபரால் நன்கு திட்டமிடப்பட்டு நடத்தி முடிக்கப்பட்டது” என காணொளி சொல்லிக்கொண்டிருக்க, பெரிசு அந்த நீளத் தடியால் மொடலை மேய்ந்துகொண்டிருந்தது. அப்போ முதன் முதலாக அவன் வாய் திறந்தான். “இதிலை நிப்பாட்டுங்க” என்றவன், “இந்த மொடலிலை எங்கை நிக்கவரெட்டியா இருக்கு. அது கொழும்பு நகரின் ஒரு பகுதியை மட்டும் உள்ளடக்கிய மொடல். தாக்குதல் முறைகள் பற்றிய படிப்புக்காக L முகாமில் உருவாக்கப்பட்டது அது. நீங்கள் சொல்வது பொய்”

என்று உணர்ச்சிவசப்பட்டு கூறினான். மேலதிக தகவலாக, அந்த மொடல் நான்கு பகுதிகளாக பிரித்தெடுக்கக் கூடியதாக செய்யப்பட்டதையும், 19X16 அடி நீள, அகலம் கொண்டது என்ற தகவலையும் சொன்னான்.

"என்ன... மொடலையே நீர்தான் செய்த மாதிரி சொல்லிறீர்" என்றார் தாஸ்.

"ஓம் நான்தான் செய்தனான்". அதை இன்னும் உறுதிப்படுத்துவ தற்காக இதையும் சொல்லிவைத்தான் அவன். "அதோடை சேர்த்து 26 அடி நீளமான இலங்கை வரைபடத்தையும் கீறினனான்" என்றான். பின், காணொளி நகர்ந்து போனபோது அந்த வரைபடத் தையும் மேய்ந்து சென்றது. காணொளி முடிய கூட்டம் களேபர மானது.

"அந்த முகாமுக்கு பொறுப்பாளரா இருந்த சேகர் ஓர் இந்திய உளவாளி " என எழுந்து நின்று கத்தினான் ஜோன்.

சேகர் மட்டுமல்ல, வயற் கிழவன், லெனின் ஆகியோரும் அவனது நினைவில் வந்து போயினர்.

இந்திய உளவாளி என அவன் கத்தியதை கோபத்திலெழும் வார்த்தைகளாக நீங்கள் கடந்து போயிருக்கலாம். ஏனெனில் அந்தக் காலங்களில் சிஐஏ, றோ, அல்லது மொசாட் உளவாளி என்ற முத்திரையை இலகுவாகவே குத்திவிடும் வழக்க மொன்றிருந்தது. அவற்றோடு சேர்த்து 'புலி உளவாளி' என்ற முத்திரையையும் கழகம் வைத்திருந்தது. இவை எதற்கும் ஆதாரம் தேவையில்லாமல் இருந்தது. ஆதாரத்தை பெற்றுக்கொள்வதும் இலகுவல்ல. ஒரு வைரஸ் போல ஒட்டி ஊடாடி பின் கருவறுக் கும் இந்த உளவுப் படைகளை இலகுவில் அடையாளம் காண முடியாத நிலை இருப்பதால், இவற்றின் பெயரால் ஆதாரமின்றி முத்திரை குத்துவதும் இலகுவாக இருந்தது. தமது அரசியல் எதிரியை கருவறுக்க அல்லது இல்லாமலாக்கவும் இம் முத்திரை கள் ஏவப்பட்டன.

கழகம் பலவீனமாகி உடைந்தபின், இந்த சேகர் இந்தியாவின் கைப்பிள்ளையாக பிறந்த ஈழ விடுதலை இயக்கமொன்றில் அதன் தலைவராயிருந்த ராஜனுடன் சேர்ந்து இயங்கினார். 1987 இல் ஈழத்திற்கு இந்திய இராணுவ வருகையின் பின்னர் அமைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண சபையில் முதல

மைச்சரின் செயலாளருக்கு ஆலோசகராக சேகர் வேறொரு புனைபெயருடன் (திருகோணமலையில்) இருந்தார் என்ற விடயம் இப்போதுகூட உங்களில் பலருக்கு தெரிய வாய்ப் பில்லை. இதே போலவே அந்த மாகாணசபைக்கான தமிழீழ தேசியப் படைக்கு பிள்ளைகளை துரத்திப் பிடித்து பயிற்சி யளித்தார்கள். அந்தக் காணொளியை நீங்கள் சிலவேளை பார்த்திருக்கக் கூடும். அவரது இராணுவ அல்லது புத்திஜீவித பிம்பத்தைக் கலைத்த கோலத்தில் அந்தக் காணொளியில் அவர் வருவார். கழக முகாமில் மார்க்சிய மொழியில் உரையாடிய சேகரை, இந்தக் காணொளியில் வண்ணையானந்தன் மொழியில் உரைநிகழ்த்துபவராக காண நேரும்.

“உங்களிடமிருந்து உங்கள் உறவினர்களைப் பிரித்த முறை, அதன்பின் அவர்களை காண வந்த உங்களுடன் எமது தோழர்கள் நடந்துகொண்ட முறை அனைத்திலும் முறைகேடுகள் நடந்துள் ளன” என ஏற்றுக்கொண்டு பேச்சைத் தொடங்குவார்.

“ஆனால் அவர்கள் இப்போ மகிழ்ச்சியில் இருக்கிறார்கள் என்பதை அவர்களுடன் கதைக்கும்போது உணர்வீர்கள். அவர்கள் பயிற்சி முடித்து ஆயுதத்தோடு வீட்டுக்கு வருவார்கள். ஒரு ஆயுதமல்ல... நூற்றுக் கணக்கான ஆயுதம். அவர்கள் உங்களுக்கு பயிற்சி வழங்குவார்கள். ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு கோட்டையாக மாறும். இலங்கை அரச படைகளோ பொலிஸ்படையோ உங்கள் ஊர்களை நெருங்க முடியாது” என்று வீரமுழக்கம் செய்வார். இந்த பிள்ளைபிடிகாரரிடம் தமது பிள்ளைகளை பறிகொடுத்த பெற்றோரும் உறவினர்களும் வாளாவிருந்து கேட்டுக்கொண்டிருப்பார்கள்.

இந்திய இராணுவத்துடன் அவர் இலங்கைக்குள் வந்தார். இலங்கை அரசுக்கு இது தெரியவந்ததால், அவர் இலங்கைக்குள் இனி புக முடியாது என தடை விதிக்கப்பட்டுமிருக்கிறார். சேகரை இந்த இடங்களிலெல்லாம் வைத்து உங்களுக்கு காட்டும் சந்தர்ப் பம் பின்னர் கிடைக்காது. இப்போ நாங்கள் திரும்பவும் சுவிஸ் அகதிமுகாமில் நடந்த கூட்டத்துக்கு திரும்புவோம்.

பின்தள B முகாமில் நடந்த மதன் கொலை, உளவுப்படையின் செயல்கள், சித்திரவதை முகாம், இயக்க உள் அராஜகம், தீப்பொறி குழுவினரின் வெளியேற்றம் குறித்தெல்லாம் ஜோனிடமிருந்து பீறிட்டு வந்த வார்த்தைகளால் கூட்டம் அமளிப்படலாயிற்று.

“நீர் சொல்லிறதைப் பார்த்தால் அங்கை முகாமிலை ஆயுதத் தோடை இருக்கிற போராளியள் சும்மா இருந்திருப்பாங்களா” என ஒரு குருட்டுத் தர்க்கத்தை தாஸ் முன்வைத்தார்.

“முகாம் சூழல் தெரியாமல் கதைக்கிறியள். அப்பிடித்தான் பெடியள் குழம்பியிருந்தால்கூட, சவுக்கம் கொட்டனாலை சுட ஏலாது” என்றான் ஜோன்.

கூட்டம் குழப்பமாக முடிந்தபின் தன்னுடன் கூடவந்த சுவிஸ் கிளை கழகத் தோழர்களை தூரத்தில் நிற்க வைத்துவிட்டு, அவனிடம் வந்த தாஸ் “நாங்கள் இப்பவும் பெரியையாவை நம்புறம். அவரின்ரை தலைமையிலைதான் தமிழீழம் கிடைக்கும் எண்டும் நம்புறம். நீர் சொல்லிறதெல்லாம் உண்மையா இருந்தால், நாங்களும் இயக்கத்திலையிருந்து வெளியேறுவம். அந்த நிலையிலை, நீர் மக்களை நேசிக்கிறது உண்மையெண்டால் நாங்கள் ஒரே கோட்டிலை சேர்ந்து நடப்பம்” என்றுவிட்டு நகர்ந்தார். நகர்ந்தவர் சுவிஸ் தோழர்களை அமைதிப்படுத்த “உவங்களெல்லாம் துரோகிகள்” என்று தீர்த்தார் என்பதை பின்னரான காலப் பகுதியில் அவனுடன் நெருங்கிப் பழகிய அந்தத் தோழர்கள் சொல்லிச் சிரித்தனர். இப்படியொரு சுவாரசியம் எதிர்காலத்தில் உருவாகலாம் என ஜோன் நினைத்துப் பார்த்திருக்க சாத்தியமில்லை.

## 25

‘எல்’ முகாமில் ஜோனுக்கும் பயிற்சிபெற்றுக் கொண்டிருந்த தோழர்களுக்குமான நெருக்கம் கூடிக்கொண்டே சென்றது. எந்திரன் மேல்மாடியை விட்டு கீழுக்கு வருவதில்லை. அது அவனுக்கான கட்டளையாகக்கூட இருக்கலாம். அல்லது விரக்தி மனோநிலையாகவும் இருக்கலாம். இரண்டு மனிதர்கள் ஒருவரோடொருவர் பழகத் தொடங்குவது, படிப்படியாக அதில் முன்னேறிச் செல்வது என்பது மனிதர் என்ற அடையாளத்துள் சாத்தியமானதும் வாழ்வின் அர்த்தம் புதைந்ததுமான ஒன்று. அந்த நட்புப் பயணத்தில் சிலருடன் ஒரு எல்லைவரை போக முடிவதும், சிலருடன் அதைத் தாண்டி ஆழ்ந்த நட்புக்கு அல்லது தோழமைக்கு செல்ல முடிவதுமாக வாழ்வில் ஒரு உயிர்ப்பான

பயணம் வாய்த்த படியே இருக்கும். அதை அனுபவிக்க முடியாமல் அங்கலாய்க்கும் தருணங்களையே ஜோன் ஒரு போராளியாக மாறியபின் சந்தித்துக் கொண்டிருந்தான். இராணுவ இரகசியம், இயக்க இரகசியம், தனி நபர் இரகசியம், கட்டுப்பாடு என்றெல்லாம் பூவிலங்கை தாங்கிய படி இருக்க வேண்டியிருந்தது. அது தோழர்களுக்கிடையில் மனம் திறந்து பேசுவதை தடுத்துக்கொண்டிருந்தது. இதை கேட்கலாமா விடலாமா என்ற தயக்கத்தையும் குழப்பத்தையும் வழங்கியபடி இருந்தது.

“நான் உங்களட்டையிருந்து சில விடங்களை தெரிந்துகொள்ள விரும்புறன். அதை சொல்லுறதா விடுறதா என்பது உங்கடை தேர்வு” என்ற ஒரு முன்னுரையுடன் ஜோன் எந்திரனைப் பார்த்துக் கேட்டான்,

“உங்களை ஏன் நாலாம் மாடிக்கு கொண்டு போனாங்கள். உங்கள் மீதான குற்றச்சாட்டுகள்தான் என்ன”.

இந்தக் கேள்விகளை அவன் எந்திரனின் அருகில் நின்று கேட்க வில்லை. இயக்கத்தின் அருகில் நின்றும் கேட்கவில்லை. ஒரு புரியாத புதிரின் அருகில் நின்று கேட்டான்.

“உண்மையைச் சொன்னால் எனக்கே குழப்பமாத்தான் இருக்கு. என்ரை பெயரைக் கொண்ட மல்லாவி எந்திரனையும் என்னையும் போட்டுக் குழப்பிவிட்டிருந்த உளவுப்படையின்ரை பிழையான ஊகத்தாலை நான் கைதுசெய்யப்பட்டதாக இருக்கலாம். அல்லது இன்னொரு பிரச்சினையும் இருக்கு. தளத்துக்கு கழகத்தாலை அனுப்பப்பட்டிருந்த தொலைத்தொடர்புச் சாதனத்தை நீண்ட காலம் உரிய ஆட்களட்டை ஒப்படைக்காமல் வைச்சிருந்த குற்றச் சாட்டின்ரை அடிப்படையிலும் இருக்கலாம்” என்றான்.

“என்ன தோழர் குழப்புறியள். உங்களை அவங்க எதைக் கேட்டு விசாரிச்சாங்கள் எண்டதிலையிருந்து இதுக்கு விடை கிடைச்சிருக் குமே. ஒரு மூண்டாம் நபர் கதைக்கிற மாதிரி இருக்கு” என்ற ஜோனுக்கு, சந்திரனும் இயக்கம் போலவே மர்மத்தை பிரதிநிதித் துவப் படுத்துவதாக தெரிந்தது. மேற்கொண்டு கேள்விகளுக்குப் போவது குறுக்குவிசாரணை செய்வது போலாகிவிடும் என உணர்ந்த ஜோனுக்கு இயக்கவிதிகளின் மர்ம எல்லைக் காவலர்கள் தெரிந்தனர்.

இயக்கங்களின் மீது முரண்பாடு கொண்டவர்களும், ஏன், அவற்றிலிருந்து வெளியேறியவர்களும் தாம் சார்ந்த இயக்கம் குறித்தான விமர்சனங்களையோ விசனங்களையோ சுயமாக தீவிரமாக வைத்தாலும்கூட, தமக்கு வெளியில் அதை யாராவது வைக்கிற போது ஒருவித நிழல்தற்காப்பு முறைக்குள் போய்விடுவதை நுண்மையாக அவதானிக்க முடியும். அது காலத்தால் தகர்ந்து விடுவது அல்லது மனவளத்தால் தகர்ந்துவிடுவது சாத்தியமான ஒன்றுதான் என்றபோதும், பெரும்பாலானவர்களிடம் இதன் அழிவை முழுமையாக காணமுடியவில்லை. தாமும் அந்த இயக்கத்தில் அங்கத்தவர்களாக இருந்ததாலும், போராளி என்பதை ஒருவித அந்தஸ்தாக ஏற்று (பின் தோற்றுப் போயிருந்தாலும்கூட) மக்கள் மீது அதிகாரம் செலுத்தியதாலும் அல்லது மேலாளுமை செலுத்தியதாலும் இவை நிகழ்கின்றன.

இன்னொரு சாராருக்கு அர்ப்பணிப்பு மனோபாவத்தில் தமது வாழ்வை பொதுவான ஓட்டத்திலிருந்து முறித்துக் கொள்கிறபோது அதன் இழப்பையும் வலியையும் தான் இந்த சமூகத்துக்காக தாங்கிக் கொண்ட உளவியலை அல்லது தியாக உணர்வை புறந்தள்ள முடியாதுள்ளது. போராட்டம் இப்போ தோற்றாலும்கூட, கடந்த காலத்தில் இந்த போராட்டத்தினை ஆதரித்தபடியே அதன் பார்வையாளர்களாக இருந்தவர்களிலிருந்து தான் வேறுபட்டிருந்த புள்ளியை அவர்கள் இலகுவில் கடந்துசென்றுவிடுவார்கள் என எதிர்பார்க்கவும் முடியாது. அது அவர்களின் நிழல் புள்ளியாக அவர்களது வாழ்வோடு தொடரலாம்.

இந்த சமூகத்தை பிழையான அரசியல்வழி அழைத்துச் சென்று காவு கொடுத்ததாக குற்றவுணர்வுடன் இருக்கும் போராளிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். அந்த குற்றவுணர்வு ஒரு பகுதியினரை மனச்சிதைவுக்கு உட்படுத்தியுமிருக்கிறது. சிலர் அதிலிருந்து மீண்டு தமது அரசியல் பிரக்ஞையை வாழ்முறையாகவே வகுத்துக் கொண்டனர். பெரும்பாலான புகலிட சஞ்சிகைகளும் இவர்களினூடாகவே வெளிவரத் தொடங்கியவை. அந்த சஞ்சிகைகள் இலக்கியத்தையும்விட அரசியல் உள்ளடக்கம் கொண்டதற்கு இது முக்கிய காரணமாக அமைந்தது.

எந்திரனுக்கு தான் சார்ந்த மத்திய குழு அந்தஸ்தும், அதன் பெயரிலான அதிகார சுகிப்பு அல்லது பவுசும் ஒரு கீழணிப்

போராளியான ஜோனிடமிருந்து தன்னை வேறுபடுத்தி படம் காட்ட ஒரு நிழல் எல்லைக் கோட்டை பேணவே செய்தது என ஜோன் ஊகித்தான். போராளி என்பது பதவி அல்லது பொறுப்பு சார்ந்து அதிகாரப் படிநிலையாக அல்லது அரசியல் தத்துவ கோட்பாட்டு அறிவுசார்ந்து மேலாளுமைப் படிநிலையாக இயக்கத்துள் தொடர்ந்தது. இரகசியம் பேணல் வெளிப்படைத் தன்மைக்கு எதிரானது என்பதால், தவறுகளை கண்டறியவோ அதன் மீதான கேள்விகளை முகாமுக்குள் எழுப்பவோ விவாதிக்கவோ ஒரு ஜனநாயகத் தளம் இருக்கவில்லை. இந்தப் போக்கு இயக்கம் தனது தவறுகளை சரிசெய்து கொண்டு முன்னேற தடையாக இருந்தது. இயக்கத்தை சுய அழிவுக்கு இட்டுச்சென்றதில் அதற்கும் ஒரு பாத்திரம் இருக்கிறது.

எந்திரன் ஒரு மத்தியகுழு உறுப்பினராகவும் இருந்தவர் என்றளவில் இயக்கத்தின் தவறான போக்கில் தனது பங்கிலான பொறுப்பேற்றலை ஏற்க வேண்டியிருந்தது. இதுகுறித்தான விவாதங்கள் எதையும் நடத்துமளவுக்கு ஒரு பாதுகாப்பான தளம் ஜோனுக்கு இருந்ததில்லை. நம்பிக்கை இழந்தவர்களும் முரண்பட்டவர்களும் தம்மை பாதுகாக்கும் நோக்கமும், வாழ்தலின் மீதான விருப்பும் மேலிட தொடங்கிய காலகட்டம் அது. எல்லாமே கைமீறிப் போய்விட்டதாக உணரும் நிலை மத்தியகுழுவில் இருந்தவர்கள் வரை இருந்தது. எந்திரன் ஒரு நடைப்பிணமாக உலாவினான்.

ஜோனுக்கும் பயிற்சிக்காக வந்தவர்களுக்குமான உறவு வலுப்படத் தொடங்கியது. அவர்களில் சிலர் நம்பிக்கையிழந்து இருந்தனர். பலஸ்தீன பயற்சியை முடித்து வந்திருந்த இருவர் மிக நெருக்கமாக தங்களுக்குள் பழகியிருந்தனர். அவர்கள் இருவருடனும் ஜோனுக்கு நெருங்கிய நட்பு ஏற்பட்டது. அந்த இருவரும் தாம் (இயக்கம்) உள்முரண்பாடுகளால் தோற்றுவிடப் போகிறோமோ என்ற ஏக்கத்துடன் இருந்தார்கள். சிலவேளைகளில் அவர்களின் கண் மடலில் நீர்த்துளிகள் வந்து எட்டிப் பார்க்கும்.

மனம்திறந்து பேச முடியாமல் திணறுவது, உள்ளே அடக்கு வது என்பது ஒரு சித்திரவதை போன்றது. அதை ஜோன் அனுபவித்தான். தனது தொலைத்தொடர்பு முகாம் தோழர்கள் சிலருடன் எல்லாவற்றையும் பேசித்தீர்க்க வேண்டும் என

அந்தரப்பட்டான். அவன் தன்னை இலகுவாக்கிக் கொள்ள வேண்டும் என்பது மனித மூளையின் விதியாக இருந்தது. எனவே ஒரு தந்திரத்தை கையாள முடிவெடுத்தான். அவனுக்கு உறுதியளிக்கப்பட்ட ஒன்றரை மாதமும் அந்த முகாமில் முடிவுற்றிருந்தது. வேலைகளும் முடிந்திருந்தது. ஆனால் அவனை திருப்பி தொலைத் தொடர்பு முகாமுக்கு அனுப்புவதான பேச்சே இருக்கவில்லை. அவன் பொறுப்பாளர் சேகரிடம் பேசினான். தொலைத் தொடர்பு முகாமில் பயிற்சி முடிய தளத்துக்கு போய் தொலைத்தொடர்பு வலையமைப்பை உருவாக்க பதியால் நியமிக்கப்பட்டவர்களில் தானும் ஒருவன் என்றும் இங்கு தனக்கு தரப்பட்ட வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டதால் தான் தொலைத் தொடர்பு முகாமுக்கு திரும்பிப் போய், பிறகு நாட்டுக்கு போக வேண்டும் எனவும் சொன்னான். மெல்லிய புன்சிரிப்பை வரவழைத்த சேகர்,

“இந்த முகாமுக்கு வருகிற எவருமே இறுதிப் போராட்ட காலம் வரை ஊருக்கு செல்ல முடியாது என்பது இந்த முகாமின் விதி. அதை பெரியவர்தான் சொல்லியிருக்கிறார். அதாலை நீங்களும் அதற்குக் கட்டுப்பட வேணும். போகேலாது” என்றார். ஜோனின் தலைக்குள் ஆணி இறங்கியதுபோல் இருந்தது. தன்னை சமாளித் துக்கொண்ட அவன் “நீங்க இந்த நிபந்தனையை முதலிலை சொல்லயில்லை. சொல்லியிருந்தால் நான் வந்திருக்க மாட்டன். எனக்கு தொலைத்தொடர்பு துறையைவிட்டு விலகுவது கஸ்ர மான விசயம்” என்றான்.

“இந்த முகாமிலை பயிற்சி எடுக்கிறவை ஊருக்கு முதலில போகேலாது எண்டதுக்கு என்ன காரணம்? ”

“இது கழகத்தின்ர மூலோபாய தந்திரோபாய முகாம். இறுதித் தாக்குதலை மேற்கொள்ள பயிற்சி கொடுக்கிறம். இது வெளியில் போயிடக் கூடாது. இரகசியம் முக்கியம். அதாலதான்”.

“நான் பயிற்சி எடுக்கயில்லைத்தானே. நான் என்ரை முகாமுக்கு திரும்பி போறதிலை என்ன பிரச்சினை” என -ஏற்கனவே பதில் பொதிந்திருந்த- சேகரின் விளக்கத்தை அப்பாவித்தனமாக ஊடறுக்க நினைத்தான் ஜோன். புன்னகையை பதிலாக்கிவிட்டு அகன்றார் சேகர். ஜோனுக்கு தலைக்குள் அழுத்தம் அதிகரித்தது. இதிலிருந்து விடுபடுவது எப்படி என யோசித்தான். அவன் புதிய உத்தியொன்றை கண்டுபிடித்தான்.

முன்னொருநாள் தொலைத் தொடர்பு முகாமுக்கு முதன் முதலில் வந்திருந்த சேகர் 'மோர்ஸ்' கருவியை யாரும் எதிர் பாராத விதத்தில் அடிக்கத் தொடங்கினார். பதிக்கு தனது மாணவர் களின் திறமையை நிரூபிக்கும் சவாலொன்று தலைக்குள் மின்னியிருக்க வேண்டும். அவரது ஏற்பாட்டின்படி சேகர் மோர்ஸ் கோட் கருவியை இயக்க, தோழர்கள் அதை சொற்களாக பெற்றுக்கொண்டு எழுத ஆரம்பித்தனர். இரண்டு ஆச்சரியங் களை சேகர் நிகழ்த்தினார். ஒன்று, அவருக்கு இராணுவ பயிற்சி முறைகள், முலோபாய தந்திரோபாயங்கள் மட்டுமல்ல, மார்க்சிய மும் தெரிந்திருந்ததாக வைத்திருந்த மதிப்பீட்டை, "இதுவும்கூட தெரிந்திருக்கிறது பாருங்க" என்றவாறாக மேலும் உயர்த்திக் காட்டியது. இரண்டாவது அவர் அதிலிருந்து நிமிடத்துக்கு 70 சொற்களுக்குமேல் வெளியேற்றிக் காட்டிய வேகம். அதை முழுவதுமாக பின்தொடர்ந்து சொற்களாக பெற்றுக்கொள்வதில் பலருக்கும் முடியாமலிருந்தது.

"உங்களுக்கு இதுவும் தெரியுமா" என வாய்பிளந்து கேட்ட தோழர்களுக்கு, "ஆமா நான் இந்திய நீர்முழ்கிக் கப்பலில வேலை செய்தனான்" என்றார்.

"அப்ப ஏன் விட்டிட்டு வந்தீங்க?"

"எனக்கு விபத்தொன்றில பலத்த காயம் ஏற்பட்டிச்சு. தொடைப் பகுதியில சத்திரசிகிச்சை செய்ஞ்சு தகடு வைச்சிருக்கு, அதாலை எனக்கு பணி ஓய்வு கிடைச்சிது".

அவரை இன்னொரு சந்ததியாராக ஏற்கனவே பார்த்த ஜோனிடம் இந்த சம்பவம் மேலும் மதிப்பை உயர்த்தியிருந்தது.

இந்த விசயம் ஞாபகத்துக்கு வந்தது ஜோனுக்கு. அதன்போது மோர்ஸ் கருவியை இயக்குவதும் அதை சொற்களாகப் பெறுவதும் தொடர்ந்த பயிற்சியின் மூலமே சாத்தியம் என சேகரும் சொல்லிச் சென்றதை நினைவுபடுத்தினான். அதைவிட சேகருக்கும் தொலைத் தொடர்பு முகாம் பொறுப்பாளர் பதிக்கும் ஏற்கனவே ஒத்துவருவதில்லை என்பது அவனுக்கு தெரிந்திருந்தது. இந்த இரண்டையும் தனது அஸ்திரமாகப் பயன்படுத்தும் முயற்சியில் இறங்கினான் ஜோன்.

"நான் ரண்டு கிழமை தொலைத்தொடர்பு முகாமுக்கு போயி ட்டு வாறன். மோர்ஸ் கருவியிலை பயிற்சி இல்லாமல் போயிடும்

எண்ட அச்சம் வருது. அதாலை பயிற்சி செய்திட்டு திரும்பி வாறன்'' என்றான்.

அவனுக்கு கொடுக்கப்பட்ட வேலைகளும் முடிந்திருந்தன. அவன் சொல்லும் நியாயமும் ஏற்கக்கூடியது என்று கருதிய சேகர், தானே அவனை தனது மோட்டார் சைக்கிளில் தொலைத் தொடர்பு முகாமுக்கு கொண்டுபோய் விட்டார். ஜோன் வந்தவுடன் பதி உட்பட எல்லோரும் அந்த முகாம் பற்றி அறியும் ஆவலில் அவனை சூழ்ந்துகொண்டனர். சேகரின் அறிவுறுத்தலுக்குப் பணிந்து சுய தணிக்கையோடு சிலவற்றை சொன்னான். இன்னொரு பக்கம் சில விடயங்களை பூடகமாக அல்லது மறைவாக வெளிப்படுத்துவதன் மூலம் 'போராளி அந்தஸ்தை' உயர்த்திக் கொள்ளும் அவாவும் அவனுக்குள் இருந்தது. தன்னோடு பயிற்சி எடுத்த தோழர்களில் ஒரு பகுதி யினர் ஏற்கனவே தளத்துக்கு அனுப்பப்பட்டு விட்டனர் என்பதை அவன் அறிந்தான். அவர்களுள் யோகனும், லியோவும், சிங்கப்பூரும் அடங்கியிருந்தனர்.

ஜோன் பதியை தனிய சந்தித்து தனது இக்கட்டான நிலை பற்றி சொன்னான். ''நான் தொலைத்தொடர்பு பிரிவை விட்டு போக துப்பரவுக்கு விருப்பமில்லை. சொல்லப்போனால் அதை நான் காதலிக்கிறன்'' என்று ஒரு பளபளப்பான அம்பை எய்தான்.

''உம்மை தொலைத்தொடர்பு பிரிவிலிருந்து வெளியே போக ஒருக்காலும் விடமாட்டன். நீர் எனக்கு வேணும். அடுத்த குரூப்பை தளத்துக்கு அனுப்ப இருக்கிறன். அதிலை நீரும் போகலாம். நான் பெரிசோடை கதைக்கிறன்'' என்றார் பதி. அவரது முகம் கடுப்பேறி இருப்பதைக் கண்ட ஜோன், தனது உத்தி செயற்படத் தொடங்கியது குறித்து உள்ளுக்குள் மகிழ்ச்சியுற்றான். அதேநேரம் ''பெரிசு ஏற்குமா இதை'' என ஒரு நிச்சயமற்ற தன்மை யுடனும் இருந்தான்.

## 26

இப்போ அருகிலிருந்த டிஸ்பென்சரி கட்டடத்தை கழக இராணுவப் பிரிவு எடுத்துக் கொண்டிருந்தது. அதற்குள் கமாண்டோ பயிற்சி முடித்த முதல் இருபது பேருக்கு தொலைத் தொடர்பு பற்றிய அடிப்படை வகுப்புகளை எடுக்கும் ஒழுங்கு செய்யப்பட்டது. இப்போ நுளம்புத் தொல்லைக்கு டிஸ்பென்சரி

மொட்டைமாடி மேல் ஏறி படுக்க தொலைத்தொடர்பு முகாம் போராளிகள் அனுமதிக்கப்பட வில்லை. கமாண்டோக்கள் தொலைத் தொடர்பு முகாமுக்கோ அல்லது தொலைத்தொடர்பு முகாம் தோழர்கள் டிஸ்பென்சரிக் கட்டடத்துக்கோ அதாவது கமாண்டோக்கள் இருக்கும் இடத்துக்கோ செல்ல அனுமதிக்கப் படவில்லை. ஆனால் தொலைத்தொடர்பு முகாமைச் சேர்ந்த பயிற்சி முடித்த தோழர்கள் அதை அண்டிய பகுதிகளுக்கு முகாமைவிட்டு வெளியே தேவைகள் கருதி செல்ல அனுமதிக்கப் பட்டனர். அவர்கள் கமாண்டோக்களை காண நேர்வதும் சிலவேளைகளில் பேச முடிவதும் சாத்தியமாகவே இருந்தது.

ஒருநாள் ஜோன் பெண்கள் முகாமுக்கு வெளியில் நின்று கதைத்துக் கொண்டிருந்தான். அவர்கள் சுடுதல் பயிற்சியை முடித்துவிட்டு வந்தபின், இப்போதான் முதன்முதலாக ஜோனை சந்திக்கின்றனர். அந்த அனுபவங்களை இதரா சுவாசியமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள். திடீரென அருகிலிருந்த டிஸ்பென்சரி கட்டடத்தில் அமளியாக இருந்தது. வாகன சத்தங்கள் கேட்டன. பெரிசு பாதுகாப்புக்கான படைசூழ கமாண்டோக்களை சந்திக்க வந்திருந்தார். வழமைக்கு மாறாக அந்தக் காட்சி இருந்தது. அவர் கமாண்டோ சீருடையுடன் வந்தார். அவருக்கு முன்னும் பின்னுமாக இரு ஜீப் வண்டிகளும் இடையில் மோட்டார் சைக்கிள்களும் நடுவில் பெரிசின் மோட்டார் சைக்கிளும் என ஒரு ஊர்வலம் போல் வந்தார். அவரே ஒரு 'றேசிங் மொடல்' மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தார். கந்தசாமியும் வந்திருந்தான்.

ஜோன் அவசரமாக தனது முகாமுக்கு திரும்பினான். தான் கண்ட காட்சியை தோழர்களிடம் சொன்னான். சிலவேளை அங்கும் தம்மை பார்க்க வரலாம் என்பதால் முகாம் உசாரடைந்து துப்புரவு பணிகளிலும் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்துவதிலும் தடாலடியாக இறங்கியது. ஆனால் அவர்கள் வரவில்லை.

பெரிசு கமாண்டோக்களை சந்திக்கச் சென்றபோது, அங்கு வகுப்பு கரும்பலகையில் "தண்ணீரிலே மீன் அழுதால் கண்ணீரினை யார் அறிவார்" என்ற வாசகத்தை யாரோ எழுதி விட்டிருந்தார்கள். அதைப் பார்த்த பெரிசு ஒரு புன்னகையை மட்டுமே வெளிப்படுத்தியது. யார் இதை எழுதியது என கேட்கவேயில்லை. அவர்கள் திரும்பவும் ஒரத்தநாடு மொட்டைமாடி அலுவலகத்துக்கு திரும்பிப் போன சில மணி

நேரத்தில் கந்தசாமி மோட்டார் சைக்கிளில் வந்தான். கமாண்டோ கட்டடத்துள் நுழைந்த அவன் அந்த வசனத்தை எழுதிய தோழரோடு வெளியே வந்தான். அங்கும் ஒற்றனொருவன் செயற் பட்டிருந்தான் என்பதை உங்களாலும் ஊகிக்க முடிந்திருக்கும்.

பிடிபட்டவன் எர்னெஸ்ரோவுடன் தேனீ முகாமில் பயிற்சி எடுத்தவன். அவனது நெருங்கிய தோழனும்கூட. அவன் இனி திரும்பப் போவதில்லை என்ற முடிவுக்கு ஜோனும் எர்னஸ்ரோ வும் வந்திருந்தனர். ஆனால் மூன்று நாட்களின் பின் அவன் ஒரு கை கழுத்தில் துணியால் தொங்கவிடப்பட்ட நிலையில் கைக்கட்டோடு திருப்பி கொணர்ந்து விடப்பட்டான். தலைமயிர் பரட்டையடித்திருந்தது. முகத்தை பேயறைந்து மகிழ்ச்சியை கொன்று போட்டிருந்தது. சோர்ந்துபோய்க் காணப்பட்டான். தான் கந்தசாமியோடு அலுவலகத்துக்கு போனபோது, மோட்டார் சைக்கிள் விபத்துக்கு உள்ளாகி தனக்கு கையில் அடிபட்டு விட்டதாக எல்லோரிடமும் சொன்னான்.

இயக்க நிலைமைகளை ஊகித்தறிந்தவர்களுக்கு அவன் எதை சொல்லமுடியாமல் இருக்கிறான் என்பதை வாசித்துக் கொள்வது சுலபமானது. எர்னெஸ்ரோவிடம் அவன் பின்னர் உண்மையில் தனக்கு நடந்தவைகளை சொன்னான். வெளியில் தெரிந்தால் தான் உயிரோடு இருக்க முடியாது என்ற கந்தசாமியின் எச்சரிக்கையை சொல்லி, யாருக்கும் சொல்லிவிடாதே என மன்றாடினான். எர்னெஸ்ரோ ஜோனிடம் இரகசியமாக இதைச் சொல்லிவைத் தான். அழைத்துச் செல்லப்பட்ட கமாண்டோ தோழனின் அண்ணன் கந்தசாமியின் நண்பன் என விசாரணையின்போது தெரியவந்ததால், அவன் உயிரோடு தப்பிவந்தான். இந்த விசயம் நாளடைவில் மெல்ல மெல்ல இன்னும் சிலருக்கு தெரியவந்து விட்டது. மோட்டார் சைக்கிள் சத்தம் என்பது ஒரு உளவியல் பேயாக அவர்களிடம் தோன்றிக்கொண்டிருந்தது.

அடுத்த தொகுதி தொலைத்தொடர்பு பயிற்சியாளர்கள் இப்போ பயிற்சியைப் பெற்றுக்கொண்டிருந்தனர். அவர்களுள் ஜோனின் நண்பனும் தோழனுமான அன்பு இருந்தான். அன்பு உம் ஜோனும் தளத்தில் அரசியல் பிரிவில் வேலைசெய்தவர்கள். இருவரும் மீண்டும் இணைந்தது குறித்து மகிழ்ச்சியடைந்தனர். அன்பும் ஜோனும் இயக்கத்தின் உள்ளே என்ன நடக்கிறது என்பது குறித்து தாம் அவதானித்தவை, அறிந்தவையை வைத்து இரகசியமாக பேசிக்கொள்வது வழமையாகியது. தான் மொட்டை மாடியில்

நின்றபோது அங்கு சிவனேஸ்வரமூர்த்தி தளத்திலிருந்து வந்த தாக சொன்னான் அன்பு. அவன் முகத்தில் சந்தோசம் ஏதும் இருக்கவில்லை என்றான். அன்புவுக்கு ஏற்கனவே அவனை தெரிந்திருந்த போதும், அவன் அன்புவை தெரியாதவன் போல் நடந்துகொண்டான். ஏதோ வில்லங்கம் என்பதை அன்பு ஊகித்த படியால் அவனும் பேசாமல் இருந்துவிட்டான். நெடுநேரமாகக் காத்திருந்த சிவனேஸ்வரமூர்த்தியை உளவுப்படையைச் சேர்ந்த ஒருவன் அழைத்துச் சென்றான். பின்னர் அவனை காணவில்லை. அவன் களத்தில் வேலைசெய்த ஒரு போராளி. இராணுவ ரீதியிலும் அவன் திறமைசாலி எனப் பேசப்படுவதுண்டு. சில நாட்களின் பின் அவன் விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்யப்பட்டு கொலையுண்டான் என்ற இரகசிய செய்தி கசிந்து வந்தது. கேள்விப்படுபவைகள் மேன்மேலும் இயக்கம் குறித்து எதிர் நிலைக்கு ஜோனை இட்டுச் சென்றுகொண்டிருந்தது. அதன் அடித்தளம் அவன் முதன்முதலில் பயிற்சிக்குப் போயிருந்த Bமுகாமில் (ஆரம்ப முகாமில்) போடப்பட்டுவிட்டது.

இரண்டு கிழமைகள் போய்விட்டிருந்தது. சேகர் தேடி வந்தார். எதையோ சொல்லி சமாளித்தார் பதி. ''சரி இன்னும் கொஞ்ச நாளைக்கு நின்னிட்டு வாங்க'' என்றுவிட்டு சேகர் போய்விட்டார்.

தளத்துக்கு அனுப்பப்படப் போகிற அடுத்த குழுவில் ஜோனை சேர்த்து அனுப்பும் திட்டத்துடன் பதி இருந்தார். அது இழுபட்டுக் கொண்டிருந்தது. ஒரு மாலைப் பொழுதில் சேகர் மீண்டும் ஜோனைத் தேடி வந்தார். அன்று பதி முகாமில் நின்றார். சேகர் மோட்டார் சைக்கிளில் வருவதைக் கண்ட பதி, ஜோனை குசினிக்குள்ளிருந்த அரிசி மூட்டைக்குள் போய் ஒளிந்துகொள்ளச் சொன்னார். இச் சொல் பதியின் பலவீனத்தை அறிவித்தது. அதன் பிடியை தான் சரியாகவே கைப்பற்றியிருந்ததாக உணர்ந்த ஜோனுக்கு உளவியல் ரீதியில் பலம் ஏற்பட்டது. ''ஜோனை நான் ஒரு அலுவலாக ஒரு இடத்துக்கு அனுப்பியிருக்கிறன். அந்த வேலை முடிய உங்கடை காம்ப்புக்கு அனுப்பிவிடுறன்'' என்று பதி சேகருக்குச் சொன்னது ஜோனுக்கு கேட்டது. அந்த ஒரு இடம் எது, அந்த அலுவல் என்ன என்றெல்லாம் கேட்கக்கூடாது என்பது தலைமறைவு இயக்கத்தின் ஓர் அறமாக பேணப்பட்டதாலும், பதிக்கு பெரிசுடன் நெருக்கமான உறவு இருப்பது சேகருக்குத் தெரிந்ததாலும் அவர் எதையும் திருப்பி கேட்கமுடியாத நிலை இருந்தது. போய்விட்டார்.

கமாண்டோக்கள் தங்கியிருந்த டிஸ்பென்சரி கட்டடத்துக்கு அருகில் இன்னொரு சிறிய கட்டடம் வீதியோரம் இருந்தது. அது மின்சார வாரியத்தின் இணைப்பு நிலையமாக இருக்கலாம். எப்போதுமே பூட்டப்பட நிலையிலேயே இருந்தது. பின்புறமாக பஞ்சாயத்துத் தலைவரின் வளவு இருந்தது. ஜோனும் எர்னெஸ்ரோவும் இன்னும் ஒருசில தோழர்களும் குழுவாக நின்று கதைத்துக் கொண்டிருந்தார்கள். இரவு சுமார் 9 மணி இருக்கும். மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது. எல்லோரினது வார்த்தைகளும் ஒளித்துக்கொண்டன. சிரிப்புகள் காணாமல் போயின. தனது இதயத் துடிப்பின் ஒலியை ஜோன் கேட்டான். அருகில் வந்து நின்ற கந்தசாமி சுகம் வேறு விசாரித்தான். பஞ்சாயத்து தலைவரிடம் போய் ஒரு அலவாங்கும், மண்வெட்டியும் வாங்கி வரும்படி ஜோனை அனுப்பினான். இந்த நேரத்தில் போய் அங்கு இதை எப்படி கேட்பது, ஏன் என்று கேட்டால் என்ன பதில் சொல்வது, அதேநேரம் மறுத்தால் என்ன நடக்கும் என்ற கேள்விகளோடு ஜோன் தயங்கியபடி சென்றான். ஜோன் திரும்பி வருவதற்குள் ஒரு யுகம் நெளிந்து கொண்டிருந்தது. யாரையோ கொன்றுவிட்டார்கள் என்பதை அது மறைமுகமாகச் சொல்லிற்று. ஒருவேளை கொலைப் பயத்தை உளவியல் ரீதியில் இறக்குவதற்கான ஒரு உத்தியாகவும் அது இருக்கலாம் என ஜோன் எண்ணினான். மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்தவன் அலவாங்கையும் மண்வெட்டியையும் தாங்கிப் பிடிக்க மோட்டார் சைக்கிள் பாய்ந்து சென்றது. அந்த மோட்டார் சைக்கிள் இன்னொருமுறை உறுமலை விட்டுச் சென்றது.

கலக்கமுற்ற அன்றைய இரவில் பூனைக்குட்டி ஜோனின் மூளைக்குள் தூக்கம் கலைவதுபோல் உடலை நீளமாய் இழுத்து தலையை உயர்த்த எத்தனித்தது. பின் மெதுவாகப் படுத்து உறங்கியது. அதன் உறக்கத்தை கலைக்காதபடி தரையிலிருந்து மேலெழுந்த பறத்தல் நடையை பெற சிறகைத் தேடியது அவன் மனது.

மாலியுடன் அன்று தான் வழமைபோல் பேசியதையும் அவளது உடல்மொழியையும் இருண்ட மனதின் மூலையிலிருந்து வெளிவந்த ஓவியன் வரையத் தொடங்கியிருந்தான். உயிரை பாதுகாப்பதற்காக, உட்சுருங்கிப் போய்விட்டிருந்த அல்லது சொல்லப்படாமல் தான் ஒளித்துவைத்திருந்த இனிய உணர்வுகளை நிறங்களாய்த் தொட்டு அந்த ஓவியன் வரையத் தொடங்க,

அந்த இருளில் மாலி தீபமாக உருவானாள். இதயத்தின் எல்லா இருண்ட இடுக்குகளினுள்ளும் ஒளி பரவியது. ஆனாலும் கண்கள் நீர்க் கோடுகளை துளியுடைத்து வரைந்தது. தன்னை பாரமாக்கி வைத்திருக்கிற வார்த்தைகளை தனது மனத்தை திறந்து மழையாய்ப் பெய்யவும், அதில் நனைந்தபடி மாலியுடன் பேசிக்கொள்ளவும் அவன் கற்பனையை துணைக்கழைத்தான். அவனுக்கு ஆறுதல் மொழி தேவைப்பட்டது. ஓர் அருகாமை தேவைப்பட்டது. அவனது உடலும் உளமும் நுனிவிரல் தொடுகை யினூடாவது எதையோ பரிமாறத் துடித்தது. இவை எல்லாமும் மாலிக்கும் தேவையாக இருக்கக்கூடும். இல்லாமலுமிருக்கலாம். ''அவளிடம் எனது காதலை நேரடியாகப் பேசுவது சரியாக இருக்குமா. அவளுக்கு அப்படியொரு நினைப்பு இருப்பதாக எனக்கு எது சொல்லிவைத்தது. அப்படியொரு மனநிலையில் அவள் இல்லையெனில் அவளுக்கு ஏற்படப்போகிற மன வருத்தத்தை என்னால் எப்படி ஈடுசெய்வது. என்னை என்ன நினைப்பாள்'' என்று பலவிதமாக அறிவு கேள்விகளை பொரித்துக்கொண்டிருந்தது. அவை எழுந்து நடைபயிலத் தொடங்க, ஓவியன் போய்விட்டிருந்தான். உறக்கம் படலையை சாத்திவிட்டு விளக்கையும் அணைத்தது.

எதுவுமே தனது கையில் இல்லை என்ற நிச்சயமின்மையும், அது தரும் கலவை உணர்வும் கடலலையில் ஓர் மிதவையாக ஜோனை அலைக்கழித்தது. அது அவனது வாழ்க்கை குறித்தான ஒரு சிறு கனவைக்கூட இரக்கமின்றி அடித்து வீழ்த்தியது. மாலியை இதே ஆபத்தினுள் விட்டுவிட்டு நான் மட்டும் அங்கே போய் நிம்மதியாக இருக்க முடியுமா தெரியாது. நிச்சயமற்ற எனது காதலையும் நிச்சயமற்ற எனது உயிரையும் வைத்துக்கொண்டு எதன் பக்கம் நான் பயணிப்பது என ஜோன் தன்னிடமே விசாரித்தான். முதலில் இங்கிருந்து தளத்துக்கு போவதை சாத்தியமாக்க முயற்சிப்பது, பின் இயக்கத்திலிருந்து வெளியேறுவது என்பது கேள்விக்கிடமற்ற முடிவாக மேலெழுந்தது. ''எப்படியாவது ஊருக்கு போற அலுவலைப் பார். நாங்கள் வாறவரை அமைதியாக நடிச்சுக்கொண்டு இரு'' என்று அன்பு சொன்னான்.

தளத்துக்கு போகிற கனவின்மீது ஒரு பிரளயமாய் அந்த செய்தி வந்து இறங்கியது. பாண்டியின் வண்டி கடலில் அடிபட்டு பாண்டி தீயாகிப் போனான் என்ற செய்திதான் அது. முகாம் அதிர்ச்சியில்

அறையப்பட்டது. மறுநாள் திடீரென மோட்டார் சைக்கிள்களில் வந்திறங்கினார்கள் உமா மகேஸ்வரன், கண்ணன், காந்தன், கந்தசாமி இன்னும் இருவர். அந்த இருவரும் ஆயுதமேந்தியபடி முகாம் கொட்டிலின் இருபக்கமும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டனர். கந்தசாமியும் கையில் ஏகே-47 வைத்திருந்தான். பாண்டிக்கான ஓர் அஞ்சலி கூட்டம் திடீரென ஆரம்பமானது. அவர்கள் அஞ்சலி உரையை நிகழ்த்தினர். வார்த்தைகளில் புனித நீரைத் தெளித்தார் பெரியவர். முகாம் தோழர்கள் யாராவது பேசப் போகிறீர்களா என கேட்டார் காந்தன்.

ஜோன் பேச எழுந்தான். “நாமெல்லாம் பயிற்சி எடுத்து விட்டுத்தான் போராடப் போகிறோம். ஆனால் கடலில் வேலை செய்யும் தோழர்கள் இடையறாது எதிரியுடன் போராடிக் கொண்டே இருக்கிறார்கள். தரையில் இருப்பது போன்று கடலில் தப்புவதற்கான வழிவகைகள் குறைவு. ஆபத்தை எப்போதும் முகங்கொடுத்தபடி அவர்கள் செயற்படுகிறார்கள்.. இவளவு பெருந்தொகையான தோழர்களையும் இந்தப் போராட்டத்தினூடு தோழர் பாண்டி இங்கு பாதுகாப்பாகக் கொண்டுவந்து சேர்த்ததும், தளத்துக்கு கொண்டுபோய்ச் சேர்த்ததும் என்பது இலகுவான காரியமல்ல. அவன் சக தோழர்களின் உயிரில் தனது உயிரைக் கண்டவன். அவனது இடையறாத போராட்டக் களமாக கடல் இருந்தது. எப்போதுமே போராடிக் கொண்டிருந்த பாண்டிக்கு தோழர்களின் உயிர்மீதான அக்கறை மட்டுமல்ல, தமிழீழம் பற்றிய கனவும் நம்பிக்கையும், அதை அடைவதற்கான வழியில் தான் நிற்பதான உணர்வும் இருந்திருக்கும். வெறும் சொற்களால் அஞ்சலி செலுத்துவதல்ல எமது கடமை. எமது இலட்சியத்தை நாம் அடைவதில் உண்மையாகவும் நேர்மையாகவும் உழைப்பது தான் சரியான அஞ்சலியாக இருக்கும். அவனிடமிருந்த போராளியப் பண்புகளிலிருந்து நாம் பாடம் கற்கவும் வேண்டும். இதுவே எனது அஞ்சலி” என பேசிமுடித்தான்.

கூட்டம் முடிந்தபின் காந்தன் ஜோனை பார்வையால் உன்னிப் பாக அவதானித்துக்கொண்டு சென்றார். வளவைத் தாண்டும் வேளையில் எதையோ விட்டுச் சென்றதான பாவனையோடு காந்தன் முகாமுக்கு திரும்பி வந்தார். வந்தவர் ஜோனை தனியாக அழைத்து “நீங்கள் என்ன சொல்ல வாறியள் எண்டது விளங்குது. அவதானமாக இருங்க” என அக்கறையுடன் சொல்லி விட்டுப் போனார். பின் அவர்கள் பெண்கள் முகாமுக்குச் சென்றனர்.

# 27

*1985 ஜனவரி மாதம். இயக்கத்தின் மத்தியகுழுக் கூட்டம் ஒரத்த நாட்டில் பெரும் அமளியுடன் தொடங்கியது. உளவுப் படையினர் வீரம் கொண்டு புலிகளின் பெயரால் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்தனர். ஒரத்தநாடு தெருவின் தொடர் கடைகளுக்கு இடையி லும் ஆயுதத்துடன் சென்றிக்கு இருந்தனர்.*

*இக் காலப் பகுதியில் காந்தன் தொலைத்தொடர்பு முகாமுக்கு வந்திருந்தார். அவர் ஜோனை அழைத்து, "நாளைக்கு மத்தியகுழு கூட்டம் நடக்க இருக்கு. ஜனநாயகப்படுத்தலுக்கான எங்கடை முயற்சியள் மத்திய குழுவிலை தோற்றுப்போற பட்சத்திலை எங்களுக்கு அது உயிராபத்தாக வரலாம். அப்பிடியான நிலைமை வந்தால், நாங்கள் சிலர் தலைமறைவாக வேண்டி ஏற்படலாம். மிக ரகசியமா வைச்சிருங்கோ. மற்றவர்களுக்குத் தெரிய வேண்டாம். இரகசியத்தை கண்டிப்புடன் பேணுங்கோ. கவனமாக இருந்து கொள்ளுங்க" என்றார்.*

*இந்த புதிரான செய்தியை ஜோன் எதிர்பார்க்கவில்லை. உண்மையில் ஜோனுக்கு அவர்களது மத்தியகுழுவின் உட்கட்சிப் போராட்டம் என்ன என்பது பற்றி ஏதும் தெரிந்திருக்கவில்லை. ஜோனும் இன்னும் ஒருசில தோழர்களும் வெளிப்படையாகப் பேச முற்படுவதால் ஆபத்தை எதிர்கொள்ள நேரலாம் என காந்தன் தன்னளவில் அடையாளம் கண்டிருக்கக் கூடும். அதனால் இந்த எச்சரிக்கைப் படுத்தும் பொறுப்பு தமக்கு இருப்பதாகவும் உணர்ந்திருக்கலாம். ஜோனுக்கு அது கொஞ்சம் தோழமை வியப்பாகவும் இருந்தது. அவர்கள் எதையோ அச்சத்துடனும் திகிலுடனும் எதிர்பார்த்து காத்திருந்தனர். வலுவான ஆதாரங்களோ தீர ஆய்ந்துகொள்ளுதலோ இன்றி வெறும் ஊகம் மட்டுமே உளவுப்படைக்கு போதுமாக இருக்கிற நிலை இருந்ததை ஜோன் ஏற்கனவே அறிந்திருந்தான். அதனால் இவர்களது அச்சம் நியாயமாகவே பட்டது அவனுக்கு.*

*கூட்டம் முடிந்த ஓரிரு நாள். ஜோன் பெண்கள் முகாமின் முன்ற லில் நின்று பெண் தோழர்களுடன் கதைத்துக்கொண்டிருந்தான். மாலியும் நின்றிருந்தாள். தோழமை, காதல் இரண்டினது எல்லைக் கோட்டை கீறியபடியும் அழித்தபடியும் மாலி தன்னுடன் கதைப் பதாக தனக்கேற்ப அவளது வார்த்தைகளையும் உடல்மொழியை*

யும் வளைத்து அர்த்தமிட்டபடி இரசித்துக் கொண்டிருந்தான் அவன். இயல்பிலேயே அவள் பேசும்போது அவளது ஈரவழி களிலிருந்து ஊடுருவி வரும் புன்னகையும் இடையிடையேயான கண்சிமிட்டலும் இப்போ ஜோனுக்கு தனக்கானதாக மட்டும் தெரியத் தொடங்கியது. ஆனாலும் அதை காட்டிக்கொள்ளாமல் இருந்தான். தான் தளம் போகும் சாத்தியம் பெரிதாகத் தெரியத் தொடங்கியிருந்ததால், அவளை இந்த நினைப்புக்குள் இழுத்து துயரப்படுத்துவதை தவிர்க்க அவன் முடிவெடுத்திருந்தான்.

அந்தப் பொழுதில் ஜீப் வண்டியொன்று வேகமாக வந்து படலையில் நின்றது. கவ்போய்த் தோற்றத்தில் தேவன் குதித்து இறங்கினான். டெனிம் நீளக்காற்சட்டை அணிந்திருந்தான். இடுப்பில் பட்டையாகக் கட்டப்பட்டிருந்த பெல்ற் இல் பிஸ்ரல் இருந்தது. கவ்போய்த் தொப்பி அணிந்திருந்தான். “அந்த பறை வேசைமக்கள் தப்பி ஓடியிட்டாங்கள்... ஆஸ்பத்திரியிலை ஒருத்தி இருக்கிறாள். அவளை கண்காணிக்க வேணும். இரண்டு பேர் அவளோடை நிக்க வாங்கோ” என்று அவசரப்படுத்தினான். அவளுக்கான அடைமொழியையும் அவன் நாக்குரசிக் கொட்டினான். துரோகிகள் என்றெல்லாம் அவன் இயக்க மொழியில் திட்டவில்லை. தனது மொழியில் திட்டினான். ஜோன் நினைத்தபடியே, இரு பெண் தோழர்களையும் அவன் அழைத்தான். அவர்கள் அவசர அவசரமாகப் புறப்பட்டார்கள். தஞ்சாவூர் வைத்தியசாலையில் தொண்டையில் சத்திரசிகிச்சை செய்து வார்ட் இல் தங்கியிருந்தாள் இதரா. அவள் தப்பி ஓடிவிடாதபடி தாம் காவலாக இருக்கவும், அதன்மூலம் போராட்டத்துக்கு ‘தொண்டு செய்யவும்’ விருப்போடு சென்றார்கள் அந்த இருவரும். பெரியையாவின் விசுவாசிகளாக இருந்தவர்கள் அவர்கள் என்பதால், அவர்களை இதராவுக்குப் பிடிப்பதில்லை. வைத்தியசாலையில் இதராவுக்கு உதவியாக நின்றிருந்த எனர்ஸ்ரோ தொலைத்தொடர்பு முகாமுக்கு திருப்பி அனுப்பப்பட்டான்.

ஜோன் அவசரமாக முகாமுக்குத் திரும்பினான். நடந்ததை அறிந்து முகாம் பரபரப்பானது. தவறேதும் இழைக்காமலே பயப் படுவது என்பதற்குள் என்ன தர்க்கம் இருக்க முடியும். ஆனால் இருந்தது. “போராளிகளா குற்றவாளிகளா நாமெல்லாம்” என்ற வாறான சஞ்சலத்துள் முகங்களை பேயறைந்துவிட்டிருந்தது. சிரிப்பொலிகளை, பகடிகளை இந்தப் பேய் கொன்று போட்டி

ருந்தது. அடுத்தது என்ன. நடப்பதை எதிர்கொள்ள வேண்டியது தான் என்பதற்கு மேல் போகாதபடி ஜோன் தனது கற்பனையை கட்டிப் போட்டுவிட்டான். ஒருபுறம் சேகர் திரும்பவும் தன்னை கூட்டிப்போக வரலாம் என்ற நிலை. இப்போ பதியின் நிலைப் பாடு முன்னரைப்போல் தான் தொடருமா என்ற சந்தேகம், கடலின் ஒய்வற்ற போராளி கடலின் மைந்தன் பாண்டியின் வண்டி அடிபட்ட பின் இன்னமும் அடுத்த வண்டி கடலுக்கு போகாத நிலை, மத்தியகுழு உறுப்பினர்கள் ஓடியதால் இப்போ தைக்கு யாரையும் தளத்துக்கு அனுப்ப அவர்கள் பின்நிற்கலாம் என்ற ஊகம்... என எல்லாமும் தனக்கு எதிராகவே இருப்பதாக ஜோன் கருதினான்.

சிக்கிரி போர்ட் கொட்டகைக்குள் கயிற்றுக் கட்டிலில் தனி யாக இருந்தான் ஜோன். ஏற்கனவே தளத்துக்கு அனுப்பப்பட்ட வர்களில் யோகனும் போய்விட்டான். அவனின்றி அந்தக் கொட்டகை தனிமைப்பட்டிருந்தது. ஜோன் தனது தொலைத் தொடர்புப் பாட கொப்பியை படிப்பதுபோல் பாசாங்கு செய்ய கொட்டிலுக்கு எடுத்து வந்திருந்தான். போய்ச்சேராத ஒரு கடிதத்தையாவது அம்மாவுக்கு எழுத வேண்டும்போல் இருந்தது அவனுக்கு.

அம்மா,

என்னை மன்னித்துவிடு. நான் மக்களுக்காக போராட என்னை அர்ப்பணிப்பதாக எண்ணி உங்களையெல்லாம் விட்டு வந்து விட்டேன். அப்பா இல்லாத நிலையில் எமது குடும்ப பாரத்தை நீ சுமந்து எனை படிக்கவைத்து எதிர்பார்ப்புகளை உனக்குள் கனவாக பதிந்திருப்பாய். நானும் அப்படித்தான் ஓர்மமாக இருந்தேன். ஆனால் பிறகு எனது படிப்பு எனக்கு பொருட்டாக இல்லாமல் போயிற்று. 83 ஆடிக்கலவரம் முடிந்து நான் அகதியாய் ஊருக்கு கப்பலில் வந்தபோது "படிப்பு ஒண்டுமே வேண்டாம் நீ உயிருடன் இருந்தால் காணும்" என ஒரு தாயாக கதறினாய்.

சொந்த நாட்டில் ஒன்றரைமாத கால இரத்தமலானை முகாம் அகதிவாழ்வு என்னிடம் இயல்பு வாழ்க்கையை கேள்விகேட்டது. என்னுடன் இரத்மலானை விமான நிலையத்தில் அகதியாய் இருந்த எனது நண்பர்கள் கலவரம் முடிந்துவிட்டதாக நம்பி வெள்ளவத்தைக்கு ரக்சியில் போன

போது கொல்லப்பட்டார்கள். போராளிகளாக சொல்லப் பட்ட தலைவர்கள் வெலிக்கடையில் கொல்லப்பட்டார்கள். எனது நெருங்கிய நண்பனும் கல்லூரி வகுப்பில் எனக்கு அருகிலேயே நட்பை உரசியபடியே இருந்த சந்திரகுமாரும் அதில் கொல்லப்பட்டான். ஏற்கனவே 70 களில் தமிழர் விடுதலைக் கூட்டணி மேடைகளில் வண்ணை ஆனந்தன் வளர்த்த வெளவால்கள் எனது மனச்சோலையில் பறந்து கொண்டிருந்தன. சோசலிச தமிழீழம் ஒன்றை கனவு கண்டேன்.

பாடப் புத்தகத்தையும் சில கதைப் புத்தகங்களையும் அம்புலி மாமாவையும் செய்தித் தாள்களையும் ஜனரஞ்சக சஞ்சிகைகளையும் தாண்டி எனது வாசிப்பு இருக்கவில்லை. அரசியல் என்றால் தேர்தல் அரசியலைத் தவிர எதுவும் தெளிவாக தெரிந்திருக்கவில்லை. ஆனாலும் புரட்சி என்ற சொல் பிடித்திருந்தது. அது என்ன என்று தெரிந்திருக்கவில்லை. பிரபல கல்லூரியில் படித்தேன்தான். அங்கு சோதனைக்கான படிப்புக்கு வெளியே எந்த அறிவும் நான் பெறவில்லை. அதை அந்த ஆசிரியர்கள் தெரிந்து வஞ்சகம் செய்ததாகவும் நான் நினைக்கவில்லை. எனக்குள் ஏதோவொன்று திமிறிக் கொண்டிருந்தது.

கலவரம் நடந்து மாதங்கள் கடந்துபோக, படிப்படியாக தமிழ் மாணவர்களும், வகுப்பு சக மாணவர்களும் தொடர்ந்து படிப்பதற்கு மொரட்டுவவுக்கு போகத் தொடங்கினர். "நீ ஏன் போகவில்லை" என்ற உனது கேள்வியை நான் எவளவு காலம் எதிர்கொள்வது என்ற மனச்சங்கடம் இன்னொருபுறம் என்னை அவசரப்படுத்தியது.

எல்லாமுமாக, 'இயக்கத்துக்கு ஓடிவிடுவது' என்பதை ஊக்கு வித்தது. நான் சொல்லாமல் கொள்ளாமல் தானே புறப்பட முடியும். புறப்பட்டு வந்துவிட்டேன். என்னை மன்னித் துக்கொள்"

பேனாவை விரல்கள் சுற்றிக்கொண்டிருந்தன.

"நான் உன்னை திரும்பி வந்து பார்த்தல் சாத்தியமோ எனக்குத் தெரியாது. இந்த உலகத்தின் நரகத்தில் நான் வாழ விடப்பட்டிருக்கிறேனா என நினைக்கிறேன். உனது கனவு மட்டுமல்ல எனது கனவுகளும் நொருங்கிப் போய்விட்டன.

எனது எதிர்காலம் கேள்விக்குறியாகிவிட்டது. வாழ ஆசைப் படுகிறேன் அம்மா. இந்தக் கடிதம் கூட உனக்கு வந்துசேர ஏதுவழி என எனக்குத் தெரியவில்லை''.

இப்படித்தான் அவன் எழுதி முடித்திருக்க வேண்டும். ஆனால் அவன் இந்த கடைசிப் பத்தியை எழுதவில்லை.

''நான் இன்று ஒரு போராளி. நீ போராளியின் தாய். பெருமைப் படுவாய் என நம்புகிறேன். - மண்ணின் விடுதலையை நேசிக்கும் உனது மகன்''

என எழுதி முற்றுப்புள்ளி இட்டான். தனது தாயை மேன்மேலும் துயரப்படுத்த அவன் விரும்பவில்லை.

கொப்பியை மூடிவிட்டு கயிற்றுக் கட்டிலில் சாய்ந்தான் ஜோன். தாயின் மொழியில் அன்றி, அவனுள்ளிருந்து கலவரப்படும் ஒருவனின் மொழியில் கடிதம் இருந்தது. வடிந்து போய்க்கொண் டிருந்த துயரம் மெல்ல உலர்ந்துபோகவும், போய்ச்சேரா இந்தக் கடிதத்தை கசக்கி நிலத்துள் புதைத்து மூடினான்.

எல்லா பிரச்சினைகளுக்கும் தப்பியோடுதல் ஒரு வழிமுறை யாக இருக்க முடியாது. அதை எதிர்கொள்ள வேண்டிய இடங் களில் எதிர்கொண்டே ஆக வேண்டும் என்பதை அறிந்திருந் தாலும், அதை ஒரு போராட்டக் குணமாக வரித்துக் கொள்ளாத வனாக அல்லது அந்தத் துணிச்சல் அற்றவனாக இருந்த அவனை உணர்ச்சியும் உணர்வும் மட்டும் ஆட்கொண்டிருந்தன. அதற்கான சூழல் இல்லாமலுமிருந்தது என்பதையும் சேர்த்துக் கொள்ளலாமா என்பதை வாசகர்களாகிய நீங்கள் முடிவு செய்யுங்கள். விடுதலை அரசியலை புரிந்துகொள்ளாமல் ஒரு போராளியாக ஆவதிலுள்ள போதாமையின் சாட்சியாக அவன் கிடந்தான். இருந்தபோதும், சகமனிதரை நேசிப்பவராக, தனி மனித எல்லைக்கு அப்பால் தன்னை ஒரு கூட்டுமனிதராகவும் உணர்பவராக, அதனடிப்படையில் ஒடுக்கப்படுபவர்களை அதிகமும் நேசிப்பவராக, குரல்கொடுப்பவராக இருப்பவர்களில் அவனும் ஒருவனாக இருந்தான்.

அன்பு 'சிக்கிரி போர்ட்' க்கு வந்தான். காலையில் எழுந்ததி லிருந்து உறங்கும்வரை இயக்க அரசியலுக்கு வெளியே எதை அவர்கள் பேச முடியும். அவர்களின் உலகம் அதற்குள்ளேயே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

''எங்கடை சனம் விடுதலை அடையிறதுக்கு தகுதியில்லாத சனம். நாங்கள் உள்ளுக்கை காட்டுமிராண்டித்தனத்தோடை தான் இருந்திருக்கிறம் எண்டு தெரியுது. விடுதலைக்கெண்டு வெளிக்கிட்டு உள்ளுக்கை இருந்தவன், பக்கத்திலை நிண்டவன், எதிர்த்து நிண்டவன் எல்லாரையும் போட்டுத் தள்ளுற கூட்டம். இந்தக் கேட்டுக்கை எங்களுக்கு விடுதலை கேக்குது'' என்றான்.

இந்தக் கூற்றுக்குள் விடுதலை அரசியலை வார்த்து எமது முகத்தின் விம்பத்தைப் பார்த்தால் அது ஒரு வரலாறையே காட்டி விடுகிறது. ஆரம்பத்தில் காட்டுக்குள் ஒரு சிறிய குழுவாக இருந்த போது நடத்தத் தொடங்கிய துரோகிகள் அழிப்பிலிருந்து தொடங்கி, இயக்கங்களின் உட்கொலை ஊடாகப் பயணித்து, வைத்தியசாலைக்குள் வைத்து படுகொலை செய்ததிலும், 80 களின் நடுப் பகுதியில் கூட்டாக சக இயக்கத் தோழர்களை சுட்டுத் தள்ளி உயிரோடு ரயர் போட்டு எரித்ததிலும், பள்ளிவாசலுக்குள் தொழுகையில் இருந்தவர்களைப் படுகொலை செய்ததிலும், அனுராதபுரத்தில் சிங்கள பொதுமக்களை கூட்டாக சுட்டுத் தள்ளியதிலும், கந்தன்கருணைப் படுகொலையிலும், சுழிபுரத்தில் ஆறு இளைஞர்களை கொன்று புதைத்ததிலும், இயக்க உட்படுகொலையிலும் சமூகவிரோதி அழிப்பிலும் என தொடர்ந்த இயக்கங்களின் வரலாறு பூராவும் இந்தக் காட்டுமிராண்டித்தனம் தன்னை பலமுறை நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

''எங்கடை வாழ்க்கையை நாசமாக்கிப் போட்டம் மச்சான்'' என்றான் அன்பு.

''இந்த நாசமாப்போன தரப்படுத்தலைக் காட்டி எங்களையெல்லாம் கிளப்பிவிட்டிட்டாங்கள். ஆருக்குப் பிரச்சினை. கிழக்கு மக்களுக்கா, மலையக மக்களுக்கா அல்லது வன்னி மக்களுக்கா. அவங்களெல்லாம் தமிழரில்லையா. யாழ்ப்பாணத்தானுக்குத்தான் இதாலை பாதிப்பு. ஆனால் ஒட்டுமொத்தமா தமிழர் எல்லாரையும் இதுக்கை இழுத்துவிட்டிட்டாங்கள்'' என்றான் ஜோன்.

''நீ சொல்லிறதும் ஒரு பகுதியளவு சரியாக இருக்கலாம். ஆனால் போராட்டம் தனிய தரப்படுத்தல் பிரச்சினையாலை வந்தது எண்டு சொல்லேலாது மச்சான். அது ஒரு பக்கம் இருக்கட்டும். பிரதேசவாரியான தரப்படுத்தலிலை பாதிக்கப்பட்டது யாழ்ப்பாணத்தார் மட்டும் எண்டுறாய். ஆனால் நீ யாழ்ப்பாணத்தார்

எண்டிறது வேளாள உயர் சாதியைத்தான் எண்டு நினைக்கிறன். அந்த வேளாளிய சிந்தனை முறைக்கும் யாழ் மேலாதிக்கத்துக்கும் எதிராக நாங்கள் நிண்டுதான் ஆக வேணும். அதிலை பிரச்சினை இல்லை. ஆனால் நீ, சாதியப் புனிதங்களை தூக்கிப்பிடிச்சு ஆடுற வெள்ளாளர் மட்டும் யாழ் மாவட்டத்துக்கு சொந்தமானவங்கள் எண்ட தொனியிலை கதைக்கிறாய். அவங்களாலை ஒடுக்கப்படுற சாதியைச் சேர்ந்த மக்களும்தான் அந்த பிரதேசத்துக்கு சொந்தமான மக்கள். அந்த மக்களை உள்ளடக்கிப் பேசுறதை தவிர்க்கிறதுகூட ஒரு வெள்ளாள மேலாதிக்க மனநிலைதான்'' என்றவன்,

''அந்த மக்களின் பக்கம் நின்று பார்த்தால், எப்படி பிரதேச வாரியான தரப்படுத்தலை ஆதரிக்க முடியும். வேளாளிய ஆதிக்கத்தின் வீழ்ச்சிக்காக ஒடுக்கப்பட்ட மக்களைப் புறக்கணிப்பது அல்லது அவர்களின் கல்விவழி முன்னேற்றத்தை பலி கொடுக்கவும் தயாராவது என்ன நியாயம்'' என்று இடைவிடாது கதைத்தான்.

இப்படியும் ஒரு பக்கம் இருப்பதை கண்டுகொண்ட ஜோன், ''எனக்கு அப்படி ரண்டு நண்பர்கள் இருந்தாங்கள். எவளவோ தடைகளைத் தாண்டி உயர்தர வகுப்புவரை வந்தாங்கள். கம்பஸ்க்கு போற கனவோடை என்னைப் போலயே போராடினாங்கள். தோற்றுப்போனாங்கள்'' என்பதை ஞாபகப்படுத்தினான்.

''படிக்கிறதுக்கான வசதியளும் சூழலும் மட்டுப்படுத்தப்பட்ட அந்த நண்பர்களின்ரை போராட்டமும், உன்ரை போராட்டமும் ஒண்டில்லை'' என்றான் அன்பு.

''அதோடை கிளிநொச்சியும் அப்ப யாழ் மாவட்டத்துக்கை தானே இருந்தது. அதாலை கல்வி ரீதியிலை, ஒரு பகுதி வன்னி மக்களும் பாதிக்கப்பட்டாங்கள்... யாழ் மாவட்டத்துக்கை இருந்த விளிம்பு நிலை மக்களும் பாதிக்கப்பட்டாங்கள்...நடுத்தர வர்க்க கீழ்மட்டத்திலை இருந்தாக்களும் பாதிக்கப்பட்டாங்கள். இதுகளையெல்லாம் கண்டுகொள்ளாமல் 'பிரதேச வாரியான தரப்படுத்தலை' நீ ஆதரிச்சால் சாதி ரீதியிலை ஒடுக்கப்படுற மக்களுக்கும் விளிம்புநிலை மக்களுக்கும் ஆதரவாக கதைக்கிறதிலை அர்த்தமில்லை'' என பொரிந்து தள்ளினான் அன்பு.

''வட மாகாணத்துக்கை உள்ள கூலித் தொழிலாளர்களையும் சாதி ரீதியிலை ஒடுக்கப்பட்ட மக்களையும் பொறுத்தவரை

நீ சொல்லிறது சரி. ஆனால் ஒட்டுமொத்தமா பார்த்தால், வடமாகாணத்துக்கு வெளியே மலையகம் உட்பட பெரும் பான்மையான தமிழ் முஸ்லிம் மக்களுக்கு தரப்படுத்தல் கல்வி ரீதியிலை நன்மையாத்தான் இருந்திருக்கு" என்ற ஜோன்,

"அரசு இந்த முறையை சிங்கள மக்களுக்கான ஒரு கல்வி நிவாரணம் போலை மறைமுகமாக பாவிச்சிருக்கு. பெரும் பான்மை இனத்திலிருந்து குறைந்த வீதத்திலை மாணவர் களும் சிறுபான்மை இனத்திலையிருந்து கூடின வீதத்திலை மாணவர்களும் கம்பஸ் போறது எண்டது அவங்களுக்கு பிரச்சினைக்குரியதுதானே. பெரும்பான்மை மக்களை திருப்திப் படுத்த தரப்படுத்தல் ஒரு வழிமுறையாக இருந்திருக்கு" என்றான்

"உண்மை. பிரதேசவாரியான தரப்படுத்தல் எண்டது இனவாத தரப்படுத்தலை மறைக்க இலங்கை சோசலிச ஜனநாயகக் குடியரசு போட்ட வேஷம்".

எங்கேயோ தொடங்கிய உரையாடலை எங்கேயோ கொணர்ந்து நிறுத்தினான், அன்பு! அவன் கஸ்ரோவை நினைவுக்குக் கொண்டுவந்தான்.

வாயால் விசிலடித்து கூப்பிடும் சத்தம் கேட்டது. முகாமுக்கு விரைந்தனர் அவர்கள். பதி ஒரு நற்செய்தியுடன் நின்றார். ஜோன் தளத்துக்குத் போக அனுமதி கிடைத்த செய்திதான் அது. மகிழ்ச்சி அவனை உலுப்பி உலுப்பி கதை கேட்டது. அவன் பெண் தோழர் களுக்கு இந்தச் செய்தியை சொல்வதற்காக விரைந்தான். மாலியின் பிரதிபலிப்பை காணும் ஓர் கள்ளமனம் அவனுடன் துள்ளி ஓடிப் போனது. அவனது செய்தி பெண்தோழர்களை மகிழ்ச்சியிலும் அதேநேரம் கவலையிலும் ஆழ்த்தியது. தமது விலங்கு எப்போ கழற்றப்படும் என அவர்கள் அங்கலாய்த்திருத்தல் கூடும். தளத்தில் தொலைத் தொடர்பு வலையமைப்பை உருவாக்க வேண்டியிருப்பதால் பதி தன்னை அனுப்புகிறார் என ஜோன் ஒப்புவித்தான். மருத்துவமனையில் வேலைசெய்யும் தனது தாயாரை நினைவுபடுத்திய இதரா, "முடிந்தால் அம்மாவை சந்தியுங்கோ" என சொல்லி தனது கடைசி வார்த்தைகளை முடித்துக் கொண்டாள். தாயிடம் சொல்வதற்கான வார்த்தைகளின் தேர்வை அவள் ஜோனிடமே விட்டுவைத்தாள்.

அவன் கதைத்துக் கொண்டிருந்தபோது அருகில் மாலியின் முன்

இருந்த தாளில் ஒரு சூரியகாந்தி மரம் முளைத்து வளர்ந்திருந்தது, அது நுனிப் பூவுடன் கழுத்தை தொங்கப் போட்டபடி வாடிக் கொண்டிருந்தது. விரலிடுக்கில் பென்சிலை வைத்து உருட்டிக் கொண்டிருந்த மாலி, நிமிர்ந்து பார்த்தபோது அவளது விழிகளும் வாடியிருந்ததைக் கவனித்தான் ஜோன். இன்றும் அவளது விழி மடல் அவளையறியாலோ அல்லது அறிந்தோ வெட்டியதுதான். அதில் ஒளி வீசவில்லை. "இதென்ன இப்பிடி வாடிப் போய்ச்சு. தண்ணியைக் கொஞ்சம் காட்டிறதுதானே" என்று செடியைக் காட்டி ஜோன் சொன்னபோது, அவளது ஈரவிழிகள் கொஞ்சம் ஒளி வீசின. தனது இலட்சியவாத மூட்டையை மழையில் நனைத்து, சுமக்கமுடியாமல் சுமந்து சென்றான் அந்த முட்டாள் ஜோன்.

ஜோனும் ஈசனும், இரு மட்டக்களப்பு தோழர்களும் தளத்துக்கு செல்வதற்காக தொலைத் தொடர்பு முகாமிலிருந்து கோடியக் கரைக்கு அனுப்பிவைக்கப் பட்டார்கள். கோடியக்கரையில் முன்னர் வந்து இறங்கியபோது இருந்த கொட்டில் இப்போதும் இருந்தது. மீன் வாசனையை காற்று சுமந்துநின்றது. கடலலைகள் இந்த நரகத்திலிருந்து தப்பிப்போகும் எல்லையை காட்டி அழைத்துக் கொண்டிருந்தது. படகில் ஏறும்வரை எதுவும் நடக்கலாம். திருப்பி அழைக்கப்படலாம். பரபரப்பான மன அசைவுகளில் ஜோன் மிதந்துகொண்டி ருந்தான்.

அந்தக் கொட்டிலுள் மூட்டைகள் அடுக்கப்பட்டிருந்தன. அதன் மேல் ஒரு முழுப்பக்க கொப்பியை விரித்து வைத்தபடி அரசியல் துறைத் தோழர் ஒருவர் எதையோ எழுதிக்கொண்டிருந்தார். ஜோன் கடைக்கண் சாய்த்து எட்டிப் பார்த்தான். "மாண்புமிகு தோழர் உமா மகேஸ்வரனுக்கு" என அந்தக் கடிதம் தொடங்கி யதை கண்ட ஜோன் எச்சரிக்கையடைந்தான். கிழக்கில் அரசியல் பொறுப்பாளராக இருந்த அந்தத் தோழர் இயக்கத்தின் மத்திய குழுவிலும் இருந்தார். இப்போ கூட்டம் முடிந்து தளத்துக்கு திரும்புகிறார்.

நாம் தளத்துக்கு திரும்பும்போது தற்காப்பாக இரண்டு ஆயுதங் கள் தரப்பட்டிருந்தன. அது ஒழுங்காக வேலைசெய்யுதில்லை என புதிய ஓட்டி இயக்க நிர்வாகத்துக்கு தெரிவித்திருந்தான். வேறு ஆயுதங்கள் வரும்வரை நாம் பொறுத்துக்கொள்ள வேண்டும் என வண்டியோட்டி சொன்னான். பயணம் தடைப்பட்டிருந்தது. ஈசனும் இன்னுமொரு தோழரும் ஓரத்தநாட்டுக்கு சென்று நேரில் கதைப்பதென முடிவாகி கிளம்பிச் சென்றனர்.

சென்றவர்கள் எந்த ஆயுதத்தையும் கொண்டு வரவில்லை. இப்போ இன்னொரு சகதோழர் பாண்டியுடன் திரும்பி வந்தனர். பாண்டி தனது இணைபிரியா நண்பனாக இருந்த ஈசன் ஊருக்குத் திரும்பும்போது தான் முகாமில் தடைப்பட்டு இருக்க முடியாமல் அந்தரப்பட்டான். அவனுக்கு கொப்புளிப்பான் வருத்தம் வந்து சுகமடையத் தொடங்கி சில தினங்களே ஆகியிருந்தன. அவன் பதியிடம் தான் திரும்பி வருவதாக ஒரு உத்தரவாதத்தைக் கொடுத்து, வளைந்துநெளிந்து அனுமதியைப் பெற்றிருந்தான். குழுக்களாக பிரித்து தளத்துக்கு அனுப்பும் செயல்முறையில் பதி இருந்ததால் அவர் ஒரு நெகிழ்ச்சிப் போக்கை கடைப்பிடித்திருக்கிறார் என ஜோன் ஊகித்தான். இப்போ பாண்டியும் தளத்துக்கு திரும்பும் திடீர் மகிழ்ச்சியில் இருந்தான். ஒரத்தநாடு வாக்களித்தபடி இரண்டு நாட்கள் கடந்தும் ஆயுதம் வந்து சேரவில்லை. என்ன செய்யலாம் என்ற உரையாட லுக்குப்பின் தளத்துக்கு போவதென முடிவாகியது.

"இந்த சிறிய ரக ஆயுதங்களை வைச்சுக்கொண்டு நேவியின்ரை தாக்குதலுக்கு ஈடுகொடுக்கேலாது. அது வேலைசெய்யிறதும் வேலைசெய்யாமல் இருக்கிறதும் ஒண்டுதான். நேவி கலைச்சால் ஓடித்தப்புற வேலையைத்தான் பார்க்க வேணும்" என்றான் புதிய ஓட்டி.

எவளவு விரைவாக தளம் திரும்ப முடியுமோ அவளவு விரை வாக போவது ஒன்றே ஜோனின் ஏக்கமாக இருந்தது. புதிய ஓட்டி கடலின் மைந்தனான கழக ஓட்டி பாண்டிக்கு துணை ஓட்டியாக இருந்தவன். பாண்டியின் வண்டி அடிபட்டபோது அது தீப்பிடித்து எரிந்தது. பாண்டியும் மற்றைய தோழர்களும் அந்த இடத்திலேயே மரணத்தைத் தழுவினர். அதிஸ்டவசமாக, இவன் மட்டும் தப்பி பல மணிநேரம் நீந்தி இந்தியக் கரையை அடைந்திருந்தான். இப்ப இவன் ஓட்டியாக இருந்தான். இவன் ஓட்டியாக புறப்படும் முதலாவது பயணம் இது. அவனது அனுபவத்தில் ஜோனுக்கு நம்பிக்கை அதிகம் இருந்தது. பயணத்தின்போது பாண்டியின் வண்டி அடிபட்ட நீர்ச்சந்தியை அவன் அடையாளம் காட்டினான். அந்த குரூரத்தின் நினைவு மூச்சுக் காற்றுக்கு அர்த்தத்தை வழங்கியது. வண்டி கடந்து சென்றுகொண்டிருந்தது. விரிந்த நீர்ப்பரப்பில் காற்று மட்டும் சகவாசம் செய்துகொண்டிருந்தது. இருளை போர்வையாய் இழுத்துப் போர்த்தியிருந்த கடலின் நீர்ப்பரப்பு அவர்களின் பயணத்தில் தூரத்தை மட்டும் குறித்ததாக

இல்லை. அது மரண வாயிலைத் தாண்டிபோகும் ஓர் சாகசப் பயணவெளியாகவும் இருந்தது. கரும்புள்ளி தெரியுதா என எல்லோரும் 360 பாகையிலும் பார்வையை சுழற்றிக்கொண்டிருந்தார்கள்.

திடீரென எங்கோ தொலைவிலிருந்து எரியும் பிளம்பாக எறிகணைகள் அருகில் வந்து வீழத் தொடங்கின. கரும்புள்ளி எறிகணைகளை வீசத் தொடங்கியிருந்தது. வண்டி மிரண்டது. அது வேகமெடுத்து ஓட அதன் சுமையை குறைத்தாக வேண்டும். புத்தகக் கட்டுகளை அரக்கப்பரக்க தூக்கி கடலுள் வீசினார்கள். அதற்குள் தொலைத்தொடர்பு கருவிகளுக்கான துணைப் பொருட்கள் கொண்ட பொதியும் அகப்பட்டு கடலுள் வீழ்ந்தது.

கடல்-வண்டி-ஓட்டி இந்த முக்கோண சக்கரத்துள் உயிர் அல்லோல கல்லோலப்பட்டு புகலிடம் தேடி சுழன்றோடியது. அது பற்றிப் பிடிக்க ஒரு மந்திரக் கயிற்றைத் தேடிக் கொண்டிருந்தது. வண்டி தனது முழு வலுவோடு பறந்தது. நீர்ப்பரப்பிலிருந்து காற்றில் எழுவதும், சிறகற்ற பறத்தலினால் பின் வீழ்வதும், பாதை கிழிப்பதுமாக சாகசித்தது. எறிகணை வீழும் தூரம்  அதிகரித்துக்கொண்டு போக, அவர்களுக்கு பயம் குறைந்து கொண்டு போனது. உயிர் மந்திரக் கயிற்றைப் பிடித்து உடலுக்குள் திரும்பியது. ஜோனையும் ஈசனையும் வடபகுதித் தொலைத் தொடர்பு வேலைமுறைகளுக்கு பொறுப்பாக பதி புதிதாக நியமித்து அனுப்பிவைத்தார். தொலைத் தொடர்பு கருவிகள் சிலவற்றையும் கட்டி ஏற்றிவிட்டார். அதில் ஒரு பொதி இப்போ கடலினுள் போய்விட்டிருந்தது. ஆனால் ஜோனுக்கு அதுகுறித்து எந்த வருத்தமுமில்லை. கழகத்திலிருந்து அவன் தூரவிலகிக் கொண்டிருந்தான். ஊருக்குப் போய்ச்சேர்வது மட்டும் தான் அவனது இலக்காக சுருங்கியிருந்தது.

மிகத் தூரம் வந்துவிட்டார்கள். அடுத்த ஆபத்து கரையை அண்டி இருக்கவும் கூடும். கரையில் இயக்கத் தோழர்களின் "வோக்கி ரோக்கி" தொடர்பாடல் எல்லைக்குள் வண்டி நிதானமாக சத்தம் எழுப்பாதபடி நீரில் ஊர்ந்தது. கரையை அண்டிய பாதுகாப்பான சூழலை தளத் தோழர்கள் உறுதிசெய்தனர். நடுக்கடலில் தம்மைத் துரத்திய ஆபத்திலிருந்து மீண்ட நிம்மதியுடன் மாதகல் கரையில் போய் இறங்கினார்கள். அங்கு சில போராளிகள் வரவேற்கக் காத்திருந்தனர்.

## 28

*கடற்கரை மணலில் எனது பாதங்கள் மீண்டும் என் வேர்களுடன் பரவின. பெண் தோழர் ஒருவரின் தோளில் மட்டும் ஏ.கே 47 ரக துப்பாக்கி தொங்கிக்கொண்டிருந்தது. அந்தப் படங்காட்டலை அலட்சியமாக கடந்து போனேன். நாம் தோழர் ஒருவரின் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். எனது மூளையின் ஒரு மூலையில் உறங்கிக்கொண்டிருந்த பூனைக்குட்டி வலுவிழந்து கொண்டிருந்தது. அது பிராண்டும் சக்தியை இழந்து விட்டிருந்தது. ஆனாலும் அந்த குறையிரவு நித்திரைக்கு உரியதாக இருக்கவில்லை. நீண்டு போயிருந்தது. இன்பமும் துன்பமும் கலந்த அந்த இரவை நான் இரசித்தேன்.*

*காலையில் வடமராட்சி இராணுவப் பொறுப்பாளருடன் ஜீப்பில் ஊருக்கு பயணித்துக் கொண்டிருந்தேன். யன்னலுக்கு வெளியே கொஞ்சம் நீட்டியபடி இருக்கத்தக்கதாக துப்பாக்கி முனையை பிடித்துக்கொண்டு இருக்கும்படி அவன் சொல்லி யிருந்தான். அப்படியே போய்க்கொண்டிருந்தோம். துப்பாக்கி முனையை கண்கள் இரசித்தன. அது ஒரு மரணவாயிலாகவும், அதேநேரம் மரணவாயில் காவலாளியாகவும் மாறிமாறித் தெரிந்தது. இப்படியே படம் காட்டியபடி ஊரில் போய் இறங்கு வதை எனது சாகச மனம் இரசிக்கத்தான் செய்தது. கழுத்தில் அணிந்திருந்த மெல்லிய வெள்ளிச் சங்கிலியை சேர்ட்டுக்கு வெளியே எடுத்து விட்டுமிருந்தேன். நெல்லியடி சந்தியைத் தாண்டும்போது கொஞ்சம் முகம் தெரியும்படியாக எட்டியும் பார்த்தேன். எமது வாசிகசாலையில் போய் ஜீப் நின்றது. சிறுவர்கள் பெரியவர் என எல்லோரும் சுற்றிநின்றனர். உற்று உற்றுப் பார்த்தனர். புன்னகைத்தேன். எதுவும் பேசவில்லை.*

*துப்பாக்கியை பொறுப்பாளர் திரும்பப் பெற்றுவிட்டு தோளைத் தட்டியபடி விடைபெற்றுச் சென்றான். ஜீப்பில் வரும்போது அவன் "இந்த துவக்குக்கு என்ன பெயர் தெரியுமா" என கேட்டான். "நக்கலா" என்றேன். சிரித்துவிட்டு, "இது ஏகே 47 இல்லை. உலகம் சுற்றும் வாலிபன்" என்றான். "இந்த மாதம் இங்கு இருக்கும். அடுத்த மாதம் திருகோணமலை... பிறகு மட்டக்களப்பு... திரும்ப யாழ்ப்பாணம் என அது சுற்றிக்கொண்டிருக்கும். அதாலை இந்தப் பெயர்" என்றான். சவுக்கம் கொட்டனின் வாசம் மூளையில் மணத்தது. "அப்ப*

மாதகல் கரையில் பெண்போராளி தோளில் தொங்கிய ஆயுதமா இது'' என கேட்க தேவை எழவில்லை.

நான் நடந்து சென்றபோது ஒழுங்கையில் போவோர் வருவோ ரெல்லாம் நின்று நிதானித்துப் பார்த்தனர். நானோ அலைகொண்ட கடலை உள்ளுக்குள் விழுங்கிவிட்டிருந்தேன். அது சொற்களை மூழ்கடித்திருந்தது. தாங்கிப் பிடித்திருந்த ஆயுத வாடை என்னி லிருந்து அகன்று போய்விட்டிருந்தது.

''எங்கையடா அவன்... குறுக்காலை போவானே... எங்கையடா கொண்டுபோய் விட்டனி'' என்று தெருவின் புழுதிமணலை வாரி அள்ளி என்மேல் கொட்டி திட்டினாள் அவள். அவளது வரவேற்புச் சத்தம் கேட்டு ஒழுங்கையிலிருப்பவர்கள் திடீரெனத் தோன்றினார்கள். நான் அசையாது நின்றேன். மவுனமாக நின்றேன். தொலைந்து போனவன் திரும்பி வந்திருக்கிறான் என்ற பூரிப்பில் அவர்கள் வீசிய பார்வையின்மேல் புழுதி இறைந்தது. யாரும் எதுவும் பேசவில்லை. அவள் திட்டித் தீர்த்தாள். நான் வீடு நோக்கி நடந்தேன். அவளது இந்த வரவேற்புக்கு அவளளவில் நியாயம் இருந்தது. அவளது உறவினனையும் இன்னொரு இளைஞனையும் பின்தளத்துக்கு பயிற்சிக்காக அனுப்பியிருந்தேன். பிறகு நான் போனேன். என்னுடன் ஒரு விடலைப் பருவ இளைஞனையும் அழைத்துப் போனேன். அவர்கள் இன்னும் வீடு திரும்பவில்லை. அவர்கள் வரவுக்கு என்னால் உத்தரவாதமும் கொடுக்க முடிய வில்லை. ''வருவாங்கள்'' என தயாரிக்கப்பட்ட பதிலையே வைத்திருந்தேன். இப்போ என்னிடம் எஞ்சியிருந்த சாகசமும் குற்றவுணர்வாக உருமாறிக் கொண்டிருந்தது.

நான் புழுதியளைந்து வளர்ந்த முற்றத்தை பார்த்தபடி, படலை யைத் திறந்து தயக்கத்துடன் உள்ளே சென்றேன். வேப்பமரம் இல்லை. அது தறிக்கப்பட்டு அதன் பாதச்சுவடு மட்டும் எஞ்சி யிருந்தது. காணாமல் போன அந்த விருட்சத்தை நிமிர்ந்து பார்த்தேன். வானம் நிர்மலமாகத் தெரிந்தது. அம்மாவை எப்படி முகம் கொடுப்பது என்று கலவரப்பட்டது மனம். ''எங்களைத் தானே வேண்டாமெண்டு விட்டிட்டுப் போனவன்...'' என்றபடி அம்மா ஓடிவந்தாள். கட்டியணைத்து, பொருமி அழுதாள். எனது விழிகளில் எல்லோரும் கலங்கலாய்த் தெரிந்தனர். எனது தயக்கத்தை அம்மா கண்ணீரால் கழுவிக்கொண்டிருந்தாள்.

*"வேப்ப மரம்...?" என தயங்கியபடி கேட்டேன்.*

*சொன்னாள்!*

*தக்காளி, கீரை, மரவள்ளிக் கிழங்கு, வெங்காயம், மிளகாய் வாழைக்காய், கத்தரிக்காய் என விற்றுக்கொண்டிருந்த நிலையிலிருந்து, அம்மா எமது வேப்பமரத்தை விற்கும் நிலைக்கு 'முன்னேறியிருந்தாள்'. அப்போ என்னிடம் இரண்டு சோடி பள்ளி சீருடை இருந்தது. இப்போ என்னிடம் எந்த சீருடையுமில்லை.*

*மறுநாள் இதராவின் தாயார் வேலைசெய்துகொண்டிருந்த ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். முதன்முதலாக நாம் சந்தித்துக் கொண்டோம். தனது மகனை வரவேற்பது போல நெருக்கமாக சுகம் விசாரித்தார். "இதரா நலமே இருக்கிறாள்... எதுவித பிரச்சினையுமில்லை... படிப்படியாக அவர்கள் எம்மை ஊருக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் உங்கள் மகளையும் பார்க்கலாம்" என்று நிச்சயமற்றதை நிச்சயமாக்கிக் கதைத்தேன். அந்தத் தாயின் முகமலர்ச்சி எனக்குள் குற்றவுணர்வை எழுப்பி விட்டிருந்தது. விடைபெற்றுச் சென்றேன். கதவுவரை வந்து கதவைத் திறந்து வழியனுப்பி வைத்தார்.*

*நானும் யோகனும் கழக மோட்டார் சைக்கிளில் ஒவ்வொரு நாளும் கொக்குவில் புளொட் சந்திப்பு இடத்துக்கு போய் வந்தோம். "இருக்கிறேன் சேர்" என்பதுபோல அது வரவை பதிவு செய்தபடி இருந்தது. தொலைத் தொடர்பு முதன்மைப் பொறுப் பாளர் பதியின் கண்காணிப்பு என்னை எட்டியிருக்கவில்லை. அதனால் தரப்பட்ட வேலைத்திட்டத்தை நான் செய்யாமல் வாளாவிருப்பது இலகுவாகியது. தொலைத் தொடர்பு முகாமைச் சேர்ந்தவர்களை அரசியல் பிரிவினரோ இராணுவப் பிரிவினரோ கையாள முடியாது. வேலைமுறையில் அது தனித்து இயங்கியது. இது எமக்கு வசதியாகவும் சற்று பாதுகாப்பு உணர்வையும் தந்திருந்தது.*

*பின்தளத்தில் முன்னொருகால் தமிழீழத்தின் தொலைத் தொடர்பு வலையமைப்பை வரைய (டிசைன் பண்ண) வாகீசனையும் என்னையும் பதி நியமித்தது உங்களுக்கு ஞாபக மிருக்கலாம். அதற்கு என்ன நடந்தது என எனக்கும் தெரியாது. நான் வாகீசனிடம் போவதாகவும் இல்லை. பிறகு, தளம் திரும்பும்போது வடபகுதி தொலைத் தொடர்பு வலையமைப்பை தொடக்குவதற்கான பொறுப்பை பதி என்னிடமும் ஈசனிடமும்*

ஒப்படைத்திருந்தார். தளத்துக்கு போனால் போதும் என்ற ஏக்கத்துடன் இருந்த எனக்கு இச் செய்தி புறக்காதால் உள் நுழைய முயற்சித்தது. ஊருக்கு வந்தபின் எனக்கும் அவனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. என்போலவே அவனும் அரசியல் பிரிவுத் தோழர்களின் ஓய்வற்ற செயற்பாட்டின் மீதும் நம்பிக்கைகளின் மீதும் இன்னொரு உலகத்தை தரிசித்தான். இயக்கம் குறித்தான இந்த பிரமைகளை அவர்களிடமிருந்து அழித்தல் என்பது இலகுவானதல்ல. அந்தப் பிரமைகளை அழித்தல் என்பது அவர்களின் சந்தோசத்தை அழித்தலாக இருக்கும். அவர்களை விரக்திக்கு உள்ளாக்குவதாக இருக்கும். தனக்கு ஆபத்தைத் தேடிக் கொள்வதாகவும் இருக்கும் என்பதை ஈசனும் உணர்ந்தான். அதேநேரம் அந்த பிரமையின் பின்னாலுள்ள பயங்கரத்தை அவர்களுக்குத் தெரிவித்தாக வேண்டும். இல்லையேல் அது அவர்களை உயிராபத்து வரை கொண்டுபோய் விடலாம் என்று உணர்ந்தான்.

ஒரத்தநாட்டில் நடந்த மத்தியகுழுக் கூட்டத்தின்பின் வெளியேறிய மத்தியகுழு உறுப்பினர்களின் இடம் நிரப்பப்பட வேண்டியிருந்த காலகட்டம் அது. இந்தக் காலப் பகுதியில், கவனிப்புக்கு உள்ளான அரசியல் பிரிவுத் தோழர்களை தந்திரமாக பின்தளம் அழைப்பதற்கு தலைமை முயற்சித்தது. "தோழர் உமா மகேஸ்வரன் உங்களை நேரில் சந்திக்க விரும்பிறார். புதிய பொறுப்புகளை வழங்க இருக்கிறார்" என ஒரு செய்தியை இராணுவப் பிரிவினூடாக அது அனுப்பியிருந்தது. அந்தத் தோழர்கள் தமக்கான அங்கீகாரமாக அதைக் கருதலாம், போகும் விருப்புடன் இருக்கலாம், இனியும் பேசாமல் இருப்பது ஆபத்தானது என நினைத்த தோழர்கள் ஈசனும் பாண்டியும் எல்லாவற்றையும் போட்டுடைத்தனர்.

இதே காலப் பகுதியில் கிழக்கு மாகாண அரசியல் பொறுப்பாளர் செல்வனும் மூதூர் அரசியல் பொறுப்பாளர் அகிலனும் கழகத்தால் கொலைசெய்யப்பட்டனர். அது தமது பாதுகாப்புக் குறித்தான கேள்விகளை எழுப்பவும் அந்த அரசியல் பிரிவுத் தோழர்கள் தலைமறைவாகினர். அவர்களுடன் சேர்ந்து ஈசனும் பாண்டியும் தலைமறைவாக நேர்ந்தது. பாண்டி வெளிநாடு போனான். இந்த விசயம் எதுவும் எனக்கும் யோகனுக்கும் தெரிந்திருக்கவில்லை கொலைசெய்யப்பட்ட இரு தோழர்களும் ஓயாது இயங்கிய அரசியல் பிரிவுப் போராளிகள். அவர்களை

ஏன் கொன்றார்கள்? பின்தளத்திலிருந்து உளவுப்படையினர் வந்து கொன்றார்களா? பெரிசுக்கு இது எப்படி தெரியாமல் இருக்கும்? என்றெல்லாம் கேள்விகள் எனது மூளைக்குள் ஓடித் திரிந்தன. எல்லா உட்கொலைகளின் போதும் சுழலும் இந்தக் கேள்விகள் தேய்ந்து போய்க்கொண்டே இருந்தன. அவை விடை தேடலுக்கானதாக இல்லாமல் போய்விட்டிருந்தது. அவை ஒரே வட்டத்தை திரும்பத் திரும்ப கீறி மனித வாழ்வின் ஆதாரமான நம்பிக்கையை தேய்த்து அழிக்கத் தொடங்கியிருந்தது.

இக்கொலை குறித்து வெவ்வேறு விதமான ஊகங்கள் வெளிப்பட்டன. அவர்கள் விசாரணைக்காக பின்தளத்துக்கு வர பணிக்கப்பட்டதாகவும் அதை அவர்கள் மறுத்து தளத்திலேயே நின்றதாகவும் சொல்லப்பட்டது. பின்னர் பின்தளத்திலிருந்து உளவுப்படையினர் அங்கு கடல்வழி சென்று அவர்களை கொலை செய்ததாக ஒரு கதை அடிபட்டது. அவர்கள் கடத்தி வைக்கப்பட்டு தளத்திலுள்ள இராணுவப் பிரிவைச் சேர்ந்தவரால் கொல்லப் பட்டதாக இன்னொரு கதை அடிபட்டது. எது எப்படியோ புத்திசீவிப் பிரமுகர் ஒருவர் தோழர் செல்வனுடன் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு கொண்டிருந்தார் எனவும், அதனால் அவர் இக் கொலைக்கான அரசியல் வியூகத்தை இன்னொரு மத்தியகுழு உறுப்பினருடன் சேர்ந்து வகுத்தார் என்றே தெரிகிறது. அவரே நேரடியாக அந்த இரு போராளிகளையும் கடத்தினார் என்றும், அவரே சுட்டுக்கொன்றார் என்றும்கூட கதைகள் வந்தன.

கழகத்தில் பிந்திய காலத்தில் சேர்ந்த அந்த பிரமுகர் உமா மகேஸ்வரனின் விசுவாசியாக இருந்தார் அல்லது விசுவாசியாக நடித்தார் என்பது பலரும் அறிந்த விடயமாக அன்று இருந்தது. பின்னரான காலங்களில் அந்த பிரமுகர் புலி விசுவாசியாகவும் ஆய்வாளராகவும் மாறியிருந்தார் என்பதையும் அவர் நொந்து நொடிந்துபோன கழகத்தாலேயே கொலை செய்யப்பட்டார் என்பதையும் ஊடகங்கள் செய்திகளாக பரப்பி விரித்திருந்தன. இதை நீங்கள் அறிந்திருக்கவும் கூடும்.

அரசியல் பிரிவுத் தோழர்கள் சிலரும் ஈசன், பாண்டி ஆகியோரும் தலைமறைவான விடயத்தை அறிந்திராத நிலையில் எமது அரசடி சந்திப்பு மையத்துக்கு சென்ற நான் அங்கு எவரையும் காணாமல் போக, அருகிலுள்ள பஸ்நிலையத்திற்கு சென்றேன். அங்கு டாக்குத்தன் (லியோ) ஒரு பெரிய பயணப் பையுடன் கொடிகாமம் பஸ் தரிப்பிடத்தில் நின்றிருந்தான். அவனது விழிகள்

தாழ்ந்து உயர்ந்தன. சொற்களை உற்பத்தி செய்து கதைத்தான். தான் தொலைத்தொடர்பு அலுவலாக வன்னிக்கு செல்வதாக அந்த சொற்கள் எனது அப்பாவித்தனத்தின் மீதோ அல்லது அவன் மீதான என் நம்பிக்கையின்மீதோ கூடுகட்டி அமர்ந்தன. சந்தோசமாக வழியனுப்பி வைத்தேன். ஆனால் அவன் வெளிநாடு போய்விட்டான். காலம் அந்தக் கூட்டை பிய்த்தெறிந்து அந்த சொற்களை கொன்று போட்டிருந்தன. ஏற்பட்டிருந்த புதிய ஆபத்தை அவன் அறிந்திருந்தும், ஏன் எமக்குச் சொல்லாமல், தான் மட்டும் தப்பிப் போனான் என்ற ஏமாற்றம் எனது இதயத்தை சிலுவையில் அறைந்தது.

புதிய கொந்தளிப்பான நிலைமையை அறியாது நானும் யோகனும் வழமைபோல் கொக்குவில் போனோம். கழக இராணுவப் பிரிவினரின் கைக்கு மாறியிருந்த கொக்குவில் சந்திப்பு மையத்தில் அன்று வழமைக்கு மாறாக அதிகம் பேர் நின்றார்கள். நடமாட்டம் வித்தியாசமாக இருந்தது. நானும் யோகனும் மெல்ல மோட்டார் சைக்கிளை திருப்பியபடி புறப்பட ஆயத்தமானோம். எங்களை மறித்த இராணுவப் பொறுப்பாளன் “உங்கள் இருவரிலும் விசாரணை இருக்கு. சில அசம்பாவிதங்கள் நடந்திருக்கு. அதுசம்பந்தமாக விசாரணைக்கு வரவேண்டியிருக்கும்” என இயல்பாகக் கதைத்தான். கையில் பிஸ்ரல் வைத்திருந்தான். அருகிலிருந்த வெள்ளை நிற வேனில் ஒரு கையை உயர்த்தி வைத்து ஊன்றியபடி சாய்ந்து யோகன் நின்றான். அவனின் கைவிரல்கள் மெல்ல நடுக்கமுற்றதை நான் அவதானித்தேன்.

“ஒரு பிரச்சினையுமில்லை தோழர். நாட்டின் விடுதலைக்காக நாம் எல்லாத்தையும் விட்டிட்டு வந்தனாங்கள். எங்களளவில் நாங்கள் நேர்மையாகவே இயங்கிறம். இயக்கத்தைப் பொறுத்தள வில் பிரச்சினைகள் வந்தால் அதை விசாரித்து தீர்க்கத்தானே வேணும். அதை நாம் புரிஞ்சுகொள்ளிறம். எப்பவெண்டு சொல்லி யனுப்புங்க. நாங்க வாறம்” என்று நான் சோடித்தேன்.

அவர்களின் அவசரம் வேறு இடங்களில் இருந்தது. ‘துரோகிகளை’ தேடியது. ‘உங்களை பிறகு பார்த்துக் கொள்ளலாம்’ என்றவாறாக அது எம்மை போக வழிவிட்டது. அது இயக்கத்தைவிட்டு ஓடிய மத்தியகுழு தோழர்களையும் அவர்களோடு இணைந்த அரசியல் பிரிவுத் தோழர்களையும் துரோகிகளாக தீர்த்திருந்தது. மோட்டார் சைக்கிளை ஓட்டிய நான்

யோகனிடம் "கொக்குவிலை கடைசி முறையாக வடிவாகப் பார்" என்றேன். ஊருக்குப் பறந்தோம். எல்லா நம்பிக்கைளும் முழுவதுமாக பொய்த்துப் போயிருந்தன. யோகன் வெளிநாடு போனான். அவன் தயக்கத்துடன் விடைபெற்றபோது "போய் வா மச்சான். ஏன் ரண்டுபேரும் சாகவேணும். நீயாவது தப்பு" என சொல்லி அனுப்பி வைத்தேன். உயிருக்கு உத்தரவாதமற்ற வெளியில் அநாதையாக விடப்பட்ட நான் -தவிர்க்க முடியாமல்- நடப்பது நடக்கட்டும் என நினைத்தேன். மரணத்தை எதிர்கொள்ள தயாராகவிருந்தேன் என நீங்கள் அதை மொழிபெயர்த்துக் கொள்ளலாம். அதுவும்தான். அதேநேரம் நான் வாழ்ந்து பார்க்க வும் ஆசைப்பட்டேன்.

"கவனமா இருந்துகொள் மச்சான். வேறை எதைச் சொல்ல" என்று அவன் சொன்னபோது அவனது வழமையான புன்னகை அணைந்துவிட்டிருந்தது. கையசைத்து வழியனுப்பினேன்.

பின்தளமும் தளமும் இருவேறு உலகமாக இயங்கியதைக் கண்டேன். எனது நிலையை பகிர யாருமில்லை. என்னுடன் முன்னர் சேர்ந்து இயங்கிய எனது ஊர் நண்பர்களிடம் நட்பை விட, தோழமையை விட இயக்கப் பற்று மேலெழுந்து நின்றது. என்னை விட, அவர்கள் இயக்கத்தை நம்பியதுபோல் பட்டது. இருந்தாலும் வேறு வழியில்லை. மெல்ல மெல்ல பின்தள நிலைமையை சொல்லத் தொடங்கினேன். அதிர்ச்சி அவர்களை ஆட்கொண்டது. இடிந்துபோய் விட்டார்கள். துவாய்க் கிருஸ்ணா வையும் இன்னும் சில தோழர்களையும் அம்மன் கோவில் மடத்தில் வைத்து சந்தித்து, இந்த இழவுச் செய்தியை அவிழ்த்துக் கொட்டினேன். துன்பம் தாங்க முடியாமல் "ஐயோ" என தலையிலடித்து அழுதான் கிருஸ்ணா. எதிர்பாராமல் நிகழும் தாயின் மரண வீட்டில் படும் துயராக, ஒரு குழந்தைபோல் புலம்பி அழுதான். இயக்கத்தில் சேர்ந்ததிலிருந்து குடியை நிறுத்திய அவன் பின்னரான காலத்தில் நிறை போதையில் என்னை வந்து சந்திக்கத் தொடங்கியிருந்தான். பின் அவன் கனடா போய்விட்டான்.

எனது வீட்டில் பாதுகாப்புக் காரணத்துக்காக உறங்க முடியாது என அம்மாவிடம் சொல்லி வைத்தேன். யாரிடமிருந்து பாதுகாப்பு என நான் சொல்வதாயில்லை. அம்மாவை கலவரப்படுத்த நான் விரும்பவில்லை. இலங்கை இராணுவத்திடமிருந்துதான் பாதுகாப்பாக இருக்க விரும்புகிறேன் என அம்மா நினைத்தாள். நான் ஊரில் நின்ற ஆறு மாத காலப் பகுதியில் ஒருசில நாட்கள்

மட்டுமே வீட்டில் உறங்கினேன். இந்த நாட்களில் அம்மா விடியும்வரை எனது தலைமாட்டில் குந்தியிருந்தா. மிகுதி நாட்களில் எனது நண்பர்களும் தோழர்களுமான மூவர் எனக்குத் துணையாக படுத்தனர். அவர்களுக்கு எந்த ஆபத்தும் இயக்கத்தால் இருக்கவில்லை. மாறாக என்னுடன் பிடிபட்டால்தான் அவர்க ளுக்கு ஆபத்து வரும் என்றபோதும் அவர்கள் என்னை தனியனாக அலையவிடாமல் துணையாக இருந்தனர். நாம் ஆரம்பத்தில் பக்கத்து ஊருக்குள் இருந்த சிறிய கோவில்களில் போய்ப் படுக்க ஆரம்பித்தோம். அது பாதுகாப்பானதாக தெரியவில்லை. பிறகு சுடலையைச் சுற்றியிருந்த வெவ்வேறு தோட்டத் துரவுகளில் அதன் நீர்த் தொட்டிகளில் படுத்துறங்கினோம். அதன் குளிர்மை இதமாக இருந்தது. புகையிலையின் பச்சை வாடை பழகிப் போனது. நாய் குரைக்கும் சத்தம் கேட்டால் மெதுவாக எழுந்து அருகிலுள்ள சுடலைக்குப் போய் அதன் பாழடைந்த மண்டபத்துள் ஒளித்துக்கொள்வோம். இரவு நேரங்களில் அந்த வீதியால் யாரும் வருவதில்லை. பேய் பிசாசு எமக்குப் பாதுகாப்புத் தந்தது. பின்னாளில், என்னிடமிருந்த றிவோல்வர் சுடுமா என இந்த சுடலையில்தான் ஓர் இரவு வந்து பரீட்சித்துப் பார்த்திருப்பேன்.

யோகன் வெளிநாடு போனபின் நான் கொக்குவில் போவ தில்லை. இயக்க மோட்டார் சைக்கிள் என்னுடன் இருந்தது.

ஒரத்தநாட்டில் நடந்த மத்தியகுழுக் கூட்டம் முடிந்த பின் தப்பி யோடிய மத்தியகுழு உறுப்பினர்கள் தளத்துக்கு வந்து தலைமறை வாக இருந்தனர். இப்போ தலைமறைவான அரசியல் பிரிவுத் தோழர்களும் அவர்களும் இணைந்து ‘தீப்பொறி’ குழுவாக பரிண மித்திருந்தனர். முற்றான தலைமறைவு நிலையில் அவர்களது வாழ்வு ஆபத்துகளால் சூழப்பட்டு இருந்தது. கழகத்துக்கு மட்டு மல்ல, புலிகள், இலங்கை அரசு என்பவற்றுக்கும் தலைமறைவாக வாழ நேர்ந்தது. புளொட் இராணுவம் மூர்க்கத்துடன் தேடி அலைந்தது. ஆனாலும் அவர்கள் தொடர்ந்து இயங்கினர். தலைமறைவாக இருந்துகொண்டு “தீப்பொறி” பத்திரிகையை வெளிக்கொணர்ந்தனர். அப் பத்திரிகையின் முதல் நோக்கம் கழகத்தை அம்பலப் படுத்துவதாக இருந்தது.

அதை இரகசியமாக விநியோகிக்க எனது உதவியை நாடி வந்தான் ஒரு தோழன். அவன் முன்னர் என்னுடன் அரசியல் பிரிவில் வேலைசெய்தவன். எனக்கு அரசியலில் தொடர்ந்து

ஈடுபடும் நோக்கம் இப்போ இருக்கவில்லை. அதேநேரம் அதிலிருந்து விடுபடவும் முடியாமலிருந்தது. பதிலேதும் சொல்லாமல் அனுப்பிவைத்தேன். பாதுகாப்புக்கு எந்த உத்தரவாதமும் இல்லாத நிலையில் அல்லாடிய மனதுடன் இருந்தேன். வௌவால்கள் அற்ற இரவில், தறிக்கப்பட்ட வேப்பமர விருட்சத்தின் பாதத்தில் உட்கார்ந்திருந்தேன். கஸ்ரோ எங்கிருந்தோ வந்தான். எதிர்பார்க்கவில்லை.

''நீ காணாமல் போய்விட்டதாய் நினைத்திருந்தேன்'' என நான் சொல்லிக்கொண்டிருக்க, உயர்ந்த என் புருவத்தில் விழிகள் ஏணை கட்டி ஆடின. தூறலாய் வந்த மழையில் உடலில் சோர்ந்திருந்த நரம்புகளெல்லாம் நெளியத் தொடங்கியது. எனக்குள் ஏதோ சுவறியது.

''எனக்கு அழிவில்லை'' என கண்சிமிட்டிச் சொன்னான். பேசியபடி அவனது இருப்பிடத்துக்குச் சென்றேன். சோலையால் மூடி இருந்தது. நிழல் வீடு. யன்னல்கள் திறந்திருந்தன. அதனூடு பார்வை வெளி விரிந்து இந்த உலகை திறந்து காட்டிக் கொண்டிருந்தது. புதிய காற்று உள்ளே வீசியபடி இருந்தது. அது நரம்புகளில் படர்ந்து மூளைவரை நீண்டது. ஆயிரம் பூக்களின் மலர்வை அந்த . யன்னலோரச் சட்டகத்துள் ஓவியமாய் வரைந்து எனது சிந்தனையில் மெல்லக் கொழுவினான் கஸ்ரோ. வண்ணத்துப் பூச்சிகளின் சிறகசைப்பை அதன் படபடப்பை அதில் உணர்ந்தேன்.

''வெற்றிகளுக்கு பொறுப்பேற்கும் உசாருடன் போன நீ, இப்போ தோல்விகளுக்கு பொறுப்பேற்காமல் நழுவுவது என்ன நியாயம்'' என்றான்.

''களைத்துவிட்டேன். நம்பிக்கையை தொலைத்துவிட்டேன். நான் எனது உயிர் குறித்தே இப்போ கவலைப்படுகிறேன். நான் வாழவேண்டும். எனக்கு இருத்தல் மீது ஆசை வந்திருக்கிறது. மரணத்தை வெறுக்கிறேன்'' என்றேன்.

''நானும்தான்'' என்றான்.

''ஆடை களைவது போல் எல்லாவற்றையும் களைந்துவிட்டு ஒரு வெற்று மனிதனாக வாழ இலகுவில் உன்னால் முடியாது. எனக்கு உன்னை நன்றாகவே தெரியும். நொருங்கிப் போவாய்'' என்றான்.

பிறகு வடமராட்சிப் பகுதிக்கான “தீப்பொறி” விநியோகத்தில் நானும் ஒருவனாக ‘களவாக’ செயற்பட ஆரம்பித்தேன். வீட்டில் பத்திரிகைக் கட்டை கொண்டுவந்து நான் வைக்கும்போதெல்லாம், எனது வீட்டார் கழகத்தினது பத்திரிகை என நினைத்துக் கொண்டனர். இரவு எனக்குப் பாதுகாப்புத் தந்தது. என்னை அநாமதேயமாகப் பேணியது. வாசிகசாலைகள் மட்டுமன்றி முக்கியமான தோழர்கள் வீட்டின் வளவுக்குள்ளும் அவர்கள் காலை வேளையில் தீப்பொறிப் பத்திரிகையைக் கண்டெடுத்தனர். இக் காலப் பகுதியில் கோவிந்தனின் ‘புதியதோர் உலகம்’ நாவல் வந்தது. அது கழகத்தினது பின்தள கிழிசல்களை கொடியில் விரித்துப் போட்டது. பெரும் பரபரப்பை அது ஏற்படுத்தியது. இப் புத்தகத்தை நடுநிசி கடந்த பொழுதொன்றில் சைக்கிளில் சென்று எல்லா வாசிகசாலை வளவினுள்ளும் வீசிவிட்டு வந்தேன்.

பத்திரிகையைக் கொண்டுவந்து தரும் தோழரைத் தவிர மற்ற எந்த தீப்பொறித் தோழர்களோடும் எனக்கு நேரடியாக தொடர்பு இருக்கவில்லை. ஆனால் அவர்களில் பெரும் பாலானோரையும் எனக்கு ஏற்கனவே தெரியும். அதில் மத்திய குழு உறுப்பினரான காந்தனும் ஒருவர். அவரை தொலைத் தொடர்பு முகாமில் வைத்து உங்களுக்கு நான் அறிமுகப்படுத்தியிருந்தேன். நான் பின்தளத்துக்கு பயிற்சிக்குப் போக முன்னர் தோழர் கேசவனைச் சந்தித்திருந்தேன். அவர் எமது ஊருக்கு வந்திருந்தார். எளிமையின் மொத்த உருவம் அவர். ஒரு கம்யூனிஸ்டாகவே வாழ்ந்து காட்டிய ஒரு சமூகப் புத்திஜீவி. அவரே கோவிந்தன் என்ற பெயரில் ‘புதியதோர் உலகம்’ நாவலை எழுதினார்.

பின்னரான காலம் அவர் தமது புதிய தமிழீழ மக்கள் கட்சி யின் அலுவலாக யாழ்ப்பாணத்தில் தலைமறைவாக இருந்து வேலைசெய்யச் சென்றார். புல்லின் நுனியிலும் உலவும் உளவுப் படையைக் கொண்ட புலிகளால் அவர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். “இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார்” என்ற பட்டியலில் அவரும் இடம்பெற்றார். கழகத்திலிருந்து வெளியேறிய ஒருவரை கழகத்துக்கு எதிராக இருந்த புலி அமைப்பு ஏன் கொன்றது என உங்களில் சிலருக்கு கேள்வி எழலாம். “கம்யூனிஸ்டுகளுக்கு எதிரியாக இருப்பதற்கும், அவர்களைக் கொலை செய்வதற்கும் எவருக்கும் காரணம் தேவைப்படுவதில்லை” என்பான் அன்பு. கம்யூனிஸ்டுகளை

மட்டுமல்ல, தம்மை விமர்சிக்கும் சமூகப் புத்திஜீவிகளையும், ஏன் தாம் தவிர்ந்த இயக்கத்தவர்களையும் கூட கொல்ல புலிகள் அமைப்புக்கு காரணம் தேவைப்படுவதில்லை என நான் சொல்வேன். 'இனந் தெரியாத நபர்கள்' லேபலில் அவர்கள் தோழர் கேசவனை சிறைப்படுத்தினார்கள். பின்னர் கொன்றார்கள்.

என்னுடன் மொரட்டுவவில் படித்த இன்னொரு தோழன் ஜீவனும் இப்போ தீப்பொறி குழுவில் இருந்தான். முன்னர் கழகத்தில் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளராக அவன் இருந்தான். பின்தள கிழிசல்களை அறியாமல் அரசியல் பிரிவில் தொடர்ந்து ஓய்வின்றிச் செயற்பட்டுக் கொண்டிருந்தவர்களில் அவனும் ஒருவன். பின்தளத்திலிருந்து முதல்நாள் இரவு திரும்பியிருந்த என்னைக் கண்டதும் அவனது முகத்திலிருந்து கிளம்பிய ஒருவித கிளர்ச்சியை மைக்ரோ கணத்தில் அடையாளம் கண்டேன். அவளவு அருகாமையால் சைக்கிளில் சென்ற நான் அவனைக் காணாதது போல் முகத்தை திருப்பியபடி தாண்டிக் கொண்டிருந்தேன். விழிகள்வழி திருடிவந்த அவனது அதிர்ச்சியான முகபாவத்தை எனது மனச்சாட்சி ஓர் துயர ஓவியமாய் நினைவில் தொங்கவிட்டது. மிக நெருங்கிய நண்ப னாக இருந்த ஒருவனையே இப்படி வீதியைக் கிழித்து பயணிக்க விட்டது காலம்.

## 29

இக் காலகட்டத்தில் அன்பு பின்தளத்திலிருந்து திரும்பியி ருந்தான் அவனும் அச்சம், நம்பிக்கையீனம் என கதைகளோடு வந்தான். நானும் அவனும் பெரும்பாலான பொழுதுகளை எமது ஊர் வாசிகசாலையில் கழித்தோம். மற்றவர்களுடன் அதிகம் பேசுவதில்லை. அவர்கள் எமது மவுனத்தை வேறு மாதிரி புரிந்து கொண்டிருந்தார்கள். அது எதையும் பேசாமல் தவிர்ப்பதற்கு எமக்கு வசதியாக இருந்தது.

நிக்கவரெட்டியா பொலிஸ் நிலையத் தாக்குதல் நடந்தபோது அது பத்திரிகைகளில் முதல் பக்கச் செய்தியாக வந்தது. அப்போ ஊர்ப் பெரியவர் ஒருவர் தன்னை மறந்து கத்தினார். "அவன் (உமா மகேஸ்வரன்) படிச்சவன்... கொழும்பிலையிருந்து தொடங்கி றான். இது (பிரபாகரன்) எட்டாம் வகுப்புப் படிச்சது... இங்கை

மதவடிக்கு குண்டு வைக்குது'' என்றார். தாக்குதல் செய்தியை பத்திரிகையிலிருந்து பிரித்தெடுத்து ஒரு திரைப்படம் போல உருவாக்கினார்கள். அப்போதும் நாம் மவுனமாகவே இருந்தோம். அந்த மவுனத்தை அவர்கள் தமக்கான இசையாக மாற்றினார்கள். இன்னொரு முதியவர் எனைக் காணும்போதெல்லாம் ''எப்ப தொடங்கப் போறியள்'' என கேட்டு வைப்பார். ஒருநாள் சைக்கிளில் போய்க் கொண்டிருந்த என்னை கைதட்டிக் கூப்பிட்டும் இதைக் கேட்டார். அதற்கும் வழமைபோல் மவுனமும் புன்னகையும் மட்டுமே எனது பதிலாக இருந்தது. ''பொறுங்க உங்களை எல்லாம் ஏமாத்திக் காட்டிறம்'' என்று சொல்லவா முடியும்.

எந்தத் திட்டமுமின்றி வாழ்வு நகர்ந்தது. பின்தளத்திலிருந்து எமது தொலைத் தொடர்பு முகாம் தோழன் பவான் வந்திருந்தான். அங்கு மாட்டுப்பட்டிருந்த தோழர்களை அவனில் கண்டேன். ''இருக்கிறாங்கள்'' என்றான். தான் ஓர் அலுவலாக இங்கு அனுப்பப் பட்டதாகவும் திரும்பிப் போக வேண்டும் எனவும் கூறினான்.

''திரும்பவுமா'' எனக் கேட்டேன்.

''நான் திரும்பாவிட்டால் அங்கு மற்றாக்களுக்கு பிரச்சினையடா. வாறது வரட்டும். செத்தால் சேர்ந்து சாவோம்'' என்றான். அவன் மற்றாக்கள் என்று குறிப்பிட்டது அங்கு எஞ்சியிருந்த பெண் தோழர்கள் உட்பட்ட எமது தொலைத் தொடர்பு முகாம் சக தோழர்களைத்தான். எனது நிலைப்பாடுகளையும், நிலைமையையும் அவனுக்கு வெளிப்படையாகச் சொன்னேன்.

''நாங்கள் எட்டுப் பேர் தப்பி ஓடுவதற்கு திட்டமிட்டிருக்கிறம். அதுக்கு உன்ரை உதவி தேவை'' என்றான். அவனுக்கு நித்திரைக் குளிசையும் கொஞ்சம் பணமும் தேவைப்பட்டது. கடையில் ஒரு தேநீர் குடிக்கக்கூட வழியில்லாத பரதேசியாய் திரிந்த நான் தீப்பொறிக் குழுவினரின் உதவியை நாடினேன். அவர்கள் குழுவுக்குள் முடிவெடுத்துவிட்டு, அறுநூறு ரூபா பணம் தந்தார்கள்.

நித்திரைக் குளிசையைப் பெறுவது என்பது இலகுவான காரியமாக இருக்கவில்லை. எமது ஊரவர்கள் ஆஸ்பத்திரியில் வேலை செய்கிற போதும் அவர்களிடம் எப்படி கேட்பது. எனவே தயக்கத்துடன் இதராவின் அம்மாவிடம் சென்றேன்.

முன்பு அந்தத் தாய்க்கு சொன்னதை தலைகீழாக இன்று மாற்றிச் சொல்ல வேண்டி ஏற்படுவதில் எழும் குற்றவுணர்ச்சியுடன் சென்றேன். ''என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கம்மா'' என்று நான் சொன்னபோது, என்னை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. இரண்டு கைகளாலும் முகத்தைப் பொத்தியபடி, முழங்கையை தொடையில் ஊன்றியபடி தேம்பி அழ ஆரம்பித்தேன். எனது அம்மாவிடம் சொல்ல முடியாமல் எனக்குள் தேங்கி தழும்பி நின்ற வார்த்தைகள் கண்ணீராய் மேவி வந்தன. அருகே வந்த அந்தத் தாய் எனது தலையைத் தடவியபடி மவுனமாக இருந்தாள்.

சொன்னேன். எல்லாவற்றையும் தலைகீழாக்கிச் சொன்னேன். இப்போ அந்தத் தாயை நிமிர்ந்து பார்க்கும் துணிவு என்னிடம் இருக்கவில்லை. ஆனாலும் பார்த்தேன். அவள் தனது மகளை தொலைத்துவிட்டதாக நினைத்து இதுவரை காலமும் சகவாசம் செய்த அதே இடத்துக்கு தனது உணர்ச்சிகளை மீண்டும் அழைத்துச் செல்ல போராடிக் கொண்டிருந்தாள். நான் வந்து சந்தித்திருக்கக் கூடாது என நினைத்தேன். வெளியே போய்வந்த அவ இரண்டு நித்திரைக் குளிசை டப்பிகளுடன் வந்தா. இன்று அவ கதவுவரை வந்து வழியனுப்பவில்லை. இடிந்துபோய் கதிரையில் குந்தியிருந்தா.

மறுநாள் பவானை மீண்டும் சந்தித்து பணத்தையும் குளிசைகளையும் ஒப்படைத்தேன். ''கவனம்'' என்று சொல்லி வழியனுப்பி வைத்தேன்.

''நாங்கள் தப்பும்வரை வெளிநாடு கிளிநாடு எண்டு ஓடி யிடாதை'' என்றுவிட்டுப் போனான்.

பின்னாளில் அவர்கள் கேரளாவில் ஒளித்திருந்தபோது, குளிசையையும் பணத்தையும் எப்படி இரகசியமாகக் கொண்டு போய்ச் சேர்த்தான் என்பதை நான் கேட்கவுமில்லை. அவன் சொல்லவுமில்லை. தமது அந்தத் திட்டம் நிறைவேறாமல் போய்விட்டது எனச் சொன்னான்.

அன்புவுக்கு பம்பாய் (மும்பை) போய் தங்கியிருக்கிற திட்டம் இருந்தது. எனக்கு எதுவுமே இருக்கவில்லை. பின்தளம் சென்ற பவானிடமிருந்து செய்திகள் எதுவும் கிடைக்கவுமில்லை. ஆனாலும் என்னை தனியனாக விட்டுச் செல்ல முடியாத தயக்கத்தில் அன்பு இருந்தான். பம்பாயிலிருந்து அவனது சகோதரன்

அழைத்த போதெல்லாம் சாட்டுகள் சொல்லி தவிர்த்துக் கொண்டிருந்தான். எமது பெரும்பாலான பொழுதுகளும் ஊர் வாசிகசலையில் கழிந்தது. நான்கு பக்க ஒழுங்கைகளின் சந்திப்பு மையத்தில் இந்த வாசிகசாலை இருந்தது. அதன் முன்னால் உள்ள ஆலமரத்தின் அடியில், அதன் கிளம்பிய வேர்களில் குந்தியிருந்தால் நான்கு ஒழுங்கைகளும் பார்வைப் புலத்துள் இருக்கும்.

அன்று ஜீப் ஒன்று புழுதி கிளப்பியபடி வருவதை சரியாகவே அடையாளம் கண்ட நாம் இருவரும் ஒரு தற்காப்பாக அல்லது தவிர்த்தலாக பக்கத்து புகையிலைத் தோட்டத்துக்குள் புகுந்து மறைந்தோம். அந்த ஆலமரத்தையும் புகையிலை தோட்ட த்தையும் ஒரு சிறு வீதிதான் பிரித்து வைத்திருந்தது. சிறிது நேரத்தின்பின் அவர்கள் திரும்பிப் போயிருப்பார்கள் என்ற எண்ணத்தில் புகையிலைக் கன்றுகளினூடு ஊடுருவிப் போன நாம் அருகிலிருந்த கோவில் சகடையில் போய் ஏறியிருந்தோம். அன்ரனி சைக்கிளில் வந்தான். அதிர்ச்சியாகவிருந்தது. தன்னை அவர்கள் இடம் காட்டுவதற்காக ஏற்றிவந்ததாகச் சொன்னான். "அச்சுவேலியிலிருந்து வந்திருக்கிறாங்கள். கையில் ஆயுதங்க ளோடை இருக்கிறாங்கள். வாசிகசாலையடியில் உங்கடை ஊர் ஆள் ஒராள் நீங்கள் சிலவேளை இங்கை இருக்கலாம் என அவங்களட்டை இந்த சைக்கிளை குடுத்தார். நான் பார்த்திட்டு வாறன் எண்டு சொல்லி சைக்கிளை மெல்லவா வேண்டி வந்திட்டன். வந்திருந்தாங்கள் எண்டால் துலைஞ்சிருப்பியள். உங்களை இங்கை காணயில்லை எண்டு போய்ச் சொல்லுறன். ஓடித் தப்புங்க" என்று இடைவெளியின்றி பேசி முடித்தான்.

ஆஸ்பத்திரிச் சந்தியை இராணுவம் சுற்றிவளைத்த முன்னொரு நாளில் யோகனும் அன்ரனியும் மோட்டார் சைக்கிளில் வந்தபோது இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு அன்ரனி இலக்கானான். முழங்கைப் பகுதியில் பாய்ந்த குண்டு சதையை பிய்த்தபடி வெளியேறியிருந்தது. தப்பிவந்த அவர்கள் எமது வாசிகசாலைக்கு விழுந்தடித்து வந்தார்கள். அவனை நானும் யோகனும் மோட்டார் சைக்கிளில் ஏற்றி தனியார் கிளினிக் ஒன்றுக்கு பறந்தோம். ஆஸ்பத்திரியைச் சுற்றி இராணுவம் நின்றதால் அங்கு போவது ஆபத்தானது. யோகனுக்கும் எனக்கும் இடையில் அன்ரனியை இருத்தி நான் பிடித்துக்கொண்டிருந்தேன். யோகன் மோட்டார் சைக்கிளை ஓட்டிக்கொண்டிருந்தான்.

அன்ரனியின் கையிலிருந்து இரத்தம் கொட்டிக்கொண்டிருந்தது. ஆனாலும் மயக்கமுறாமல் இருந்தான் அவன்.

நாங்கள் கிளினிக் சென்றதும் தனது எல்லா அலுவல்களையும் கைவிட்டு அவசர அவசரமாக முதலில் எமக்கு உதவ முன்வந்தார் வைத்தியர். உயர்ந்த மனிதாபிமானம் மட்டுமல்ல, வைத்திய அறம் ஒன்றும் அவரிடம் இருப்பது ஏற்கனவே எமக்குத் தெரிந்திருந்தது. அதனால் அங்கு விரைந்தோம். நாம் இயக்கத்தவரா இல்லையா என்பதெல்லாம் உறுதியாக அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப் பில்லை. எந்த விசாரிப்புமின்றி அவர் வேகமாகச் செயற்பட்டார். வைத்தியராகவும் இலக்கியவாதியாகவும் இருக்கும் சாத்தியத்தை நிரூபித்த அந்த மனிதரின் சமூகப் பொறுப்பே எமது மூவரினதும் உயிரை காத்துத் தந்தது.

யோகன் வியர்வையில் நனைந்த தனது பெனியனைக் கழற்றி வெளியே நிறுத்திவைக்கப்பட்டிருந்த எமது சிவப்பு நிற மோட்டார் சைக்கிளில் ஒழுகியிருந்த இரத்தத்தை அவசரமாகத் துடைத்து விட்டு உள்ளே வந்தான். வைத்தியரும் தாதிகளும் அதிவேகமாக செயற்பட்டுக் கொண்டிருந்தனர். அன்ரனியின் கையில் முறிவு ஏற்பட்டிருந்தது. அதை பக்குவமாக ஆறுதலாக செய்து முடிக்க நேர அவகாசம் குறுகியதாக இருந்தது. அவர் செய்து முடிக்கும் தறுவாயில் சுற்றிவளைப்புக்காக பிரதான வீதியில் இராணுவம் வந்து இறங்கியது. அவர்கள் எம்மைத் தேடி வரவில்லை. எமது மோட்டார் சைக்கிள் வாசலில் நின்றது. அவசரமாக நாம் கிளினிக் இன் பின் மதிலால் ஏறி வெளியேறினோம். வைத்தியர் ஸ்ரூல் ஒன்றுடன் ஓடி வந்தார். அன்ரனியை ஒருவாறு அதன் மேல் ஏற்றி மதிலைக் கடந்தோம்.

இந்த அன்ரனிதான் இப்போ எம்மை காப்பாற்றினான். யோகன் வெளிநாடு போய்விட்டிருந்தான் என்பதை உங்களுக்கு நான் முன்னர் சொல்லியிருந்தேன். என்னிடமும் அன்புவிடமும் இப்போ இரண்டு கிரனைட்களும் இரண்டு றிவோல்வர்களும் இருந்தன. அவை கம்யூனிஸ்ட் கட்சி தோழர் ஒருவரினூடாக ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து கிடைத்தவை. அவை எப்போதும் எம்முடன் இருந்தன. இப்படியே இரண்டா வது தடவையாகவும் ஜீப் வந்தபோது நான் தனியாக வாசிகசாலை யடியில் இருந்தேன். மீண்டும் தோட்டத்துக்குள் புகுந்து ஓடித் தப்பினேன். வெளியில் எவரும் இல்லை. உள்ளேயிருந்து

பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்தார்கள். நான் இப்போதான் இங்கு இருந்தேன் என்ற தகவலைச் சொன்ன ஊர் நண்பர் ஒருவர் அவர்களை அழைத்துச் சென்று எனது வீட்டைக் காட்டினார். நீங்களாக இருந்தாலும் அதைத்தான் செய்திருப்பீர்கள். ஏனெனில் எவருக்குமே எமது நிலைமை தெரியாது. மவுனம் மட்டுமே எமது மொழியாக இருந்தது. அது நீங்களே உங்கள் அர்த்தத்தில் வாசிக்க ஒப்புவிக்கப்பட்டிருந்தது. அவர்கள் அம்மாவிடம் சொன்னார்கள். "உங்கட மகன் இயக்கத் திலை முக்கியமான ஆட்களிலை ஒராள். அவரை பெரியையா சந்தித்து சில விசயங்கள் கதைக்க வேணுமாம். அதாலை இந்தியாவுக்கு வரச் சொல்லியிருக்கிறார். நீங்கள் உங்கடை மகன் குறிச்சு பெருமைப்பட வேணும் அம்மா. அவரை அனுப்பிவிடுங்க" என்றுவிட்டு போனார்களாம்.

அன்பு அன்று தமது மரவள்ளித் தோட்டத்தில் கிழங்கை இழுத்தெடுக்கும் முயற்சியில் மரவள்ளி மரத்தோடு போராடிக் கொண்டிருந்தான். கிழங்கை எதிர்பார்த்தபடி தாய் தரையில் கடகத்தோடு குந்தியிருந்தாள். ஒழுங்கையில் ஜீப் வருகிறது. அன்பு திடீரென வேலியைப் பாய்ந்து ஓட்டமெடுத்தான். தாய் அதிர்ச்சியில் உறைந்து போனாள். பின்னாளில் அவன் அந்த மர வள்ளிக் காட்சியை உடல்மொழியில் செய்து காட்டி வடிவேலாக மாறிவிடுவான்.

இப்போ நாம் இருவரும் பரபரப்பாகி விட்டிருந்தோம். இனியும் இங்கு இருத்தல் சாத்தியமில்லை என்றானது. தயக்கத் துடன் சென்று அம்மாவிடம் உண்மை எல்லாவற்றையும் சொன்ன போது நான் உடைந்து போயிருந்தேன். அம்மா என்னை விடவும் பயந்து போயிருந்தாள். அவளுக்கு அதிர்ச்சி வேறு. "வெளிநாடு போகப் போறன் அம்மா. எப்பிடி போறது எண்டு தெரியயில்லை" என்றேன். அம்மா "நீ போயிடு" என்றாள். கதறி அழுதாள். ஒருவாறு பணத்தை திரட்டிக்கொண்டு கொழும்புக்குப் போய் மறைவாக இருந்தோம். அன்புவின் தாய் உதவினாள். எனது அக்காவும் உதவினாள். அக்காவின் தாலியும், அன்புவின் அம்மாவினது தோடு காப்புகளும் அவர்களது உடலிலிருந்து மறைந்தன.

உரப்பையுள் எமது உடைமைகளைக் கொண்ட சிறு பைகளை திணித்தோம். எமது ஆயுதங்களுடனும் இயக்க மோட்டார் சைக்கி ளுடனும் பணத்துடனும் புகைவண்டியைப் பிடிக்க கொடிகாமம்

போனோம். அங்கு இன்னொரு இடதுசாரித் தோழரிடம் எல்லா வற்றையும் ஒப்படைத்துவிட்டு பயணமானோம். முதலில் பம்பாய் (மும்பை) க்கு போகத் தீர்மானித்தோம். அன்புவின் சகோதரன் நீண்ட விடுமுறையில் அங்கு தங்கியிருந்ததால் முதலில் அங்கு போய்விடுவது என முடிவெடுத்தோம்.

அன்புவுக்கு நன்கு அறிமுகமான இடதுசாரித் தோழர் ஒருவர் இருந்தார். அவரே எமது பாதுகாப்புக்கான பிஸ்ரல்களையும் கிரனைட்களையும் ரெலோ இயக்கத்திடமிருந்து பெற்றுத் தந்தவர். அவர் கொழும்புவரை எமக்குத் துணையாக வந்தார். இடதுசாரியத்தை பிரக்ஞைபூர்வமாக ஏற்றுக்கொண்டு தமது தனிப்பட்ட வாழ்வை நேர்மையாகவும், எளிமையாகவும், சக மனிதர்களில் தம்மைக் காண்பவர்களாகவும் பல இடதுசாரிகள் வாழ்ந்திருக்கிறார்கள், வாழ்கிறார்கள். விரல்விட்டு இவர்களை எண்ணி விடலாம் என்றபோதும் அவர்கள் இடதுசாரிக் கட்சிகள், இயக்கங்களினூடுதான் தமது பாதையைக் கண்டவர்கள். அவர்களில் சிலரை நான் சந்திக்கும் இனிய அனுபவம் வாய்த்தி ருக்கிறது. எம்முடன் அலைந்த இந்த இடதுசாரித் தோழரிடமும் அதைக் கண்டேன்.

கொழும்பில் தங்கியிருக்கும்போது அவர் தோழர் சண்முக தாசனை சந்திக்க ஏற்பாடு செய்தார். சண்முகதாசன் தெற்காசியா வில் அறியப்பட்ட ஒரு மார்க்சியச் சிந்தனையாளர். இலங்கைத் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினை குறித்து அவரது இடதுசாரிக் கட்சி கொண்டிருந்த நிலைப்பாடும் பாராமுகமும் பின்னரான காலத்தில் இயக்கங்களின் தோற்றுவாய்க்கான காரணங்களில் ஒன்றாக அமைந்தது. தேசிய இனப் பிரச்சினை குறித்த அவர்களது குழப்பகரமான நிலைப்பாடு அவர்களை இந்த ஆசனத்தில் இருத்தி வைத்தது.

இருந்தபோதும் ஏற்கனவே 60களில் அவர்கள் நடத்திய வீரிய மான சாதியப் போராட்டம் ஆயுதப் போராட்டம்வரை சென்று ஆதிக்கசாதியினரின் திமிருக்கு முகம்கொடுத்தது. தீண்டாமையின் பல கூறுகளை நொருக்கிப் போட்டது. தீண்டாமைத் தகர்வைப் பொறுத்தவரை பல காத தூரம் இந்தியாவை விட இலங்கையில் ஒடுக்கப்பட்ட சாதியினர் முன்னே நகர்ந்து செல்ல இந்தப் போராட்டம் அத்திவாரமாக அமைந்தது. அதன் சிற்பிகளில் ஒருவர் சண்முகதாசன்.

முதன்முதலில் தோழர் சண்ணை கண்டது ஆகர்சமாக இருந்தது. அவருடன் கோட்பாட்டு ரீதியில் விவாதிக்கும் அரசியல் அறிவு எமக்கு இருக்கவில்லை. நாம் இருவரும் எமது அனுபவங்களில் சிலவற்றை சொல்லிக்கொண்டிருந்தோம். குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்த அவர், அவற்றை கோட்பாடுகளுக்குள் வடித்தெடுத்துக் கொண்டிருந்தார். நாமோ அதற்குள் சிக்கிச் சுழன்று அனுபவவாதத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தோம்.

"தமிழீழ கோரிக்கை விரக்தியிலை எழுந்தது. இந்திய விஸ்தரிப்புவாதத்தை கவனத்திலை எடுக்கயில்லை. அதோடை ஒரு தனி தமிழ் அரசின்ரை சாத்தியப்பாட்டைப் பற்றி ஆழ்ந்து யோசிக்கவுமில்லை. அது முதல் பலவீனம்" என்றார்.

"ஆனால் முக்கியமான இரண்டு விசயம் இதுக்குள்ளாலை நடந்திருக்கு. ஒண்டு இளைஞர்கள் முதலாளித்துவ பாராளுமன்றப் பாதையை நிராகரிச்சு, ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தது. மற்றது பெரும்பாலான இயக்கங்களும் மார்க்சிய லெனினிய சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டது" என்றார்.

"எங்கடை கட்சி பல சந்திப்புகளையும் கூட்டங்களையும் நடத்தியிருக்கு. பல சந்தர்ப்பங்களிலை நானும் அதுகளிலை பேசியிருக்கிறன். அது இளைஞர்களட்டை ஏற்படுத்தின தாக்கம் அவங்கள் மார்க்சிய லெனினிய சித்தாந்தத்தை ஏற்க காரணமாக இருந்தது எண்டு நினைக்கிறன். அது ஒரு சந்தோசமான விசயம்" என்றார்.

"அப்பிடியொரு இயக்கத்தட்டையிருந்துதானே நாங்கள் உயிர்தப்பி வந்திருக்கிறம். அவங்கள் பேசுறது ஒண்டு. செய்யிறது ஒண்டு. உமா மகேஸ்வரனுக்கு மார்க்சியம் எண்டால் என்ன எண்டு தெரியாது எண்டதுதான் உண்மை". என்றான் அன்பு.

"தவறுகளில்லாத தூய்மையான போராட்டம் எங்கையும் நடந்தில்லை. தவறுகளுக்கு ஊடாகத்தான் அது பயணிக்கும். அது தன்ரை தவறுகளை அடையாளம் கண்டு தன்னை படிப்படியாக திருத்தி முன்னேறும்'' என ஒரு அரசியல் விளக்கத்தை வழங்கினார்.

இயக்கத்தின் உள் கட்டமைப்பை புரியாமல், அதை எம்மிட மிருந்து தெரிந்துகொள்வதில்கூட ஆர்வம் காட்டாமல் அவர் வழங்கிக் கொண்டிருந்த தீர்க்கமான பதில்களானது உடைந்து

உருக்குலைந்து போயிருந்த எமக்கு சலிப்பை பரிசளித்தது. இந்தப் போராட்டத்தில் நின்றுபிடிக்க முடியாமல்தான் நாம் வெளியேறுவதான ஒரு தோற்றப்பாட்டை அவரது சுற்றிவளைப்பு தந்தது. எமது நடுத்தர வர்க்கப் பின்னணியை வைத்து அவர் அந்த சுற்றிவளைப்பை செய்திருத்தல்கூடும். அதில் உண்மையும் இருக்கலாம்.

“தவறுகளை திருத்தி முன்னேறுதல்” என்ற இயங்குவிதியை இயக்கங்களின் நடைமுறைகளும் கோட்பாட்டு வங்குரோத்தும் ஒரு சுனாமியாகக் கிளம்பி மக்களையும் சேர்த்து அழித் தொழித்தது. அப்போது அவர் இல்லை.

நாம் எமது இருப்பிடம் திரும்பிக்கொண்டிருந்தோம். எமது கம்யூனிஸ்ட் கட்சித் தோழரைப் பார்த்து அன்பு கேட்டான். "சண் தோழர் தமிழீழத்தை ஆதரிக்கயில்லை எண்டுறார். பிறகு பெடியளின்ரை ஆயுதப் போராட்டத்தை ஆதரிக்கிற மாதிரி பேசுறார். ஒரே குழப்பமா இருக்கு."

"நாங்கள் 1982 இலேயே தமிழ் மக்களின்ரை தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமாக கட்சிக் கூட்டத்திலை முன்வைச்சிருக்கிறம். அவையள் கவனத்திலை எடுக்கயில்லை. பிரிந்துபோற சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளுறதாக பொதுவாக சொல்லப்பட்டது. ஆனால் பிரியிறதை கட்சி விரும்பயில்லை. தீர்வாக, பிரதேச சுயாட்சிதான் கட்சி கொண்டிருந்த நிலைப்பாடு" என்றார் தோழர்.

"தமிழ் மக்களின்ரை சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளாத எந்த அரசாலையும் தேசிய இனப் பிரச்சினையை தீர்க்க ஏலாது எண்டு தோழர் சொன்னார்தானே" என்றேன்.

"அதாலைதான் இலங்கைக்கு தேவை ஒரு ஜனநாயகப் புரட்சி. அதுக்கு தொழிலாள வர்க்க தலைமையிலான மக்கள் ஜனநாயக அரசாங்கம் ஒண்டை போராடி பெறோணும் எண்டு ஒரு இடத்திலை சொன்னார். கவனிச்சனியா" என்று கேட்டான் அன்பு.

"ஓம். கவனிச்சனான். ஆனால் தேசிய இனப் பிரச்சினை கிளர்ந்தெழும்பியிருக்கிற வேகத்துக்கு அவர் கதைக்கிற ஜனநாயகப் புரட்சி எந்த அசுமாத்தமும் இல்லாமல் இருக்கு" என்றேன் நான்.

"முதன்மையான முரண்பாட்டை கவனத்திலை எடுக்காமல்; பொத்தாம் பொதுவாக வர்க்கப் புரட்சி, ஜனநாயகப் புரட்சி என்று பேசிக்கொண்டிருந்து என்ன பிரயோசனம்" என்றான் அன்பு. கட்சித் தோழர் மவுனமாக வந்தார்.

இலங்கை மண்ணைவிட்டு பிரியும் நாள் வந்தது. பிரிந்தோம். குண்டிமண்ணைத் தட்டுவதுபோல் தட்டிவிட்டு போவதாக நான் நினைக்கவில்லை. தப்பிப் போதலே உடனடி இலக்காக இருந்தது. இந்த வாழ்வு எனக்கு இலவசமாகக் கிடைத்தது என்ற நினைப்பு எனது மனதின் அடி ஆழத்தில் பதிந்துபோயிற்று.

## 30

மும்பையில் தங்கியிருந்தபோது நாம் வெளிநாடு செல்வ தற்கான ஏற்பாடுகளை அன்புவின் சகோதரர் செய்து முடித்தார். நீண்ட விடுமுறை முடிந்து மீண்டும் கப்பல் வேலைக்கு போய்விட்டார். நாம் தங்கியிருந்த மாடிக் கட்டடத்துக்கு அண்மையில் ஈழத் தமிழர்கள் சிலர் இருந்தனர். அவர்களில் செல்வா போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தான். அவன் எமது பிரதேசத்தைச் சேர்ந்தவன். அதனால் நன்கு அறிமுகமானான். மிக உன்னிப்பாக எல்லாவற்றையும் கேட்டான். எமது இயக்க அனுபவங்களையும் அநாதரவு நிலையையும் அவன் அனுதாபத்துடன் அணுகினான். அந்த வீட்டில் சாவகச்சேரியைச் சேர்ந்த வாசன் இருந்தான். அவன் விசுவாசம் மிக்க ஒரு வேலைகாரன் போல அவர்களுக்கு பணியாற்றிக் கொண்டிருந்தான். வெளிநாட்டுக்கு போகவென வந்து ஏமாறி பணத்தை முகவர் ஒருவரிடம் பறிகொடுத்தவன். நடுத்தெருவில் விடப்பட்ட அவனை இவர்கள் தம்முடன் வைத்திருந்தனர். அவனது வாழ்வாதாரம் அப்படியே ஓடிக் கொண்டிருந்தது. அவன் தனது வாழ்வை இதற்குள் தொலைத்து விட்டிருந்தான். நேர்மையான, மனிதாபிமானம் மிக்க ஒரு மனிதனாக அவன் இருந்தான்.

செல்வா இயக்கத்துக்கு ஒரு முக்கிய நிதிப் பங்களிப்பாளராக இருந்தான். அவனிடம் தேவன் சென்னையிலிருந்து வந்து இயக்கத்துக்கான பங்களிப்பை பெற்றுச் செல்வான். இது

செல்வாவுக்கும் தேவனுக்குமான நட்பாக மாறியது. தனக்கு போதிய வாழ்வாதாரம் இயக்கம் தருவதில்லை என அழுதுவடியும் தேவனுக்கு தனிப்பட்ட ரீதியிலும் செல்வா உதவிசெய்தான். அதனால் செல்வாவை மீறி தேவன் எதுவும் செய்ய முடியாதவனாக இருந்தான். ஓர் அதிகாலை அவசர அவசரமாக வாசன் எம்மிடம் ஓடி வந்தான். “ராத்திரி தேவன் ஒரு சூட்கேசுடன் வந்திருக்கிறான். அதுக்குள்ளை பிஸ்ரல் இருக்கு. காட்டினவன். எங்கையாவது ஓடித் தப்புங்கோ” என பரபரத்தான். அவன் எம்மிடம் வந்தது செல்வாவுக்கும் தெரியாது. அவன் நித்திரையாய் இருந்திருக்கலாம். எமக்கு பம்பாய் புதிது. எங்கு போவது என்ற கேள்வியை தற்பாதுகாப்பு கொன்றுபோட்டது. கிளம்பினோம். வாடகைக் கார் (ரக்சி) ஒன்றைப் பிடித்து கொஞ்சம் மலிவான விடுதியொன்றுக்கு போகும்படி சாரதியிடம் சொன்னோம். விடுதியின் அறையிலிருந்து வரவேற்புப் பகுதிக்கு படிவழி வந்துகொண்டிருந்த போது திடீரென அன்பு எனது கையை பின்னுக்கு இழுத்தான். சற்று பின்வாங்கினோம். வரவேற்புப் பகுதியில் உளவுப்படையைச் சேர்ந்த ஒருத்தன் நின்றுகொண்டிருக்கிறான். தனக்கு அவனை நல்லா தெரியும் என்றான் அன்பு. மீண்டும் அறைக்குள் திரும்பி ஓடினோம். சில மணி நேரம் கழித்து குழப்பத்துடன் கீழே இறங்கியபோது வரவேற்புப் பகுதியில் அவன் இல்லை. நாம் ஒரு நாளுக்கான பணத்தை விடுதிக்குச் செலுத்தி விட்டு அங்கிருந்து அவசரமாக வெளியேறினோம்.

எமக்கு வேறு வழி இருக்கவில்லை. செல்வாவுக்கு தொலை பேசி எடுத்தோம். “உங்களை யார் இப்பிடி அறையை விட்டு போகச் சொன்னது. ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். என்னை மீறி தேவன் எதுவும் செய்யேலாது” என்றான். “அப்பிடி ஏதும் செய்யிறதெண்டால் என்ரை பிணத்துக்கு மேலை நடந்து போய்த்தான் செய்ய வேணும்” என்று வேறு வசனம் பேசினான். அவனுக்கு அன்புவின் சகோதரன் மீது பெரும் மதிப்பு இருந்தது. அதனால் அவன் எங்களை பாதுகாத்தான். ஒடுங்கிப்போய் அறைக்குத் திரும்பினோம். குசினியிலிருந்து இரண்டு கத்திகளையும் மிளகாய்த்தூள் பேணிகள் இரண்டையும் எமது கட்டில்களின் தலையணைக்குக் கீழ் அவசரமாக மறைத்து வைத்தோம். கட்டில் சட்டமொன்றைக் கழற்றி கீழே ஒளித்து வைத்தோம். வருவது எதுவாயினும் எதிர்கொள்வது என

முடிவெடுத்தோம். இனியும் ஓடிக்கொண்டிருக்க முடியாது.

வாசன் அறைக்கு வந்தான். ''எனக்கு ஒரே ஏச்சு, உங்களை அலைய வைச்சதுக்கு'' என்றான். ''தேவன் உங்களை சந்திக்க வேணுமாம். பயப்பிடாமல் அங்கை வரட்டுமாம்'' என்றான். ''நான் இயக்கத்திலையிருந்து வெளியேறிய இரண்டு பேரை தலைமறைவாக வைச்சிருக்கிறன். நீ என்ன செய்வாய்'' என பீடிகை போட்டிருக்கிறான் செல்வா. அதற்கு தேவன் ''நீ வைச்சிருந்தால் நான் என்னடாப்பா செய்யிறது'' என்று சொல்லியிருக்கிறான். இதை வாசன் சொன்னான்.

''நாங்க அங்கை வரமாட்டம். வேணுமெண்டால் அவரை இங்கை வரச்சொல்லுங்க'' என சொல்லி திருப்பி அனுப்பி விட்டோம். தேவனும் செல்வாவும் வந்தார்கள். ''அடேய் பு... மக்களே, உங்களைப் பற்றித்தான் மெட்றாஸ் முழுக்க கதைக்கி றாங்கள். நீங்கள் கொம்யூனிக்கேசன் செக்சனிலை இருந்திருக்கி றியள். நீ வேறை எல் முகாமிலையும் இருந்தனி. உங்களைப் பிடிச்சால் என்ன நடக்கும் தெரியுமா'' என்று வார்த்தைகளை உதறிக் கொட்டிக்கொண்டிருந்தான்.

''தெரியும்'' என்றோம். செல்வாவின் முகத்தை திரும்பிப் பார்த்த தேவனின் பார்வையில் அதிர்ச்சி விலகாதிருந்தது.

பயந்தவர்கள்போல் காட்டிக் கொள்ளக் கூடாது என நாம் ஏற்கனவே எம்மை தயார்படுத்திக் கொண் டோம். உண்மையில் உலகம் முடிகிற இறுதிப் புள்ளியில் நிற்பதாக உணர்ந்தேன் நான். இதை வெறித்தனத்துடன் எதிர் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்றாகியிருந்தது. நாம் இருவரும் எதிரெதிர்க் கட்டில்களில் இருந்தோம். தலை யணையை விட்டு நாம் விலகவில்லை. ஒரு கை தலையணையின் கீழ் உட்புக ஆயத்தமான நிலையில் இருந்தது.

இயக்கத்துள் தேவனுக்கும் மொட்டை மூர்த்திக்குமான முரண் பாடுகளை அன்பு அறிந்து வைத்திருந்தான். அதை ஊதிக்கொண்டி ருந்தான் அன்பு. தேவனை ஒரு நேர்மையானவன், அர்ப்பணிப் பானவன் என்பது போலவும் மூர்த்தி சதிகாரன் போலவும் இரண்டு அணியாகப் பிரித்து வலையை அன்பு பின்னினான். அதற்குள் தேவன் விழுந்தான். ஏற்கனவேயான உள் முரண்பாடு அவனை இலகுவாக அதற்குள் விழுத்தியது. படிப்படியாக பேச்சு இயக்கம் குறித்தானதாக அளவெடுத்த வார்த்தைகளால்

பின்னப்பட்டுக் கொண்டிருந்தது. அன்புவே அதிகமும் பேசினான். எனக்கு இந்த உள் விவகாரங்கள் துளியளவும் தெரியாது. தேவன் குழப்பிப் போயிருப்பதாக அன்பு கணித்தான். இடையிடையே தேவனின் அதிகாரத் திமிர் வார்த்தைகளில் வரத் தவறவில்லை. அந்த வார்த்தைகளை கடந்து சென்றான் அன்பு.

ஒரு மாத காலம் போயிற்று. நாம் வெளிநாடு போகிற ஆயத்தங்களை முகவர் செய்து தருவதாயில்லை. இழுத்தடித்துக் கொண்டிருந்தான். திடீரென சென்னையிலிருந்து செல்வாவுக்கு தொலைபேசி வந்தது. ''படைத்துறைச் செயலாளர் கண்ணனும் என்னுடன் பம்பாய் வாறான். உவங்களை ஒளிக்கச் சொல்லு'' என்றான். செல்வா எம்மை விடுதிக்கு அனுப்புவது பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தான். அன்று இரவு மீண்டும் தொலைபேசித்த தேவன், ''கண்ணன் வரமுடியாமல் போயிட்டுது. நான் மட்டும் தான் வாறன்'' என்றான். அதனால் விடுதிக்கு அனுப்புற பேச்சு ஓய்ந்துபோனது. எங்களுக்கு பயம் பிடிக்கத்தான் செய்தது. இவங்கள் எப்பிடி நேரத்துக்கு நேரம் மாறுவாங்கள் என்பது குறித்து எமக்கு சந்தேகம் இருக்கவே செய்தது. மீண்டும் எச்சரிக்கையானோம். எவருக்கும் தெரியாமல் மீண்டும் கத்தி, மிளகாய்த்தூள் பேணி என எமது 'ஆயுதப் பாதுகாப்பை' ஏற்படுத்திக் கொண்டோம்.

இதேநேரம் வெளிநாட்டு முகவரை செல்வா நெருக்கினான். கொஞ்சம் இயக்க செல்வாக்கைக் காட்டி பயமுறுத்தவும் செய் தான். சுவாமிப் படத்துக்குப் பின்னால் மறைத்து வைத்திருந்த சீல்களில் எமக்கு தேவையாக இருந்த விசாவை எடுத்து குத்தி தனது பணியை இலகுவாக முடித்தான் முகவர். தேவனும் பம்பாய் விமான நிலையத்துக்கு வழியனுப்ப வந்தான். ''எல்லாம் சரி. ஒருமாதிரி தப்பிப் போறியள். இயக்கத்தைப் பற்றி விமர்சனம் எதுவும் வெளிநாட்டிலை செய்யக் கூடாது'' என நிபந்தனை வைத்தான். ''எல்லா இடமும் கழகத்துக்கு ஆட்கள் இருக்கிறாங்கள்'' என்று கயிற்றின் நுனிவரை தனது பிடியைக் கொணர்ந்து நழுவவிட்டான். வில்லில் அம்பு இருக்கும்வரை அம்புக்கு ஒரு திமிர் இருக்கும். அது தேவனுக்கு இருந்தது. அது மொட்டை மூர்த்திக்கும் இருந்தது. வெட்டி வா என்றால் கட்டி வரும் இவர்கள் போன்ற விசுவாசிகள் தலைமையின் முட்டாள்தனத்தையும் வஞ்சகத்தையும் மட்டுமல்ல, உளவுப் படைப் பொறுப்பாளர்களின் ஏவலையும் செயற்படுத்த

*பயன்படுத்தப் பட்டனர். விடுதலைக்காக தாம் உழைத்துக் கொண்டிருப்பதாக அவர்கள் பெருமிதப்பட்டிருக்கக் கூடும். தமது சொந்த மூளையை முட்டாள்தனத்திடம் அவர்கள் அடகுவைத்திருந்தனர். இயக்கத்தின் மோசமான போக்குடன் இயங்க மறுத்து நாம் வெளியேறிக் கொண்டிருந்தோம். தேவனோ அந்தப் போக்குடன் சேர்ந்து இயங்கிக் கொண்டிருந்தான். இரு துருவங்களாக இடைவெளி பிரிந்துகொண்டிருந்தது. நாம் சிறகுகளை சூட போய்க்கொண்டிருந்தோம்.*

*பறப்பு தொடங்கிற்று.*

*மனிதர் எறும்புகள் போலாகி பின் மறைந்து போயினர். ஊர்கள் மறைந்து போயின. நாடுகளின் எல்லைகள் அழிந்து போயின. காடுகளின் பசுமையிலும், கடலின் நீலமையிலும் பூமி அழகாகத் தெரிந்தது. அண்ணார்ந்து பார்த்த நிலைபோய், கவிஞர்கள் கற்பனையில் கவியெறியும் முகில்திரளுக்கு மேலாக பறந்து கொண்டிருந்தோம். புகைப்பாலைவனத்தில் குன்றுகளாய் திரட்சியுற்றிருந்தன, இளஞ் சாம்பல்நிற முகில் கூட்டங்கள்!. அவைகளின் பின்னாலும் தேடிப் பார்க்கிறேன். ஏந்திய கனவுகளைக் காணவில்லை. மாலியையும் காணவில்லை. காற்றின் இரகசிய மூச்சொலியில் கலைந்துவிடக்கூடிய மென்மை கொள் முகில்திரள்மேல் ஓர் இறகாய்க் கிடக்க ஏங்கினேன் !*

*

*பிற்குறிப்பு:*

*என் இளவயது வாழ்க்கையின் அலைக்கழிவை பதிவுசெய்திருக்கிறேன். எனது ஆழ்மனதுள் இறங்கிப்போய் முகாமிட்டிருக்கும் இவை, அவ்வப்போது எழுந்து எனது நினைவை பிராண்டிக் கொண்டிருப்பவை. கனவுகளை சிதைப்பவை. இதைப் பதிவு செய்யவேண்டும் என நினைத்து சுமார் கால் நூற்றாண்டுகள் எழுதுவதும், கிடப்பில் போடுவதுமாக கழிந்துபோயிருக்கிறது. உலகை சிலகாலம் மறு ஒழுங்குக்குள் வைத்திருந்த இந்த கொரோனா காலத்தின் (2020 ஏப்ரல், மே) Lock Down இந் நூலை எழுதிமுடிக்க வைத்தது. எனது கதை இது. நான் நாட்டை விட்டு விலகியபோது, எழுதி வைத்திருந்த இயக்க விசயங்களை, அனுபவங்களை நண்பர் ஒருவரிடம் கொடுத்துவிட்டு வந்திருந்தேன். அவர் அதை புதைத்து பாதுகாப்பாக வைத்திருந்தார். இந்திய இராணுவம் ஈழத்துக்கு வந்தபோது அவர் பாதுகாப்புக் கருதி அவற்றை வெளியே எடுத்து எரிக்க நேர்ந்தது. அது ஓர் ஆவணமாக எழுதப்பட்டது. 35 ஆண்டுகள் கடந்துவிட்டது. இப்போதும் பல சம்பவங்கள் நினைவில் இருக்கிறபோதும், அவை ஆவண வடிவில் என் மூளைக்குள் இல்லை. எனவே இதை ஒரு நாவல் வடிவில் எழுத தீர்மானித்தேன். எழுதியிருக்கிறேன்!*

*- ரவி (சுவிஸ்), 2020 ஆனி.*